




அருள்மணம் திகழும் ஆலயங்கள்

எம். இராஜகோபாலன்





அருள் மணம் திகழும் ஆலயங்கள்

ஆக்கியோன்

எம். இராஜகோபாலன்

M.A. (வரலாறு), M.A. (தமிழ்)

C.A.I.I.B. (I), C.J.M.C.

விற்பனை உரிமை :

ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்

2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
த.பெ.எண்-1040, பாண்டிபஸார்,
தியாகராய நகர், சென்னை-600017.

தொலைபேசி : 441902

Title of the Book	:	Arulmanam Tigazhum Alayangal
Author & Publisher	:	M. Rajagopalan. M.A. A4(Anand) Mico colony, Besant Nagar, Madras-90
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	December 1989
Copyright	:	Author
Sales Right	:	Sree Indu Publication, 2: Muthu Krishnan street, Thyagaraya nagar, Madras-17
paper used	:	10.9. Kg / Double crown / Dhanalakshmi paper mills
size of the Book	:	$18\frac{1}{2} \times 12\frac{1}{2}$ CM
Printing Types	:	10 Point
Number of pages	:	192
Number of copies	:	1100
Price	:	Rs 22/- (Twenty Two only)
Printers	:	Gururaja press, 7 Chinnappa Rowthar street, Triplicane, Madras-5.
Binding	:	Paper back
Artist (Cover page)	:	P.N. Anandan
Subject	:	A Collection of essays on twenty Temples of Tamil Nadu.

நுழைவாயில்

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற வாக்கை ஆன்றோர்கள் அன்று முதல் இன்று வரை முழுமையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இதற்கேற்ப ஒவ்வொரு சிற்றூரிலும் கூட ஒரு ஆலயமாவது இடம் பெற்றிருப்பது கண்கூடு. ஆலயங்களின் அமைப்பு, அதில் இடம் பெறவேண்டிய திருமேனிகளின் உருவமைப்பு போன்ற விதிமுறைகளை ஆகம நூல்கள் வகுத்துள்ளன. தமிழக சமுதாயத்தில் தொன்று தொட்டு ஆலயங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. மன்னர்களும், அதிகாரிகளும், செல்வர்களும், வறியவர்களும் ஆலயத்தைக் கட்டுவதிலும் அதனைப் புதுப்பிப்பதிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஆலயங்கள் வழிபாடு தலங்களாக மட்டுமின்றி சமுதாய மையங்களாகவும், அற்புதமான கலைப் பெட்டகங்களாகவும் திகழ்கின்றன.

இத்தகைய பெருமைகளையுடைய ஆலயங்களை உள்ளடக்கிய திருத்தலங்கள் பற்றிய பல நூல்கள் வெளியிடப்பட்டு இறையன்பர்களின் ஆதரவைப் பெற்றுள்ளன. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் யான் இத்தகைய புண்ணியப் பதிகள் பலவற்றைத் தரிசனம் செய்துள்ளேன். கடந்த சில ஆண்டுகளாக 'இந்து மதம் அழைக்கிறது' 'ஸப்தகிரி', 'மஞ்சரி' 'ஆண்டவன் அருள்', 'தர்மச்சுடர்', 'ஜகத்குரு', 'ஸ்ரீபுவனேச்வரி விஜயம்', 'ஞான வழி' போன்ற மாத இதழ்களில் இதுபோன்ற தலங்களின் பெருமைகளை விளக்கும் கட்டுரைகளையும், புகைப் படங்களையும் வெளியிட்டு வருகிறேன். திருவான்மியூர் ஆலயம் பற்றி யான் எழுதிய நூல் திருக்கோயில் வெளியீடாக

ஸாதுராம்ஸ்வாமிகள் — முகாம் :— சென்னை-61

உ

ஸ்ரீ பொங்கு க்ருபா — 9-12-1989

ப்ரம்மஸ்ரீ எம். இராஜகோபாலன் எழுதி வெளியிட்டுள்ள "அருள் மணம் திகழும் ஆலயங்கள்" நூலுக்குச் சாற்றுக் கவி

(அருட்கவி தவத்திரு ஸாது ராம் ஸ்வாமிகள், ஸ்ரீ பொங்கி மடாலயம், நங்கை நல்லூர், சென்னை-600061.)

(எழுசீரடி ஆசிரிய விருத்தம்)

அருள்மிகும் உப்பூர் அரியின்வாட் டாறு
திருச்சுழி யல்செஞ்சே ரிமலை
தெருள்குல சேக ரப்பட்டி னத்தூர்
தென்கச்சிக் கச்சபே ஸ்வரம்
திருமுல்லை வாயில் வடாதம்பா புரிசேர்
வைஷ்ணவித் தேவிபூங் கோவில்
ஒருகொல்லி மலையூர் சிறுபுலி யூர்மற்
றுரைக்கும்ஓ ஸூர் தாடிக் கொம்பு;

வெஞ்சமாக் கூடல் திருவயிந்த் ரபுரம்
உவரியூர் விள்பாக னேரி
செஞ்சமூ தூராம் திருப்புன வாயில்
சிவன்மலை ஆவலாய் மதுரைக்
கொஞ்சிய கூடல் அழகர்தம் கோயில்
கூறிரே ணுகைபடை வீடு
மிஞ்சிய திருவேட் டக்குடி ஆக
விளம்பிடும் இருபதா லயங்கள்;

பற்றியே நூற்றுத் தொண்ணூற் றிரண்டு
பக்கங்கள் உரைநடை யாகச்
சொற்றுளார் அன்பர் ராஜகோ பாலன்
தூயதோர் அச்சிட்ட நூலா

அற்றைநாட் புராணம் இற்றை நாட் கதையோ(டு)
'அருள்மணம் திகழும் ஆலயங்கள்''
கற்றவர் வியப்பப் படிப்பவர் நயப்பக்
கடவுள்அன் பர்கள் அதி சயிப்ப.

இத்தகு தெய்வ யாத்திரை நூலை
யாத்தருள் **ராஜகோபாலன்**
பக்தியில் பேதம் பாராட்டி டாது
பரவறு ஸமயதை வதங்கள்
நித்தமும் குடிகொள் தலங்களைத் தொகுத்து
நேர்த்தியாய் உதவும்இவ் வச்சுப்
புத்தகம் பொலிக! வாழிய! இவர்தம்
புனிதமார் ஸமயநற் பணியே.

அமிழ்தினும் இனிய தமிழிலும் தெய்வ
ஆரண ஆகமங் களிலும்
குமிழிகொப் பளிக்கக் குடைந்துநன் காடும்
கொள்கையர் அடியர்கள் கூடி
இமிழ்திரை அலைசூழ் இவ்வுல கினில்இவ்
வினியதோர் உரைநடை நூலைத்
தமியராய்க் கூட்டம் கூட்டமாய்ப் பயின்று
தனித்தனி ரஸித்தின்பம் ஆர்ந்து.

ஜீவிய காலத் தொருமுறை யேனும்
தெரிசநம் இத்தலங் களைச்செய்(து)
ஆவியும் உடலும் பொருளு(ம்) மற் றிறைக்கே
அர்ப்பணித் தடைக்கல மாகி
ஓவியம் போல்உட் கார்ந்துமெய்ம் மறந்துள்
ளுருகியே த்யாநமும் புரிசீர்
மேவியே வாழி! **''அருள் மணம் கமழும்
*விசியங்கள்''** திகழ்க!மேன் மேலும்.

—அருட்கவி-தவத்திரு
ஸாது ராம் ஸ்வாமிகள்
ஸ்ரீ பொங்கி மடாலயம், மனை 22,
பொங்கி மடாலயம் தெரு, சென்னை-600 061
(நங்கை நல்லூர்)
9-12-1989

(*விசியங்கள்—கோயில்கள்)

பொருளடக்கம்


1. உப்பூர் (இராமநாதபுரம் மாவட்டம்) 1
2. திருவட்டாறு (கன்னியாகுமரி) 10
3. திருச்சுழி (காமராஜர்) 20
4. செஞ்சேரி மலை (கோயம்புத்தூர்) 29
5. குலசேகரப் பட்டினம் (சிதம்பரனார்) 37
6. காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் (செங்கை-அண்ணா) 47
7. திருமுல்லை வாயில் வைஷ்ணவி (சென்னை) 56
8. கொல்லிமலை (சேலம்) 68
9. சிறுபுலியூர் (தஞ்சாவூர்) 78
10. ஓசூர் (தர்மபுரி) 86
11. தாடிக்கொம்பு (திண்டுக்கல் காயிதே மில்லத்) 95
12. வெஞ்சமாக் கூடல் (திருச்சி) 104
13. திருவந்திபுரம் (தென் ஆற்காடு) 115
14. உவரி (நெல்லை-கட்டபொம்மன்) 129
15. பாகனேரி (பசும்பொன்) 138
16. திருப்புனவாயில் (புதுக்கோட்டை) 146
17. சிவன்மலை (பெரியார்) 155
18. மதுரை கூடலழகர் (மதுரை) 165
19. படவேடு (வட ஆற்காடு) 178
20. திருவேட்டக்குடி (புதுச்சேரி மாநிலம்) 186

முன் அட்டையிலுள்ள படங்கள்


1. வடதிருமுல்லைவாயில் வைஷ்ணவி அம்மன்
2 சிவன்மலை-சிவாஜலபதி ஆலயம் - முன்தோற்றம்
3. திருப்புனவாயில் - விமானம்

பின் அட்டையிலுள்ள படங்கள்

1. மதுரை கூடலழகர் கோயில்-இராஜகோபுரம்
2. தாடிக் கொம்பு - நரசிம்மர் இரணியனுடன் போரிடும் காட்சி




சிறுபுலியூர் உற்சவர்



உவரி
சுயம்புலிங்க ஸ்வாமி



சிவன்மலை, சிவாஜலபதி ஆலயம்



திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயில்




கச்சபம் ஈசனை வழிபடுதல்—கச்சபேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம்




தாடிக்கொம்பு. உற்சவர்கள்




பாகனேரி காய்ந்தவ கால கணபதி



பாகனேரி பைரவர்



பாகனேரி
புல்வாய்நாயகி




திருவந்திபுரம்
வேதாந்த தேசிகர்




மதுரை கூடலழகர்




திருவந்திபுரம் ஹயக்ரீவர்




திருச்சுழி
திருமேனி நாதஸ்வாமி கோயில்




சிறுபுலியூர் கிருபாசமுத்திரப்
பெருமாள் கோயில்



காஞ்சிபுரம்
கச்சபேஸ்வரர் ஆலயம்




செஞ்சேரி மலைவேலாயுத ஸ்வாமி கோயில்




வெயிலுகந்த விநாயகர் ஆலயம், உப்பூர்




ஓசூர் மரகதாம்பாள்



திருவேட்டக்குடி. விமானம்




ஓசூர்
சந்திரசூடேஸ்வரர்




திருவட்டாறு
வேணுகோபாலன்




தாடிக்கொம்பு. நரசிம்மர்
இரணியனை வதைத்தல்




கொல்லிமலை
அறப்பளீஸ்வரர் கோயில்




படவேடு இரேணுகாம்பாள் திருக்கோயில்




பாகனேரி புல்வாய் நாயகியம்மன் கோயில்




தாடிக்கொம்பு
சௌந்தரராஜப் பெருமாள் கோயில்




மதுரைகூடலழகர் கோயில்
அஷ்டாங்க விமானம்



கொல்லிமலை அறப்பளீஸ்வரர்



சிறுபுலியூர் அருமாகடலமுதன்



திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள்

உப்பூர்

வெயிலுகந்த விநாயகர் ஆலயம்

மயிலு கந்த வரன்வரு முன்பரன்
கயிலு கந்த கனிபெற் றுளமகிழ்ந்
தெயிலு கந்த வெழில்கொள் ளுப்பூரில் வாழ்
வெயிலு கந்த விநாயகன் காப்பதாம்

(தலபுராணம்)

தான் என்ற அகந்தையின் வயப்பட்ட தக்ஷன் தனது மகளின் மணவாளனான சிவபெருமான் தன்னை வணங்க வேண்டும் என விரும்பினான். அவ்வாறு வணங்க மறுத்த சிவபெருமானை அவமதிக்கும் நோக்கத்துடன் ஒரு மாபெரும் வேள்வியைத் தக்ஷன் நடத்தினான். சிவபிரானைத் தவிர ஏனைய வானவரும், முனிவர்களும் அந்த வேள்விக்கு அழைக்கப்பட்டனர். தக்ஷனின் செருக்கையடக்க அரனார் முடிவு செய்தார். முக்கண் முதல்வரால் அனுப்பப்பட்ட வீரபத்திரர் யாகத்தை நிர்மூலம் செய்ததுடன் அதில் பங்கு கொண்ட அனைவரையும் கடுமையாகத் தண்டித்தார். வீரபத்திரர் சூரியனின் கொடிற்றில் ஓங்கி அறைந்ததால் ஆதவனின் பற்கள் சிதறின. சிவபெருமானை மதியாமல் நிகழ்த்திய வேள்வியில் கலந்துகொண்டது தவறு என்பதையுணர்ந்த ஞாயிறு அச்செயலுக்குப் பரிகாரம் நாடினான். இழந்த பற்களை மீண்டும் பெற்றுப்பழைய நிலையையடையவும் விரும்பினான். இதன் பொருட்டுக் கதிரவன் சிவபிரானை நாடினான். கணநாதனாக விளங்கும் விநாயகனையே

வழி கேட்குமாறு மாதொருபாகன் பணிந்தார். விநாயகரை எவ்விடத்தில் கண்டு வழிபடுதல் உசிதம் என்று அறிந்துகொள்ள சூரியன் விரும்பினான். ''பாண்டிய நாட்டின் கீழ்க்கடலான மகோததிக் கரையில் சேதுமூலமாகிய தேவிபுரத்திற்கு ஒரு யோஜனை வடக்கிலும், காளிபுரத்திற்கு 2 யோஜனை கிழக்கிலும், திருப்புன வாயிலுக்கு ஒரு யோஜனை தெற்கிலும் உள்ள வன்னி மந்தார வனம் என்ற புனிதப் பதியில் தவமியற்று மாறு விரிசடைக்கடவுள் அருளினார்.

அந்த வனத்திலுள்ள சூழ்நிலை சூரியனுக்கு மிகவும் மனநிறைவு அளித்தது. அங்கு தீர்த்தம் ஒன்றை உண்டு பண்ணியதுடன், பர்ணசாலையையும் அமைத்த கதிரவன் விநாயகரைத் துதித்தான். இத்தலத்தில் முறைப்படி பூசித்து ஆராதனை புரியுமாறு விநாயகர் கட்டளையிட்டார். அவ்வண்ணமே தினகரனும் முறைப்படி வழிபாடுகள் நடத்தினான். ''வெய்யோனே! சிவபெருமானை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் தக்ஷன் செய்த முயற்சியில் நீ பங்கேற்றது மாபெரும் தவறு. இருப்பினும் இத்தலத்தில் நீ வழிபட்டதால் உனக்கு மன்னிப்பு அளிக்கிறேன்,'' என்று விநாயகர் மொழிந்தார். கதிரவனின் வேண்டுகோளின்படி அவனுக்குக் காட்சி அளித்த அதே கோலத்தில் விநாயகர் இத்தலத்தில் எழுந்தருளி, அன்பர்களுக்கு அருள் பாலிக்க ஒப்புக்கொண்டார். விநாயகரின் திருமேனிமீது தனது ஒளிக் கதிர்களான ஆயிரம் கரங்களைப் பரப்பியவாறு வழிபடுவதற்கு அருளுமாறு சூரியன் வேண்டினான். அவ்வண்ணமே ஆதவனின் கதிர்கள் தம்மீது படுமாறு கணநாதர் கோலம் கொண்டார். இதனால் ஆதபேச்சா விநாயகர் அல்லது வெயிலுகந்த விநாயகர் என்ற திருநாமம் இம்மூர்த்திக்குக் கிடைத்தது.

அசோகவனத்தில் சீதையின் தரிசனம் பெற்ற அனுமான் இராமரிடம் தமது அனுபவங்களை விவரித்

தார். இராமனும் வானரசேனைகளுடன் கடல் கடந்து இலங்கைக்குச் செல்ல முடிவு செய்தார். பிரச்சிரவண மலையிலிருந்து புறப்பட்டு, மகோததியான கீழ்க்கரை யோரம் தெற்கு நோக்கிச் சென்று இரத்தினாகரமான தென்கடற்கரைக்கு முப்பது குரோச தூரம் வடக்கிலுள்ள கானகத்தை அடைந்தார். வன்னி விருட்சங்கள் சூழ்ந்த அப்புனித வனத்திலுள்ள ரமணிகரமான சூழ்நிலை அவரைப் பெரிதும் கவர்ந்தது. அவ்விடத்தில் திவ்விய கரமாக அமைந்துள்ள வெயிலுகந்த விநாயகர் ஆலயம் அவரை வரவேற்றது. சுயம்புவாக இத்தலத்தில் விநாயகர் தோன்றிய வரலாற்றை இராமர் கேட்டு அறிந்துகொண்டார். இலங்கை சென்று சீதாப் பிராட்டியை மீட்டுவரத் திட்டமிட்டுள்ள தனக்கு வெற்றி யளிக்குமாறு விநாயகரைத் துதித்து வேண்டினார். விநாயகரின் அருளைப் பெற்றபின் சேதுக்கரை நோக்கிப் பயணமானார்.

விதர்ப்ப நாட்டிலுள்ள கவுண்டின்னியம் என்ற நகரில் வீமன் எனும் அரசன் ஆண்டு வந்தான். புயவலி வீரனாக மட்டும் இன்றிச் சிறந்த புத்திசாலியாகவும், கல்விமானாகவும் அம்மன்னன் திகழ்ந்தான். கற்பு நெறி பூண்டொழுகும் சாருகாசினி எனும் மங்கை நல்லாள் அவனது வாழ்க்கைத்துணைவியாவாள். அனைத்துச் செல்வங்களைப் பெற்றிருந்த போதிலும் புத்திரப்பேறு இல்லாத குறை அவர்களை வாட்டியது. மக்கட்பேறு அளிக்கவல்ல மார்க்கத்தைக் கூறுமாறு விசுவாமித்திரரை அம்மன்னன் நாடினான். கீழைக் கரையோரமாக உள்ள உப்பூர் என்ற திவ்விய பதியில் எழுந்தருளியுள்ள விநாயகரை வழிபடுமாறு அம்முனிவர் அறிவுரை அளித்தார். விசுவாமித்திரர் அருளியவாறே அரச தம்பதிகள் உப்பூரை அடைந்து விரதமிருந்து பிரார்த்தித்தனர். கணநாதர் அருளால் ருக்மாங்கன் என்ற மகன் பிறந்தான். ஒருமுறை பீமராசன் தன் புத்திரனுடன் உப்பூர் வந்து அங்கு சில காலம் தங்கினான், கோயிலைச் சுற்றி

யுள்ள குடியிருப்புகளைப் புதுப்பித்து விரிவுபடுத்தினான். விநாயகருக்குப் பத்து நாள் பிரம்மோற்சவம் நடத்தினான். திருவிழாவின் போது புஷ்ப விமானத்திலும், பூதம், சிம்மம், பெருச்சாளி, யானை, இடபம், மயில், குதிரை ஆகிய வாகனங்களிலும் முதல் எட்டு நாட்களுக்கு விநாயகர் எடுத்துச் செல்லப்பட்டார். ஒன்பதாம் நாளாகிய சுக்கிலபட்ச சதுர்த்தியில் விநாயகரை மகாரதத்தில் ஆரோகணம் செய்து திருவீதியுலா நடத்தினர். தீர்த்தவாரியுடன் விழா நிறைவடைந்தது.

இத்தலத்தினருகேயுள்ள கடல் லவணசமுத்திரம் என்றும், அதன் கரையிலமைந்துள்ள தலம் லவணபுரம் எனவும் அறியப்படுகின்றன. லவணம் என்ற வடமொழிச் சொல் உப்பைக் குறிக்கும். எனவே, தமிழில் உப்பூர் என்ற பெயர் ஏற்பட்டது. தலபுராணத்தில் இத்தலத்தின் பிற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சூரியன் இங்கு பூசித்ததால் சூரியபுரி என்றும், அவனது தவம் சித்தியடைந்ததால் தவசித்திகரம் என்றும், சூரியனுக்குப் பாவ விமோசனம் கிடைத்ததால் பாப விமோசனபுரம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. வன்னியும், மந்தாரமும் இப்பதியில் தலவிருட்சங்களாக இருப்பதால் வன்னிமந்தாரவனம் எனவும் பெயர் உண்டு. ஆலயத்தின் உட்பகுதியிலுள்ள மகோததியாகிய விநாயக தீர்த்தம் சாலவும் புண்ணியம் நிறைந்தது. தருமதீர்த்தம், அருத்த தீர்த்தம், காம தீர்த்தம், மோட்சதீர்த்தம் ஆகிய பிற பெயர்களும் அதற்கு உள்ளன. நீராடி வழிபடுவோரின் நோய்களை அதுஉடனே போக்கவல்லது. ஆலயத்திற்குத் தென்மேற்கிலுள்ள சூரியதீர்த்தம் சகல பாவங்களையும் நீக்கும் சக்தியைப் பெற்றுள்ளது. இதனைச் சூரியனே உண்டாக்கி வழிபட்டதாகத் தலபுராணம் இயம்பும்.

தொண்டியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலையில் உப்பூர் அமைந்துள்ளது. தேவகோட்டை, காரைக்குடி, திருவாடனை, தொண்டி, இராமநாதபுரம்

ஆகிய இடங்களிலிருந்து உப்பூர் வழியாக அடிக்கடி பேருந்துகள் செல்கின்றன. பேருந்து நிறுத்தத்திற்கு மிக அண்மையில் கோயில் உள்ளது. ஆலயம் பரப்பளவில் சிறியது. முகப்பிலுள்ள மண்டபம் மங்களூர் ஓடுகளாலான கூரையைப் பெற்றுள்ளது. இம்மண்டபத்தில் பலிபீடம், துவஜஸ்தம்பம், மூஷிக வாகனம் ஆகியன காணப்படுகின்றன. இவற்றையடுத்துள்ள ஆறுகால் மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்குகின்றன. இம்மண்டபத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் இரண்டு வாசல்கள் உள்ளன. இருபுறங்களிலும் இரு தூண்களுடன் இரண்டு திண்ணைகள் உள்ளன. இம்மண்டபத்தின் இரு புறங்களில் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. இம்மண்டபத்தைக் கடந்தவுடன் 16 கால் மண்டபத்தை அடையலாம். 16கால் மண்டபத்தின் நுழைவு வாயிலில் மூன்று கலசங்களுடன் கூடிய சிறியமூன்று நிலைக்கோபுரம் அமைந்துள்ளது. மூலவரின் சந்நிதிக்கு எதிரேயுள்ள நான்கு தூண்களில் இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி, ஜமீந்தார் இராமசாமி செட்டியார், அருணாசல செட்டியார், அவரது இளைய சகோதரரான சிதம்பரம் செட்டியார் ஆகியோரின் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. சந்நிதிக்கு எதிராக விநாயகரின் வாகனமான மூஷிகம் உள்ளது.

மூலவர் வீற்றிருக்கும் கருவறை ஒரு நான்கு கால் மண்டபமாக அமைந்துள்ளது. கருவறையின்மீது அழகிய விமானம் உள்ளது. சூரிய ஒளி சந்நிதியில் விழுமாறு நாற்புறமும் கம்பிகளைப் பொருத்தியுள்ளனர். உட்பிரகாரத்திற்கும், கருவறைக்கும் இடையே மேல் தளம் இல்லாத திறந்த வெளியைக் காணலாம். சில படிகளைக் கடந்து கருவறை மண்டபத்தை அடையலாம். மூலவர் சுமார் நான்கடி உயரமுள்ள கம்பீரமான உருவத்துடன் தரிசனம் தருகின்றார். மழை, வெயில், குளிர் ஆகிய அனைத்தையும் தாங்கிக்கொள்பவர். இவரே வெயிலுகந்த விநாயகர் எனப்படும் ஆதபேச்சா

விநாயகர்; உப்பூர் பிள்ளையார் என்று மக்கள் இவரை உரிமையுடன் செல்லமாக அழைக்கின்றனர். வடமொழியில் இவரை ஆதப கிரண சந்துஷ்ட கணேசர் என்றும் மொழிகின்றனர்.

பத்தர்தமக் கெளியதில்லைப் பதிநடேசன்
பாலனே போற்றி பராபரனே போற்றி
சித்தர் தொழுதேத்து மலர்ப்பதத்தாய் போற்றி
திசைமுக னாதிய ரேத்துந் தேவ போற்றி
சத்தோடு சித்தானந்த வடிவாய் நின்ற
தனிமுதலே போற்றியெங் கடவமே போற்றி
உத்தமர்க ளுளத்துதித்த உணர்வே போற்றி
உப்பூர்வாழ் வெயிலுகந்த கணேசா போற்றி

[சொர்ணநாதபுரம் பழனியப்ப ஐயா
இயற்றிய வெயிலுகந்த விநாயகர் பதிகம்]

சிவாலயங்களில் உள்ளது போலவே பரிவார தேவதைகளை இக்கோவிலின் உட்பகுதிகளிலும் நிறுவியுள்ளனர். தென் பிரகாரத்திலுள்ள மண்டபத்தில் தனிச் சந்நிதியில் தென்முகக்கடவுள் வீற்றிருக்கிறார். வெளிப்பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் விமானங்களுடன் கூடிய சந்நிதிகள் உள்ளன. விநாயகர், நாகர்கள், காசி விசுவநாதர், விசாலாட்சி ஆகியோரை உட்பகுதிகளில் காணலாம். நந்தி, பலி பீடம் ஆகியவற்றை முன்னிட்டவாறு உள்ள காசி விசுவநாதர் சந்நிதி ஒரு தனிக் கோயிலாகும். வடமேற்கு மூலையில் வஜ்ரம், சக்தி ஆகியவற்றை ஏந்தியவாறு வரத, அபய, முத்திரைகளுடன் சுப்பிரமணியர் காட்சியளிக்கிறார். இருபுறங்களிலும் வள்ளி, தெய்வயானை ஆகியோர் உள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் சண்டேஸ்வரர், நடராஜர் ஆகியோரும் தோன்றுகின்றனர். கருவறை மண்டபத்தின் முற்பகுதியிலுள்ள தூண்களில் பழனியாண்டவர், ஆறுமுகர், காளியமர்த்தனர், தென்முகக் கடவுள், தவமியற்றும் தவசி ஆகிய சிற்பங்களைக் காணலாம்.

பிற தூண்களில் பூவேலைப்பாடுகள் மட்டுமே உள்ளன. உற்சவங்களின் போது பவனி வரும் விநாயகரின் திருவிழாப்படிவம் எழிலுடன் அமைந்துள்ளது. சூரியனின் உற்சவ விக்கிரகமும், நடராஜர், சிவகாமி, மாணிக்க வாசகர் ஆகியோரின் உலோகப் படிமங்களும் ஆலயத்தில் உள்ளன.

இவ்வாலயம் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மேற்பார்வையில் இயங்கிவருகிறது. கோயில் காலை 6 முதல் 12 மணி வரையிலும், மாலை மூன்று முதல் இரவு எட்டுமணி வரையிலும் திறந்திருக்கும். ஆவணி யில் பத்து நாட்களுக்கு நடைபெறும் விநாயக சதுர்த்தியே இங்கு பெருவிழாவாகும். இந்த விழாவின் போது இராமநாதபுர சமஸ்தானத்தினரின் வசத்திலுள்ள விலையுயர்ந்த ஆபரணங்கள் தகுந்த பாதுகாவலுடன் உப்பூருக்கு எடுத்துவரப்படும். பத்து நாட்களுக்கு விநாயகரை இந்த வனப்புமிக்க அணிகலன்களால் அலங்கரித்து உலா நடத்துவர். கடகம், சிம்மம், மயில், யானை, ரிஷபம், காமதேனு, குதிரை, சத்தாவர்ணம், வெள்ளி கோரதம் ஆகிய வாகனங்களில் அந்நாட்களில் விநாயகர் பவனி வருவார். அழகிய நுண்ணிய வேலைப் பாடுகள் நிறைந்த இந்த வாகனங்கள் ஆலயத்தில் உள்ளன. இறுதி நாளன்று தேரோட்டமும் விமரிசை யாகத் திகழும்.

யுகம் யுகமாகத் திறந்த வெளியிலேயே அமர்ந் துள்ள விநாயகருக்கு ஆதியில் விதர்ப்ப அரசன் வீமன் கோயில் எடுத்ததாகத் தலவரலாறு செப்புகிறது. இராமநாதபுர சமஸ்தானத்தைச் சேர்ந்த அரச குடும்பத்தினரும், நகரத்தாரும் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளனர். உட்புறத்திலுள்ள மண்டபங்களும், தெய்வத்திருவுருவங்களும் பிற்காலத் தில் தோன்றியவை.

உப்பூர் தல புராணத்தைச் செய்யுள் வடிவில் எழுதியவர் சதாவதானம் சுப்பிரமணிய அய்யர் ஆவார். பதினெட்டு உபபுராணங்களில் ஒன்றான 'பார்க்கவ புராணத்தில்' இத்தல மான்மியம் இடம் பெற்றுள்ள தாம். தல வரலாற்று நூலிலுள்ள விநாயகர் திரு அவதாரப் படலம் விநாயகரையே முழுமுதற் கடவுளாக, வக்கிரதுண்ட விநாயகராகக் காண்கிறது. "கோடி சூரியர்களை மிஞ்சும் பிரகாசம் வீசும் அவரது திருவுருவம் நவரத்தினக்கிரீடம், குண்டலம், கவசம், சரப்பளி, பாதச் சிலம்பு, விலைமிக்க அணிகலன்கள் ஆகிய வற்றுடன் ஜொலிக்கும். மதம் பொழியும் யானை முகம்; கத்தி, கேடயம், வில், வாள் ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ள நான்கு கரங்கள்; தாமரைமலர் போன்ற திருவடிகள்; சந்திரஹாராம், கொன்றைமலர் ஆகிய வற்றைத் தரித்துள்ள மார்பு; சோமசூரியாக்கினி என்ற முக்கண்களுடன் கூடிய திருமேனி" இத்தகைய தோற்றத் தையுடைய விநாயகர் மும்மூர்த்திகளுக்கு முத்தொழில் களையும் அளித்தார். சிந்தாமணி விநாயகர், கஜானன விநாயகர், விக்கினராஜ விநாயகர், மயூரேச விநாயகர், பாலசந்திர விநாயகர், தூமகேது விநாயகர், கணேச விநாயகர், கணபதி விநாயகர், துண்டி விநாயகர், வல்லபை விநாயகர் ஆகிய வெவ்வேறு தோற்றங்களும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன.

திருமணப்படலம் என்ற பகுதியில் நாரதரின் யோசனையின் பேரில் நான்முகனின் புத்திரிகளான சித்தி, புத்தி ஆகியோரை விநாயகர் மணந்த சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது. இத்திருமணம் நிறைவுற்ற பின்னர் விநாயகர் உப்பூர் ஆலயத்தில் அமர்ந்தார். கயமுகாசுரன் வதைப்படலம் என்ற பகுதியில் கண நாதர் கயமுக அசுரனை அழித்த நிகழ்ச்சியும், பார்வதி யின் சாபத்தால் மலைப்பாம்பாகக் கிடந்த திருமால் சாபவிமோசனம் பெற்ற சம்பவமும் வர்ணிக்கப் பட்டுள்ளன.

இராமேஸ்வரத்திற்கு முறையாக யாத்திரை மேற்கொள்ள விழைவோர் முதலில் உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வழிபட்ட பின்னரே, பணத்தை மேற்கொள்வது வழக்கம்.

சீர்பூத்த மருமத்துத் திகழ்துவளத்
தான்தேவர் சிறையை மீட்டப்
பார்பூத்த அயோத்தியிற்கு சரதியென
உதித்திலங்கைப் பதிக்கே குங்கால்
ஆர்பூத்த கடலடைப்பான் விக்கினங்கள்
உருதுமுனம் அருச்சித் தேத்தும்
நீர்பூத்த வளவுப்பூர் வெயிலுகந்த
விநாயகன்றாள் நினைந்து வாழ்வாம்.

(தல புராணம்)

திருவட்டாறு

ஆதிகேசவப் பெருமாள் ஆலயம்

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே
அருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே

மகாவிஷ்ணுவின் தரிசனத்தைப் பெற விரும்பிய நான்முகன், ஒரு மாபெரும் வேள்வியைப் புரிந்தார். ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள விதி முறைகளை அந்த யாகத்தைச் செய்தபோது கடைப்பிடிக்கத் தவறினர். இதன் விளைவாக யாக குண்டத்திலிருந்து கேசன் என்ற அரக்கனும். அவனது சகோதரியாள கேசியும் தோன்றினர். பசிப்பிணியால் அவதிப்பட்ட அவ்விருவரையும் உலகில் எல்லாப் பகுதிகளுக்கும் சுதந்தரமாகச் சென்று உணவு தேடிக்கொள்ளுமாறு பிரம்ம தேவன் கூறினார். மேலும், அவர்களுக்குச் சாகா வரத்தையும் அளித்தார். பெற்ற வரத்தால் செருக்குற்று உலகோர்க்குத் தொல்லைகள் பல அளித்து வந்த அந்த அரக்கர்களை ஒடுக்க மகாவிஷ்ணு ஆதிசேஷனுடன் பூவுலகிற்கு வந்தார். திருமாலுடன் நடந்த மற்போரில் கேசன் தோல்வியுற்றான். கேசனைக் கீழே தள்ளி அவன்மீது ஆதிசேஷன் தனது பாயை விரிக்க, அப்பாயின் மேல் திருமால் பள்ளி கொண்டார். திருமால் தன்னுடைய இடத்தை விட்டு நகர்ந்தால், சாகா வரம் பெற்றுள்ள கேசன் தப்பிச் சென்று உலகோர்க்குத்

துன்பம் அளிப்பான் என்று நம்பப்படுகிறது. தன் சகோதரனின் தோல்விக்குப் பழிவாங்க எண்ணிய கேசியின் தூண்டுதலால் தாமிரபரணியாறு பிரளயமாகப் பெருகியது. திருமாலின் கட்டளையின் பேரில் பூமாதேவி அந்த இடத்தை மேட்டுப் பகுதியாக்கினாள். தாமிர பரணியும் திருமாலை வணங்கி, மாலை சமர்ப்பித்தது போல இரண்டாகப் பிரிந்து வட்டமாகச் சென்றது. இதனால் இத்தலம் திருவட்டாறு எனப்பட்டது. கேசனை ஒறுத்ததால் திருமாலுக்கு ஆதிகேசவர் என்ற பெயர் ஏற்பட்டது. நதிகள் இரண்டாகப் பிரியும் இடம் 'மூவாத்து முகம்' என்றும் 'கோதை பிரளி' எனவும் அழைக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் செல்லும் பெருஞ்சாலையில் அமைந்துள்ள திருவட்டாறு வழியே நாகர்கோயில், தக்கலை, திருவனந்தபுரம் முதலிய இடங்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

சற்றே உயர்ந்த திடலில், சுமார் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. ஆலயத்தைச் சுற்றியமைக்கப்பட்டுள்ள முப்பது அடி உயரமான சுவர்கள் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கின்றன. தாமிரபரணியும், அதன் கிளைகளான கோதையாறும், பறளியாறும் ஆலயத்தைச் சுற்றி ஓடுகின்றன. மேற்கிலுள்ள திரிப்படத்துக்கடவு என அழைக்கப்படும் ராமப்புனல் மிகவும் புனிதமான தீர்த்தமாகும். அதில் நீராடினால் பிரம்மஹத்தி போன்ற கொடிய தோஷங்களும் நீங்கும். வைணவ ஆலயங்களில் மூலவர் மேற்கு நோக்கி எழுந்தருளியிருப்பது அபூர்வ மான அம்சமாகும். அத்தகைய அபூர்வமான அமைப்பு இங்கு உள்ளது. திருவட்டாறு ஆலயம் மேற்கு நோக்கிய வாறு அமைந்துள்ள போதிலும், கிழக்குப்புற வாயில் வழியாகவே பக்தர்கள் நுழைகின்றனர்.

நுழைவாயிலைக் கடந்து தென்புறமாக ஸ்ரீபலிபுரம் நோக்கிச் சென்றால் ஸ்ரீபூதநாதரின் சந்நிதியை அடைய

லாம். தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள அறையில் ஆதிசேஷர், அம்மன் ஆகியோரின் உலோகத் திருவுருவங்களும், வெங்கடாஜலபதியின் உருவமும் வைக்கப்பட்டிருந்தன. நாலம்பலம், பலிக்கல்புரை ஆகியவற்றின் வழியே சென்றால் மேற்கு வாயிலையும், அதனருகேயுள்ள கொடி மரத்தையும் காணலாம். செப்பினாலான இந்த துவஜஸ்தம்பத்தைக் கி.பி. 1895 ஆம் ஆண்டில் (மலையாள ஆண்டு 1071) திருவிதாங்கூர் மன்னரான ஸ்ரீமூலம் திருநாள் பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீபலிபுரத்தின் நான்கு புறங்களிலும் கருங்கல்லாலான 224 தீப லக்ஷ்மிகளின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. விதவிதமான ஆடை அமைப்புகளையும், சிகையலங்காரங்களையும் இவை பெற்றுள்ளன.

கருவறைக்கு முன்பு உள்ள 'ஒற்றைக்கல் மண்டபம்' எனப்படும் முகமண்டபம் அக்காலக் கட்டிட வல்லுநர்களின் பொறியியல் திறனுக்குச் சான்றாகும். மூன்று அடி அகலமும், 17½ அடி × 25 அடி பரப்பளவும் உள்ள ஒரே கல்லால் இம்மண்டபம் உருவாக்கப்பட்டது. பலிபீட மண்டபத் தூண்களில் லக்ஷ்மணன், இந்திரஜித், வேணுகோபாலன், சக்தி, நடராஜர் ஆகியோரின் முழு உருவங்கள் இடம் பெற்றுள்ளன. இசைக்கருவிகளை ஏந்திய கோலத்தில் பிரம்மா, விஷ்ணு, கரும்பு வில்லேந்திய மன்மதன், அன்னப் பறவை மீதமர்ந்த ரதிதேவி ஆகிய உருவங்களும் பெரும் வனப்புடன் தோற்றமளிக்கின்றன. ஸ்ரீ கோயிலுக்கு முன்புள்ள உதயமார்த்தாண்ட மண்டபம் கேரளக் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டு. விநாயகரின் திருமண ஊர்வலக் காட்சி மரத்தில் மிகவும் அற்புதமாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீகோயிலில் அழகிய மரவேலைப்பாடு உள்ளது. கூரையிலிருந்து தொங்கும் சங்கிலி ஒரே மரத்துண்டால் செய்யப்பட்டதாம்.

மூலவர் ஆதிகேசவப் பெருமாள் அனந்தன் மீது பள்ளி கொண்ட கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

அப்பெருமானின் திருமுகம், உடல், திருவடிகள் ஆகிய மூன்று பகுதிகளையும் கருவறைக்கு முன்புள்ள மூன்று கதவுகளின் வழியாகத் தரிசனம் செய்யலாம். பெருமாளின் இடக்கரம், கீழே தொங்கியவாறு உள்ளது. பள்ளி கொண்ட பெருமாளின் உருவம் சுமார் பதினெட்டு அடி நீளம் கொண்டது. கடுசர்க்கரை யோகம் எனும் விசேஷக் கலவையால் அமைக்கப்பட்ட அவரது உருவத்திற்கு அபிஷேகம் இல்லை. மூலவருக்கு அருகேயுள்ள உற்சவர் விக்கிரகத்திற்கும், ஸ்ரீதேவி, பூதேவி உருவங்களுக்கும் மட்டுமே நாள்தோறும் அபிஷேகம், ஆராதனை முதலியன நடைபெறுகின்றன. மூலவரின் உருவம் தங்கத்தால் பொதியப்பட்டுள்ளது. மரகதவல்லித் தாயாரின் திருவுருவம் இங்குள்ளது. கருவறையில் மூலவரின் திருமுக மண்டலத்தின்மீது மாலையில் சூரியனின் ஒளி விழுமாறு இயற்கையாக அமைத்துள்ளனர். பலிபுரத்தின் கிழக்குப் பகுதியில் ஆலம்பாடி கிருஷ்ணரின் சந்நிதி உள்ளது.

திருவட்டாறு பற்றிய குறிப்பு பத்ம புராணத்தில் இடம் பெற்றுள்ளது. மாங்குடிக்கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல் (எண் 396) ''வளநீர் வாட்டாறு'' என்று இயம்புகிறது. இந்நகரைத் தலைநகராகக் கொண்டு வேளிர் குல மன்னன் எழினியாதன் அரசாண்டான். திரேதாயுகத்திலே இக்கோயில் எழுந்ததாகக் கருதப்படுவதால் இது 12000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாம். திருவனந்தபுரத்திற்கும் முன்பே இப்பதி தோன்றியதால் இது ஆதி அனந்தம் எனப்படுகிறது. திருவனந்தபுரம் அனந்தபத்மநாபர் கோயில், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலின் அமைப்பைப் பின்பற்றியே கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள விமானம் அஷ்டாக்ஷர விமானமாகும். சந்திரனும், பரசுராமரும் திருவட்டாறு ஈசனை வழிபட்டுப்பேறு பெற்றனர். இதற்கு 'தக்ஷிண வைகுந்தம்' என்ற பெயரும் உண்டு.

கலியுகம் தொடங்கும் வரை வசிஷ்டரும், வேறு மூன்று ரிஷிகளும் இங்கு ஆசிரமம் அமைத்து வழிபட்டு வந்தனர், கலியுகத் தொடக்கத்தில் முனிகள் மடம், மஞ்சாண்ட மடம், காஞ்சி மடம், ரமண மடம், மார்த் தாண்ட மடம் என்ற ஐந்து ஆசிரமங்களும் திருப்பதி ஸ்ரீவைணவர், மடத்தில் பிள்ளை ஆகியோரின் மேற்பார் வையில் இயங்கி வந்தன. பின்னர் இவை திருவிதாங்கூர் மன்னர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வந்தன. திருவிதாங்கூர் மன்னர்கள் ஆதிகேசவரையும், அனந்தபத்மனாபரையும் தங்கள் குல தெய்வங்களாக வழிபட்டனர்.

கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை அரசாண்ட மன்னர் களின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் படியெடுக்கப் பட்டுள்ளன. பலிக்கல் மண்டபத்திலுள்ள முதலாம் இராஜேந்திர சோழனின் (1013-45) கல்வெட்டு 'திருவட்டாறு பள்ளி கொண்டருளிய பெருமாள்' என்று பகர்கிறது. கி. பி. 1174 ஆம் ஆண்டுக் கல்வெட்டு வேணாட்டு இளவரசன் ஸ்ரீஉதயமார்த்தாண்ட வர்மனின் திருப்பணிகள் பற்றித் தெரிவிக்கிறது. கி. பி. 1603இல் (மலையாள ஆண்டு 779) திருமாளிகை, திருமடப்பள்ளி, முகமண்டபம் ஆகிய பகுதிகளை வீரராமவர்ம குலசேகரப்பெருமாள் கட்டுவித்தான். கி. பி. 1604 ஐச் சார்ந்த இரு கல்வெட்டுகள் மூலம் வீராவி ரவிவர்மன் கோயிலைச் சீரமைத்து ஒற்றைக் கல் மண்டபத்தைக் கட்டிய செய்தியை அறியலாம். அவனது சகோதரனான ஆதித்தவர்மன் நான்கு பிரகாரங்களிலும் கற்களைப் பரப்பினான். ஆதித்த வர்மனின் இளைய சகோதரன் ராமவர்மன் இரு துவார பாலகர்களைப் பிரதிஷ்டை செய்தான்.

தமிழகத் தொல்பொருள் இலாகாவினர் வெளி யிட்டுள்ள கன்னியாகுமரி கல்வெட்டுகள் என்ற நூலின் நான்காம் தொகுதியில் இக்கோயிலில் படியெடுக்கப்

பட்டுள்ள 37 கல்வெட்டுகள் பற்றிய விவரங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை சிதைந்துள்ளன. திருப்பாப்பூர் ஸ்ரீவீரரவிவர்மரான குலசேகரப் பெருமாள் திருவட்டாற்றில் பள்ளி கொண்டருளுகின்ற ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் திருச்சுற்று மாளிகை, மடப்பள்ளி, ஒரு கல் மண்டபம் ஆகியவற்றிற்குத் திருப்பணி செய்வித்தான் (கி. பி. 1604). கொல்லம் ஆண்டு 778 (கி. பி. 1602) பங்குனி மாதத்தில் ஆதிகேசவப் பெருமாளைக் கோயிலில் எழுந்தருளச்செய்து புனித நீராட்டு விழாவை நடத்தினர். தேசாந்திரியாக இருந்த பாப்பாகுட்டி என்பார் துறவறம் பூண்டு அக்கோயிலுக்குப் பெரு நீராட்டி வைத்தார். வீர உதைய மார்த்தாண்ட வர்மர் காலத்தில் (கி. பி. 1172) பெருமாளுக்கு நித்தம் செலவிற்குக்கொடை அளிக்கப்பட்டது. சீகரணம் குளத்தறை நாராயணன் தேவன் என்பான் கொடி மரம் செய்வித்தான். பக்தர்கள் புரிந்துள்ள பல திருப்பணி களையும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இங்கு கேரள தந்திர முறைப்படி, மலையாள நாட்டுப் பிராமணர்களால் பூசை நடைபெற்று வந்தது. கேரளாவிலுள்ள இரு முக்கிய நம்பூதிரிக் குடும்பங்களான மணலிக்கரை மடம், அத்யர் மடம் ஆகியவற்றின் தலைவர்களே இங்கு தலைமை அர்ச்சகர் களாய் இருந்தனர். திருவிதாங்கூர் மகாராஜாவால் நியமிக்கப்படும் தலைமைப் பூசாரி மூன்றாண்டுகளுக்குக் கோயிலைவிட்டு நீங்காமல் பணி புரிய வேண்டும் என்ற பழக்கம் இருந்து வந்தது. இங்கு உஷா, யதிர்த்த, உச்ச, அத்தாழ என்ற நான்கு கால பூஜைகள் நடைபெறு கின்றன. இவை தவிர உதய மார்த்தாண்டன், ரவிவர்மன், ஆதித்யவர்மன் ஆகிய மன்னர்களால் ஏற் படுத்தப்பட்ட விசேஷக் கட்டளைகளும் உண்டு. இங்கு ஐப்பசி அல்லது கார்த்திகை மாதங்களிலும், சித்திரை அல்லது வைகாசி

மாதங்களிலும் நடைபெறும் பத்துநாள் திருவிழாக்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வந்தன. இந்த விழாக்களின் போது தங்கக் கருடன்மீது அமர்ந்தவாறு பெருமாள் உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஐப்பசி விழாவின் போது தலி எனுமிடத்திலுள்ள சிவாலயத்தினருகே தீர்த்தவாரி நிகழும். சித்திரை விழாவின்போது தாமிரபரணியும், பரளியாறும் கூடும் மூவாத்துமுகம் எனுமிடத்தில் தீர்த்தவாரி நடைபெறும். கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, கலபம், ஸ்ரீபலி, திருவோணம், பெருந்தம்ரிது ஆகிய விழாக்களும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தன. ஆண்டுக்கு ஒருமுறை திருவோணம் நாளன்று பெருமாள்மீது போர்த்துவதற்காக விலையுயர்ந்த ஒரு பட்டுச் சால்வையைத் திருவிதாங்கூர் மன்னர்கள் அளித்து வந்தனர். அதே நாளன்று வில், அம்புகள் ஆகியவற்றையும் பெருமாளுக்குச் சமர்ப்பணம் செய்து வந்தனர். இவற்றைச் செய்யும் தச்சன் மூன்று நாட்களுக்கு அனைத்து ஆசாரங்களையும் கடைப்பிடித்த பின் அப்பொருட்களைக் குறிப்பிட்ட இடத்தில் வைத்து வீட்டுத் திரும்பிப் பார்க்காமல் செல்வது வழக்கம். அரசனிடம் பணிபுரியும் ஓர் அந்தணன் அந்த வில், அம்புகள் ஆகியவற்றை மன்னனிடம் சேர்ப்பார். உத்திராயணம், தட்சிணாயணம் ஆகிய காலங்கள் தொடங்குவதற்கு முன்னால் பல உணவு வகைகளும், இனிப்பு வகைகளும் படைக்கப்பட்டு பக்தர்களுக்கு அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது. ஆண்டுக்கு ஒரு முறை திருவனந்தபுரம் ஆலயத் தலைமைப் பூசாரியின் உபயத்தில் புஷ்பாஞ்சலியும் நடைபெறுவது உண்டு. தற்போது தமிழக இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் இக்கோயில் இருப்பதால் இவ்விழாக்கள் சிறிய அளவில் நடைபெறுகின்றன.

திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் நடத்திய அற்புதங்கள் மிகப்பல. 1674 ஆம் ஆண்டில் முகலாயரின்

தாக்குதலுக்கு அஞ்சி இப்பகுதியை ஆண்ட உமையம்மை நாச்சியார் கோட்டயத்தை ஆண்ட கேரள வர்மரின் உதவியைக் கோரினார். சிறந்த வீரரும், கல்விமானும் ஆன கேரள வர்மன் திருவட்டாறு ஆலயத்தின் முக மண்டபத்தில் நின்று பெருமாளின் துணையை நாடிப் பதினான்கு பாசுரங்களைப் பாடினார். பச்சை நிற உடையணிந்த ஒரு உருவம் கருவறையை விட்டுச் சென்றது போல அவருக்குத் தோன்றியது. முகலாயப் படைகள் தேனீக்களால் தாக்கப்பட்டுச் சிதறின. அவற்றின் தலைவன் தேனீக்களால் கொட்டப்பட்டு இறந்தான். கேரளவர்மன் பாடிய பதினான்கு பாடல்களும், பக்த சங்கீர்த்தனம், என்ற பெயருடன் மக்களால் விரும்பிப் பாடப்பட்டன.

கி. பி. 1741-ல் திருவிதாங்கூரை ஆண்ட மார்த்தாண்டவர்மர் டச்சுக்காரர்களுடன் குளச்சல் என்ற இடத்தில் போரிட நேர்ந்தது. போருக்குச் செல்லுமுன்னர் மார்த்தாண்டவர்மர் தனது வீரவாளை ஆதிகேசவர் சந்நிதியில் வைத்துப் பூஜித்தார். போரில் வெற்றி பெற்ற மன்னர் டச்சுத் தளபதியான டிலனாய் என்பவனைச் சிறைப்பிடித்தார். பின்னர் டிலனாய் மார்த்தாண்டவர்மரின் படைத் தளபதியானான்.

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆற்காடு நவாபின் படைகள் திருவட்டாறு கோயிலைச் சூறையாடி உற்சவரின் விக்கிரகத்தை எடுத்துச் சென்றன. எவ்வளவு முயன்றும் அந்த விக்கிரஹம் ஒரே இடத்தில் நில்லாமல் நகர்ந்து சென்றதைக் கண்ட நவாப் அதன் காலில் துவாரமிட்டு அதனைக் கயிற்றால் கட்டினான். அன்று நவாபின் மனைவி கடும்நோயால் அவதியுற்றாள். ஆதிகேசவப் பெருமாளும் கோயில் மெய்க்காவலர் கனவில் தோன்றி விக்கிரஹத்தை மீட்டு வருமாறு கூறினார். மெய்க்காவலர் நவாபை அணுகி விக்கிரஹத்தைத் திருப்பிக் கொடுத்தால் அவரது மனைவியின்

வயிற்று உபாதை நீங்கும் என உறுதியளித்தார். அவ்வாறே விக்கிரஹத்தைத் திருப்பியளித்தவுடன் நவாபின் மனைவியின் வயிற்றுவலி நீங்கியது. நன்றிக் கடனாக 288 தோலா எடையுள்ள தங்கத் தட்டு, தங்கத் தலையணை ஆகியவற்றைப் பெருமாளுக்குச் சமர்ப்பித்தார். விசேஷ காலங்களில் உற்சவரைக் கருவறைக்கு எடுத்துச் செல்லுமுன்னர் 'யோக மண்டபத்தில்' 'திரு அல்லா பூஜை' எனும் விசேஷ பூஜை உண்டு. இம்மண்டபம் முகமதியரின் பள்ளியறை போலவும், உற்சவருக்கு அளிக்கப்படும் கிரீடம் அவர்கள் உபயோகிக்கும் குல்லாய் போலவும் உள்ளன. உற்சவரின் காலில் நவாப் இட்ட துவாரத்தை இன்றும் காணலாம்.

மெய்க்காவலர் உற்சவரை எடுத்து வருகையில் தலி என்ற இடத்திலுள்ள சிவாலயத்தின் அருகே வைத்து விட்டு நீராடச் சென்றான். பின் விக்கிரஹத்தை அவனால் எடுக்க முடியவில்லை. இந்நிகழ்ச்சியின் நினைவாகவே ஐப்பசித் திருவிழாவின் போது தலி சிவாலயத்தருகே தீர்த்தவாரி நடைபெறுகிறது.

வைணவத் திவ்விய தேசங்கள் 108; அவற்றுள் திருவட்டாறும் ஒன்று. நம்மாழ்வாரின் திருவாய் மொழியிலுள்ள பதினோரு பாசுரங்கள் இத்தலத்தின் சிறப்பையும், இயற்கை எழிலையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருஷ்ண சைத்தன்யர் இங்கு வந்து வழி பட்டார். இதன் அமைதியான சூழலில் மனதைப் பறிகொடுத்த அம்மகான் 'பிரம்ம சம்ஹித்தை' எனும் தத்துவ நூலை எழுதினார். 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி' பாடிய திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் இப்பதியைத் துதித்துப் பாடினார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அரசாண்ட சர்வாங்கத ஆதித்தவர்மன் திருவட்டாறு, திருவனந்தபுரம் ஆகிய இருபதிகள் மீதும் பத்துப் பாடல்களைப் பாடினார்.

கேசவனுடன் திருமால் போர்புரிந்த காட்சியைக் கண்ட சிவபெருமானும் கல்குளத்தைச் சுற்றியுள்ள பன்னிரு ஆலயங்களில் எழுந்தருளினார். மகாசிவ ராத்திரியன்று இரவில் காவியுடை அணிந்த பக்தர்கள் கோவிந்தனின் நாமத்தை முழங்கியவாறு பன்னிரு சிவாலயங்களையும் வலம் வந்து வழிபடுவர். பின்னர் திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாளையும் அவர்கள் வழிபட்டு முழுப் பயனையும் பெறுகின்றனர்.

நண்ணினம் நாராயணனை நாமங்கள் பல சொல்லி
மண்ணுலகில் வளம்மிக்க வாட்டாற்றான் வந்தின்றும்
விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே
எண்ணினவா றாகாவிக் கருமங்க ளென்னெஞ்சே!

—நம்மாழ்வார்.

இக்கோயிலுக்குள் ஆடவர்கள் வேட்டி அணிந்து செல்ல வேண்டும். இங்கு ஆசாரங்கள் முறைப்படிக் கடைப் பிடிக்கப்படுகின்றன.

திருச்சுழி

திருமேனி நாதஸ்வாமி திருக்கோயில்

உத்தரத்த நீல உவரி ழகாதம் சுழியல்
அத்தரையைச் சூலமுனைக் காத்தியருள்-வித்தகா
துய்யர் பரம சுகாதமியற் காக்கநினக்
கையா கடன் கண்டாஎயால்

திருச்சுழியல் கொம்பிலா அந்தாதி

முற்காலத்தில் சந்திரசேன பாண்டியன் தென் தமிழ் நாட்டை ஆண்டு வந்தார். அப்போது ஒரு நாள் மாபெரும் பிரளயம் உண்டாகவே மன்னரும் ஈசனின் திருவடிகளில் தஞ்சம் புகுந்தார். இரு கரங்களில் சங்கு, பிரம்பு ஆகியவற்றை ஏந்திய அடியாராகத் தோன்றிய சிவபிரான் பூமியில் ஒரு பிலத்தை உண்டாக்கி அதனுள் பிரளய வெள்ளத்தை மறையச் செய்தார். அந்தப் பிலத்தில் மறைந்த வெள்ளமே கௌவைக்கடல் எனும் தீர்த்தமாயிற்று. சுழித்து வெள்ளம் பலம் புகுந்த சூழ் நிலையால் இத்தலம் திருச்சுழியில் எனப்பட்டது. இன்று திருச்சுழி என்ற பெயருடன் விளங்கும் இப்பதி அருப்புக் கோட்டையிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மதுரை, விருதுநகர், அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் இவ்வூருக்கு வரு கின்றன. இங்கு புகைவண்டி நிலையமும் உள்ளது.

திருவண்ணாமலையிலுள்ள இரமணரின் ஆசிரமம் உலகப் புகழ் பெற்றது. அதனை நிறுவிய இரமண மகரிஷி பிறந்த ஊர் திருச்சுழியாகும். சிறு வயதி

வேயே இவ்வூரிலுள்ள ஒரு குன்றின் மேலுள்ள சிவாலயத்தில் அப்பெருமான் தியானத்திலேயே இருப்பார். அவர் ஆரம்பத்தில் கல்வி பயின்ற சேதுபதி ஆரம்பப் பள்ளியை இன்றும் காணலாம். அவர் பிறந்த வீட்டில் பூமிநாதர் ஆலய குருக்கள் குடியிருக்கிறார். இரமணர் பிறந்த அறையில் அவரது படம் உள்ளது; தினமும் அப்படத்திற்குப் பூசை நடைபெறுகிறது.

பூமிநாதர் ஆலயம்

கிழக்கு நோக்கி அமைந்துள்ள திருக்கோவிலைச் சுற்றி நான்கு தேர் வீதிகள் அமைந்துள்ளன. நந்தி, பலி பீடங்கள் அமைந்துள்ள கம்பத்தடி மண்டபத்தையடுத்து சுவாமியின் கோயிலையடையலாம். ஏழு நிலை கோபுரத்தைப் பெற்றுள்ள இச்சந்நிதியைச் சுற்றி ஆறுகாற்பீடம், சபா மண்டபம், அர்த்த மண்டபம் ஆகியன உள்ளன, மூலவர் பூமிநாதர் சுயம்புலிங்க மாகக் கருவறையில் காட்சியளிக்கிறார். புவனேசர், பூமீஸ்வரர் மணக்கோலநாதர், திருமேனிநாதர், பிரளய விடங்கர், சுழிகேசர் முதலிய பெயர்களாலும் மூலவர் அறியப் பெறுகிறார்.

திருச் சுழி யெனுமவர்க் குறுதி செந்திரு
திருச் சுழி தனை நினைப்பவர்க்குத் தீங்கிலை
திருச் சுழி கண்டவர் தேவராதலால்
திருக் சுழி யானடிச் கனிய செய்துமால்

(தல புராணம்)

சபா மண்டபத்தில் கற்சிலை வடிவிலுள்ள நடராஜரைக் காணலாம். அறுபத்து மூவர், சப்தமாதர், சோமாஸ்கந்தர், விசுவநாதர், விசாலாட்சி, சுழிகைக் கோவிந்தர், சண்டேசர், கால பைரவர், முருகன் நவ கிரகங்கள் என அமைத்துப் பரிவார தெய்வங்களும் ஆலயத்தில் இடம் பெற்றுள்ளன.

கோயிலின் தென் பகுதியில், இறைவனுக்கு வலது புறம் அம்பாள் கோயில் அமைந்துள்ளது. மதுரை மீனாட்சி போலவே அழகிய உருவம் கொண்ட அம்மனுக்குத் துணைமாலை நாயகி என்று பெயர். சகாயவல்லி, முத்துமாலை உமையாள், மாணிக்க மாலை, சொர்ண மாலை போன்ற பெயர்களும் அம்மனுக்கு உண்டு.

சிணைமாலை சொலுங் கூந்தலி மயமட மங்கையரா
சுணைமாலைக் கணையாக்கித் திரிபுரத்துக்
கனலூட்டி
பணைமாலை யொழிப்பதற்குப் பவளவிதழ்த்
தேனூட்டும்
துணைமாலைப் பரைகமலச் சேவடியைத்
தொழுவோமே

[தலபுராணம்]

பூமகள் பணி தண்டைக் காலினாள்-பூமண்டலத்தில்
பூத்துப் பசந்த பச்சை மேனியாள்;
நாமகள் மலர்மகள் துதித்தவள்-தேவர்முதலாய்
நானிலத்துயிரனைத்தும் விதித்தவள்;
காமதகனர் பாதியுடம்பினாள்-புன்னையோருயர்
கற்பகத்திலு முவந்த கடம்பினாள்
சேமநிதிசேர் சுழிகையூரினாள்-துணைமாலையென்று
செகத்திற்றுலங்குஞ் சிறந்த பேரினாள்

திருச் சுழியற் கயிற்றுப்பின்னல்—
திருச் சுழியல் குமார கவிராயர்.

வள்ளி, தெய்வயானை சமேதராகத் தனிக் கோயிலில் முருகன் தோன்றுகிறார். இரண்டாம் திருச்சுற்றின் மேற்கே அமைந்துள்ள புன்னை மரமே இங்கு தலவிருட்சம். ஆலயத்தினுள் நுழைந்தவுடன் கவ்வைக் கடல் (ஒலிப்புணரி) எனும் தீர்த்தம் உள்ளது; அழகிய நீராழி மண்டபத்துடன் இது காட்சியளிக்கிறது.

இவ்வூருக்கு வடபக்கமாக வந்து கிழக்கே திரும்பித் தெறகு நோக்கி ஓடும் கௌண்டின்ய நதி, (பாவகரி நதி,) (குண்டாறு) மற்றொரு தீர்த்தமாகும். இவை தவிர சூல, ஞால, கண்ணுவ, காலவ, ஞான, பிரம, திரிநயன, கூல, கோடி, எனும் 8 தீர்த்தங்கள் பற்றித் தலவரலாறு குறிப்பிடுகிறது. இங்கு வேலடி வினாயகர், தரும தாவரப் பிள்ளையார், போதி விநாயகர், அண்டம் பிரண்ட விநாயகர் எனும் நான்கு விநாயகர் சந்நிதிகள் உள்ளன. இக்கோயிலின் எட்டுப் பகுதிகளில் அஷ்ட லிங்கங்கள் உள்ளன. அவையாவன: பாண்டிய அரசர் கள் பூசித்த வெள்ளியம்பல நாதர், சோமசேகரர்; கௌண்டிண்ய முனிவர் பூசித்த கௌண்டின்ய லிங்கம்; காலவ முனிவா பூசித்த காலவ லிங்கம்; கண்ணுவ முனிவர் வழிபட்ட கண்ணுவ லிங்கம்; மன்மதன் வழிபட்ட காமீச்சுர லிங்கம்; கிருதாங்க அசுரன் பூசித்த கிருதாந்தகேச்சுர லிங்கம்; சூரியன் பூசித்த தினக ரேச்சுர லிங்கம்.

சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனாருடன் திருச்சுழியலிலுள்ள திருமேனிப் பெருமானை வழிபட்டுப் பதிகம் பாடினார். ஒரு நாள் சிவபெருமான் காளைப் பருவத்தினராய்க் கையில் பொற் செண்டும், திருமுடியில் சுழியமும் கொண்டு சுந்தரர் கனவில் தோன்றி "யாம் இருப்பது கானப்பேர்" என்று கூறி மறைந்தார். அடியார்கள் இருவரும் திருமேனி நாதரை வணங்கி விடைபெற்றுப்பின் காளையார் கோயில் சென்றனர். இச்சம்பவத்தைச் சேக்கிழார் பெருமான்.

"திருச்சுழியலிடங்கொண்ட செம்பொன்மலைச்
சிலையாரை
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல்விடத்தின்
இருட்சுழியும் மிடற்றாரை யிறைஞ்சியெதி ரிதழிமலர்ப்
பருச்சுழியத் தூடனூனா யியிரெனும்பா மலர்
புனைந்தார்"

இரணியன், இரண்யாட்சன் ஆகியோர் தீண்டிய தால் களங்கமுற்ற பூமிதேவி இத்தலத்தில் பூமி தீர்த்தத்தை உண்டாக்கி வழிபட்டுத் தூய்மையடைந்

தாள். மதுரை மாநகரில் சாரன் எனும் அந்தணன் தீவினை வயப்பட்டுத் தாசிலோலனாகவும், திருடனாகவும் மாறினான். மாறுவேடத்தில் நகருலா வந்த பராக்கிரம பாண்டியன் அக்கள்ளனைக் கையும் களவுமாகப் பிடித்து வாளால் வெட்டினார். அதனால் பிரம்மஹத்திதோஷம் அவரைப் பீடித்தது. திருச்சுழியில் ஈசனை வழிபட்டவுடன் தோஷம் நீங்கியது. பாண்டியரும் காடாக இருந்த இப்பகுதியை நகராக்கி, அதற்கு முத்திமாநகரம் எனப் பெயரிட்டு இங்கு ஆலயம் எழுப்பினார்.

இந்திரத் துய்மன் எனும் பாண்டியனின் ஆட்சியில் பிரளய காலம் ஏற்பட்டதால் கடல் நீர் உலகையே அழிப்பது போலப் பெருக்கெடுத்தது. அரசனின் வேண்டுகோளின் பேரில் சிவபெருமான் முத்திமா நகரைத் தம் சூலத்தால் பெயர்த்தெடுத்து வெள்ளத்தினின்று காப்பாற்றினார். இதனால் அவ்வூருக்குத் திரிசூலபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையின் போது இங்குவந்து காண்டீபத்தின் கோடி முனையால் உண்டாக்கிய கோடி தீர்த்தமும் உள்ளது.

இத்தலத்தில் ஒரு காலம் வானம் பொய்த்து வறட்சியும், வறுமையும் ஏற்பட்டன. கவுண்டிண்யர் எனும் முனிவரின் தவத்திற்கு ஏற்ப இறைவன் தன் தலையிலுள்ள கங்கையிலிருந்து ஒரு துளியைச் சிந்தினார். அதுவே கௌண்டிண்ய நதியாகப் பெருக்கெடுத்தது. இந்நதிக்குப் பாபஹரி என்றும் பெயர். தீய செயல்கள் பல புரிந்து வெண்குஷ்ட நோய்க்கு ஆளான சோமசிதளன் எனும் மாளவ வேந்தன் இந்த நதியில் நீராடி நோய் நீங்கப் பெற்றான்.

கௌதம முனிவர் அகலிகையைக் கல்லாகுமாறு சபித்தார். ''அறியாமல் தவறு செய்தேன்; அறிவிலா முனிவரே! என்னை இப்படியா சபிப்பது'' என்று

அகலிகை கூறினாள். அகலிகையின் கூற்று பலித்தது. கௌதமர் அறிவு குழம்பி மனம் தடுமாறினார். அசரீரி வாக்கின் பேரில் திருச்சுழி சென்று நீராடி வழிபட்டார். அவரது இன்னல் நீங்கியது. இராமபிரான் காலடி பட்டுப் பெண்ணாக மாறிய அகலிகை அவரை வந்தடைந்தாள். இருவருமாகப் பூமிநாதரை வழி பட்டனர். கௌதமரும் கலியாணசுந்தரர் எனும் லிங்கத்தைத் தாபித்தார்.

மலைநாட்டையாண்ட ஏமரதனின் மகள் மாலினியை ஒரு வேதாளம் பற்றியது. கோபிலர் எனும் முனிவரின் அறிவுரையின் பேரில் திருச்சுழியிலுள்ள சூல தீர்த்தத்தில் நீராடி வழிபட்டவுடன் வேதாளம் மாலினியை விட்டகன்றது. சமணர் ஏவிய கொடுஞ் சர்ப்பத்திடமிருந்து மதுரையைக் காக்குமாறு மன்னர் நரபதிதத்தர் வேண்டினார். இறைவன் விடுத்த அம்பு பாம்பைப் பிளந்தது. அதன் ஒரு பகுதி திருச்சுழியில் விழுந்து பல்லககிரி எனும் குன்றாக மாறியது.

முற்கல முனிவரின் மகள் சுப்பிரதையிடம் தகாத முறையில் நடந்து கொண்ட சித்திரத்துவசன் எனும் கந்தர்வன் முனி சாபத்தால் பித்தனாக மாறினான். பல காலம் அல்லலுற்ற பின் திருச்சுழியில் ஈசனை வழிபட்டு முன்போல் நல்ல நிலை அடைந்தான். நிசாகரர் எனும் முனிவர் அளித்த சாபத்தால் கிளியுருவை அடைந்த சித்திரரூபன் எனும் வித்யாதரனும் இத் தலத்தில் சாபவிமோசனம் அடைந்தான்.

இங்ஙனம் மன்னர், தேவர், முனிவர் போன்ற பலர் பூமிநாதரை வழிபட்டுப் பேறு பெற்ற செய்திகளைத் தல புராணம் தெரிவிக்கிறது. இதனையே ''தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன் திருச்சுழியல்'' என்று தேவாரப் பாடல் குறிப்பிடுகிறது. ''நிலந்தாங்கிய மலரான் கொழும் புகையால் நினைந்தேத்தும் தலம்''

எனும் தேவாரப் பாடல் இங்கு பூமிதேவி வழிபட்டதைக் குறிப்பிடுகிறது.

பாண்டிய நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் பதினான்கு. அவற்றுள் திருச்சுழி பன்னிரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. சுந்தரரின் அழகிய திருப்பதிகம் இத்தலத்தின் மாண்புகளைக் குறிப்பிடுகிறது. "திருச்சுழியலில் வழிபடுபவர்களை எமதூதர்கள் நெருங்கார்; அத்தகையோர் செல்வச் சிறப்புக்களைப் பெறுவர்; அவர்கள் வானளவு உயர்புகழ் பெறுவர். அவரது தீயவினைகள் கெட்டொழியும்" இவையே சுந்தரர் கூறும் கருத்துக்கள்.

திருநாவுக்கரசரின் ஒரு பாடல், மணிவாசகரின் திருக்கோவையார், குமரகுருபரரின் மீனாட்சியம்மைக் குறம், பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணம், பெரிய புராணம், சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா ஆகியவற்றில் திருச்சுழியல் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளன. இராமலிங்க வள்ளலாரும், "கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர் தண்சுழியல் வாழ்சிவ சாட்சியே" என்று செப்புகிறார்.

ஸ்ரீ ஆராவமுதாச்சாரியார் இயற்றிய திருச்சுழியல் தலபுராணம் அழகிய எளிய நடையில் அமைந்துள்ள ஒரு இலக்கியப் பெட்டகம். தாமோதரபுரம் வித்துவான் சுப்பிரமணியப்பிள்ளை எழுதிய திருச்சுழியல் கொம்பிலா வெண்பா அந்தாதி, கிருஷ்ணமாச்சாரியார், எழுதிய திருச்சுழியல் வெண்பா அந்தாதி மற்றும் குரவைப்பாட்டு, பள்ளு, கயிற்றுப் பின்னல், ஆடித்தவசு வழிநடைச் சிந்து போன்ற பிரபந்தங்கள், துணைமாலையம்மை பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்கள் திருச்சுழியல் தலச் சிறப்பைப் பறைசாற்றுகின்றன. தி. சு. கோவிந்தசாமி எழுதிய தலவரலாறு பல செய்திகளை அளிக்கிறது. இங்கு நாள்தோறும் பரம்பரை சிவாச்சாரியார்களால் ஆறுகால பூசை நடைபெறுகிறது. வேதபாராயணத்

திற்காக அத்யான பட்டரும், திராவிடவேதபாராயணத் திற்காக ஓதுவாமூர்த்திகளும், கோயில் திருவாபரணங் கள், பட்டு, பரிவட்டங்கள் போன்றவற்றின் பாது காவலுக்குச் சிப்பந்திகளும் உள்ளனர். ஆடிமாதம் நடைபெறும் அம்மன் தபஸ் உற்சவம், தைப்பூசத்தில் நடைபெறும் பழனியாண்டவர் உற்சவம் பங்குனியில் நடைபெறும் பிரம்மோற்சவம் ஆகிய மூன்றும் இங்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. பிரம்மோற்சவத்திற்கு முன் கிராமதேவதைகளான சுழிகை சொக்கியம்மன், மாரியம்மன், ஆகியவர்க களுக்கான விழாக்கள் நடைபெறுகின்றன. சுவாமி, அம்மன் ஆகிய இருவருக்கும் நுண்ணிய வேலைப்பா டமைந்த இரு வெள்ளி ரிஷப வாகனங்களும், வெள்ளி பிரதோஷ, ரிஷப வாகனமும் உள்ளன, சுவாமி, அம்மன் புறப்பாட்டிற்கான இரும்புச் சகடைகளும், மரச் சகடைகளும் உள்ளன. இரு அழகிய தேர்கள் அண்மையில் பழுதுபார்க்கப்பட்டன. வெள்ளி கவசங்கள், நாகாபரணம், வெள்ளி, தங்க ஆபரணங்கள் ஆகியனவும் உள்ளன.

ஆலயத்திலுள்ள பழைய கல்வெட்டுக்கள் சிதைந்து விட்டதால் அதன் வரலாற்றைக் கோர்வையாக எழுத இயலாது. முதலாம் இராஜராஜன் தீபம் எரிக்க மானியம் அளித்த செய்தியையும், காந்தளூரில் கப்பல் களை அழித்த செய்தியையும் கல்வெட்டு அறிவிக்கிறது. நாயக்கர் காலத்தில் நாடாகுளம் கிராமம் இனாமாக அளிக்கப்பட்டதாம்.

சுமார் 43500 சதுர அடி நிலப்பரப்பில் அமைந் துள்ள இவ்வாலயத்தை ஆதியின் பாண்டியன் பிரஹத் பலன் கட்டினான். பின்னர் பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர் போன்ற மன்னர்களால் பல பகுதி கள் புதுப்பிக்கப்பட்டன. மிகவும் பழுதுபட்டிருந்த இக்கோயிலை 1892 ஆண்டில் இராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதி அளித்த ரூ. 40000, மற்றும் குத்தகை வருமானம் ஆகியவற்றைக் கொண்டு தேவகோட்டை

திரு அ. சு. அண்ணாமலை செட்டியார் அவர்களால் கருங்கல் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. 1917 ஆம் ஆண்டு இராஜ இராஜேஸ்வர சேதுபதி முன்நிலையில் பெரும் பொருட் செலவில் குடமுழுக்கு நடைபெற்றது. தேவகோட்டை வீர. ராம. அழ. சுப்பிரமணியச் செட்டியார், அவர்தம் புதல்வர் பூமிநாதன் செட்டியார் ஆகியோரின் உதவியுடன் மேற்கு, வடக்குப் பிரகாரங்களின் தள வரிசையும், பிரளய விடங்கர் கோயில் திருப்பணியும் நடைபெற்று 4-2-1957 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. ஒரு சில பழைய சிற்பங்கள் இங்கு உள்ளன. அமர்ந்த கோலத்திலுள்ள திருமால், ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய உருவங்கள் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

திருச்சுழி சிறந்த யாத்திரை ஸ்தலமாக இன்று விளங்குகிறது. இங்கு வழிபாடு செய்தவர்கள் அடையும் பயனை சுந்தரரின் பாடல் தெரிவிக்கிறது.

"கவ்வைக் கடல் கதறிக்கொணர் முத்தங் கரைக்கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார் குடைந்தாடுந் திருச்சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவார்
அவ்வத் திசைக்கரசாகுவர் அலராள் பிரியாளே

செய்தவத்தைப் பேணித் தெறுகனலில் தண்புனலிற்
செய்தவத்தைப் பட்டுத் தெரிந்ததெவன்? செய்தவத்தை
தேண்டாதே யெந்தை திருச்சுழியற் சென்றடைமின்
வேண்டாதே தந்தருளும் வீடு

(திருச்சுழியல் வெண்பா அந்தாதி)

செஞ்சேரி மலை

வேலாயுதஸ்வாமி ஆலயம்

ஆனதினால் தென்சேரித் தலமகிமை
தனைப்புகல்வோர் அன்பாய்க் கேட்போர்
மாநிலத்தில் கலிவினையும் பலவினையும்
தானகன்று மகிழ்குபேரன்
தானெனவாழ்ந்திருந் திம்மைப்பயனடைந்துதேவர்
தபோனர்கள் போற்ற
மேனிலைசேர் கந்தவெற்பிற்குகனடியாம் பதத்தினில்
வீற்றிருப்பர் மாதோ.

ஈசனைக் குறித்துக் கடுமையாகத் தவம்புரிந்து, பெறற்கரிய வரங்களைச் சூரபத்மன் பெற்றான். தான் பெற்ற வரங்களின் வலிமையால் செருக்குற்று வானவருக்கும், உலகோருக்கும் சொல்லொண்ணாத் தொல்லைகளை அவன் அளித்து வந்தான். சூரனை அடக்கும் பொருட்டு ஈசன் ஆறுமுகப்பெருமானைப் படைத்தார். குமரனும், சிறுவயதில் பல அரிய திருவிளையாடல்களைப் புரிந்தார். உரிய காலம் வந்தவுடன் சிவபெருமான் குமரக்கடவுளைத் தேவ சேனைகளுக்குத் தலைமை தாங்கிப் போருக்குச் செல்லுமாறு அருளினார். முருகருக்குத் துணையாக வீரபாகு முதலிய நவ வீரர்கள் சென்றனர், சக்தியின் அம்சமான வேற்படையும், பதினொரு உருத்திரர்களின் அம்சமான பதினொரு ஆயுதங்களும் முருகப்பெருமானுக்கு வழங்கப்பட்டன.

தக்க படைபலம் பெற்றிருந்த போதிலும், அசுரர்களின் மாயையால் குமரனுக்கு ஆபத்து நேருமோ என உமையன்னை அஞ்சினார். மாயையின் பிடியிலிருந்து விடுவிக்கும் வல்லமையுள்ள மந்திரங்களை முருகப் பெருமானுக்கு உபதேசிக்குமாறு ஈசனிடம் வேண்டினார். "முருகா! வீரமகேந்திரபுரி செல்லும் வழியில் யாம் ஒரு மலை வடிவில் தோன்றுவோம். அங்குள்ள சிவகிரியில் தவமியற்று. யாம் அங்கு மந்திர உபதேசம் செய்வோம்." என்று சிவனார் அருளினார்.

அம்மலையை முருகப்பெருமான் அடையாளம் தெரிந்துகொள்ளும் பொருட்டு அதன் தன்மைகளையும், சிவபெருமான் குறிப்பிட்டார். "பாரத கண்டத்தின் தென்பகுதியில் கயிலைமலை போலவே சிவபூஷணமாக அம்மலை தோன்றும். அதன் உச்சியில் கங்கை போன்ற புனித ஆறு ஓடும். அதன் மேற்றிசையில் திருமாலும், கீழ்த் திசையில் நான்முகனும் பாறை வடிவில் காட்சியளிப்பர். மலையின் முகப்பில் நந்தி தேவர் தோன்றுவார். கலைமகளும், கதிரவனும் அங்கு தவமியற்றுவர். அம்மலையின் உச்சியிலுள்ள கவசக்கல் நீண்டுயர்ந்து நிற்கும். வானவரும், சித்தர்களும், தவசிகளும் தினமும் அங்கு வழிபாடு இயற்றுவர், அதன் அருகேயுள்ள சக்திகிரியில் அன்னை சக்தியே எழுந்தருளுவாள்".

தந்தையின் கட்டளையைத் தலைமேல் ஏற்ற தனயனும் சிவகிரியில் ஒருநாள் கடுந்தவம் இயற்றினார். சிவபெருமான் அங்கு காட்சியளித்துக் கந்தவேளுக்கு மந்திர உபதேசம் வழங்கினார். எனவே அம்மலைக்கு 'மந்திரகிரி' என்ற பெயர் ஏற்பட்டது. சிறு பிராயத்தினரான முருகப்பெருமானால் புயவலிமைமிக்க சூர பத்மனை வெல்ல இயலுமா? என்று தேவர்கள் சந்தேகித்தனர். முருகர் உபதேசம் பெற்ற காட்சியைக் கண்டபின் அவர்களது அஞ்ஞானம் அகன்று ஞானம்

உண்டாயிற்று. வானவருக்கு நலமளித்ததால் ஞானமய மான அம்மலைக்குத் தென்சேரி கிரி என்ற பெயரும் ஏற்பட்டது. (மந்-நினைப்பவரை திர-காப்பாற்றும் கிரி-மலை.) உள்ளன்புடன் தன்னை நினைப்பவரைக் காப்பாற்றும் மலையாகையால் மந்திரகிரி எனப்பட்ட தாக ஒரு கருத்து உண்டு. இத்தகைய மகிமைவாய்ந்த இம்மலை இன்று செஞ்சேரிமலை எனப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம் நகரிலிருந்து உடுமலைப்பேட்டை செல்லும் கிளைப்பாதையில் சுமார் பதினெட்டு கி.மீ. தொலைவில் இப்பதி அமைந்துள்ளது. கோவை, பொள்ளாச்சி, பல்லடம், திருப்பூர், உடு மலை போன்ற ஊர்களிலிருந்து செஞ்சேரிமலை வழியே பேருந்துகள் செல்கின்றன.

மலையடிவாரத்திலுள்ள ஊரை மலைப்பாளையம் என்றே அழைப்பர். இவ்வூரில் பக்தர்கள் தங்குவதற் கான சில மடங்கள் உள்ளன. அவற்றுள் திருநாவுக் கரசர் திருமடம், தண்ணீர் பந்தல், நந்தவனம் ஆகியன அமைத்துக் தொண்டுகள் புரிந்து வந்தது. சுமார் 150 அடி உயரமுள்ள மலையின் உச்சியில ஆலயம் அமைந் துள்ளது. இக்குன்று கடல் மட்டத்திற்கு 1356 அடி உயரத்தில் உள்ளது. மலை அடிவாரத்தில் சந்தன வினாயகர் சந்நிதியும், மலைக்குச் செல்லும்வழியில் இடும்பன் கோயிலும் உள்ளன. சுமார் 250 படிகளைக் கடந்தபின் உச்சியிலுள்ள கோயிலை அடையலாம்.

ஆலய வாயிலில் கொடிமரமும், அதனையடுத்து ஒரு பெரிய மகா மண்டபமும் உள்ளன. முதலிலுள்ள சந்நிதியில் முருகப்பெருமான் நின்ற கோலத்தில் காட்சி யளிக்கிறார். ஆறுமுகங்களுடன் தோன்றும் கந்தப் பெருமானின் இருமருங்கும் வள்ளியும், தெய்வயானையும் உள்ளனர். பன்னிரு கரங்களையுடைய முருகப் பெருமானின் உயரம் சுமார் நான்கடி இருக்கும். மந்திராசல வேலாயுத மூர்த்தி என அவரை அழைக்

கின்றனர். இடதுபுறமுள்ள கரங்களில் முதலாவது கரம் சேவற்கொடியைப் பிடிப்பதற்குப் பதிலாகச் செஞ்சேவலையை பிடித்துக் கொண்டிருப்பது பிற தலங்களில் காணக்கிடைக்காத காட்சியாகும். இக்கோலத்தை அருணகிரிநாதர் சிறப்பாகப் போற்றுகிறார்.

> ''திண்டாடச் சிந்து நிசிசரர் தொண்டாகக்
> கண்டவமர்பொரு
> செஞ்சேவற் செங்கையுடைய சண்முக தேவே!
> சிங்காரச் செம்பொன் மதிலத லங்காரச் சந்தர
> கலைதவழ்
> தென்சேரிக் குன்றிலினிதுறை பெருமானே''

அன்பின் திருவுருவாம் முருகப்பெருமான் பரமசிவனையும் பார்வதியையும் கயிலை மலையில் வலம் வந்த காட்சியாக மயிலின் தலைப்பக்கம் வடக்கு நோக்கியும், மயிலின் முன் நின்ற காட்சியாகவும் உள்ளார்.

வேலாயுதசாமியின் சந்நிதியை அடுத்து பல சந்நிதிகள் அமைந்துள்ளன. அவற்றில் விநாயார், சிவபெருமான், உமையம்மை, திருமால், நடராஜர், ஆகியோர் இடம் பெற்றுள்ளனர், சிவபெருமான் கைலாசநாதர் என்ற பெயருடன் சிவலிங்க வடிவினராகத் தோன்றுகிறார். அருகே பெரியநாயகி அல்லது பிரகந்நாயகி எனப்படும் அம்மனின் சந்நிதி உள்ளது. சிவனை இத்தலத்தில் தமக்கு வலப்புறம் வைத்துப் பூசித்துப் பேறு பெற்ற திருமால் ஒரு தனி சந்நிதியில் காட்சியளிக்கிறார்.

இம்மலையின் சூழலில் அமைந்துள்ள பெயரில்லா மரம் (அநாமவிருட்சம்) புலிப்பார் தட்சிக்கல், மகரச் சுனை, போகர் தவமியற்றிய குகை ஆகியனவற்றையும் காணலாம். கருநொச்சியே இங்கு தலவிருட்சமாக விளங்குகிறது. இதன் தழைகளால் இறைவனை அருச்சிப்பது விசேடம்.

தமிழகத்தில் பூக்கட்டி வைத்துப் பார்க்கும் பழக்கம் உண்டு. இரு பூக்களை ஒன்றாகக் கட்டி இறைவன் சந்நிதியில் வைக்கப்படும். தீபாராதனைக்குப் பினனர் அர்ச்சகர் அவற்றுள் ஒன்றை எடுத்துத் தருவார். கிடைக்கும் பூவுக்கு ஏற்ப காரியத்தின் பலனை அறிந்து அதனைத் தொடங்குவர். இதுபோலவே பூக்கேட்டன் எனும் பழக்கம் செஞ்சேரி மலை வேலாயுத சுவாமியில் ஆலயத்தில் பிரசித்தமானது. எதிர்கால நடப்புக் களைத் தெரிந்து கொள்ள வேண்டுவோர் ஆறுமுகப் பெருமானின் ஓரிரு கலங்களில் பூ வைத்துக் கணித்துக் கொள்வர். ஒரு சில நிமிடங்களுக்குள் இறைவனின் வலக் கரத்திலிருந்து மலர் விழுந்தால் காரியம் நிறைவேறும் என்ற எண்ணத்துடன் இச்செயலைத் தொடங்குவர். வலக்கரத்திலிருந்து சற்று தாமதமாகவே பூ விழுந்தால் காரியத்தில் காலதாமதம் ஏற்படும். இடது கரத்தி லிருந்து பூ விழுந்தால் நினைத்த காரியம் பயனடையாது. இவ்வாட்டார மக்களுக்கு இப்பழக்கத் தில் அசையாத நம்பிக்கை உண்டு.

கருணீகர் மரபைச் சேர்ந்த அம்மையப்பர் என்பவர் செஞ்சேரி கிரித் தலபுராணத்தை எழுதியுள்ளார். இந்நூலில் பன்னிரண்டு சருக்கங்களும், 255 பாடல்களும் உள்ளன. கந்தபுராணத்தில் உற்பத்திக் காண்டத் திலுள்ள மந்திரகிரி படலத்தில் இத்தலம் குறிப்பிடப் பட்டுள்ளது. வடமொழியில் நந்திதேவர் மார்க்கண் டேயருக்குக் கூறிய வரலாற்றை அம்மையப்பர் தமிழில் எழுதியுள்ளார்.

சூரசம்ஹாரம் முடிந்த பின்னர் முருகப்பெருமான் தெய்வயானையைத் திருப்பரங்குன்றத்தில் மணம் புரிந்து கொண்டார். பின்னர் கந்த வேள், தெய்வயானையுடன் மந்திரகிரியை அடைந்து அங்கு ஒரு சிங்காரக் கோயிலில் குடிகொண்டார். தேவர்கள், பூதகணங்கள், முனிவர் கள், நவவீரர்கள் ஆகியோரும் அவ்விடத்தில் குழுமினர். பின்னர் தண்டகாரண்யத்தில் குறவர் குடியில் தோன்றிய

வள்ளியை வேலவர் மணம் புரிந்துக் கொண்டார். திருமணம் முடிந்தவுடன் வள்ளியுடன் மந்திரகிரியில் எழுந்தருளினார்.

மந்திரகிரியின் அடிவாரத்தில் அமைந்துள்ள வாமதேவர் தவக்குடிலில் வியாசர். மரீசி, அத்திரி, புலிக்கால் முனிவர், கலைக்கோட்டு முனிவர், அங்கிரசர், குச்சிகன், கோசிகன் போன்ற தவசிகள் குழுமியிருந்தனர். அக்குடிலுக்கு வருகை புரிந்த நாரத முனிவர் 'உங்களுள் எவர் தவத்தில் சிறந்தவரோ அவர்க்கு வணக்கம், என்று இயம்பிவிட்டுச் சென்றார். தவத்தில் சிறந்தவரான அகத்தியருக்கே நாரதரின் வணக்கம் உரியது என அனைத்து முனிவர்களும் ஒப்புக் கொண்டனர். வியாசர் மட்டும் இக்கூற்றை மறுத்து 'அகத்தியரை விட யாமே தவத்தில் சிறந்தவர்' என்று உரைத்தார். அகத்தியரின் வேண்டுதலுக்கு ஏற்ப சிவபெருமான் அங்கு தோன்றி 'அகத்தியரே தவத்தில் தலை சிறந்தவர்' என்று கூறினார்.

அகத்திய முனிவர் மந்திராசலத்தை யடைந்து வடதிசை நோக்கி அமர்ந்து முருகனைக் குறித்தவாறு தவம் புரிந்தார். அகத்தியரின் விருப்பப்படியே சயிலோதகத் தீர்த்தம் எனும் சுனையை வேலவர் உண்டாக்கினார். மும்மூர்த்திகள் வாழும் வரை அத்தீர்த்தம் நிலைத்திருக்கும் என்றும் அதில் நீராடுவோரின் பாவங்கள் நீங்கும் எனவும் கந்தவேள் அருளினார். இன்று இச்சுனை ஞான தீர்த்தம் என்ற பெயருடன் ஆலயத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. இது மழை நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும். இதற்கு என்றும் வற்றாத தன்மை உண்டு என்று கூறுகிறார்கள். பேய், பிசாசு, சூனியம், பித்தம், மனநோய், உடற்பிணி ஆகியவற்றில் பீடிக்கப்பட்டவர் இதில் நீராடி ஈசனை வழிபட்டு நிவாரணம் அடைகிறார்கள்.

மேலும் ஏழு புண்ணிய தீர்த்தங்கள் இம்மலையில் உள்ளதாகத் தீர்த்தச் சருக்கம் எனும் பகுதி விளம்பு

கிறது. கற்கபாடம் எனும் கதவு வழியே சென்று முனிவர்கள் தவம் புரியும் ஒரு குகைக்குள் சென்றால் அமுதச் சுனையைக் காணலாம். அருகே உள்ள சூரிய தீர்த்தத்தில் திருமால், கதிரவன் ஆகியோர் நீராடி வழிபட்டனர். மலையுச்சியிலுள்ள கண்ணாடிச் சுனையில் நீராடினால் குபேர வாழ்வும், வஜ்ரதேகமும் பெறலாம். கீழ்த்திசையில் பிரம்மன், லஷ்மி, சரஸ்வதி ஆகியோரின் பெயரால் அமைந்துள்ள மூன்று தீர்த்தங்கள் உள்ளன.

இக்கோயிலில் காலசந்தி உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தஜாமம் ஆகிய நான்கு வேளைகளில் பூஜை நடைபெறுகிறது. ஆலயம் காலை ஆறு மணி முதல் மதியம் பன்னிரண்டரை வரையிலும் மாலை 4 முதல் இரவு எட்டு மணிவரையிலும் திறந்திருக்கும். சுக்கிரவாரம், பிரதோஷம், கிருத்திகை போன்ற நாட்களில் விசேட பூஜைகளும், அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். சித்திரை வருடப்பிறப்பு, திருவோண நடராஜர்விழா, அக்னி நட்சத்திர விழா (15 நாள்). வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், விநாயக சதுர்த்தி, சிராவணம், ஆருத்ரா தரிசனம், தை மகர சங்கராந்தி, மாசிமகம், பங்குனி உத்திரம் போன்ற மாதப் பண்டிகைகள் இங்கு கொண்டாடப்படுகின்றன. தைப்பூசதன்று தேர்த் திருவிழா நடைபெறும்.

அண்மைக்காலத்தில் பல திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அருணாசல கவுண்டர் தர்ம கர்த்தாவாக விளங்கிய போது ரூ: 1000/- செலவில் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. வாரப்பட்டி சந்திர பழனிகவுண்டர், சுப்பே கவுண்டர் ஆகியோரின் உதவியுடன் சுவாமி கீழே இறங்க மட்சாலை அமைக்கப்பட்டது. சில உற்சவ விக்கிரகங்களும் செய்யப்பட்டன.

மந்திரகிரி ஆலயத்தின் கதவில் சில வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அருணகிரி நாதர் இரு திருப்புகழ்ப் பாடல்களை முருகனுக்குச் சூட்டியுள்ளார்.

பழனிமலை உபாத்தியாயர் இயற்றிய 'செஞ்சேரி மாலையும்', கோவிந்தசாமி ஆச்சாரி எழுதிய 'தென் சேரிகிரி நான்மணி மாலையும்' இத்தலத்தைச் சிறப்பிக்கின்றன.

'ஆதியில் அரன் தனக்கு உபதேசம் புரிந்த கனிவாயன், 'அசுரரை வென்ற சோதியன், 'நீதி திகழ் பெரியநாயகி புதல்வன், வேதமாதவர் பரவும் எழில் மந்திரகிரி ஆறுமுகன் 'எழிற்றூ வாசத்தார் ஆரும் புயத்தான்' சீர் ஆரும் பதத்தான் செஞ்சேரி கிரியான் என்றெல்லாம் அம்மையப்பர் மந்திராசல வேலனைப் புகழ்ந்து பாடுகிறார். இப்பெருமான் புரிந்த அற்புதங்கள் பல. வாலிப்பாளையம், சாலையில் பணிபுரிந்து வந்த ஒரு பொறியியல் அதிகாரியின் கண்களுக்கு இம்மலை பொன்மயமாகவும், சிவா ரூபமாகவும் தெரிந்ததாய். விளைச்சல் சரியின்றித் துன்புற்ற ஒரு விவசாயிக்கு செஞ்சேரிமலை முருகன் அருளால் நல்ல நெல் கிடைத்தது. செஞ்சேரி மலை முருகனை வழிபட்ட நாள்முதல் தனது செல்வம் பெருகியது, கண்ட ஒரு தனவந்தர் ஆலயத்தின் முன் மண்டபத் திருப்பணிக்கு உதவினார். ஆலயத்தின் பகுதிகளைப் புதுப்பிக்கும் பணி இன்றும் நடைபெற்று வருகிறது.

சிங்கார அரி மருக பங்கேரு கனுமகிழ
சென்றேயும் அமரருடை சிறை மீளச்
செண்டாடி அசுரர்கிளைவென்றாடி அடியர்தொழத்
தென்சேரி கிரியில் வளர் பெருமாளே

(அருணாகிரி நாதர்)

வானுளோர் முதலான வரியா வரு மகிழத்
தானெழிற் பெறுந் தெக்கண திசையினில் சார்ந்து
ஊனமற்றிடப் பதவியுங் கொடுப்பதாலுயர்ந்த
ஞானமேஷ தென்சேரி மாமலையென நவில்வார்

(தல புராணம்)

குலசேகரப்பட்டினம்

கச்சிகொண்ட பாண்டீஸ்வரர் ஆலயம்

தருமந் தழைப்பச் சிவசமயந் தழைப்பத்
திருநீற்றொளி தழைப்பத்
தானந் தழைப்பப் பரிகலத்தார் தழைப்பப் பரிவு
தொண்டர் செய்யுங்
கருமந் தழைப்ப விசைத்த பிள்ளைக் கவிதை
தழைப்பக் கல்வி கவி
கற்றோர் தழைப்பப் புகழ்க்குலசே கரப்பட்டினமுந்
தழைப்பவிரு
பெருமண் டலங்கரத் தருள் வேந்தர் பிடித்த
செங்கோ தழைப்ப மக்கட்
பெம்மான் கைமான் தரித்த விடைப் பெருமான்
பூட்டு முன்னுடைய
திருமங்கலப் பூண் தடழைப்பவம்மா திருப்
பொன்னூசலாடுகவே
செகத்தி லறத்தை வளர்த்தவனே திருப்.
பொன்னூசலாடுகவே

குலசை தெய்வசிகாமணிக் கவிராயர்
அருளிய அறம்வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ்

கி. பி. 13ம் நூற்றாண்டில் தென்பாண்டி நாட்டைக் குலசேகர பாண்டியன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். அம்மன்னன் அன்னை பராசக்திக்கு ஒரு ஆலயம் கட்ட முடிவு செய்தான். அன்னை பாரசக்தி அம்மன்னன் கனவில் காமாட்சியம்மன் உருவில் தோன்றி, ''அன்ப! நீ எனக்கு ஒரு ஆலயம் கட்ட எண்ணியிருப்பதாக அறிந்தேன். காஞ்சியம் பதியில் நான் குடியிருக்கும் திருக்காமக்கோட்டத்தைப் போலவே அமைப்புடைய

ஒரு ஆலயத்தை நீ கட்டுவாயாக!'' என்று அருளினாள். பாண்டிய மன்னனும் காஞ்சியிலுள்ள காமாட்சியம்மன் கோயிலை மையமாகக் கொண்டு அதே பாணியில் ஒரு ஆலயத்தைக் கட்டினான். இக்கோயில் அமைந்துள்ள இடமே குலசேகரப் பட்டினம் என்ற சிற்றூர். சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு 8 கி.மீ. தெற்கில் இத்தலம் உள்ளது. திருச்செந்தூரிலிருந்து நாகர்கோயில் செல்லும் பேருந்துகளும், நகரப் பேருந்துகளும் இவ்வூர் வழியே செல்கின்றன.

குலசேகரப் பட்டினம் ஒரு பெரிய கிராமமாகும். இதனைச் சுருக்கமாகக் குலசை என்றே அழைக்கின்றனர். கடற்கரை ஓரமாக அமைந்துள்ளதால் பட்டினம் என்று பெயர் ஏற்பட்டது. திருச்செந்தூரிலிருந்து குலசைநோக்கி வரும்போது ஊரின் துவக்கத்தில் நெடுஞ்சாலையோரமாகக் (அண்ணாசாலைக்கு அருகே) கோயிலைக் காணலாம். கோயிலின் பரப்பு சுமார் ஒரு ஏக்கர் இருக்கலாம். ஓங்கி உயர்ந்துள்ள கோபுரம் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த உட்பகுதிகள் ஆகியவை எதுவும் இன்றி எளிமையான தோற்றத்துடன் கோயில் காட்சியளிக்கிறது. ஓடுகளால் கூரை வேயப்பட்டுக் கேரளக் கோயில் பாணியிலுள்ள முன் மண்டபம் பக்தர்களை வரவேற்கிறது. ஆலயத்தின் பிறபகுதிகள் தமிழகக் கோயில் பாணியில் அமைத்துள்ளன. பல தூண்களை உள்ளடக்கிய பண்டபங்களும், அவற்றைச் சுற்றி அகன்ற, பெரிய வெளிப் பிரகாரமும் உள்ளன. உட்பகுதியில் நால்வர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், கன்னி விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், சனீஸ்வரர், சூரியன், சந்திரன் ஆகிய திருஉருவங்களைக் கண்டு வணங்கலாம். நவகிரகங்கள் ஒரு தனி மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. சூரியன் தனது இரு தேவிகளுடன் காட்சியளிப்பதால் இத்தொகுதியில் மொத்தம் பதினோரு உருவங்களைக் காணலாம், இதே போல் சூரியன் தோன்றுவது அபூர்வமான அம்சமாகும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள புலியங்குளம் என்ற ஊரிலுள்ள சிவாலயத்தில் ஒன்பது கோள்களும் தங்களது பத்தினிகளுடன் காட்சி அளிக்கின்றன நடராஜர், சிவகாமியம்மை, சோமாஸ்கந்தர், தனி அம்மன் ஆகிய உற்சவ விக்கிரகங்களும் ஆலயத்தில் உள்ளன. மகா மண்டபத்தில் சுப்பிரமணியரும் விநாயகரும் தோன்றுகின்றனர்.

கருவறையில் மூலவர் லிங்கவடிவில் காட்சியளிக்கிறார். இவரது திருநாமம் கச்சி கொண்ட பாண்டீஸ்வரர் ஆகும். ஒரு பாண்டிய மன்னன் காஞ்சியை வென்று கைப்பற்றி அவ்வெற்றியின் நினைவாகக் கச்சி கொண்ட பாண்டியன் என்ற விருதை ஏற்றிருக்க வேண்டும். தனது வெற்றியின் சின்னமாகக் கச்சி கொண்ட பாண்டியபுரம் என்ற ஊரை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வூரில் ஒரு சிவாயலத்தை எழுப்பி ஈசருக்குக் கச்சி கொண்ட பாண்டீசர் என்ற பெயரை வழங்கியிருக்கலாம். இதுவே இப்பேரிலிருந்து ஊகித்து அறியக் கூடிய செய்திகள். சோழமன்னன் முதலாம் இராஜேந்திரன் தனது வடஇந்திய வெற்றியின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரம் என்ற கோயிலைக் கட்டியதை இங்கு நினைவில் கொள்ளலாம். அக்கோயிலுள்ள மூலமூர்த்தி கங்கை கொண்ட சோழீச்சுர உடையார் என்று பெயர் பெற்றார். கி.பி. 1268 முதல் 1310 வரை ஆட்சிபுரிந்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் காஞ்சி உள்ளிட்ட நிலப்பரப்பைவென்று கைக்கொண்டான். அம்மன்னனே கச்சி கொண்ட பாணடியன் என்ற விருதைப் புனைந்து தென்பாண்டி நாட்டில் ஒரு ஊரையும், அங்கு கோயிலையும் உண்டாக்கியிருக்கலாம் என்று ஊகிக்க இடமுள்ளது. இக்கருத்தைத் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் வெளியிட்டுள்ளார். காஞ்சியின் நினைவாகப் பாண்டியன் கோயிலை நிறுவிய செய்தியைக் குலசை உலா என்ற சிற்றிலக்கிய நூல் வாயிலாக அறியலாம்.

''தேராரும் வீதித் திருக்குலசை மாநகரில்
பாராரும் கீர்த்தி ஒரு பாண்டியன் முன் ஆராத
ஆசையோடுத் தவஞ் செய்தன்பாய் அவன் வேண்ட
மாசில்வடி வாயுதித்து வாழ்ந்திருப்போன்''

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனைக் குலசை உலா ''தென்குலசைச் கச்சி கொண்ட வீசுரர்'', ''திருநாமம் கச்சி கொண்ட பாண்டீசுரனாம் பரஞ் சோதி'', ''கச்சிகொண்ட பாண்டீசர்'' என்று பலவாறு குறிப்பிடுகின்றது.

சுவாமி சந்நிதிக்கு அருகேயுள்ள சந்நிதியில் அம்மனான அறம் வளர்த்த நாயகி அருளாட்சி நடத்துகிறாள். புன்னகை ததும்பும் முகம்; அருள்நிறைந்த கண்கள்; அவற்றிலிருந்து வெளிப்படும் கருணை வெள்ளம்; அபய வரத சுரங்களுடன் பொலிவாக நின்ற கோலம்; இங்ஙனம் பேரருளின் மொத்த உருவமாக அன்னை திகழ்கிறாள். இவரைக் குலசை உலாவின் ஆசிரியர் ''எண்ணான் கறம் வளர்த்த நாயகி என் அம்மை'', ''அறம் வளர்த்த உத்தமி'' என்றெல்லாம் அழைக்கிறார்.

இங்கு மாமரமே ஸ்தலவிருக்ஷமாகும். அன்னை இப்பகுதியில் மாமரத்தோடு தோன்றி அம்மரத்தின் கீழ் அமர்ந்தவாறு இறைவனைக் குறித்துத் தவமியற்றிய தாகத் தல வரலாறு செப்புகிறது. புனிதத் தன்மை யுடைய இம்மரம் பன்னெடுங்காலமாகப் பசுமையாகவே உள்ளது. மேலும் பருவம் பாராமல் ஆண்டு முழுதும் இதில் காய்கள் தோன்றிப் பழுக்கின்றன. இம்மரத்தின் சிறப்பை ஒரு தனிப்பாடல் போற்றுகிறது.

''ஒரு குலையதனில் பூ வொடு பிஞ்சும்
வடுவொடு காயும் பழமும் பற்பல
நெடுஞ்சுவை யோடு நீணிலத் தருளும்''

குலசையம்பதிக்கு சற்றுத் தொலைவிலுள்ள திருச் செந்தூரில் (திருச்சீரலைவாய்) முருகப்பெருமான் சூரபத்மனுடன் போர் புரிந்ததாகக் கந்தபுராணம் செப்புகிறது. பல மாயங்களைப் புரிந்த பின்னர் சூர பத்மன் ஒரு மாபெரும் மாமரமாக நின்றான். இறுதியில் வேலேறிந்து அந்த மரத்தைக் கந்தப் பெருமான் இரண்டாகப் பிளந்தார். இச்சம்பவம் நடைபெற்ற இடம் மாபடு என்று வழங்கப்பட்டது. (இன்று மணப் பாடு என மருவியுள்ளது) மாமரமாகச் சூரன் உரு வெடுத்ததால் அவ்விடத்தில் மாமரமே முளைக்கக் கூடாது என்று தேவசேனாபதி சாபமிட்டாராம். கந்தனின் சாபத்தால் அப்பகுதியில் மாமரமே முளைப் பதில்லையாம். இத்தகைய சாபம் பெற்ற பகுதியி லுள்ள ஒரே மாமரம் குலசை ஆலயத்திலுள்ளதாம். அம்மனின் அருளைப் பெற்றதால் அம்மரம் நீண்ட நாட்கள் அங்கே இருந்து வருகிறது. ஆலயத்தின் வடக்கு பிரகாரத்திலுள்ள இம்மரத்தடியில் அம்மன் தவமியற்றும் கோலத்தில் காட்சியளிக்கிறார். இந்தத் தவக்கோல நாயகிக்கு மாமரத்தில் தோன்றும் கனியே நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது.

இல்லறம், துறவறம் என்ற இரண்டையும் நமது வாழ்வில் இரு பகுதிகளாகச் சான்றோர்கள் வகுத் துள்ளனர். இல்லறத்தில் ஈடுபட்டு, இன்பம் துய்த்து, அறங்கள் பல புரிந்து, பிள்ளைகளைப் பெற்ற பின்னர் துறவறத்தை நாடி உலக வாழ்வைச் செம்மையாக்க வேண்டும் என்றே நமது சாத்திரங்கள் அறிவுறுத்து கின்றன. இந்த இரு வாழ்க்கை நெறிகளையும் அன்னை யின் திருக்கோலங்கள் உணர்த்துகின்றன. கருவறையில் நின்று பக்தர்களின் குறைகளைக் களைந்து நல்லருள் பொழியும் அறம் வளர்த்த நாயகியான அன்னை இல்லற வாழ்விற்கு ஒரு உதாரணம். இல்லறத்தில் ஈடு பாடுள்ளோர்க்கு வழிகாட்டியாக இவ்வாழ்வில் அறம் வளர்த்த நாயகியாகத் திகழ்கிறாள். தலவிருட்சத்தினடி

யில் தவமியற்றும் நாயகி துறவற வாழ்விற்கு வழி காட்டும் ஞானச் செல்வியாவாள்.

அன்னை காஞ்சி மாநகரில் ஆகம முறைப்படிச் சிவ பெருமானை வழிபட்டு 32 வகையான அறங்களைப் புரிந்து அறம் வளர்த்த நாயகியாக விளங்கினாள். திருவையாறு என்ற தலத்தில் தர்மசம்வர்த்தினி (தமிழில் அறம் வளர்த்த நாயகி) என்ற திருநாமத்துடன் அம்மன் கோலம் கொண்டுள்ளார். சிவபெருமான் ஒரு சிறு கலத்தில் அளித்த நெல்லைக் கொண்டு பூவுலகம் முழுவதும் அறத்தை வளர்த்ததாகத் திருவையாறு தல வரலாறு இயம்பும். தஞ்சை மாவட்டத்திலுள்ள திரு புவனம் என்ற தலத்திலுள்ள கம்பஹரேஸ்வரர் கோயிலிலும் அறம் வளர்த்த நாயகி என்ற பெயருடன் அன்னை கொலுவிருக்கிறாள்.

இவ்வாலயம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாக அதிகாரியின் கீழ் ஒரு உபகோயிலாகச் செயல்பட்டு வருகிறது. இதில் பணியாற்றும் அர்ச்சகர் களும் திருச்செந்தூரிலிருந்தே வந்து செல்கின்றனர். கோயில் காலை 6 முதல் பத்தரை வரையிலும், மாலை நான்கு முதல் ஏழரை வரையிலும் திறந்திருக்கும். சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவமும், தைமாதத்தில் விழாவும், பிற மாதாந்திர விசேட நாட்களும் இங்கு கொண்டாடப்படுகின்றன. கிளி, மயில், ரிஷபம், குதிரை, இராவணன், கயிலைமலை போன்ற மரவாகனங் களும், பெரிய பல்லக்கும் இக்கோயிலில் உள்ளன. இக்கோயிலில் கடைசியாக 3.7.1956 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றதாம். இப்போது வெளிச் சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசி, மின்சார இணைப்புக் களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவேறியுள்ளன. ஆலயத்தின் விமானங்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆலயத்திற்கு வெளியேயுள்ள ஒரு தென்னை மரத்தின் மேல்பகுதி சர்ப்பம் போல வளைந்து

காணப்படுகிறது. ஆலயத்திற்கு வெளியேயுள்ள சில சர்ப்ப உருவங்களுக்கு மக்கள் வழிபாடாற்றுகின்றனர்.

இவ்வூரை உள்ளடக்கிய பகுதி வீரைவளநாடு எனப்பட்டது. குலசை உலா என்ற சிற்றிலக்கியம் டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்களிடம் ஓலைச் சுவடி வடிவில் இருந்தது. அதனை அவர் திருச்சிற்றம்பல ஓதுவார் என்பவரிடம் இருந்து பெற்றார். இந்நூலை உ. வே. சாமிநாத ஐயர் நூலகத்தார் வெளியிட்டுள்ளனர். இதன் ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் என்பார். இந்நூலில் இவ்வூர் தென்குலசை, குலசாபுரி குலசை எனக்குறிப்பிடப் பட்டுள்ளது.

உலாவின் முதற்பகுதியில் சிவபெருமானின் பெருமைகள் போற்றப்பட்டுள்ளன. ''தன் முக்குணங்களால் நான்முகன் விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரையும் தோற்றுவித்தவர்; ஐந்து தொழில்களைப் புரிவதுடன், அதனைச் சிறப்பிக்கும் நடனத்தையும் புரிபவர்; வேதத்தைச் சிலம்பாகவும், இடபத்தை ஊர்தியாகவும் கொண்டவர்; வேதத்தை விளக்கியவர்; திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரியவர்;'' இத்தகைய தன்மைகளை உடைய சிவனாருக்கு உரிய தலங்கள் கயிலை, தில்லை, காஞ்சி போன்றன. காஞ்சி நகரைத் திவ்வியமாம் காஞ்சி என்று போற்றுகிறார். அங்குள்ள புனித மாமரத்தைப் பூவும் தளிரும் புது வருஷம் காய்கனியும் மேவும் ஒரு மாவை'' என்று புகழ்ந்து கூறுகிறார். இறைவன் காஞ்சியில் காமாட்சியின் வளைத்தழும்பும், நகில் தழும்பும் பெற்றவர் என்றும், காஞ்சியின் நினைவாகவே இப்பெருமானை மன்னன் இங்கு நிறுவினான் என்றும் குறிப்பிடுகிறார்:

''எங்கள் மலை மடந்தை எவ்வுயிரும் பெற்றெடுத்தும்
கொங்கை தளராக் குமரியாள்—பொங்கியசீர்க்
காஞ்சிப்பதியில் அருட்கம்பைத் திருநதியில்
வாஞ்சை மிகுத்து வழிபடவே — அஞ்சலமாய்

வெள்ளம் பெருகிவர விம்மி விதிர்த்துத்
தள்ள வொழியா தது கண்டே—உள்ளணைத்துக்
கொள்ளத் திருமலர்கைக் கோல வளைத்தழும்பும்
வள்ளத் தனக் குறியும் வைத்திருப்போன்''.

உலாப்போகும் இறைவனின் திருமேனியலங்காரம் வெகு அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. ''தலையில் பொன்மகுடம்; பொலிவான நுதரில் வெண்ணீறு; காதுகளில் எண்திசையும் ஒளிவிடும் மகர குண்டலங்கள், திண்மையான தோளில் கேயூரம்; கண்டத்தில் அக்குமணிக் கண்டிகை: ஆயிரம் பொற்சோதிக் கதிர் போல் ஒளிவிடும் மார்பில் திருவடம்; திருவடிகளில் வீரசங்கிலியும், சூரியனைப் போல ஒளிவிடும் சிலம்பு, கழல் ஆகியன; உடலில் பொற்பீதாம்பரம்; இவ்வாறு கண்ணைப் பறிக்கும் எழிலுருவாய் ஈசன் தோன்றினார். ஈசனின் தசாங்கங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. சங்கரன் எனப்படும் இறைவனின் நாடு வீரவளநாடு எனப்படும். பொருநையே அவருக்குரிய ஆறு; கயிலையே அவருக் குரிய மலை; நாதமுரசு அவருக்கேற்ற முரசு; மழு படையாகவும், இடபம் கொடியாகவும், யானை ஊர்தி யாகவும் கொன்றை மலர் மாலையாகவும், குலசை நகராகவும் விளங்குகின்றன.

சுந்தரபுருஷனுக்கேற்ற பெண்ணமுதமாகக் கண்ணிற் கும் கருத்திற்கும் அடங்காத திருக்கோலத்துடன் அம்மன் தோன்றினாள், ''பூமகளும், நாமகளும் அவளது நறுமணமிக்க குழலில் கற்பக மலரைச் சூடினர். காதில் குழை, வில்லையொத்த நெற்றியில் சுட்டி, சுடர்ப் பட்டம், வட்டமுறு பொட்டு ஆகியன, சிளர்க்கும் விழிகளில் மை: மார்பில் மணமாலிகை; கரத்தில் கடகம்; பொன்னாரம் புரளுமாறு அமைந்த இடை, கரும்பு, குரும்பை, தாமரைமொட்டு ஆகியவற்றை ஒத்த முலையில் குங்குமம், சந்தனம் பூசிய கோலம்; செம்பட்டுடை, அணிந்த மேனி செம்பஞ்சு பூசிய அடி;''

இங்ஙனம் நற்கோலஞ்செய்து கொள்ளையழகுடன் தேவி தோன்றினாள், எண்ணற்ற வானுலகவாசிகள் உடன் வந்தனர். கச்சி கொண்ட பாண்டீசர், அறம் வளர்த்த நாயகி ஆகியோரின் தோற்றப் பொலிவு இவ்வாறு குலசை உலாவில் வருணிக்கப்பட்டுள்ளது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயிலில் நடைபெற்ற அஷ்டபந்தத்தின் போது சிவக்குறியின் அடிப்படையைக் காணும் பொருட்டு நீர்மட்டம் வரை தோண்டியும் அடிப்படை காணப்படவில்லை. அடுக்கடுக்காகப் பன்னிரண்டு ஆஷடையார் மட்டும் காட்சியளித்தது. இதனால் இங்கு இறைவன் தானாகவே தோன்றியிருக்க வேண்டும். என முடிவு செய்தனர்.

குலசையைச் சார்ந்த தெய்வசிகாமணிக் கவிராயர் என்பவர் குலசை நகர் அறம்வளர்ந்த நாயகி பிள்ளைத் தமிழ் என்ற நூலை இயற்றியுள்ளார்.

இத்தலத்தில் வழிபட்டால் தில்லை, காஞ்சி ஆகிய இருபகுதிகளிலும் வழிபட்ட பயன் கிடைக்கும். இதற்கு ஏற்ப ஊருக்கு வடக்கே அறம் வளர்த்த அன்னையின் திருக்கோவிலும் தெற்கே சிதம்பர ஈஸ்வரர் அருகே உறையும் சிவகாமியம்மையின் கோயிலும் உள்ளன.

"தில்லையொடு காஞ்சியினைச் சென்று தொழும் பயன்கள்
எல்லாமும் இங்கெய்தி இன்புறுவர்—சொல்லும்
அறம் வளர்த்தாள் நல்வடக்கும் அம்மை சிவகாமி
உறுதெற்குந் தோன்றலால் உற்று"

தெய்வசிகாமணிக் கவிராயர் 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூர்ச் சூறுநில மன்னனான செந்தில் காத்த மூப்பனாரின் உற்ற தோழனாக வாழ்ந்து வந்தார். ஒரு முறை அவரது அவையில் செருக்குமிக்க அயல் நாட்டுக் கவிஞன் தர்ககத்திற்கு வருமாறு கவிராயரை அழைத்தான். அவ்வூரிலிருந்த கல்வியறிவற்ற தையற்

காரனின் மகனுக்கு அறம் வளர்த்த நாயகியின் பிரசாதத்தை அளித்து அவனையே போட்டியில் கவிராயர் நிறுத்தினார். அம்மன் அருளால் கல்லாச் சிறுவன் அயல்நாட்டுக் கவிஞரை வெற்றிகொண்டான். அன்று முதல் அச்சிறுவனைத் தனது மகன் போலவே கவிராயர் வளர்த்துவந்தார்.

காவிரிப்பூம் பட்டினத்து வணிகர் ஒருவர் ஆண்டு தோறும் திருவாதிரை நாளன்று தில்லை சென்று வழிபடுவது உண்டு. ஒரு ஆண்டு புயலில் அவரது கலம் சிக்குண்டதால் ஆருத்ரா தரிசனத்திற்குத் தில்லை செல்ல முடியவில்லை. இறைவன் அவரது வருத்தம் நீங்க வழி காட்டினார் சிவபெருமான் கூறியவாறு அங்கு ஊர்ந்து சென்று கொண்டிருந்த எறும்புகளை வணிகர் தொடர்ந்தார். இன்றைய குலசை நகருக்கு அருகே அவருக்கு ஈசன் தில்லையிலுள்ள நடனக் காட்சியைக் காட்டினார் நன்றிக் காணிக்கையாக அப்பெரியவர் கட்டிய கோயிலே இன்று இவ்வூரின் தென்பகுதியிலுள்ள சிதம்பர ஈஸ்வரர் கோயிலாகும்.

காஞ்சிபுரம்

கச்சபேஸ்வரர் திருக்கோயில்

"கச்சி'' என்று குறிப்பிடப்படும் காஞ்சி மாநகர் மிகப் பழங்காலத்திலிருந்தே சீரும் சிறப்பும் நிறைந்த தலமாகத் திகழ்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள முக்தி தரும் ஏழு திருத்தலங்களுள் காஞ்சியும் ஒன்று. இதனையே வடமொழியில் 'நகரேஷு காஞ்சி'' என்று அழைப்பர். பல்லவ மன்னர்களின் தலைநகராகத் திகழ்ந்த இவ்வூர் "கல்வியிற் கரையிலாத'' காஞ்சி மாநகர் என்று புகழ் பெற்றிருந்தது. வடபுலத்திலிருந்து பல மாணவர்கள் இங்கு வருகைபுரிந்து இங்குள்ள பல்கலைக் கழகத்தில் பயின்றனர். கணக்கற்ற சான்றோர்களால் போற்றப்பட்ட பெருமை இந்நகருக்கு உண்டு. காஞ்சியிலுள்ளது போன்ற பல வகைப்பட்ட ஆலயங்களைப் பெற்றுள்ள நகர் வேறு எதுவும் இல்லை. காஞ்சி என்ற தொடருக்கு நான்குவித மான பொருட்களைச் சிவஞான சுவாமிகளின் காஞ்சி புராணம் குறிப்பிடுகிறது. நான்முகன், அம்மன், திருமால் போன்றோர் அஞ்சி வழிபட்டதால் காஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது. அனைவரும் தமது சென்னியைத் தாழ்த்தி வணங்கத் தக்கதாலும், அனை வருக்கும் பேரின்பத்தை வழங்குவதாலும், இப்பெயர் ஏற்பட்டது. இத்தலத்தில் தேவாரம் பாடிய மூவரின் பாடல் பெற்ற கோயில்களும், ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற ஆலயங்களும் உள்ளன. இங்குள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், கச்சபேசர் கோயில், காரோணம் ஆகிய மூன்றும் பிரதானமான சிவாலயங்களாகும்.

காஞ்சி மாநகரில் இராஜவீதியை அடுத்துள்ள கீழ மேல் சாலையில் கச்சபேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. ஆமை (கச்சபம்) வழிபட்ட ஈஸ்வரர் கச்சபேஸ்வரர் எனப் போற்றப்படுகிறார். இச்சம்பவம் பற்றிய விவரங்களைச் சிவஞான முனிவர் அருளிய காஞ்சி புராணத்தில் காணலாம். துர்வாச முனிவர் அளித்த சாலச் சிறந்த மலரைச் செருக்குடன் இந்திரன் தனது யானையின் தலையில் வைத்தான். ஐராவதம் அம்மலரைக் காலால் துவைத்தது. இதனால் கோபமுற்ற முனிவர் இந்திரன் தனது செல்வங்கள் அனைத்தையும் இழக்குமாறு சபித்தார். தனது தவறையுணர்ந்த இந்திரன் சாபவிமோசனம் தேட முற்பட்டான். இதன் விளைவாக வானவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்க முற்பட்டனர். மேருமலை மத்தாகவும், வாசுகி என்ற சர்ப்பம் கயிறாகவும் பயன் படுத்தப்பட்டன. மேருமலை அசையாமல் இருக்கும் பொருட்டு மகாவிஷ்ணு கூர்ம அவதாரம் (ஆமை) எடுத்து அம்மலை அசையாமல் தாங்கிக் கொண்டார். சில காலத்திற்குப் பின்னர் பாற்கடலிலிருந்து அமுதம் வெளிப்பட்டது. இச்சம்பவத்தில் தன்னுடைய பங்கு குறித்து இறுமாப்பு அடைந்த ஆமை கடலையே கலக்கி ஆரவாரம் செய்தது. இதனால் சகல ஜீவராசிகளுக்கும் துன்பமும், அச்சமும் ஏற்பட்டன. ஆமையின் செருக்கை யடக்கத் திருவுளம் கொண்ட முக்கண் முதல்வர் அதன் உயிரைப் போக்கினார். பின்னர் ஆமையின் ஓட்டை ஒரு அணியாக்கித் தான் அணிந்துள்ள வெண்டலை மாலை யின் இடையே பொருத்திக் கொண்டார். இறுமாப்பு நீங்கிய மகாவிஷ்ணு தான் கடலைக் கலக்கி உயிரினங் களுக்குத் தொல்லையளித்த குற்றத்திற்குக் கழுவாய் தேடமுனைந்தார். காஞ்சியம்பதியிலுள்ள ஜோதி லிங்கத்திற்கு வழிபாடுகள் பல செய்து துதித்தார். அரனாரும் இடபவாகனராகத் தோன்றி அருளினார். கச்சபம் வழிபட்ட லிங்கம் கச்சபேசர் எனப்பட்டார். இச்சம்பவத்தைச் சிவஞான முனிவரின் காஞ்சி புராணம்

''மழுவலான் இணையடிப் பொதுவது பத்தியும்
மால்பதத் / தழிவிலா
இறைமையும் அவ்விலிங் கந்தனக் கன்று
தொட்/டொழி வருங்கச்சபே
சத்திரு நாமமும் உம்பரார் / தொழுதெழு
ஆங்கரன் உமையொடும்
இனிதமர் தோற்றமும்'' என்றுசிறப்பிக்கிறது.

ஆளவந்தார் ஆதினக் கச்சாலையார் என்பவர் எழுதிய காஞ்சி புராணத்தில் இச்சம்பவம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

''மந்தரந் தலைத்தாங்கிய வகந்தையின் வலியாற்
சிந்து நைந்திடக் கலக்கலுங் கலங்கினர் தேவர்
அந்த நாளது கூருமம் அடர்த்த தன் வெரினை
விந்தமாகிய பணியென வணிந்தனன் விமலன்

ஆதிலிங்கமும் கச்சபேசுரனென வமைய
ஈது தானமுங் கச்சபாலையமென விலங்கப்
பேதியாமலென் மனமுமுன் னிடத்தன்பு பெருக
மாது பாக வென் வலியெலா முன்னையின் மலிய''

இவ்வரலாறு பல நுண்பொருட்களையுணர்த்துகின்றது. அறியாமையில் அழுந்தி வருந்தும் மானிடர்களை ஆமையாக உருவகம் செய்துள்ளார். ஆமையின் நான்கு கால்களும், தலையும் ஐம்பொறிகளைக் குறிக்கும், ஆமை நீர், நிலம் ஆகிய இரண்டிலும் உலவுகிறது. இது போலவே உயிர்கள் நல்லவை, தீயவை ஆகிய இரண்டுடன் தொடர்பு கொள்கின்றனர். உயிர்களின் தெளிவற்ற தன்மைக்கு ஆமையின் மந்தகதி உதாரணமாகும். ஆமை அறிவிழந்து கடலைக் கலக்கித் தண்டனை பெற்றது மானுடர்களுக்கு நல்வழி காட்டும் உதாரணமாகும்.

இத்தலத்தில் துர்க்கை, விநாயகர், சூரியன், வயிரவர் ஐயனார் ஆகிய ஐவரும் கச்சபேஸ்வரரை வழிபட்டு உய்த்ததாகக் காஞ்சி புராணம் விளம்பும். இவை இத்தலத்தின் கணங்களுடன் காவல் தெய்வமாக விளங்கு கின்றன. இதற்கேற்ப இம்மூர்த்திகள் கோயிலில் இடம் பெற்றுள்ளன.

துர்க்கையுஞ் சாத்தனும்இரவியும் வயிரவத் தோன்றலும்
நற்கரிமுகனுடம் ஐவருங் கச்சப நாயகன்
பொற்கமலப்பதம் பூசனையாற்றி அங்குடன் அமர்ந்
தொற்கமில் கணங்களோடப்புரிக் காவல் பூண்டுறுவரால்

(சிவஞான முனிவர்)

கச்சபேஸ்வரர் கோவிலின் பரப்பு ஏழு ஏக்கராகும். கோயிலின் முகப்பில் ஏழு கவசங்களை ஏந்தியுள்ள ஐந்து நிலை ராஜகோபுரம் பொலிவாகக் காட்சி அளிக்கிறது. இதன் உயரம் சுமார் முப்பது மீட்டர் இருக்கும். இக்கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றவுடன் மண்டபத் துடன் கூடிய சந்நிதியைக் காணலாம். இச்சந்நதியில் மேற்கு நோக்கியவாறு துர்க்கையம்மன் கோலம் கொண்டுள்ளார். இதனையடுத்து வயிரவரும், சூரிய பகவானும் தோன்றுகின்றனர். இதற்கு மேற்கில் விநாயகரும், ஐயனாரும் காட்சியளிக்கின்றனர். நான்கு நான்கு சந்நிதிகளுக்கு மையத்தில் விளங்கும் ஐந்தாவது சந்நிதியில் குடிகொண்டுள்ளதால் கணநாதரைப் பஞ்ச சந்தி விநாயகர் என்ற பெயரால் அழைக்கின்றனர். கோயிலின் தென்மேற்கிலுள்ள பொய்யாமொழி கணபதியைத் திருமால் வழிபட்டதாகக் கூறுவர். இவருக்குச் சத்தியமொழி கணபதி என்ற பெயரும் உண்டு. பொய்யாமொழி விநாயகரை வழிபடுவோரின் துன்பங்கள் நீங்கி நன்மை மலருமெனக் காஞ்சி புராணம் நவில்கிறது.

அந்தணீர் கச்சபேசக்குட வைப்பினில் ஆயிதழ்க்
கந்தமா மலர்மிசைச் செல்வித்ன் கணவனார்
போற்றி செய்
துய்ந்த சத்தியமொழி விநாயகன் உளன் அவன்
போற்றினார்
எந்த ஊறுந்த விர்ந்திம்மையே வேட்டவை எய்துவார்
(சிவஞான முனிவர்)

உட்பிரகாரத்தில் பல சந்நிதிகள் உள்ளன. மகா கணபதி, நால்வர், நந்திகேஸ்வரர், நந்திகேஸ்வரி, அறுபத்து மூவர், இரட்டை விநாயகர் ஆகியோர் ஒரு பகுதியில் இடம் பெற்றுள்ளனர். இதனையடுத்து 10 லிங்கங்களும், அருகே ஒற்றை விநாயகரும் காட்சியளிக்கின்றனர். கிழக்கு நோக்கிய கோலத்தில் வள்ளி, தெய்வயானையுடன் ஆறுமுகப் பெருமான் தோன்றுகிறார். சரஸ்வதி, சண்டேசர், ஒன்பான் கோள்கள், திங்கள், ஞாயிறு ஆகியோரைத் தரிசித்தவாறு சென்றால் ஒரு தனி சந்நிதியிலுள்ள திருமாலைக் காணலாம். இம்மூர்த்திக்கு ஒரு 5 தலை நாகம் குடைபிடிப்பது போலுள்ளது. வள்ளி, தெய்வயானை சமேதராகத் தோற்றம் கொண்டுள்ள சுப்பிரமணியருக்கு அருகே நவவீரர்களுக்கும் இடமுள்ளது.

மூலவரான கச்சபேஸ்வரரின் சந்நிதிக்கு முன் அணி செய்யும் இரண்டாம் கோபுரம் 20 மீட்டர் உயரம் உடையது. இந்த ஐந்து நிலை கோபுரத்தின் உச்சியில் ஐந்து கலசங்கள் உள்ளன. கச்சபேஸ்வரர் லிங்கத் திருவினராக விளங்குகிறார். அவருக்குப் பின்புறம் சோமாஸ்கந்த மூர்த்தியைக் காணலாம். சபாநாயகருக்கு அருகே தனி சந்நிதிகளில் தருமசித்தீஸ்வரர், ஞான சித்தீஸ்வரர் ஆகிய லிங்கங்கள் உள்ளன. மூலவரின் கருவறைக் கோஷ்டங்களில் விநாயகர், லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி, பிரமன், துர்க்கை ஆகியோர் உள்ளனர். நடராஜர், சிவகாமி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் அழகுடன் வார்க்கப்பட்டுள்ளன.

இத்தலத்திற்குரிய ஐதிகம் 'சோமாஸ்கந்தர் உற்சவ மண்டபத்தில்' சிற்ப வடிவில் காட்சியளிக்கிறது. திருமால் இடுப்பளவுக்கு மேல் மனித வடிவுடனும் கீழ்ப்பகுதியில் ஆமை வடிவுடனும் தோன்றுகிறார். இத்தகைய தோற்றமுடைய திருமால் சிவலிங்கத்தைப் பூசிக்கும் காட்சி மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. மண்டபத் தூண்களில் பாயும் குதிரை வீரர்களின் சிற்பங்கள் சிறப்புடன் அமைந்துள்ளன. குதிரை அணிந்துள்ள அணிகள், கால்களைத் தூக்கியவாறு அவை பாயும் நிலை, அவற்றின் மீது ஆயுத பாணிகளாக அமர்ந்துள்ள வீரர்கள் இவை அனைத்தும் மிகவும் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளன. சில தூண்களில் பௌத்த சமயச் சிற்பங்களும் உள்ளதாகக் கூறுவர். தல விருட்சத்தின் சுற்றுச் சுவரின் மேற்குப் பகுதியில் நுண்ணிய வேலைப்பாடமைந்த பலகணி ஒன்று உள்ளது. தூண்களில் சிவபெருமானின் திருச்செயல்களை விளக்கும் சிறிய சிற்பங்கள் கணக்கற்ற அளவில் உள்ளன.

இங்குள்ள சிற்பங்களுள் அறுபத்து மூவரின் திருவுருவங்கள் தனித் தன்மை பெற்று விளங்குகின்றன. பிற ஆலயங்களில் இச்சான்றோர்கள் நின்ற கோலத்தில் காட்சியளிப்பர். கச்சபேஸ்வரர் கோவிலில் உள்ள சில நாயன்மார்களின் சிற்பங்கள் அவரவர்களின் வரலாற்றை விளக்குவதாக அமைந்துள்ளன. இயற்பகை நாயனார் கத்தி, கேடயம் ஏந்தியவாறு போர்க் கோலத்தில் காட்சியளிக்கிறார். வேட்டுவர் கோலத்தில் கண்ணப்பரும், கலயம் ஏந்திய நிலையில் குங்கிலியக் கலயரும், நெஞ்சுக்கு நேராகச் சிவலிங்கத்தை ஏந்தியவாறு பூசலாரும், யாழை மீட்டியவாறு அமர்ந்துள்ள நிலையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், சிறுவனை மடியில் கிடத்தியவாறு அமர்ந்த நிலையில் சிறுத்தொண்டரும் காட்சியளிக்கின்றனர். ஆயுத மேந்தியவாறு தோன்றும் சேரமான் பெருமாளுக்கு அருகே

குதிரை உள்ளது; கையில் தண்டமும், தலையில் கலயமும் சுமந்தவாறு தண்டியடிகள் காட்சியளிக்கிறார். சடைமுடியை உடைய அரசரின் வெட்டப்பட்ட சிரத்தைச் சுமந்தவாறு புகழ்ச்சோழர் உள்ளார். இது போலவே பல நாயன்மார்களின் திருவுருவங்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பையளிக்குமாறு அமைந்துள்ளது. கச்சபேஸ்வரர் கோயிலுக்கே உரிய சிறப்பு.

இக்கோயிலில் பலாசமரம் தலவிருட்சமாக விளங்குகிறது. இதனடியில் திருமால் சிவலிங்கத்தை வழிபடும் காட்சியைப் பலகைச் சிற்பமாக அமைத்துள்ளனர். இம்மரத்தின் சமித்துகள் வேள்விகளில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆலயத்தின் வடபுறத்தில் இஷ்டசித்தி தீர்த்தம் எனும் புண்ணியப்புனல் உள்ளது. இது நான்கு பகுதிகளாக வெவ்வேறு பெயர்களுடன் விளங்குகிறது. இதன் வடபகுதி 'தர்மதீர்த்தம்' எனவும், தென்பகுதி 'காமதீர்த்தம்' எனவும், மேற்குப்பகுதி 'முக்தி தீர்த்தம்' என்றும், கிழக்குப் பகுதி 'அருத்த தீர்த்தம்' என்றும் பெயர் பெற்றுள்ளன. இவற்றில் நீராடுவோர் அந்த அந்தப் பகுதிக்குரிய பலனைப் பெறுவர். சூர்ய சதகம் என்ற நூல் இக்கோயிற் சுவர்களில் பொறித்து வைக்கப்பட்டதாகக் கூறுவர்.

தோற்றமார் வடாது வெந்நோய் துமித்திடுந்
தரும தீர்த்தம்
போற்றருங் குணாது விண்ணோர் புகழ் தரும் அருத்த
தீர்த்தம்
கூற்றுறுந் தெனாது மாறாக குரைபுனற் காமதீர்த்தம்
சாற்றிய குடாது முத்தித் தீர்த்தம் அத்தடத்துள்ஓங்கும்
(சிவஞான முனிவர்)

கல்விக் கூடமாகத் திகழ்ந்த காஞ்சி மாநகரில் கல்வி பயில மாறசர்மன் எனும் வடபுல மன்னன் வந்தான்.

விதிவசத்தால் அவனது கண்கள் ஒளி குன்றின. இழந்த பார்வையைப் பெறும் பொருட்டுச் ''சூர்யசதகம்'' என்ற நூலை இயற்றி இஷ்டசித்தி தீர்த்தத்தில் அம்மன்னன் நீராடினானாம். அவனது கண்கள் இழந்த ஒளியை மீண்டும் பெற்றன. அன்றுமுதல் இஷ்டசித்தி தீர்த்தத்திற்குச் சூரிய தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டது. இத்தீர்த்தத்தின் கரையில் ஜலகண்டேஸ்வரர் சந்நிதி உள்ளது.

இதில் எல்லா நாட்களிலும் நீராடுவது சிறப்பாக உள்ள போதிலும் வைகாசி, கார்த்திகை, ஆடி ஆகிய மாதங்களில் நீராடுவது சிறப்பு. கார்த்திகை மாதத்திலுள்ள ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடுவது சாலவும் சிறப்பு. இத்தீர்த்தத்தில் நீராடிய சந்திரன், குபே ரன், சாம்பன், நளன், இராமர், பஞ்ச பாண்டவர் ஆகியோர் பேறு பெற்றனர்.

இத்தீர்த்தத்தின் கரையில் இஷ்டசித்தீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோயிலின் பெருமையைக் காஞ்சிபுராணத்தில் காணலாம். காசிபரின் பரம்பரையைச் சார்ந்த தசிசி முனிவருக்கும் குபன் என்ற மன்னனுக்கும் இடையே ''அந்தணர் சிறந்தவரா? அரசர் சிறந்தவரா? என்ற சர்ச்சை எழுந்தது முடிவில் குபன் தன் வஜ்ஜிராயுதத்தால் முனிவரை வெட்டி வீழ்த்தினான். தசிசி முனிவர் சுக்கிரன் பெயரை ஒலித்தவாறே வீழ்ந்தார். சுக்கிரன் அங்கு தோன்றி முனிவரை உயிர் பெறச் செய்ததுடன், இஷ்டசித்தீஸ்வரரின் பெருமைகளை எடுத்துரைத்தார். தசிசி முனிவர் இஷ்ட சித்தீஸ்வரரைப் பூசித்து அருள் பெற்றார். பின்னா அம்முனிவர் மன்னனையே வெற்றி கொண்டார். அதுவே இக்கோயிலின் சிறப்பு.

கச்சபேஸ்வரர் கோயிலில் நாள்தோறும் ஆறு கால பூஜை முறைப்படி நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் பத்து நாட்களுக்குப் பெருவிழா கொண்டாடப்படுகிறது.

அவ்விழாவின் ஐந்தாம் நாளன்று (சித்திரை நட்சத்திரம்) திருக்கலியாணவிழா விமரிசையாக நிகழும். பத்து நாட்களிலும் உரிய காலத்தில், உரிய வாகனத்தில் ஈசன் பவனி வருவதுண்டு. மார்கழி திருவாதிரையன்றும் மூர்த்திகள் உலா வருவதுண்டு. கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் பக்தர்கள் இஷ்டசித்தி தீர்த்தத்தில் நீராடியபின் மாவிளக்கைத் தலையில் ஏந்தியவாறு கோயிலை வலம் வருவதுண்டு. ஆருத்ரா தரிசனத்திற்குக் கட்டளை ஒன்று உள்ளது. வேதபாராயனம், திருமுறைகள் ஓதுதல், ஆகியவை முறைப்படி நடைபெறுகின்றன. செங்குந்த மரபினர் இக்கோயிலில் பெரும் ஈடுபாடு கொண்டு அதன் நிர்வாகத்தில் பங்கேற்று நன்கு நடைபெற வகை செய்கிறார்கள். இக்கோயில் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாக உள்ள தால் இங்கு அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிகிறார் கள். ஆலயத்திற்குச் சொந்தமாக சுமார் 140 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களும், கட்டிடங்களும், மனைகளும். வாகனங்களும் உள்ளன. தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையினரால் இக்கோயில் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது.

திருமுல்லை வாயில்

வைஷ்ணவி அம்மன் கோவில்

நண்ணும் லலிதை ஆயிரமா நாமச் சிறப்பின்
நலமென்ன
நவிலும் லலிதை நூற்றெட்டு நல்லோர் புகழ்
மூந்நூற்றென்ன
எண்ணும் துர்க்கை காளி எழில் இளையை வாணி
பாலை சிவர்க்
கிலகாயிர நாமங்களென்ன சின்னும் தேவி
துதிகளென்ன
பண்ணுந்து தமிழ்ப் பழந்தக்கயாகப் பரணிப்
பாவென்ன
பரவுங் கடவூர் அபிராமிப்பட்டர் திருவாக்
கமுதென்ன
அண்ணும் அனைத்தும் கேட்டிடலாம் ஆடவாராய்
அம்புலியே
அம்பாபரி வாழ் வைஷ்ணவியோ டாடவாராய்
அம்புலியே

வட திருமுல்லை வாயல் - அம்பாபுரிஸ்ரீ வைஷ்ணவி
பிள்ளைத்தமிழ் - அருட்கவி தவத்திரு
சாதுராம் சுவாமிகள்

வானவர்களுக்கும் பக்தர்களுக்கும் சொல்லொணாத் துன்பம் அளித்து வந்த மகிஷாசுரனின் அவதாரம் பற்றிய பல்வேறு வரலாறுகள் சமய நூல்களில் இடம் பெற்றுள்ளன. வானவர்களின் வேண்டுகோளின் பேரில் மும்மூர்த்திகளும் இணைந்து ஒரு திவ்விய ஜோதியை வெளிப்படுத்தினர். அந்த ஜோதியிலிருந்து தோன்றிய வளே வைஷ்ணவி தேவி. வைஷ்ணவி தேவி பற்றிய

விவரங்களை மார்க்கண்டேய புராணத்திலும் தேவி பாகவதத்திலும் காணலாம். வைஷ்ணவி தேவியின் முகம் சிவபெருமானின் அம்சமாகவும், அடர்ந்த கேசம் யமதர்மனின் அம்சமாகவும் திருவடிகள் நான்முகனின் அம்சமாகவும் மார்பகங்கள் சந்திரனின் அம்சமாகவும் கண்கள் அக்னியின் அம்சமாகவும் காதுகள் வாயுவின் அம்சமாகவும் விளங்கின. சிவபெருமானுக்குரிய முத்தலைச் சூலமும் திருமாலுக்குரிய சக்கரமும் தேவிக்குகந்த ஆயுதங்களாயின. இவ்வாறு அனைத்து வானவர்களின் சக்திகளையும் வைஷ்ணவிதேவி பெற்று ஒப்புயர்வற்று விளங்கினாள்.

திரேதாயுகத்தில் இராமபிரானை மணம் புரிந்து கொள்ளும் விருப்பம் வைஷ்ணவி தேவியை ஆட்கொண்டது. தனது விருப்பம் ஈடேறும் பொருட்டு தேவி தவமியற்றினாள். இலங்கையிலிருந்து திரும்பும்போது மாறுவேடத்தினைத் தான் புனைந்து கொள்வதாகவும் தன்னை வைஷ்ணவி தேவி அடையாளம் கண்டு கொண்டால் அவளது விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் இராமர் உறுதியளித்தார். வயோதிகக் கோலத்தில் தோன்றிய இராமரை வைஷ்ணவியால் அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. இராமாவதாரத்தில் ஏகபத்தினி விரதத்தைத் தான் கடைப்பிடிப்பதால் வைஷ்ணவி தேவியை ஏற்றுக் கொள்ள இராமரால் இயலவில்லை. வடக்கே மணிபர்வதத்திம் திரிகூடமலையில் பனிநீர் சுரக்கும் குகையில் தவமியற்றுமாறு இராமர் தேவியிடம் கூறினார். கல்கி அவதாரம் எடுக்கும் போது தேவியை ஏற்றுக் கொள்வதாகவும் வாக்களித்தார். வைஷ்ணவி தேவி ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலுள்ள ஒரு குகையில் தவமியற்றி வருவதாகக் கூறுகிறார்கள்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலுள்ள குகைக் கோயிலில் வைஷ்ணவி, சரஸ்வதி, காளி ஆகிய மூவரும் இணைந்த

உருவத்தைப் பிண்டி என்ற பெயரால் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இதுவே வைஷ்ணவி தேவியின் மகத்துவமாகும்.

சென்னை நகரின் புறநகர்ப் பகுதியான திருமுல்லைவாயிலில் வைஷ்ணவி ஆலயம் ஒன்று அண்மையில் தோன்றியுள்ளது. சென்னையிலிருந்து ஆவடி செல்லும் பாதையில் ஒரு அமைதியான சூழலில் இக்கோயில் அமைந்துள்ளது. காஷ்மீரில் அமைந்துள்ள கோயிலுக்கும் திருமுல்லை வாயிலுள்ள வைஷ்ணவி ஆலயத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

ஒரு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவரும், நிறைந்த செல்வந்தருமான திரு. பார்த்தசாரதி என்பவர் சென்னையின் மைய்ப் பகுதியில் வாழ்ந்து வந்தார். பஞ்சலோகத்தினாலான இறைவனின் அபூர்வ திருவுருவங்கனளச் சேகரிப்பதே இவரது பொழுது போக்கு. 1946 ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் தீபாவளி நன்னாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் ஒருநாள் இரவு சுமார் பத்து மணியளவில் உலோகத் திருமேனிகளை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் அவரை நாடி வந்தார். தம்மிடமுள்ள உயர்ந்த தெய்வத் திருவுருவைப் பார்த்தசாரதியிடம் இலவசமாகக் கொடுத்து விட்டு அந்த வியாபாரி சென்றார். சிறந்த தவசியான துரைசாமி ஐயர் எனும் மகான் அம்மாளிகையில் தங்கியிருந்தார். மறுநாள் காலை அப்பெரியவர் முன்னிலையில் மூட்டையை அவிழ்த்து அதிலுள்ள அம்மனின் விக்கிரகத்தை அனைவரும் கண்டனர். கருணை பொழியும் கண்களுடன், பேரெழிலுடனும் விளங்கிய அத்திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து முறைப்படிப் பூஜை செய்யுமாறு துரைசாமி ஐயர் கட்டளையிட்டார். பூஜை செய்வதில் அதிக ஈடுபாடு இல்லாத போதிலும், தனக்கு ஆசான் போல் திகழ்ந்த பெரியாரின் அன்பு வேண்டுகோளைத் தட்ட பார்த்தசாரதியால் முடியவில்லை.

மாளிகையின் முன்புறத்திலுள்ள மகிழ மரத்தடியில் தீபாவளிக்கு முன் நாளில் விக்கிரஹத்தைப் பிரதிஷ்டை செய்ய முடிவு செய்தனர். அச்சமயத்தில் கொத்தனார் எவரும் கிடைக்காமையால் பார்த்தசாரதியார் அவரது மகளும் அஸ்திவாரத்தைத் தோண்டிக்காரையைப் பரப்பினர். அப்போது திறமைமிக்க பத்திரிகை ஆசிரியரும், பார்த்தசாரதியின் நண்பருமான திரு. ராம் நாத் கோயன்கா என்பவர் தனக்குத் தெரிந்த வட நாட்டுக் கொத்தனார் ஒருவரை அழைத்து வந்தார். கட்டிட வேலை உரிய முறையில் நிறைவேறியது. திருவல்லிக்கேணியிலுள்ள தேவி உபாசகரான பி.ஏ. சுப்பிரமணிய ஐயர் முன்னிலையில் தேவியை ஒரு பீடத்தில் பிரதிஷ்டை செய்து முறைப்படி பூஜைகளும் ஆராதனைகளும் நடத்தினர். இச்சம்பவம் 23. 10. 1946 (தீபாவளிக்கு முன் இரவு) அன்று நிறைவுற்றது. இதுவே வைஷ்ணவி கோயிலின் முதல் கட்டமாகும்.

தேவிக்கு நாள்தோறும் பூஜைகள் புரியப் பார்த்தசாரதிக்கு அவகாசம் இல்லையென்பதை அறிந்த சும்பிரமணிய ஐயர் வெள்ளிக்கிழமைகள் மட்டும் அம்மனைத் தூய நீரினால் அபிஷேகம் செய்து, மலர் அலங்காரம், பால், பழ நைவேத்தியம், பூஜை ஆகியவற்றை நடத்துமாறு மொழிந்தார். பூஜையில் அதிக ஈடுபாடு அற்ற ஒருவர் தேவியின் அந்தரங்க பூசாரியானது அந்த அம்மனின் கருணைக்குச் சான்றாகும். முதலில் சாதாரணமாக நடந்து வந்து பூஜை நாட்போக்கில் பெரிதாக வளர்ந்தது. லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் வெள்ளிகிழமையன்று நடைபெறத் துவங்கியது.

ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் என்பவர் 'திருப்புகழ் ஸ்ரீ வள்ளிமலை சுவாமி என்று அனைவராலும் போற்றப் பட்டவர். சிறுவயதில் கல்வியறிவு சிறிதும் பெறாத போதிலும் முருகன் அருளால் கற்றவர்களாலும் புரிந்து கொள்ள வியலாத சந்த நடையையுடைய திருப்புகழ்ப்

பாடல்களைக் கற்று அறிந்தவர். அதன் பொருட்களை எளியவரும் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக் கூறி அவற்றைப் பரப்புவதையே அவரது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டவர். வள்ளிமலை சுவாமிகள் பார்த்தசாரதியின் இல்லத்திற்கு அடிக்கடி வருவதுண்டு. அப்பெருமான் காஷ்மீர் சென்றிருந்த போது அங்குள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள வைஷ்ணவி தேவியின் பேரழகில் மனதையே பறி கொடுத்திருந்தார். பார்த்தசாரதியின் இல்லத்திலே கோயில் கொண்டுள்ள தேவியின் திருவுருவம் அவருக்கு வைஷ்ணவி தேவியை நினைவூட்டியதால் அப்பெயரையே தேவிக்கும் சூட்டினார். காஷ்மீரிலுள்ள வைஷ்ணவி ஆலயம் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிந்த பின்னர் பார்த்த சாரதியின் இல்லத்தில் குடிகொண்டுள்ள தேவிக்கும் சூட்டினார். காஷ்மீரிலுள்ள வைஷ்ணவி ஆலயம் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிந்த பின்னர் பார்த்த சாரதியின் இல்லத்தில் குடிகொண்டுள்ள தேவிக்கு வைஷ்ணவி என்ற பெயரையே சூட்டி வழங்கத் தொடங்கினர்.

1948ம் ஆண்டின் இறுதியில் வள்ளிமலை சுவாமிகள் திரு. பார்த்தசாரதியிடம் ஒரு பொறுப்பைக் கொடுக்கப் போவதாக கூறினார். 1949ம் ஆண்டில் மறுபடி அதே பேச்சு எழுந்தது. ''நான் வள்ளிமலையிலிருந்தபோது ''பொங்கி'' என்ற தேவியை என் அன்புத் தெய்வமாக வணங்கி வந்தேன். பொங்கி என்பது முருகனின் பத்தினியான வள்ளியின் மறுபெயராகும். வள்ளி மலையை விட்டு வரும்போது அத்தேவியின் உருவத்தை எடுத்து வந்து சென்னை பொது மருத்துவமனையின் தோட்டத்திலுள்ள ஒரு சிறு கோயிலில் ஆவாஹனம் செய்தேன். அந்த இடம் தூய்மை குறைந்து காணப்படு வதால் எனக்கு அதில் முழு விருப்பம் இல்லை. எனவே, அந்த உருவத்தை உன் இல்லத்திலுள்ள வைஷ்ணவி தேவியின் விக்கிரகத்தில் ஆவாஹனம் செய்ய விரும்பு

கிறேன்'' என்று தெரிவித்தார். வெள்ளிக்கிழமையன்று தான் நடத்தும் பூஜை. தவிரப்பிற காரியங்களுக்குத் தனக்கு நேரமில்லை என்று பார்த்தசாரதி கூறினார். பொங்கி மிகவும் சாந்தமான தெய்வமானதால் வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் வழிபாடே போதுமானது என்று சுவாமிகள் கூறினார். 1950 ம் ஆண்டு ஜனவரி பதின்மூன்றாம் நாள் இச்சுப காரியத்திற்கு உரிய நாளாகக் குறிக்கப்பட்டது. அன்று பல பெண்களும், சுவாமிகளும் திருப்புகழ்ப் பாடல்களை மிக உருக்கமாகப் பாடினர். ஒரு குறத்தியையும் வரவழைத்தனர். தேவின்ய மும்முறை வலம் வந்தவுடன் ஒரு சிகப்புச் சேலையைக் குறத்திற்கு அளித்தனர். பின்னர் தனது பெருமதிப்பிற்குரிய பொங்கியை வைஷ்ணவியின் விக்கிரஹத்தில் ஆவாஹனம் செய்து விட்டதாகச் சுவாமிகள் தெரிவித்தார்.

1954 ம் ஆண்டு பார்த்தசாரதி திருமுல்லைவாயிலில் குடிவந்தார். அவர் குடியேறிய இடம் ''பாகோ பண்ணை'' என்று அழைக்கப்பட்டது. அதே ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் ஸ்ரீ வைஷ்ணவி தேவியைத் தமது பண்ணையிலுள்ள ஒரு சிறு குடிலில் நிறுவினார். தீபாவளிக்கு முன் நாள் இரவில் வள்ளிமலையிலிருந்து எடுத்து வரப்பட்ட குமரித் தீர்த்தம் என்ற சுனையின் நீரைக் கொண்டு தேவிக்கு அபிஷேகம் செய்யும் வழக்கத்தை வள்ளிமலை சுவாமிகள் துவக்கினார். அன்றுமுதல் இவ்வழக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவே திருமுல்லை வாயிலில் வைஷ்ணவி தேவி கோயில் எழுந்த வரலாறு.

சிறுகுடிலில் வைஷ்ணவி தேவியைப் பிரதிஷ்டை செய்தபோது அங்கு விரிவான கோயிலை அமைக்கும் எண்ணம் பார்த்தசாரதி அவர்களுக்கு இல்லை. வள்ளிமலை சுவாமிகளின் சீடர்கள் விசேட நாட்களில் அங்கு கூடித் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடுவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட இடமாகையால் கோயிலுக்குரிய

சாஸ்திரீய சம்பிரதாயப்படி இது நிர்மாணம் செய்யப்படவில்லை. ஆனால் தேவியின் திருவுள்ளம் வேறுவிதமாக இருந்ததால் ஆலயம் ஓரளவு விரிவடைந்து பொலிவான தோற்றத்தைக் கொண்டது. ஒருமுறை செட்டிநாட்டுத் தச்சர்கள் செதுக்கிய அற்புதமான மரக்கதவு ஒன்று பார்த்தசாரதிக்குக் கிடைத்தது. அதனையே வாயிற்கதவாக அமைத்து ஒரு மண்டபம் கட்டப்பட்டது (1956-57)-1958 ம் ஆண்டில் சித்தி விநாயகர், பாலசுப்பிரமணியர், மஹேஸ்வரி, பிராம்மி, நாராயணி ஆகிய திருவுருவங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மூன்று கலசங்களுடன் கூடிய விமானம் கருவறைக்கு மேல் எழுந்தது. 30.5.1958 அன்று கும்பாபிஷேகமும், 20.7.58 அன்று மண்டலாபிஷேகமும் நிறைவேறின.

சென்னை — ஆவடி நெடுஞ்சாலையோரத்தில் வைஷ்ணவிதேவி குடிகொண்டுள்ள ஆலயத்தின் பெயர் எழுதப்பட்ட தோரண வாயிலைக் காணலாம். இவ்வழியே சிறிது தொலைவு சென்றால் ஆலயத்தை அடையலாம். முதலில் தென்படும் கல்மண்டபத்தில் தகட்டிலான கூரையுடன் ஒரு கொட்டகையைக் காணலாம். இதன் இருபுறங்களிலும் இறைவனின் திருவுருவப் படங்கள் உள்ளன. வாயிலில் இரு புறங்களிலுமுள்ள கல்மண்டபங்களில் அமைந்துள்ள சிறிய மாடங்களில் அகத்தியர், ஹயக்ரீவர் ஆகியோரின் திருவுருவங்களைக் காணலாம். கற்றூண்களில் முருகன், விநாயகர், காளிங்கன் போன்றோரின் சிற்பங்கள் உள்ளன.

உட்புறத்திலுள்ள கிணற்றின் நீர் தேவியின் அபிஷேகத்திற்கே பயன்படுகிறது. தனது சந்நிதிக்குத் தென்கிழக்கிலுள்ள ஒரு இடத்தில் ஒரு கிணறு தோண்டி அதற்குக் கங்காதீர்த்தம் என்ற பெயரிடுமாறு தேவி பார்த்தசாரதியிடம் கேட்டுக் கொண்டாளாம். அவ்வாறே கிணறு தோண்டி அதில் கங்கா நீரை வார்த்தனர். அருகே முதலை மீது வீற்றிருக்கும்

தேவியின் உலோகப்படிவம் நிறுவப்பட்டது. மாசி மகத்தன்று இத்தீர்த்தத்தில் பூஜை நிகழும்.

கோபுரவாயில், மரவாயில் ஆகியவற்றை அடுத்து பளபளப்பான கற்றூண்களால் தாங்கப்படும் ஒரு மண்டபமே கருவறையாகத் திகழ்கிறது. இதிலுள்ள பீடத்தில் வைஷ்ணவி தேவி நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். இருபுறமும் இடம்பெற்றுள்ள தூண்களிலுள்ள மாடங்களில் சித்தி விநாயகரையும், பாலசுப்பிரமணியரையும் வழிபடலாம். தேவியின் எதிரிலுள்ள கண்ணாடியில் திருமூலரின் திருமந்திரச் செய்யுளை எழுதியுள்ளனர்.

> "எண்ணாயிரத்தாண்டு யோகம் இருக்கினும்
> கண்ணாரமுதனைக் கண்டறிவாரில்லை
> உண்ணாடி உள்ளே ஒளி பெற நோக்கினாற்
> கண்ணாடி போலக் கலந்து நின்றாளே"

1958-ம் ஆண்டில் ஆலயத் திருப்பணி நடைபெற்ற போது ஒரு திருப்புகழ் அடியார் தான் கண்ட கனவின் பயனாக இக்கண்ணாடியை அளித்தார்.

வைஷ்ணவி தேவி ஒன்பது துர்க்கைகளுள் இடம் பெற்றுள்ளாள். மேலும் மும்மூர்த்திகளின் பிரிவுபடாத (அபின்ன) சக்தியாகவும் கருதப்படுகிறாள். மகாவிஷ்ணுவுக்கு உரிய எங்கும் வியாபிக்கும் சக்தி தேவியிடம் உள்ளதால் தேவிக்கு வைஷ்ணவி என்ற திருநாமம் அமைந்தது. ஜம்முவிலுள்ள வைஷ்ணவி கோயிலின் மூலமூர்த்தி தனது பதினெட்டு கரங்களில் ஒன்பது துர்க்கைகளின் ஆயுதங்களையும் தாங்கிக் கொண்டுள்ளாள். தேவியின் திருவுருவங்களில் ஜடா மகுடம் சூடப்பட்டுள்ள போதிலும் கூத்தப்பிரானைப் போல முகத்தின் இருபுறங்களிலும் விரிந்த கேசங்கள் அமைந்திருப்பது வைஷ்ணவி தேவிக்கே உரிய சிறப்பு. உடலின் எப்பகுதியிலும் கூனல், வளைவு ஆகியன இல்லாமல் நேராக நிமிர்ந்து நிற்கும் அன்னை

யின் கீழிரண்டு கரங்கள் வரத, அபய முத்திரைகளை அளிக்கின்றன. இவ்வுருவைக் காண்பவர் எவரும் அன்னையின் பேரெழிலில் லயித்து விடுவது உறுதி.

தேவியின் கோயிலுக்கு அருகே தென்புறத்தில் தட்சிணாமூர்த்தியின் சந்நிதி உள்ளது. 1959 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்றாம் நாள் பார்த்தசாரதி தியானத்திலிருந்தார். உருவத்தில் சிறிய ஒரு மனிதர் அங்கு தோன்றி அக்கோயிலிலுள்ள ரமணமகரிஷியின் படத்திற்கு முன்னர் மூன்று நாட்களாக ஒரு பாம்பு படமெடுத்து ஆடிவிட்டுச் செல்வதாகக் கூறியது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அதன் உண்மைப் பொருளைப் பார்த்தசாரதி, அவரது நண்பர் ஸாது சுப்பிரமணியம், செங்கல்வராய பிள்ளை (ஒரு தமிழ் பண்டிதர்) ஆகிய மூவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாள் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் ஒன்றைப் பார்த்தசாரதியின் மைந்தன் அளித்தார். அதன் கால் பின்னப்பட்டிருந்ததால் அதனைச் செப்பனிட வேண்டியதாயிற்று. 1959ம் ஆண்டு மார்ச் மாதம் அச்சிலை முறைப்படிப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வள்ளிமலை சுவாமிகள் ஒரு விநாயகரைத் தேவிக்கு எதிரில் பிரதிஷ்டை செய்ய விரும்பினார். தனது விருப்பத்தைப் பார்த்தசாரதியிடம் கூறினார். ஒருநாள் இரவில் விநாயகர், ஒரு சிறிய வடிவில் தோன்றித் தனது சுண்டு விரலைப் பிடித்தவாறு அம்மனை மூன்றுமுறை வலம் வருவதாகப் பார்த்தசாரதி கனவு கண்டார். சில நாட்களுக்குப் பின் ஒரு வைணவரிடமிருந்து ஒரு ஸ்படிக விநாயகரை வாங்கி அதனைத் தேவியின் அருகே நிறுத்திப் பூஜித்து வந்தார். 1991-ம் ஆண்டு ஜனவரி 26ம் தேதி ஆரத்தி எடுத்த போது சித்தி விநாயகரின் மேல் காளியின் ரூபத்தைப் பார்த்தசாரதி கண்டார். தற்போது கிழக்கு வாயில் கோபுரத்திற்கு வெளியே வியாச விநாயகரின் சந்நிதி உள்ளது. ஆலயத்தில்

வளர்ந்திருந்த ஒரு வெள்ளை எருக்க வேரில் ஒரு அன்பர் செதுக்கிய உருவமே இவ்வியாச விநாயகராகும்.

தேவியின் சந்நிதிக்கு அருகேயுள்ள மடத்தில் 1962-ம் ஆண்டில் சலவைக்கல்லாலான ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்தனர். அம்மன் சந்நிதியின் புறச்சுவரில் மகேஸ்வரி, நாராயணி, பிராம்மி ஆகியோரின் உருவங்களைத் தரிசிக்கலாம். 2 அடி உயரமுள்ள காமாட்சியின் உற்சவ விக்கிரகப் வனப்பு மிக்கது. தேவிக்கு எதிரிலுள்ள பீடத்தில் அர்த்தமேரு ஸ்ரீசக்கரம் இடம் பெற்றுள்ளது. பகவான் ரமணமகரிஷி தனது கட்டை விரலினால் மந்திர சக்தி ஏற்றபட்ட இச்சக்கரம் பார்த்தசாரதியால் நிறுவப்பட்டது. கருவறையினுள் சேஷாத்திரி சுவாமிகள், வள்ளிமலை சுவாமிகள், ரமணமகரிஷி, அருணகிரிநாதர் ஆகியோரின் படங்கள் உள்ளன. தேவியின் பின்புறச்சுவரில் சங்கநிதி, பதுமநிதி ஆகியோரின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தேவியின் இடப்பக்கத்தில் உள்ள மாடத்தில் இடம் பெற்றுள்ள மீனாட்சியம்மனின் திருவுருவம் தங்கத்தில் தோய்ந்த பஞ்சலோக விக்ரஉறமாகும்.

ஆலயம் காலை 4 மணியிலிந்து மதியம் வரையிலும் மாலை 3 மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் பக்தர்களின் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். பக்தர்கள் தங்களது விருப்பங்களை மானசீகமாகப் பிரார்த்தித்துக் கொள்ளலாம். அல்லது கடிதம் மூலம் தமது வேண்டுகோள்களைத் தெரிவித்தார் அக்கடிதத்தை அம்மனின் திருவடிகளில் பூஜை நேரத்தில் வைப்பதுண்டு. இக்கோயிலின் நிலம் கட்டடங்கள் ஆகியன சாது பார்த்தசாரதிக்கே உரியன. பொறுப்புள்ள சிலர் அதன் நிர்வாகத்தை ஏற்று நடத்துகின்றனர். ஜாதி, மதம், குலம், பாலினம் ஆசிய வேறுபாடுகளுக்கு அப்பார்ற்பாடு விளங்கும் இவ்வாலயத்தில் தூய்மையும் அமைதியும் குடிகொண்டு விளங்குகின்றன.

விசேட நாட்களில் அம்மனுக்கு முகத்தில் சந்தனக் காப்பும், உடலில் இரத்னக்கிரீடம், கர்ணபத்ரம், ஒட்டியானம், தங்கக் கவசங்கள் ஆகியவற்றையும் அணிவித்து அலங்கரிப்பர். நவராத்திரியின் போது பூரண அலங்காரங்களுடன் ஜொலிக்கும் தேவியைக் காண பக்தர் குழாம் திரண்டு வரும். எளிமையான வெண்புடவை, சொற்ப நகைகள், மலர்கள் ஆகியவை அணிந்து காட்சியளிக்கும் நேரங்களிலும் அம்மன் வனப்புக்குக் குறைவு இருக்காது. அம்மனுக்கு லக்ஷ்மி அஷ்டோத்திரம், லலிதா ஸஹஸ்ரநாமம், லலிதா த்ரிசதி ஆகிய மூன்று அர்ச்சனைகள் மட்டும் புரிவது உண்டு. விசேட நாட்களில் காளி, காயத்ரி, ராஜ ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, சரஸ்வதி, கஜலக்ஷ்மி, ஆண்டாள் போன்ற கோலங்களை ஏற்று தேவி காட்சி யளிப்பதுண்டு. வேறு சில நாட்களில் சிவன், முருகன், ராமர், கிருஷ்ணர், திருவேங்கடமுடையான் ஆகியோரைப் போலும் அம்மனை அலங்காரம் செய்வர். தேவிக்குப் பூஜை செய்யும் உரிமை குலம், ஜாதி, மத பேத மின்றி அனைவருக்கும் உண்டு. எவரும் தேவிக்கு அருகில் சென்று மலர்களை அவளது பாதங்களில் தூவலாம். தேவிக்குப் பூஜை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில நாட்களில் பார்த்தசாரதி, சுப்பிர மணியர் ஆகியோர் சந்நியாசம் ஏற்று பொது என்ற அடைமொழியினால் அழைக்கப் பெற்றனர். இக் கோயிலின் அபிஷேகம், அலங்காரம், பூஜை ஆகிய அனைத்துச் செயல்களையும் சந்நியாசிகளே நடத்து கின்றனர். கோயிலைச் சுற்றியுள்ள குடில்களில் பல சந்நியாசிகள் குடியிருந்து ஒரு ஆசிரமம் போலவே இதனை நடத்துகின்றனர்.

ஆஞ்சநேயருக்குப் பூர நட்சத்திரத்தன்று அஷ்டோ திரமும், ஹனுமான் ஜயந்தியன்று அபிஷேகம், அர்ச் சனைகள், வடைமாலை சாற்றல் ஆகிய வைபவங்களும் நிகழ்கின்றன. மஹேஸ்வரி, நாராயணி, பிராம்மி

ஆகியோருக்கு வெள்ளிக்கிழமைகளிலும், பூர நட்சத்திரத்தன்றும் அபிஷேகங்கள், அர்ச்சனைகள் ஆகியன உண்டு. முருகப் பெருமானின் ஆறுமுகங்களுக்கும் ஆடிக் கிருத்திகையன்று ஆறு வெவ்வேறு ஸகஸ்ரநாம அர்ச்சனைகள் நடைபெறுகின்றன.

வைஷ்ணவி தேவி புரிந்துள்ள அருட்செயல்கள் கணக்கில் அடங்கா. இதனால் அதிக அளவில் பக்தர்கள் தேவியைத் தரிசித்துப் பேறு பெறுகின்றனர்.

பஜனை மண்டபத்தில் பாங்குடன் வைஷ்ணவி
பரமானந்தமாய்க் கொலு விருப்பாள்
பக்கத்தில் ஸ்ரீ சக்ர யந்திரத்தில் பக்தர்கள்
பணிவுடன் லக்ஷார்ச்சனைகள் செய்வார்
முகத்தில் சந்தனக் காப்பு மினுமினுக்க தேவி
முறுவலித் தன்பாய் அழைத் திடுவாள்
அகமும் புறமும் ஆனந்தமாகவே
அன்னையைக் கண்டு நாம் போற்றிடலாம்

ஆண்டவன் பிச்சை இயற்றிய
ஸ்ரீ வைஷ்ணவியின் வைபவக் கும்மி

கொல்லி மலை

அறப்பளீஸ்வரர் ஆலயம்

தமிழகத்தில் பன்னெடுங் காலமாகவே இலக்கிய, வரலாற்றுச் சிறப்பு மிக்க பல மலைகள் இருந்து வந்தன. பொதினிமலை, குதிரைமலை, பறம்புமலை, பொதிய மலை, முதிரமலை, தோட்டிமலை போன்ற மலைகள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கிய நூல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் குறிப்பிடத்தக்க இடத்தைக் கொல்லிமலை பெற்றுள்ளது. இம்மலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டங்களில் பரவியுள்ளது.

கடல் மட்டத்திற்கு 4500 அடிக்கு மேல் அமைந்துள்ள இம்மலை சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களின் எல்லையாகத் திகழ்கிறது. இம்மலையில் 260 சிற்றூர்கள் உள்ளன. முற்காலத்தில் வாழவந்தி நாடு, வளப்பூர் நாடு, கறியூர் நாடு, குண்டூர் நாடு, ஆலத்தூர் நாடு, குண்டனி நாடு, எடப்பள்ளி நாடு, திருப்பள்ளி நாடு போன்ற பதினான்கு நாடுகளாக அவற்றைப் பிரித்திருந்தனர். இன்று இந்நாடுகள் உள்ளாட்சியாகச் செயல்படுகின்றன. கொல்லிமலை 30 கி.மீ. தென்வடலாகவும், 30 கி.மீ. கீழ்மேலாகவும் பரந்து விரிந்துள்ளது. சுவேத நதியும், கொம்பை ஆறு, அய்யாறு, கூட்டாறு, கல்லங்குழியாறு போன்ற ஆறுகளும் அங்கு ஓடுகின்றன. பலவகைப்பட்ட காடுகளும், பலதரப்பட்ட தானியங்களும், பழங்களும் விளையும் பகுதிகளும், எண்ணற்ற மிருகங்கள் உலாவும் அடர்ந்த வனப்பிரதேசங்களும் இங்கு உள்ளன. பற்பல சித்தர்கள்

வாழ்ந்த இம்மலையில் பலவகையான மூலிகைகள் உள்ளன.

இம்மலையிலுள்ள வளப்பூர் நாடு எனும் பகுதியில் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய அறப்பளீஸ்வரர் கோயில் உள்ளது. தற்காலத்தில் சேலம், நாமக்கல் ஆகிய இடங்களிலிருந்து இக்கோயில் வரை பேருந்துகள் விடப்பட்டுள்ளன. அண்மையில் குடமுழுக்கு செய்யப்பட்ட பொலிவோடு இக்கோயில் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் முகப்பில் அழகிய வாயில் உள்ளது இதற்கு முன்புறத்தில் இருயானைகளின் உருவங் களைக் காணலாம். அடியார்கள் சிவலிங்கத்தை வழி படும் காட்சியைச் சுதையுருவங்களாக முகப்பில் அமைத் துள்ளனர். மரத்தாலான கொடி மரத்தைக் கடந்து உள்ளே செல்லலாம். மூலவரின் திருநாமம் அறப்பளீஸ் வரர்; நர்மகோளீஸ்வரர் என்றும் இவருக்குப் பெயருண்டு. இவரே மகாலிங்கநாதர் என்ற பெயருடன் தேவர்களால் பூசிக்கப்பட்டவர். அழகிய லிங்கத் திருமேனியாக இவர் காட்சியளிக்கிறார். அம்மனுக்குத் தாயம்மன், தர்மகோளீஸ்வரி ஆகிய திருப்பெயர்கள் உள்ளன. வள்ளி, தெய்வயானை சமேதரான சுப்பிரமணியரும், விநாயகரும் தனி சந்நிதிகளில் தோன்றுகின்றனர். காசி விசுவநாதர், விசாலாக்ஷி ஆகியோர் எழுந்தருளியுள்ள சந்நிதி காசி மாநகரிலுள்ள ஆலயம் போலவே நீண்ட, கூரிய கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. சுவாமி சந்நிதி கருவறையின் புறச் சுவர்களிலுள்ள புரைகளில் நான்முகன், திருமால், தென்முகக் கடவுள், துர்க்கை ஆகிய திருவுருவங்கள் உள்ளன. சூரியன், சந்திரன், பைரவர், நால்வர், சண்டேசர், சரஸ்வதி, மகாலட்சுமி, நவகிரகங்கள் ஆகியோரையும் உட்பகுதிகளில் தரிசிக்கலாம். மூலவர் கிழக்கு நோக்கியவாறும், அம்மன் தெற்கு நோக்கிய வாறும், சுப்பிரமணியர் வடக்கு நோக்கியவாறும் கோலம் கொண்டுள்ளனர். சுப்பிரமணியர் தனது தாயைக் காண்பது போல் தோன்றுகிறார். தாயம்மை யின் சினத்தைத் தணிப்பதற்காகவே இவ்வாறு அமைக்கப்

பட்டுள்ளதாகக் கூறுவர். நடராஜர், சிவகாமியம்மன் உட்பட சுமார் 30 அழகிய உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. விநாயகர் சந்நிதி விமானத்தில் கணநாதரும், கணங்களும் வழிபடுவது போல் சுதையுருவங்கள் உள்ளன. அம்மன் சந்நிதி விமானத்தில் அம்மனின் பல விதத் தோற்றங்களும், சுவாமி சந்நிதி விமானத்தில் தட்சிணாமூர்த்தி, திருமகள் சமேதராகப்பள்ளி கொண்டுள்ள திருமால், தேவர்கள் ஆகிய உருவங்களும் உள்ளன.

கோயிலின் பரப்பளவு 300 × 200; கீழ் மேல் அகலம் 50 அடி; தென்வடல் 400 அடி; நுழைவாயிலிலிருந்து 20 அடி தூரத்தில் 25 அடி அகலமுள்ள கல்மண்டபம் உள்ளது. 40' நீளமும் 40' அகலமும் உள்ள அர்த்த மண்டபத்தில் சோமாஸ்கந்தர், அம்மன் ஆகியோரின் திருவிழாப் படிமங்கள் உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்பு மகாமண்டபத்தின் கிழக்குப் பகுதி நிலச்சரிவால் சாய்ந்து அழுந்தியிருந்தது. மூலவரின் விமானமும், பரிவார தேவதைகளின் சந்நிதிகளும் சிதைந்திருந்தன. திருமுருக கிருபானந்த வாரியார், பசிப்பிணி மருத்துவர் உறையூர் அருணாசல முதலியார் போன்றோர் உள்ளடங்கிய திருப்பணிக்குழு (23 பேர்கள் கொண்டது) இவ்வாலயத்தைப் புதுப்பிக்கும் முயற்சியில் முனைந்தது. இக்குழுவினரின் பெருமுயற்சியாலும், மக்களின் ஒத்துழைப்பாலும் ஆலயம் முழுமையாகப் புதுப்பிக்கப் பட்டு, 1.5.1982 அன்று குடமுழுக்கு நிவைவேறியது. இதற்காக இந்து அறநிலையத்துறை ரூபாய் பத்தாயிர மும், அரசாங்க மானியத் துறை 3.25 லட்ச ரூபாயும் அளித்தன. பெத்து ரெட்டியார், மேட்டூர் கிராம மக்கள், மற்றும் பலர் இத்திருப்பணியில் பெரிதும் ஈடுபட்டனர்.

கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயில் ஒரு தேவார வைப்புத் தலமாகும். தேவாரம் பாடிய மூவரும் நேராகச் சென்று பாடாமல் பிற தலங்களிலிருந்தவாறு

வேறு தலங்களையும் போற்றிப் பாடுவதுண்டு. அவ்வாறு பிற தலங்களிலுள்ள பதிகங்களில் குறிப்பிடப் பெற்றன வையே வைப்புத் தலங்களாகும்.

"அறைப்பள்ளி அகத்தியான் பள்ளி வெள்ளைப்
பொடிப்பூசி ஆறணிவான் அமர் காட்டுப் பள்ளி
பிறப்பில் லவன்பள்ளி வெள்ளச் சடையான்
விரும்பும் இடைப்பள்ளி வண்சக்கரம் மால்
உறைப்பால் அடிபோற்றக் கொடுத்த பள்ளி
உணராய் மட நெஞ்சமே! உன்னி நின்றே"

என்று திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

(திருத்தலக் கோவை பதிகம்)

"கொல்லிக் குளிர் அறைப்பள்ளி கோவல்
வீரட்டம் கோகரணம் கோடிகாவும்
....
கயிலாய நாதனையே காணலாமே", என்றும்
"பொருப்பள்ளி வரை வில்லாப்புறம் மூன்று எய்து
....
கமழ் கொல்லி அறைப்பள்ளி கலவஞ் சாரற்
சிரப்பள்ளி...... என்றென்று பகர்வோர் எல்லாம்
பரலோகத்து இனிதாகப் பாலிப்பாரே"

என்றும் அப்பரின் 'அடைவுத் தாண்டகப்' பாடல்கள் இவ்வூரைக் குறிக்கின்றன.

கொல்லி மலை வாழ் குமரப்பெருமான் அருணகிரி நாதரின் திருப்புகழில் உள்ள இரு பாடல்களில் போற்றப்படுகிறார்.

"தொல்லை முதல் தானொன்று மெல்லியிரு பேதங்கள்
...கொல்லிமலை மேல் நின்ற பெருமானே"
கட்டமன்னு மள்ளல் கொட்டி பண்ணுமைவர்...
பட்டமன்ன வல்லிமட்ட மன்னவல்லி பட்டதுன்னு
கொல்லிமலை நாடா"

(திருப்புகழ் 400, 399)

சிற்றம்பலக் கவிராயர் 'அறப்பளீசர் சதகம்' என்ற நூலைக் கொல்லிமலைஅறப்பளீசருக்குக் காணிக்கையாக அளித்துள்ளார். இவரைச் சீர்காழி அருணாசலக் கவிராயரின் புத்திரர் என்று கூறுவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தார். அறநெறிகளையும், சமுதாயச் செய்திகளையும், உரைக்கும் சிறந்த நீதி நூலாக இச்சதகம் திகழ்கிறது. சமுதாயத்தின் பிரிவினரான அரசர், வைசியர், வேளாளர், வேதியர் மற்றும் மருத்துவர், கலைவல்லுநர் ஆகியோர் பற்றிய செய்திகளை இந்நூல் தெரிவிக்கிறது. மனையாட்டி, நன்மக்கள், சகோதரர், சற்குரு, நன்மாணாக்கர் பற்றிய குறிப்புகளையும் இந்நூலில் காணலாம். பொருள் செயல்வகை, உத்தமர், தீயவர் ஆகியோர் இயல்பு, பிறரிடம் நடந்து கொள்ளும் முறை, குற்றம் விடுத்துக் குணம் கொள்ளும் தன்மை, வறுமையின் கொடுமை, தூய்மை, நல்வினை, தீவினை, கோபம், காமம் போன்ற குணங்கள் ஆகிய வாழ்வியல் கூறுகளையும், நீதிநெறிக் கருத்துக்களையும் இந்நூலில் படித்தறியலாம். இந்நூலின் இறுதிப் பகுதியில் இறைவனின் மாண்பு, புராணங்களின் சிறப்பு ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும்

''அநுதினமும் மனதில் நினைதரு சதுரகிரி வளர்
அறப்பளீசுர தேவனே''

என அறப்பளீசுரரைப் போற்றுகிறது.

சிவபெருமானின் மூர்த்தங்களைச் சிறப்பிக்கும் ஒரு பாடல் படித்து இன்புறத்தக்கது.

''பிறை சூடியுமை நேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவை வடிவன்
பிச்சாடனன் காமதகனன் மறலியை வென்ற
பெம்மான் புரந்த கித்தோன்

மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினோன் வீரேசுரன்
மருவு நரசிங்கத்தை வென்றவரனுமை பாகன்
வனசரன் கங்காளனே
விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்க சக்கர முதவினோன்
விநாய கற்கருள் செய்தோன் குகனுமையுடன் கூடி
மீளரேக பாகன் சுகன்
அறிவரிய தக்ஷிணாமூர்த்தியோடி லிங்கமா
மையனே! அருமை மதவேள்
அனுதினமு மனதினினை தரு சதுரகிரிவள
அறப்பளீசுர தேவனே!''

அறப்பளீசர் ஆலயத்தின் திருப்பணிகளில் பெரும் பங்கேற்ற பசிப்பிணி மருத்துவர் மு.அ. அருணாசல முதலியார் ''அறப்பளீசர் அந்தாதி'' எனும் நீதிக் கோவையை இயற்றியுள்ளார். வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகத்தில் கொல்லிமலை பற்றிய மூன்று பாடல்கள் உள்ளன.

அறப்பளீஸ்வரர் கோயிலின் கருவறையும், விமானமும் செம்பியன் மகாதேவியின் காலத்தில் (கி.பி. 9ம் நூற்றாண்டில்) கட்டப்பட்டதாக வரலாற்று அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினர் இக்கோயிலிலுள்ள இருபது கல்வெட்டுக்களைப் படியெடுத்துள்ளனர். சோழ மன்னர்கள் பரகேசரிவர்மன், பொன்னரிவர்மன் இராசாதிராச தேவர், இராசகேசரி வர்மன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதி ராச தேவர், குலோத்துங்க சோழ தேவர், இராசமகேந்திரர், பராந்தக சுந்தர சோழன், விஜயநகரவேந்தர் வேங்கடபதி தேவ மகாராசர், துறையூர்த் தாசில்'வாசி ராச நரசிங்கராயர்' ஆகியோர் காலத்தில் இவை பொறிக்கப்பட்டன. (1930 ம் ஆண்டு அறிக்கை எண். (489-508)

ஈசருக்கான மூன்று கால பூஜைகளின் போது நிவேதனத்திற்காக மூன்று கிராமங்களின் வருவாயும், பொன்னும் அளிக்கப்பட்டன. ஆவணி மாத சூரிய கிரகணநாளில் அறப்பளீசருக்கு இரு நந்தா விளக்குகள் எரிக்க நிலதானம் வழங்கப்பட்டது. பூசை வேளைகளில் சங்கு ஊதவும், கரடிகை எனும் வாத்தியம் வாசிக்கவும், தானம் அளிக்கப்பட்டது. விசேட பூசைகள் நடைபெறவும், கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை ஆகிய விழாக்கள் கொண்டாடப்படவும் கொடை அளிக்கப்பட்டது. இளைய நாயனாருக்கும் (சுப்பிரமணியர்), தேவி நாச்சியாருக்கும் பூத்தொடுத்து அணிவிக்க நந்தவனம் அமைக்கப்பட்டது. ஆலயத்திற்குப் பங்கு தொகை, நிலதானம் ஆகியன அளிக்க ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. திருப்பள்ளி அறைக் கொண்டோன், மலைக்கடல் ஆகிய நிறுத்தல் அளவைகள் உபயோகப் படுத்தப்பட்டன. துறையூர் வட்டம் தாசில் வாசிராஜ நரசிங்கராஜா என்பவர் சுவாமி, அம்பாள் ஆகியோரின் சந்நிதி விமானங்களுக்குப் பொற்கலசம் அமைத்துக் குடமுழுக்கு செய்ய ஏற்பாடு செய்தார். இவையே இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் அளிக்கும் செய்திகள். இவை இறைவனைத் திருவறப்பள்ளி மகாதேவர், திருவறப்பள்ளி ஆழ்வார், திருவறப்பள்ளி உடையார் என்று குறிப்பிடுகின்றன. பொன்மாடத்தாண்ட மணிமுடி மகாராஜாவின் ஏழாம் ஆண்டில் அறப்பள்ளீசருக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றிய செப்பேடு ஒன்றும் உள்ளது.

இம்மலையில் பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன மாசிமலையருவி, தழிஞை யாறு, நாக்காட்டாறு, கானப்பாடி மூலையாறு, ஆராய்ச்சி ஆறு ஆகிய 5. அருவிகளுடன் ஆகாய கங்கையும் சேர்ந்து ஐயாறு என்ற பெயருடன் பாய்கிறது. ஆலயத்திற்கு வடக்கில் பாயும் இவ்வாற்றில் பலவகையான மீன்கள் ஓடுகின்றன. அறப்பளீஸ்வரரே மீன்கள் உருவில் ஐயாற்றில் இருப்பதாக நம்புவதால், இம்மீன்களுக்குச் சோறு,

பழம், தேங்காய், பொரி ஆகியவற்றை ஆற்றில் விட்ட பின்னரே அறப்பளீசருக்குப் பூஜை நிகழும். முற்காலத்தில் முகமதியர் இப்பகுதிக்குப் படையெடுத்து வந்தபோது ஐயாற்றிலுள்ள மீன்களைப் பிடித்துச் சமைத்தனராம். அம்மன் அறச்சாலை வல்லியின் கடைக்கண் பார்வை பட்டவுடன் சமைத்த மீன்கள்உயிர் பெற்று ஆற்றில் ஓடி மறைந்தனவாம். இச்சம்பவத்தைக் கொங்கு மண்டல சதகம் சிறப்பிக்கிறது.

"அச்சுதன் கொங்கி லறப்பள்ளி நாதரை யாற்றிலுறை
பச்சைநன் மீனைப் பிடித்தறுத் தாக்கப் பசுந்துருக்கர்
கச்சணி கொங்கை யறச்சாலை வல்லி கயல் குதிக்க
மச்சமுந் துள்ளி விளையாடுமேகொங்கு மண்டலமே"

முனிவர்களின் நீர் வேட்கையைத் தீர்க்க சிவபெருமானின் சடைமுடியிலிருந்து சிந்திய நீரே ஆகாய கங்கைஎன்ற நீர்வீழ்ச்சியாக உருவெடுத்ததாகத் தல வரலாறு இயம்பும். இங்கு பாவிகள் நீராட முயன்றால் அருவி நீர் அவர்கள் மீது படாமல் வேறுபக்கம் திரும்பி விடும் என்று நம்புகின்றனர்.

இக்கோயிலில் நாள்தோறும் ஐந்து கால வழிபாடு நடைபெறுகிறது. ஆலயம் காலை ஆறு முதல் மாலை ஏழுமணி வரையிலும் திறந்திருக்கும். ஆண்டுதோறும் ஆடி மாதம் 17, 18, 19, தேதிகளில் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. முன்பு 12 நாட்களுக்கு இத்திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது. சிதைந்திருந்த தேரில் திருமாலின் தசாவதாரங்கள், மார்க்கண்டேயர் வரலாறு ஆகியவற்றை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. மார்கழி கூத்தப்பிரான் அபிஷேகம், மாசி சிவராத்திரி, தைப்பொங்கல், சித்திரைத் திருவிழா (உபயம்: சேந்தமங்கலம் நண்பர்கள் குழு) போன்ற விழாக்கள் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஆலயத்திற்குச் சொந்தமாக 172. 13 ஏக்கர் நன்செய்

நிலங்களும், 31. 12 ஏக்கர் புன்செய் நிலங்களும் உள்ளன.

சங்ககால இலக்கியங்களில் கொல்லிமலையின் நில வளமும், இயற்கையழகும் போற்றப்பட்டுள்ளன. அகநானூறு (பாடல் 208) நற்றிணை (346), புறநானூறு (22) ஆகிய நூல்களில் இத்தகைய வருணனைகளைக் காணலாம். கொல்லிமலையில் இருந்த கண்டோரை மயக்கும் கொல்லிப்பாவை பற்றிய செய்திகள் இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. அசுரர்களால் கொடுந்தொல்லைக்கு ஆளான தேவர்களைக் காக்க தேவதச்சன் உருவாக்கிய அரிய சிலையே கொல்லிப் பாவை என்று கூறுவர். கொல்லிமலையில் இருந்ததாலும், அசுரரை மயக்கிக் கொல்லுவித்ததாலும் இச்சிலைக்கு இப்பெயர் ஏற்பட்டது. இதனைப் பற்றிய குறிப்புகள் குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. கொல்லிப்பாவையே இம்மலையின் காவல் தெய்வமாக விளங்கியதாம். இதனையே காளங்கிநாதர் பகவதி, மலைக்கண்ணி, கொல்லித்தாய் என்றெல்லாம் அழைக்கிறார்.

சங்க காலத்தில் வாழ்ந்த கடையேழு வள்ளல்களுள் ஒருவனான வல்வில் ஓரி கொல்லிமலையையும், அதன் சுற்றுப்புறங்களையும், அரசாண்டான். ஓரி என்னும் பெயரையுடைய குதிரை மீதேறித் திறமையுடன் இம்மன்னன் வேட்டையாடி வந்தான். புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஆகிய நூல்களில் இம்மன்னனின் வீரம், வள்ளன்மை, இவனது நாட்டின் வளம், பெருமை போன்ற செய்திகள் உள்ளன. திருஞானசம்பந்தர் காலத்தில் கொல்லி மலையை ஆண்ட மழவனின் மகளைப் பீடித்த முயலகன் என்ற கொடிய நோயைச் சம்பந்தர் குணப்படுத்தினார்.

காளங்கிநாதர் எனும் சித்தர் இயற்றிய கொல்லிமலை இரகசியம் அல்லது 'மலைவளம்' என்ற மருத்துவ

நூல் இம்மலையிலுள்ள பல வகை மூலிகைகள் பற்றிய விரிவான விவரங்களை அளிக்கிறது. இம்மலை மேற்கே உள்ளதால் ''குடவரை'' என்றும், சதுரமாக உள்ளதால் சதுர கிரி எனவும், அறப்பளீசர் ஆலயத்தை உடைய தால் அறப்பளீசர் மலை என்றும் வழங்கப்படுகிறது. இம்மலையில் வாழும் மலைவாசிகளின் குலதெய்வமான சோரமடையான் கோயில், மற்றும் பெரியண்ணசாமீ கோயில், பண்டாரப்பன் கோயில், கன்னிமார் கோயில், மகிஷாசுரமர்த்தினி கோயில் போன்ற ஆலயங்களும் இங்கு உள்ளன. 10 தலைமுறைகளுக்கு முன்னர் காஞ்சியிலிருந்த மலையாளிகள் முகமதியர் படையெடுப்புக்கு அஞ்சி இம்மலைக்கு இடம் பெயர்ந்து சென்றதாகவும், அப்பரம்பரையினரே இன்று இம்மலையில் வாழ்வதாக கூறுவர்.

இத்தகைய பல வகைப்பட்ட சிறப்புகளையுடைய கொல்லிமலைக்கு ஒருமுறை சென்று அறப்பளீசுரரை வணங்கி, அங்குள்ள இயற்கை எழிலையும் கண்டு வரலாம்.

பண்ணார் வண்டினம் பல இசை பகரும்
பான்மையே மடுத்துப் பரவசமாகும்
அண்ணார் கொல்லி அளப்பளி அமுதே
அற்றவர் தமக்கும் உற்ற நற்றுணையே
விண்ணார் விரும்பியேத்தும் வெற்புடை வேத
நாயகனே

(மு. அ. அருணாசல முதலியார் அருளிய
அறப்பளீசர் அந்தாதி)

சிறுபுலியூர்

கிருபாசமுத்திரப் பெருமாள் ஆலயம்

''ஊரும் வியாக்கிர முனிகல் லியமுனிக் குண்மை
தந்தோன்
வாரு மனந்தப் புனலொடு நந்தன் வர்த்தகத்திற்
சேருந் திருமா மகளொடு தெற்கு வணன்புயங்கண்
ணாருஞ் சிறுபுலி யூரருண் மாகட லாஞ்சரனே''

(திருநின்றவூர் திருமலை அத்தங்கி தாதாரியர் தொண்டன் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி)

மத்தியந்தின முனிவரின் புதல்வரான பாலமுனிவர் என்பவர் தில்லை அம்பலவாணப் பெருமான் மீது பேரன்பு கொண்டவராம் அவரை நாள்தோறும் பூசித்து வந்தார். இரவிலும், விடியற்காலையிலும் மலர்களைப் பறித்து நடராஜ பெருமானுக்கு அளிப்பது இவரது வழக்கம், இரவில் நன்கு பார்ப்பதற்கும், மரங்களில் ஏறுவதற்கும் ஏற்ப புலியின் கண்களையும், கால்களையும் ஈசனிடம் வரமாக பெற்றவர். இதனால் இவரை வியாக்ரபாதர் (புலிக்கால் முனிவர்) என அழைத்தனர். இவரே வசிஷ்டரின் மகளை மணந்து உபமன்யு முனிவரை மகனாக அடைந்தார். பல சிவதலங்களைத் தரிசித்து இறுதியில் கிருபா சமுத்திரப் பெருமாளை வழிபட்டு முக்தியடையுமாறு முக்கண் முதல்வனார் வியாக்ர பாதருக்கு அருளினார். இவ்வாறு புலிக்கால் முனிவர் வழிபட்ட தலங்கள் அனைத்தும் புலியூர் என்றே வழங்கப்பட்டன. அவையாவன: மெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்), பாதிரிப்புலியூர், ஓமாம்புலியூர், எருக்கத் தம்புலியூர், பெரும்புலியூர், முடிவில் கிருபாசமுத்திரப்

பெருமான் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க இயலாமல் அல்லலுற்ற முனிவர் முன்பு சிவபிரான் இலிங்க உருவில் தோன்றி அவருக்கு வழிகாட்டினார்; தன்னை வழிபட்ட புலிக்கால் முனிவருக்குக் கிருபாச முத்திரப் பெருமான் இளமைத் திருக்கோலத்தில் (பால சயனம்) காட்சியளித்து அருள் புரிந்தார். இதனையே, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி அருளிய திவ்விய கவிபிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

"ஆமருவி மேய்த்த அரங்கரெதிர் ஆர்நிற்பார்
தாமழிவி வாணனைத் தோள் சாய்த்தநாள்—சேமம்
உறுபுலியூர் வன்றோல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தை மேற் சென்று"

என்று குறிப்பிடுகிறார்; இவ்வாறு கிருபாசமுத்திரப் பெருமாள் பள்ளி கொண்டுள்ள இடமே சிறுபுலியூர்.

பிரம்மாண்ட புராணத்தின் நான்காவது அத்தியாயத்தில் சிறுபுலியூர் தலமகிமையை விளக்கும் ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது: மகாவிஷ்ணுவின் வாகனமான கருடனுக்கும், ஆதிசேஷனுக்கும் பகை ஏற்பட்டுக் கடுமையான போர் நடைபெற்றது. கருடனின் பராக்கிராமத்திற்கு ஈடு கொடுக்க இயலாத நிலையில் ஆதிசேடன் தப்பிச் சென்று பல இடங்களில் அலைந்து திரிந்தான். முடிவில் சிறுபுலியூரை அடைந்து அங்குள்ள புனிதப் புனலில் நீராடி மகாவிஷ்ணுவைப் பூசித்தான்; மாசிமாத வளர்பிறை ஏகாதசி நாளன்று திருமால் அனந்தனுக்குக் காட்சியளித்து அபயமளித்தார். அத்துடன் அனந்தனைத் திருவணையாகக் கொண்டு பால சயனக்கோலத்தில் தோன்றினார். அதே சமயத்தில் தூர்வாசகர், கண்ணுவர் ஆகிய தவசிகளும், பிரம்மதேவனும் பெருமானின் திவ்விய தரிசனத்தைப் பெற்றனர். நாடி வந்தவர்களுக்கு அருள் புரியுமாறும், சரணாகதி அடைந்தோருக்கு அபயம் அளிக்குமாறும் அம்முனிவர்கள் வேண்டிக்

கொண்டனர். ஆதிசேடனைத் துரத்திக் கொண்டுவந்த கருடனும், இறைவன் அனந்தனுக்கு அபயம் அளித்திருப் பதைக் கண்டு ஒன்றும் செய்ய இயலாமல் மகா விஷ்ணுவைத் துதித்தார். ''கருடா; சௌக்கியமா'' என்று அனந்தன் வினவினான. ''எவரும் இருக்கும் இடத்தில் இருந்தால் நலம் தான்'' என்று கருடன் பதிலளித்தான். தன்னை வணங்கிய கருடனுக்கும் திருமால் அருளினார். இவ்வாறு அனந்தனும் கருடனும் பகை மறந்து இறைவனின் அருளைப் பெற்ற பெருமை உண்டு.

அழகிய இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஆலயத் தின் முகப்பில் எழுபத்தைந்து அடி உயரமுள்ள இராஜகோபுரம் பொலிவான தோற்றத்தை அளிக்கிறது அந்த கோபுரத்தில் கண்ணுக்கு இனிமையான அழகிய சிற்பங்கள் உள்ளன. கருவறையில் அருமாகடலமுதல் எனப்படும் மூலவர் பால சயன மூர்த்தியாகக் காட்சி யளிக்கிறார். வியாக்ரபாதருக்கு இளமைக் கோலத்தில் காட்சியளித்தவராகையால் இவரது உருவமும் மிகவும் சிறியதாகவே உள்ளது. இப்பெருமானின் திருநாபியில் நான்முகனும், திருவடிகளுக்கு அருகே கண்ணுவர், வியாக்ரபாதர் ஆகிய முனிவர்களும் உள்ளனர். வியாக்ர பாதரின் பிம்பத்தைப் பெருமானின் திருவடிக்குக் கீழ் பிரதிஷ்டை செய்து வழிபடும் பழக்கம் இங்கு உள்ளது. பாற்கடலில் விளைந்த அமுதத்தைப் போல அடியார் களுக்கு நன்மை அளிப்பதால் இப்பெருமானுக்கு அருமா கடலமுதன் என்ற திருநாமம் ஏற்பட்டது போலும். உற்சவரைக் கிருபாசமுத்திரப் பெருமான் என்றும், சரணாகதரட்சகர் என்றும் அழைக்கின்றனர். கருணைக் கடலாக விளங்குவதால் கிருபாசமுத்திரர் என்றும், தன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தருளுவ தால் கருணாகதரட்சகர் என்றும் பெயர் பெற்றுள்ளார். உற்சவரின் கரங்களில் சங்கு, சக்கரம், கதை, வில் ஆகிய ஆயுதங்கள் மிளிர்கின்றன. இருபுறமும் ஸ்ரீதேவியும்,

பூதேவியும் உள்ளனவர். தாயாரின் தனிச் சந்நிதி இரண்டாம் பிரகாரத்தின் வடபுறத்தில் உள்ளது. கிழக்கு நோக்கிய அச்சந்நிதியில் எழுந்தருளியுள்ள தாயாரின் திருமாமகள் (லக்ஷ்மி) நாச்சியார், அதே சந்நிதியில் தயாநாயகி (கருணையுள்ள பிராட்டி) எனப் படும் உற்சவரும் காட்சியளிக்கிறார்.

இராஜ கோபுரத்தையடுத்து நெற்களஞ்சியமும், மடப்பள்ளியும் உள்ளன. மடப்பள்ளியை அடுத்து ஆழ்வார்களின் சந்நிதியும், அதனருகே நாலுகால் மண்டபமும் உள்ளன. இம்மண்டபத்திற்கு எதிராக ஆண்டாளின் திருக்கோயில் உள்ளது. கருடாழ்வார் சந்நிதியை அடுத்துள்ள இரண்டாம் கோபுரம் இருபத்தைந்தடி உயரமும் மூன்று நிலைகளும் உடையது. இதனை அடுத்துள்ள சொக்கட்டான் மண்பத்தில் பள்ளியறையும், ஸ்ரீராஜகோபாலரின் சந்நிதியும் உள்ளன. மூலவரின் கருவறையை அடுத்துள்ள முதற்பிரகாரத்தில் சில வண்ண ஓவியங்கள் உள்ளன. திருமாலின் பத்து அவதாரங்களும், பன்னிரு ஆழ்வார் களின் திருவுருவங்களும் இவற்றுள் அடங்கும்.

சிறிய திருவடி எனப்படும் அனுமனும், பெரிய திருவடி எனப்படும் கருடனும் ஆலயத்தில் சிற்ப வடிவில் இடம் பெற்றுள்ளனர். தென்கலை ஆச்சாரியாரான மணவாளமுனிகளின் சந்நிதி ஆலயத்திற்கு வெளியே சீரியமுறையில் அமைந்துள்ளது. மூலவரின் சந்நிதிக்கு மேல் அமைந்துள்ள விமானம் நந்தியாவர்த்தம் எனப்படும். இத்தலத்தில் இரு புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. திருவனந்தாழ்வார் (ஆதிசேடன்) நீராடி வழிபட்டதால் 'திருவனந்த தீர்த்தம்' எனப்பட்ட புஷ்கரணி ஆலயத்திற்கு மேற்கிலுள்ளது. இதன் கரையில் தவம் இயற்றும் கோலத்தில் ஆதிசேஷன் கோயில் கொண்டுள்ளார். இதில் நீராடி அருமாகடலமுதனை வழிபடுவோருக்கு இம்மையிலும், மறுமையிலும் நற்பேறு கிட்டுமாம். அரிசிலாற்றின் கிளையான நாட்டாறு

'மானசதீர்த்தம்' என்று தலவரலாற்றில் புகழப் பெறுகிறது. இவ்வாறு ஆலயத்திற்குக் கிழக்கே ஓடுகிறது. இங்கு வில்வமரமே தலவிருட்சமாகும்.

வைணவர்கள் மிகுந்த பக்தியுடன் வழிபடும் நூற்றியெட்டு திருப்பதிகளும் பதினொன்றாவது இடத்தைச் சிறுபுலியூர் பெற்றுள்ளது. தசையனம், வடசயனம், சல சயனம் எனும் மூன்று சயனப்பதிகளுள் இது சலசயனப்பதியாகும். சலம் என்பது மாயையைக் குறிக்கும். உறங்குவதுபோல யோகம் புரிவதற்காகத் திருமால் கொண்ட சயனமாதலால் மாயப்படுக்கை எனப்பட்டது. தெற்கு நோக்கியமைந்துள்ள மூலவரின் சந்நிதியைத் திருவரங்கத்திலும், சிறுபுலியூரிலும், மட்டுமே காணலாம். பால சயனராகத் தோன்றிய வராகையால் சயனக் கோலங்களிலேயே மிகச் சிறிய உருவத்தை அருமாகடலமுதப்பெருமாளே பெற்றுள்ளார். திருமங்கையாழ்வார் இங்கு வழிபட்டபோது திருமாலின் உருவத்தைக் கண்டு குறைப்பட்டாராம்; தம்முடைய மிகப் பெரிய திருவுருவத்தைத் திருக்கண்ணமங்கையில் காணுமாறு அவருக்குத் திருமால் அருளியதாக ஒரு வரலாறு உண்டு. இங்கு வியாசர், சூரியன் ஆகியோர் திருமாலைப் பூசித்துப் பேறு பெற்றனர்.

இக்கோயிலில் நாள்தோறும் எழுகால பூஜை நடைபெறுகிறது. காலை ஆறுமணிக்கு விஸ்வரூபமும், எட்டு மணியளவில் கால சந்தியும், பன்னிரெண்டு மணிக்கு உச்சிகாலமும், மாலை ஆறு மணிக்கு நித்தியானுசந்தானமும், எட்டு இரவு கால பூஜையும் ஒன்பது மணிக்கு அர்த்தஜாமமும் நடைபெறுகின்றன.

இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் வைகாசி விசாக உற்சவம், ஐப்பசி மணிவாளமுனிகள் உற்சவம் (10 நாள்) மார்கழி வைகுண்ட ஏகாதசி உற்சவம், ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் மாசி மாதம் வளர்பிறை, ஏகாதசி நாளில் அனந்தாழ்வாருக்குத்

திருமால் அருளிய நிகழ்ச்சி நினைவு கோரப்படுகிறது. பங்குனி மாதத்தில் பெருமாள், தாயார் ஆகியோருக்குச் சேத்தி உற்சவம் நடைபெறும்.

பன்னிரண்டு ஆழ்வார்களுள் திருமங்கையாழ்வார் மட்டுமே சிறுபுலியூர் மீது மங்களாசாசனம் செய்துள்ளார். சிறுபுலியூரின் செழிப்பையும் இயற்கை அழகையும் ஆழ்வாரின் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. கடலின் பெருவெள்ளம் அலைகள் மூலம் நவரத்தினங்களை வீசும் கரையை இவ்வூர் பெற்றுள்ளது. கண்ணுக்கும், செவிக்கும் விருந்தளிப்பது போலவே ஒலிக்கின்ற புனல்நீரும், வயலும், சோலையும் நிறைந்த சிறுபுலியூரில் சிறு சிறகுகளையுடைய வண்டுகள் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து இனிய இசையை எழுப்பும். சிறுபுலியூரிலுள்ள வயல்களில் மலர்ந்துள்ள மலர்கள் அவ்வூரில் வசிக்கும் பெண்களை நினைவூட்டுகின்றன. நீலோற்பல மலர்கள் பெண்களின் கண்களைப் போலவும், அலராம்பல் மலர்கள் அவர்களது இதழ்களைப் போலவும், தாமரை மலர்கள் அவர்கள் முகம் போலவும் தோன்றுமாம்.

''முழுநீலமும் அலராம்பலும் அரவிந்தமும் விரளிக்
கழுநீரொடு மடவாரவர் கண்வாய்முகம் மலரும்
செழுநீர்வயல் தழுவும்சிறு புலியூர்சல சயனம்
தொழுநீர் மைய துடையாரடி தொழுவார்துய
ரிலரே''

இம்மகளிர் கிளிப்பிள்ளைகளுடன் பேசி அவற்றிற்குப் பேசும் பயிற்சியை அளிக்கின்றனராம். இத்தகைய செழிப்புமிக்க ஊரில் ஓமத்தீயை வளர்க்கும் மறையோர்கள் மிகுந்துள்ளனர். இதுவே திருமங்கையாழ்வார் காலத்தில் சிறுபுலியூரின் நிலையாகும். இன்றோ மருத வளம் மிக்க சிற்றூராக இவ்வூர் விளங்குகிறது.

திருமங்கையாழ்வார், 'திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சல சயனந்து அருமாகடலமுதைப் புலவாறு

போற்றுகிறார்: ''தொழுவோரின் பாவங்களைத் தொலைக்கவல்ல அப்பெருமான் கருமாமுகில் போன்ற உருவத்தையுடையவனோ? அல்லது நெருப்புப் போன்றவனா? நீர் போன்றவனா? பெரிய மலை போன்ற உருவமுடையவனா? மிகவும் உயர்ந்து ஓங்கிய மாலிருஞ் சோலையில் உறையும் மாயனே! நீ நான்கு மறைகளில் உள்ளாயோ? அந்தனர் தீ எழுப்பி மறை ஓதும் சிறுபுலியூர்ச் சலசயனத்தில் உள்ளாயோ? உனதடியார்கள் மனத்தில் உள்ளாயோ? கருநெய்தற்பூ போன்ற கண்களில் மை எழுதிய மங்கையரின் மனத்தில் சிந்தையைச் செலுத்தாமல் உனது கழலையே தொழ அருள்வாய்.''

"வானார் மதி பொதியும் சடை மழுவாளியோ
டொருபால்
தானாகிய தலைவன்னவன் அமரர்க்கதி பதியாம்
தேனார் பொழில் தழுவும் சிறுபுலியூர்ச்சல சயனத்
தானாயனது அடியல்லதொன் றறியேனடி யேனே''

இக்கோயிலில் ஒரு சில துண்டுக் கல்வெட்டுக்களே கிடைத்துள்ளன. அவை மூலம் எந்த செய்தியும் கிடைக்க வில்லை. இன்று இந்து இறநிலையத்துறையின் பரிபாலனத்திற்கு உட்பட்டுள்ள இக்கோயில் ஒரு நிர்வாக அதிகாரியும், தக்கார் ஒருவரும் நிர்வாகித்து வருகின்றனர். கோபுரமும் ஆலயத்தின் உட்பகுதிகளும் புதுப்பிக்கப்பட்டும் 30. 4. 1896, 17. 5. 1936 ஆகிய தேதிகளில் கும்பாபிஷேகங்கள் செய்யப்பட்டன. மனவாளமுனிகளில் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு 30. 6. 1935 அன்று குடமுழுக்கு செய்யப்பட்டது. டிசம்பர் 1954ல் உற்சவருக்குச் சடகோபமும், வெள்ளிக் கவசமும் சாத்தப்பட்டன. இங்கு கடைசியாக சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் குடமுழுக்கு நடைபெற்றது.

பன்னகத்திலாடியான் பண்டு மெமக் காவணியான்
பொன்னனுடல் காண் புரட்டாதியான் முன்னுலகுண்

கொள்ளைப்பசியான் வெங் கூற்றினங்டங்
கார்த்திகையான்
வள்ளத் தனந்திருவை மார்கழியா னுள்ளினரை
மீண்டுடம்பு தையான் விதிமறைக்கு மாசியான்
பாண்டவர் போரிற் காண்டீபங்குனியான் வேண்டினோர்
தஞ்சித்திரையான் றமிழ் மறைவை காசியான்
அஞ்சப்பகும் வினைக்கோர் ஆனியான்— விஞ்சுற்ற
ஏழ்பாருமுய்ய விசைத் தமிழ் வேதந் தொகுத்த
ஆழ்வார்களுள்ள மகலாதான்— கோழி மயில்
சேர்ரங்கத் தம்மான் சிறுபுலியூரான்...
சீதரன் ஆராவமுத மருமா கடலமுதம்
நாராயணன் பரமனால் வேதன்

என்ற பாடல் சிறுபுலியூர் உலா என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. இதன் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. திருமாலின் குணங்களுடன் 12மாதங்களையும் இணைத்து நயப்படப் பாடியுள்ள இப்பாடல் சுவைமிக்கது. இந்த நூலில் 420 கண்ணிகள் உள்ளன.

மாயிலாடுதுறை — திருவாரூர் பாதையிலுள்ள கொல்லுமாங்குடி எனும் ஊரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் சிறுபுலியூர் உள்ளது. கொல்லுமாங்குடியி லிருந்து காரைக்கால் (வழி நெடுங்காடு) செல்லும் பேருந்துகளில் சிறுபுலியூர் நிறுத்தத்திலிறங்கி ஒரு கி.மீ. நடந்து சென்றால் இக்கோயிலை அடையலாம்.

ஒசூர்

சந்திரசூடேசுவரர் திருக்கோயில்

சேலம்—பெங்களூர் நெடுஞ்சாலையில், பெங்களூரி லிருந்து 25 கல் தொலைவில் ஒசூர் அமைந்துள்ளமலை மீது சந்திரசூடேசுவரர் ஆலயம் இடம் பெற்றுள்ளது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள பழமையான கோயில்களுள் இதுவும் ஒன்று; மேலும் இது ஒரு சிறந்த வழிபாட்டுத் தலமாகயும் உள்ளது. பங்குனி மாதம் நடைபெறும் தேர்விழாவின் போது அண்டை மாநிலமான கர்நாடகத் திலிருந்தும் பல பக்தர்கள் இங்கு வருவதுண்டு.

மலை மீது அமைந்துள்ள இக்கோயிலை அடைய இரண்டு வழிகள் உள்ளன. குன்றின் வடமேற்குப் பக்கமாக உள்ள அழகிய பாதையில் இருநூறு படிகள் உள்ளன. இவ்வழியே மின்சார விளக்குகள் போடப் பட்டுள்ளன. தென் மேற்குப் புறமுள்ள பாதையில் சென்றால் கல்லால் கட்டப்பட்ட 180 படிகளைக் கடக்க வேண்டும். மொட்டைக் கோபுரத்தையும், வாயிலையும் கடந்து வெளிப் பிரகாரத்தை அடைய லாம். இக்கோயிலின் வாயில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. முகப்பில் அழகிய ஐந்து நிலைக் கோபுரம் உள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள கோபுரங் களிலிருந்து சற்று மாறுபட்ட அமைப்புடையது. இந்தக் கோபுரத்தில் மீது சிற்பங்கள் எதுவும் இல்லை. கோபுரத்தைக் கடந்தவுடன் அண்மையில் அமைக்கப் பட்ட பெரிய நந்தியை தரிசிக்கலாம். கோயிலின் உட்பகுதி குடைவரை போன்ற அமைப்பை உடையது. அழகிய வேலைப்பாடமைந்த தூண்களை உட்பகுதியில்

உள்ளன. மகாமண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றை அடுத்துள்ள கருவறையில் மூலவர் சந்திர சூடேசுவரர் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். அவர் சூடியுள்ள நாகாபரணம் கண்ணைக் கவரும் வனப்புடையது; மூலவருக்கு மேல் சிறு மண்டபம் போன்ற அமைப்புள்ளது. மூலவரைச் சூடநாதேசுவரர் என்றும் அழைப்பர்.

மலையேறும் போது வலது புறத்திலுள்ள வழியாகச் சென்றால், ஒரு சாதுவின் சமாதியைக் காணலாம். அங்கு உள்ள குகைக்கோயிலில் ஒரு லிங்கம் உள்ளது. இடது புறமாக உள்ள பாதையைப் பின்பற்றினால், கருவறைக்குச் செல்லும் வழியில் மேலும் நான்கு லிங்கங்களைத் தரிசிக்கலாம். அவ்வாறு தரிசிப்பவர் சகல சித்திகளையும் பெறுவர் என்று கூறுகின்றனர். இருப்பினும் அவ்வழியே அண்மைக் காலத்தில் எவரும் சென்றதில்லையாம். குகையை விட்டு வெளியேறியவுடன் காமாக்ஷி ஈஸ்வரர் தனது பத்தினியான காளிகாம்பாளுடன் தரிசனம் அளிக்கிறார். இச்சந்நிதியைக் கடந்த பின்னரே சந்திர சூடேஸ்வரரின் கோயிலை அடைய முடியும்.

கருவறைக்கு வெளியேயுள்ள சூரியனின் உருவம் ஒரு அழகிய கலைப் படைப்பு: உட்பிரகாரத்தில் கஜலட்சுமி, அறுபத்து மூவர், நவக் கிரகங்கள் போன்ற உபதேவதைகள் இடம் பெற்றுள்ளனர். சிறு சந்நிதியில் விநாயகர் தோன்றுகிறார். வள்ளி, தெய்வயானை சமேதராக சுப்பிரமணியர் தனிச் சந்நிதியில் காட்சியளிக்கிறார். மரகதாம்பாள், பச்சையம்மன், பர்வதம்மன் என்ற திருப்பெயர்களை யுடைய அம்மனுக்குத் தனிச் சந்நிதி உண்டு. மரகதாம்பாள் நின்ற கோலத்தில் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். அஷ்டதிக் பாலகர்கள், காசி விஸ்வநாதர் ஆகியோருக்கும் கோயிலில் இடமுண்டு.

சுவாமி சந்நிதிக்கு வெளியே ஜலகண்டடேசுவரரின் சந்நிதி உள்ளது. ஒரு பெரிய தொட்டி போன்ற அமைப்பில் ஜலகண்பேசுவரர் லிங்க வடிவில் இடம் பெற்றுள்ளார். மேற்பகுதியில் சிறு கோபுரம் போன்ற அமைப்பு உள்ளது. வறட்சிக் காலங்களில் இத்தொட்டி யில் நீர் நிரப்பிப் பதினாறு நாட்களுக்குப் பூசை நடத்துவது வழக்கம். அவ்வாறு விடப்படும் நீர் விரைவில் மறைந்து விடும். அவ்வாறு மறையாமல் நீர் நிரம்பி நின்றால் மழை பெய்யும் என்று நம்பப்படுகிறது.

ஆலயம் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் இரு பிரகாரங்களுடன் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு வரும் வழியிலேயே விநாயகர், ஆஞ்சநேயர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. இக்கோயிலில் நாள்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது. வாரந்தோறும் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் பக்தர்கள் அதிகமாக வருவதுண்டு. இறைவனுக்கு இரு காலம் ருத்ராபிஷேக மும் நடைபெறுகிறது.

தெலுங்கு பல்குண மாதத்தில் (பங்குணி) இரதோற் சவம் 13 நாட்களுக்கு விமரிசையாகக் கொண்டாடப் படும். பஞ்சமூர்த்திகளும் பிற உற்சவர்களும் வெவ்வேறு வாகனங்களில் ஏறி உலா வருவதுண்டு. தீர்த்தவாரி முடிந்த பின்னரும் மூன்று நாட்களுக்கு விழா நடைபெறு தல் சிறப்பு. மாதந்தோறும் சஷ்டி, பிரதோஷம் போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடும், பிரதி திங்கள் தோறும் உஷத் பூஜையும் நிகழும். மரத்தாலான இரு பெரிய தேர்களும், உலோகத்திலான குதிரை, யானை, இராவணன், நந்தி போன்ற வாகனங்களும் உள்ளன. இங்கு அழகிய வேலைப்பாடுடைய இரு தேர்கள் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெரிய தேர் களுள் ஒரு முக்கிய இடத்தை இவை பெறுகின்றன. ஆலயத்திற்குச் சொந்தமான நகைகளின் மதிப்பு ரூ. 3000 சுமார் 200 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங் களிலிருந்து வரும் குத்தகைப் பணம், உண்டியலில்

சேரும் தொகை, அருச்சனை, அபிஷேகக் கட்டணங்கள் மூலம் ஆலயத்திற்குச் வருவாய் கிடைக்கிறது. ஹோய் சாளர்களால் அமைக்கப்பட்ட இவ்வூர் ஹோய்சாளூர் என்று பெயரிடப்பட்டுப் பின்னர் ஹோசூர் என மருவி யிருக்கலாம். கோயிலின் பல பகுதிகளும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், சமஸ்கிருதம் போன்ற மொழி களிலுள்ள கல்வெட்டுக்கள் உள்ளன. கங்கர், சோழர், போசளர், சாளுக்கியர், விசயநகர் ஆகிய வம்சங்களைச் சேர்ந்த மன்னர்கள் பலர் இக்கோயிலைப் பேணி யுள்ளனர். விசயநகர மன்னர்கள் காலத்தில் கோபுரமும் கலியாண மண்டபமும் எழுந்தன. பாண்டவர் வன வாசத்தின் போது அருச்சுனனும், திரௌபதியும் இக் கோயிலிலுள்ள அம்மன் மீது அஷ்டாட்சதம் பாடியுள்ள தாக ஐதீகம்.

உலகில் அறம் குறைந்து வந்ததால் தரும தேவதை தட்சினப் பினாகினி எனப்படும் தென்பெண்ணையாற் றின் கரையிலமைந்துள்ள ஒரு இடத்தில் தவம் புரிந்தார். தரும தேவதையின் முன் சிவபெருமான் தோன்றி வேண்டும் வரத்தை அளிப்பதாகக் கூறினார். சிவ பிரானின் வாகனமாகும் பேற்றை அளிக்குமாறு தரும தேவதை வேண்டினார். சிவபெருமானும் தரும தேவதை நந்தி ரூபமாக மாற்றினார். அந்த நந்தியே விருஷபாத்ரி எனும் குன்றாக மாறியது. கயிலை மலை யிலிருப்பது போலச் சிவபெருமான், பார்வதி சமே தராகத் தன் மீது அமரவேண்டும் என்று தரும தேவதை விரும்பினார். அவ்விருப்பத்தையும் பூர்த்திச் செய்யச் சிவபெருமான் திருவுள்ளம் அருளினார்.

கண்ணைக் கவரும் வண்ணங்கள் நிறைந்த அற்புத மான ஒரு உடும்பாகச் சிவபெருமான் உருக் கொண்டு கயிலையை விட்டு நீங்கினார். பெண்ணுக்கே உரிய ஆர்வம் மேலிடப் பார்வதி தேவியும் கண்ணைக் கவரும் ஒளியுடைய அந்த உடும்பைத் தொடர்ந்தார்.

அந்த உடும்பின் உடல் பொன்னிறத்துடன் ஒளி விட்டது. முகம் வைடூரியம் போலவும், கண்கள் இந்திர நீலம் போலவும், பற்கள் முத்துச்சரங்கள் போலவும் நகங்கள் வச்சிரம் போலவும் விளங்கின. பாதங்கள் பவழம் போலவும், வயிறு புஷ்பராகம் போலவும், பின் புறம் கோமேதகம் போலவும், வால் மரகதம் போலவும் பிரகாசித்தது. அனைத்து வண்ணங்களையும் இழைத்து உண்டாக்கப்பட்ட ஒரு அணிகலன் போலத் தோன்றிய உடும்பைக் கண்ட பார்வதி தேவி மாயமானைக் கண்ட சீதை போல மயங்கி அதனைப் பிடிக்க முயன்றாள்.

இன்றைய ஒசூருக்குக் கிழக்கேயுள்ள செண்பக வனத்தையடைந்த பார்வதி அந்த உடும்பின் பச்சை நிற வால் பகுதியைத் தொட்டார். உடனே உமையின் உடலும் மரகத வண்ணமாக மாறியது. அதிக தூரம் பயணம் செய்ததால் களைப்புற்ற பார்வதியும் தனது தங்கையான அலகானந்தாவை நினைத்துக் கொண்டார். நதி தேவதையான அலகானந்தாவும் ஒரு கிணற்றை ஏற் படுத்தி அந்நீரால் பார்வதியின் தாகத்தைச் சாந்தி ஆற்றினார். பார்வதியின் கை பட்டதால் அக்கிணற்று நீரும் மரகத வர்ணமாக மாறியது. தலபுராணத்தில் மரகதசரோவரம் என வழங்கப்படும் அப்புண்ணியப் புனல் இன்று பச்சைக் குளம் என்ற பெயருடன் மலைக்கு அருகே காட்சியளிக்கிறது.

மலையுச்சியிலுள்ள ஒரு செண்பக மரத்தின் மேல் தான் தொடர்ந்து வந்த உடும்பு அமர்ந்திருப்பதைக் கண்ட பார்வதி அதனை நோக்கிச் சென்றார். அதே நேரத்தில் முற்கலர் உச்சாயினர் ஆகிய இரு முனிவர் களும் அந்த உடும்பின் வண்ணத்தால் கவரப்பட்டு அதனைத் தொடர்ந்து சென்றனர். முனிவர்கள் தன்னை நெருங்கி வருவதைக் கண்ட சிவபெருமான் தான் கொண்டிருந்த உருவத்தை விடுத்து மறைந்தார். உடும்பு மறைவதற்குக் காரணமாக இருந்த இரு முனிவர்களை யும் வேடுவர்களாக மாறுமாறு பார்வதி சபித்தார்.

சிவனடியார்களான முனிவர்களைச் சபித்தது தவறு என உணர்ந்த உமையும், சாபவிமோசனம் நாடிய முனிவர்களும் சிவபெருமானைத் துதித்தனர். சிவபெருமானும் முதலில் இலிங்க வடிவினராகவும், பின்னர் தனது சுய வடிவுடனும் அவர்கள் முன் காட்சியளித்தார். முனிவர்களுக்குச் சாப விமோசனம் அளித்தபின் சிவபிரான் பார்வதியுடன் அம்மலையில் தங்கினார்.

பிற்காலத்தில் அப்பகுதியில் காடு வளர்ந்து பெருகியது. இலிங்கத்தைச் சுற்றி எறும்புகள் புற்றை அமைத்தன. அப்புற்றில் பல பசுக்கள் பாலைச் சொரிந்து வந்தன. இதனால் ஆத்திரமுற்ற இடையர்கள் அப்புற்றைத் தோண்டினர். ஆயுதம் பட்டதால் இலிங்கத்திலின்று உதிரம் பெருகியது. அப்பகுதியிலுள்ள வேடுவர் தலைவர் இலிங்கத்தின் மேல் ஓலைப்பந்தல் அமைத்து வழிபாடு செய்வித்தான். சில ஆண்டுகள் கழிந்தவுடன் வழிபாடு சரிவர நடக்காமல் நின்று போயின.

இரு அந்தணர்கள் தமது தந்தையின் அஸ்தியைக் காசியிலுள்ள கங்கையில் கரைக்கும் எண்ணத்துடன் பயணம் மேற் கொண்டிருந்தனர். ஓசூரின் எல்லையை அடைந்தவுடன் வேடர்கள் இவர்களைச் சிறைப்படுத்தி அவ்வூரிலுள்ள சிவலிங்கத்தைப் பூஜை செய்யுமாறு கட்டளையிட்டனர். அவ்விருவருள் ஒருவர் புலியால் கொல்லப்பட்டார். கீழ்க்குலத்தைச் சேர்ந்த வேடுவர்களின் கை பட்டால் அஸ்திக் கலசம் களங்கமுறும் என எண்ணிய அந்தணன் அதை மறைத்து வைத்தான். தனது நிலையை எண்ணித் துயருற்ற அந்த அந்தணனின் கனவில் ஈசன் தோன்றி அஸ்திகளைத் தென்திசைக் கங்கையான பச்சைக் குளத்தில் விடுமாறும், அவ்வாறு விடும்போது அவை மல்லிகை மலர்களாக மாறும் எனவும் கூறினார். அவ்வாறே அம்மல்லிகை மலர்களை மரகதசரோவரில் விடுத்து விட்டுத் தனது தொழிலை அந்தணன் தொடர்ந்தான்.

புலிக்கு இரையான மற்றொரு அந்தணன் ஆனைக்கொண்டா எனும் நாட்டு மன்னனான கிருஷ்ண கந்தர்வராயரின் மகனாகப் பிறந்தான். சிறு வயதிலேயே தனது பூர்வ ஜென்ம வரலாற்றை அறிந்த இளவரசன் சந்திரசூடேசுவரரின் கோபுரத்தைப் புதுப்பித்துக் கட்டுமாறு தன் தந்தையிடம் வேண்டினான். கிருஷ்ண கந்தர்வராயரே கோயில் 'கோபுரத்தைக் கட்டியதுடன் கோயிலில் துலாபாரமும் செய்தார். இதுவே தலபுராணம் கூறும் செய்தி. பின்னர் கோயிலின் நிர்வாகம் பாகளூர் பாளையக்காரர்கள் வசம் சென்றது.

கோயில் அமைந்துள்ள மலைக்கு ஐந்து பெயர்கள் உள்ளன. ஈசனின் வாகனமான இடபம் இங்கு வழி பட்டதால் விருஷபாத்ரி என்றும், பரமசிவன் உடும்பு வடிவில் வந்து தங்கியதால் கௌதேயாத்ரி என்றும், பார்வதி மரகத வண்ணம் பெற்றதால் மரகதாத்ரி என்றும், இரு முனிவர்கள் சாப விமோசனம் பெற்றதால் பத்ராத்ரி என்றும் பெயர் பெற்றது. கயிலைக்குஇணை யாக இத்தலத்தைக் கருதிய முனிவர்கள் இங்கு வழிபட் டதால் தக்ஷிண கயிலாயம் என்றும் பெயர் ஏற்பட்டது. இங்கு கௌதமரும், நாரதரும் ஈசனைப் பூசித்தன ராம். செண்பகாரண்யத்தின் தெற்கு எல்லையாகவும், தண்டகாரண்யத்தின் வட எல்லையாகவும் விளங்கும் இந்த மலையின் மேல் செண்பக மரங்கள் நிறைந்திருப்ப தால் செண்பகாத்ரி என்ற பெயரும் இப்பதிக்கு உண்டு. இம்மலைக்குத் தெற்கிலும், வடக்கிலும் பிரம்ம, விஷ்ணு பர்வதங்கள் இருக்கின்றன, மரகத தீர்த்தம், சாம்பவ தீர்த்தம், மச்ச தீர்த்தம், இராம தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், சிவ கங்கை தீர்த்தம், அனுமன் தீர்த்தம் எனும் ருத்ர தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் எனும் எட்டு தீர்த்தங்கள் இப்பதியில் அமைந்துள்ளன.

இக்கோயிலின் தலபுராணம் வட மொழியிலுள்ள பிரம்மாண்ட புராணத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறுகிறார்கள். சாங்கதேவ பாஸ்கர சதுஷ் சாஸ்திர

பிரவீன பிரம்ம ஸ்ரீபத்மநாப சர்மா என்ற அறிஞர் இத்தல வரலாற்றைத் தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார்.

இத்தகைய புராண வரலாற்றுச் சிறப்புடைய ஆலயத்தைப் புதுப்பிப்பதற்காகத் திருப்பணிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுமார் மூன்று லட்சம் ரூபாய் திரட்டவும் திட்டமிட்டுள்ளனர். கும்பாபிஷேகம் நடைபெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகி விட்டதால் விரைவில் திருப்பணியை முடிக்க வேண்டும் எனத் திட்டமிட்டுள்ளனர்.

இக்கோயிலில் 27 கல்வெட்டுக்கள் படியெடுக்கப் பட்டுள்ளன. (31A—55A, 1974)

திருமயிலாப்பூரைச் சார்ந்த திருமலை பிள்ளை என்பான் விளக்கெரிக்க நிவந்தம் அளித்துள்ளதாகப் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு தெரிவிக்கிறது. போசள மன்னன் வீரவிஸ்வநாதனின் கல்வெட்டு மூலம் (கி. பி. 1296) தேவதான ஊர் களிலிருந்து சிறுவரியாகப் பெற்ற 127 பொன்னை ஆலயத்திற்குத் தானமாக அளிக்கப்பட்டதாக அறிய லாம். இக்கல்வெட்டில் ஒசூர் செவிடபாடி என்றும், அங்கு எழுந்தருளிய ஈஸ்வரர் செவிடநாயனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. போசள மன்னன் வீர ராமனாதன் ஆட்சியில் தவம் செய்யும் முனிவர்க்கு இடம் ஒதுக்கப்பட்டு அங்கு பதின்மூன்று நாட்கள் சிவ வழிபாடு புரிய நிவந்தம் அளிக்கப்பட்டது. அத்தி மல்லன் என்ற அரசனின் மகனான தாமத்தாழ்வான் இக்கோயிலில் நம்பிராட்டியை எழுந்தருளச் செய்து வழி பாட்டிற்காக நிவந்தம் அளித்தான் (கி. பி. 1761) சந்திரசூடேஸ்வரருக்குப் பூசைகள் புரிய அரிசி, தேங்காய், நெய், மோர், பால், உப்பு, வெல்லம், வாழைப்பழம், மிளகு ஆகியனவும் மூன்று நுந்தா விளக்கு எரிக்க நெய் அல்லது நல்லெண்ணெய்யும் வழங்கப்பட்டதாகக் கி. பி. 1271-ல் எழுதப்பட்ட

கல்வெட்டு மூலம் அறியலாம். மாதிள காமிண்டன் என்பான் கோயிலில் தூண்களைக் கட்ட ஏற்பாடுகள் செய்தான். செவிடபாடி உடைய நாயனாரின் (சந்திரசூடேஸ்வரர்) திருமஞ்சனத்திற்கு நாள் ஒன்றுக்கு ஐந்து குடம் திருமஞ்சன நீர் அளிக்கப்பட்டது. பொன், மனை, நிலம் ஆகியனவும் கோயிலுக்கு வழங்கப் பட்டன. காணிக்கை, கட்டாயம் என்ற பெயருடைய வரிகள் விதிக்கப்பட்டன. சோழவளநாடு, முரசுநாடு, குலோத்துங்க சோழன் ஆகிய குறிப்புகள் கிடைத் துள்ளன. இங்குள்ள கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சிதைந்து விட்டதால் அவற்றைப் படிப்பது கடினம்.

ஒசூரில் சுல்தான் காலத்தில் சுயம்புவாகத் தோன்றிய கோட்டை மாரியம்மனின் கோயில் உள்ளது. அம்மனின் சந்நிதிக்கு அருகே காவேரியம்மனின் உருவம் ஓவிய மாகத் தீட்டப்பட்டுள்ளது. உற்சவரான மாரியம்மன் உருவம் பொலிவு மிக்கது. சித்திரை உகாதித் திருவிழா இங்கு கோலாகலமாக நடைபெறும். வெளிமண்டபம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. பூசாரி நாகப்பா என்பவர் இக்கோயிலைப் பராமரித்து வருகிறார். இதற்கு அருகே கிருஷ்ண தேவராயர் காலத்தில் எழுந்த கோட்டையின் இடிபாடுகளைக் காணலாம்.

நஞ்சுண்டேசுவரர், காசி விசுவநாதர், கோதண்ட ராமர், வரதராஜர், நகரேசுவரர், சங்கர நாராயணர் ஆஞ்சநேயர், தர்மராஜா, வெங்கடரமணர் ஆகிய கோயில்களும் இப்பகுதியில் உள்ளன. நாலு திசை களிலும் சக்கரஸ்தாபனம் செய்து அனுமாரின் உருவங் கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

தாடிக்கொம்பு

சௌந்தரராஜ பெருமான் கோயில்

பதினைந்தாம் நூற்றாண்டில் வித்யாரண்யர் எனும் மகான் வாழ்ந்து வந்தார். அவருடைய பக்தியை மெச்சிய திருமகள் அளவற்ற பொன்னை அம்மகானுக்கு வழங்கியதாகக் கூறுவர். அப்போது முகமதியர்களின் படையெடுப்பால் இந்து மதத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருந்தது. வித்யாரண்யர் தான் பெற்ற நிதியைக் கொண்டு ஒரு அரசைநிறுவி, ஹரிஹரர், புக்கர் ஆகிய இரு சகோதரர்களை அதன் அரசர்களாக்கினார். வித்யாரண்யர் நிறுவிய வித்யாநகரமே காலப்போக்கில் விஜயநகரமாக மாறியது. வடநாட்டில் முகமதியர்களால் பீடிக்கப்பட்ட இந்து சமயத்திற்குப் புகலிட மளித்துப்பாதுகாத்த பெருமை விஜயநகர அரச வம்சத்தினருக்கே உரியது. இந்த வம்சத்தில் உதித்த கிருஷ்ண தேவராயர் போன்ற மன்னர்கள் பல ஆலயங்களைக் கட்டியும், பாழடைந்திருந்த ஆலயங்களைப் புதுப்பித்தும் சமயத் தொண்டு ஆற்றினர். இம்மன்னர்கள் காலத்தில் சௌந்தர் ராஜப் பெருமாள் கோயில் ஒன்று கட்டப்பட்டது. அக்கோயில் தோன்றிய இடமே தாடிக்கொம்பு. திண்டுக்கல்லிலிருந்து கரூர் செல்லும் சாலையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்துநிறுத்தத்திற்கு அருகிலேயே கோயில் உள்ளது.

முற்காலத்தில் இங்கு பனைமரங்கள் மிகுந்திருந்ததால் தாலபுரி என்றும், தாலவனம் என்றும் இப்பகுதியை அழைத்தனர். பனைமரத்தடியில் கடுந்தமியற்றிக் கொண்டிருந்த மண்டுக முனிவருக்கு இக்கானத்

தில் வசித்து வந்த தாலாசுரன் எனும் அரக்கன் தொல்லைகள் பல அளித்து வந்தான். முனிவரின் வேண்டுதலின் பேரில் ஸ்ரீமன் நாராயணனே கள்ளழகர் உருவில் தோன்றி, அவ்வரக்கர்களை அழித்தார். முனிவரின் விருப்பப்படியே ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக இங்கு கோயில் கொண்டார். இதுவே இங்கு தலபுராணம் அளிக்கும் செய்தி. 15 ம் நூற்றாண்டுக்குப்பின் இப்பகுதி விஜயநகர மன்னர்களின் எல்லைக்கு உட்பட்டதால் தெலுங்கு பேசும் மக்கள் பலர் இங்கு குடியேறத் துவங்கினர். அப்போது இவ்வூரின் பெயர் தாடிக்கொம்பு என மாறியது. தெலுங்கில் தாடி என்ற சொல் பனைமரத்தையும், கும்பு என்ற சொல் கூட்டதத்தையும் குறிக்கும். பனைமரக் கூட்டங்கள் நிறைந்த இவ்வூர் தாடிக்கும்பு என்று வழங்கப்பட்டு, நாளடைவில் தாடிக்கொம்பு என மருவியது.

சௌந்திர ராஜப் பெருமாள் கோயிலின் முகப்பில் நீண்டுயர்ந்த அழகிய 5 நிலை இராஜகோபுரம் உள்ளது. நான்கு பக்கங்களிலும் உயர்ந்த, உறுதியான மதில்கள் கட்டப்பட்டுள்ளன. நான்கு புறங்களிலும் தேரோடும் வீதிகள் சீராக அமைந்துள்ளன. கோயிலில் ஒரு பிரகாரமும், ஐந்து சந்நிதிகளும் உள்ளன. மூலவர் சௌந்திர ராஜப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தியுள்ள இவ்வுருவம் சுமார் 5 அடி உயரம் இருக்கும். உற்சவரும் கவசவணிந்தவராய் அதே ஆயுதங்களுடன் தோற்றம் கொண்டுள்ளார். கருவறையின் உட்புறத்திலுள்ள சிறிய பீடமே சக்கரத்தாழ்வார் அமருவதற்காகத் திருமால் அளித்த இடமாகும். இச்சந்நிதியின் தென்புறத்தில் சௌந்தரவல்லித் தாயாரின் சந்நிதி உள்ளது. ஆண்டாள், கருடாழ்வார், வேணுகோபாலன், விஷ்வக்சேனர், ஆஞ்சநேயர், லஷ்மி நரசிம்மர், ஆகியோரும் வெவ்வேறு சந்நிதிகளில் கோலம்

கொண்டுள்ளனர். தென்மேற்கு மூலையிலுள்ள சக்கரத் தாழ்வாரின் சந்நிதி ஒரு தனிக்கோயில் போலவே உள்ளது. ஆழ்வார்களின் செப்புத் திருவுருவங்களும் ஆலயத்தில் இடம் பெற்றுள்ளன. விநாயகர், வைரவர், க்ஷேத்திரபாலர், விஸ்வாலீஸ்வரர் ஆகியோரும் சிறிய வடிவங்களில் உள்ளனர். நம்மாழ்வாரின் சந்நிதிக்கு அருகே திருமாலின் தசாவதாரங்களை அழகிய சிற்பங்கள் வடிவில் தரிசிக்கலாம்.

அம்மன் சந்நிதியை அடுத்துள்ள அன்ன மண்டபமும் (ஊஞ்சல் மண்டபம்), சுந்தரபாண்டியன் மண்டபமும் (கலியாண மண்டபம்) அற்புதச் சிற்பங்களை உள்ளடக்கியுள்ள கலைக் கூடங்களாகத் திகழ்கின்றன. அன்ன மண்டபத் தூண்களில் சங்கநிதி, பதுமநிதி, ஆஞ்சநேயர் கருடர் ஆகிய திருவுருவங்கள் உள்ளன. இதனை அடுத்துள்ள மனித உருவங்கள் விஜயநகர அரசர்களையும், அவர்கள் குடும்பத்தினரையும் குறிப்பிடுவதாகக் கருதுகின்றனர். இம்மண்டபத்திலுள்ள கொடுங்கைகளின் அமைப்பு இரசிக்கத்தக்கது. மதுரை, சுசீந்திரம், கிருஷ்ணாபுரம், ஆழ்வார் திருநகரி, தென்காசி போன்ற கோயில்களில் உள்ளது போலவே சப்தஸ்வரங்களை எழுப்பும் இரு இசைத் தூண்களும் இம்மண்டபத்தில் உள்ளன. நின்ற கோலத்தில் அங்குசத்தைக் கரத்தில் ஏந்தியுள்ள விநாயகரின் பெரிய திருவுருவமும் அபூர்வ வடிவமைப்பையுடைய விஷ்ணு துர்க்கையின் திருவுருவமும் அருகே உள்ளன.

சுந்தரபாண்டியன் மண்டபத்திலுள்ள தூண்களில் பதினான்கு பிரம்மாண்டமான சிற்பங்களைக் காணலாம். மகாவிஷ்ணு : மூன்று பகுதிகளாகச் சுழன்றுள்ள ஆதிசேடன் மீது அமர்ந்துள்ளார். இடது கால் மடங்கியவாறு ஆதிசேடன் மீது பதிந்துள்ளது; வலது கால் கீழே தொங்கிக் கொண்டுள்ளது. பின்புற இடது கரங்களில் சக்கரமும், பத்மமும் இடம் பெற்றுள்ளன. வலது கரங்களில் சங்கும், கதாயுதமும்

உள்ளன. இவ்வுருவத்தின் இடதுபுறத்தில் கருடாழ்வார் அஞ்சலி ஹஸ்தராகக் காட்சியளிக்கிறார். மகா விஷ்ணுவின் இத்திருவுருவம் வாசுதேவரையே குறிப்பிடுவதாகக் கூறுவர்.

நரசிம்மர்:

இரணியனை சம்ஹாரம் செய்யும் நரசிம்மரை இரு தூண்களில் சிற்பவடிவில் காணலாம். ஒரு தூணில் அசுரனுடன் போரிடும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. தன்னை வீரத்துடன் எதிர்த்து நிற்கும் இரணியன் மீது நரசிம்மர் வலது புறத்திலிருந்து தாக்குகிறார். அவரது கரங்களில் சங்கு, சக்கரம், கடகம், கேடயம் போன்ற ஆயுதங்கள் பளிச்சிடுகின்றன. மற்றொரு கரம் அபய முத்திரையை அளிக்கிறது. கூரிய கிரீடம் அணிந்துள்ள நரசிம்மரின் சிங்கமுகம் வீரத்தின் நிலைக்களனாக உள்ளது. வாளேந்தியவாறு தன்னுடன் மோத வந்த இரணிய சிபுவைக் கரங்களில் பிடித்துநிறுத்துகிறார். ஒரு கரம் அசுரனை அறைவது போல உயர்ந்துள்ளது. நரசிம்மர் இரணியனை மடியில் கிடத்தி அவனது வயிற்றைக் கிழிக்கும் காட்சியை மற்றொரு சிற்பம் சித்தரிக்கிறது. இது போன்ற இரு சிற்பங்கள் திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணர் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் உள்ளன.

வைகுண்டநாதர்:

ஆலிதாசன நிலையில் காட்சியளிக்கும் கருடாழ்வார் மீது மகாவிஷ்ணு அமர்ந்துள்ளார். கருடாழ்வாரின் கரங்கள் திருமாலின் திருவடிகளைத் தாக்குகின்றன. விஷ்ணுவின் எண் கரங்களில் சக்கரம், சங்கு, கதாயுதம், கடகம், கேடயம், வில், அம்பு, பத்மம் ஆகிய பொருட்கள் இடம் பெற்றுள்ளன. சிற்ப நூல்களில் குறிப்பிடப்படும் வரதராஜரையே இச்சிற்பம் குறிக்கிறதாம். இருப்பினும் அவற்றில் குறிப்பிடப் பட்டதுபோல் கஜேந்திரன் என்ற யானையும், அதனை

அழிக்க முயலும் முதலையும் இச்சிற்பத்தில் இடம் பெறவில்லை.

சக்கரத்தாழ்வார்:

பதினாறு கரங்களுடன் பெரிய திருவுருவமாகச் சக்கரத்தாழ்வார் காட்சியளிக்கிறார். கரங்களில் சக்கரம், சங்கு, வில், அம்பு, பரசு, வாள், சூலம், பாசம், அங்குசம், அக்னி, காட்கம், கேடயம், கதாயுதம் போன்ற ஆயுதங்கள் மிளிர்கின்றன. அவரது தோற்றம் அச்சத்தையுண்டு பண்ணக்கூடியதாக உள்ளது. கண்கள் நெருப்புப் பிழம்பு போல் ஜொலிக்கின்றன.

மதனகோபாலன்:

வேய்ங்குழல் நாதத்தால் கால் நடைகளையும் மயக்கிய மதன கோபாலனின் சிற்பமும் கண்களுக்கு ஒரு அழகிய விருந்து. இப்பெருமான் எட்டு கரங்களுடன் தோன்றுகிறார். வலது கரங்களில் பத்மம், பரசு, சக்கரம், ஆகிய ஆயுதங்களும், இடது கரங்களில் கரும்பு வில், பாசம், சங்கு ஆகிய ஆயுதங்களும் மிளிர்கின்றன. மற்றிரண்டு கரங்கள் குழலைப் பிடித்துள்ளன. இசையினால் தோன்றும் மகிழ்ச்சிப் பெருக்கை அவரது முகத்தில் காணலாம். தலையில் அழகிய மகுடம் அணி செய்கிறது. இடது காலைத் தரையில் ஊன்றியவாறும், வலது காலை அதனைச் சுற்றிக் கிடத்தியவாறும், விரல்களின் நுனியைத் தரையில் தொடுமாறும் அவர் நிற்கிறார். இதுபோன்ற அழகிய சிற்பம் ஒன்றைத் தென்காசி விசுவநாதர் கோயிலில் காணலாம்.

மன்மதன், ரதி:

உலகில் இன்பத்தின் அதிபதிகளான மன்மதனும் ரதியும் எதிரும் புதிருமாக இரு தூண்களில் இடம் பெற்றுள்ளனர். மன்மதனின் கரங்களில் கரும்பு வில்லும், மலரம்பும், துலங்குகின்றன. ரதியின்

கரங்களில் மலரும், பழமும் இடம் பெற்றுள்ளன. இருவரின் வதனங்களும் தத்ரூபமாக அமைந்துள்ளன.

உலகளந்த பெருமாள்:

மகாபலியிடம் வாமன உருவில்மூன்று அடி நிலம் யாசித்துப் பெற்றபின் திரிவிக்கிரமராய் உருவெடுத்து உலகையே தன் திருவடியால் அளந்த உலகளந்த பெருமாள் காலைத் தூக்கிய நிலையில் காட்சி யளிக்கிறார்.

ஊர்த்துவத்தாண்டவர், தில்லைக்காளி:

ஆணவத்தின் வசப்பட்டுச் சிவபெருமானுடன் நடனத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற தில்லைக் காளியையும், அவரை நடனத்தில் வென்ற ஊர்த்துவத் தாண்டவரையும் இரு சிற்பங்களாகக் காணலாம்.

கார்த்த வீரிய அர்ச்சுனன்:

ஆயிரம் கரங்களின் வலிமை பெற்று இராவணனையே வெற்றி கொண்ட கார்த்தவீரியார் ஜுனனைப் பரசுராமர் வீழ்த்தினார். புயவலிமிக்க கார்த்தவீரியார்ஜுனனின் சிற்பத்தையும் ஒரு தூணில் இடம் பெறச் செய்துள்ளனர்.

அகோர வீரபத்திரர்:

தட்சனின் யாகத்தை நிர்மூலம் செய்து சிவ பெருமானை அலட்சியப்படுத்திய தட்சனையும், தேவர் களையும் தண்டித்த வீரபத்திரர் அகோர சொரூபியாகத் தோன்றுகிறார்.

இராமர்:

ஆஞ்சநேயர் மீது அமர்ந்துள்ளவாறு அற்புதமான கோலத்தில் இராமர் ஒரு தூணில் காட்சியளிக்கிறார். இந்தப் பதினான்கு சிற்பங்களைத் தவிர யாளியின்

உருவங்களைத் தாங்கிய தூண்களும் சிறந்த வேலைப் பாடுமிக்கன.

தாடிக்கொம்பு ஆலயத்தின் பெருமையே இக் கலியாண மண்டபத்திலுள்ள சிற்பங்களால் ஏற் பட்டுள்ளதாகக் கொள்ளலாம். நாயக்க மன்னர்களின் காலத்தில் தோன்றிய சிற்பக்கலைக்கு இவை சிறந்த உதாரணமாகும். இதுபோன்ற சிற்பங்களைத் தார மங்கலம் கைலாசநாதர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் கோயில், கிருஷ்ணாபுரம் வேங்கடவன் கோயில், தென் காசி விசுவநாதர் கோயில் போன்ற ஆலயங்களில் காணலாம்.

ஆலயத்தின் பிறபகுதிகளிலும் சில அழகிய சிற்பங் கள் உள்ளன. விஷ்வக்சேனரின் சந்நிதி வெளி மண்டபத்தில் வண்ணச் சுதையாலான சில திருவுருவங் கள் உள்ளன. கோபுர வாயிலின் அருகேயுள்ள நான்கு மங்கையரின் சிற்பங்களும் எழில் மிக்கன.

இம்மங்கையரின் உடைகளும் அணிகளும் சிறப் பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்திலுள்ள பளிங்குத் தூண்களும், கவினுறும் மண்டபங்களும் விஜயநகர அரசின் தலைநகரமாக விளங்கிய ஹம்பி நகரிலுள்ள சிற்பப்பாணியைப் பின்பற்றி அமைந் திருப்பதாக ஒரு கருத்து உள்ளது. கோயில்களில் சிற்பம் செய்ய ஒப்புக் கொள்ளுமுன்னர் தாரமங்கலம் தாடிக்கொம்பு ஆகிய ஆலயச் சிற்பங்கள் ஆவுடையார் கோயில் கொடுங்கைகள், திருவீழிமிழலை வௌவால் மண்டபம், திருநனிபள்ளி கோடிவட்டம் ஆகியன தவிர வேறு எந்த வேலைப்பாட்டையும் செய்வதாகவே, சிற்பிகள் உறுதி கூறுவர். மேலே கூறப்பட்ட வேலைப் பாடுகளைச் செய்வது மிகவும் கடினம், என்பதையே இக்கருத்து குறிக்கிறது. இக்கோயிலினுள் எந்தவிதமான வடிகால் வசதியும் இல்லாதபோதிலும் தளவரிசையில் விழும் மழைநீர் வெகுவிரைவில் வடிந்து விடுகிறதாம்.

இது அனைவருக்கும் ஒரு புரியாப் புதிராகவே விளங்கு கிறது. எனவே இவ்வட்டாரத்தில் விடுவிக்க இயலாத புதிர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது 'தாடிக்கொம்பு தளவரிசை போல' என்று கூறுவது வழக்கமாக உள்ளதாம்.

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து திண்டுக்கல் பகுதியில் அடிக்கடி போர் நடை பெற்று வந்ததால் அங்கு சமூக வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதனால் அமைதியான வாழ்வை நாடிய மக்கள் அதிக அளவில் தாடிக்கொம்பில் குடியேறினர் போலும். அக்காலத்தில் தாடிக்கொம்பு அதிக மக்கள் தொகை கொண்ட பெரிய நகராகத் திகழ்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் 1801 ஆண்டு வரை இவ்வட்டத்தின் தலைநகராக இவ்வூர் விளங்கியது. விஜயநகர மன்னரான ராமராயர் காலத்தில் இவ்வூரில் சௌந்தரராஜப் பெருமாள்கோயில் கட்டும் பணி துவங்கியதாகவும், அச்சுதராயர் காலத்தில் அது கட்டி முடிக்கப்பட்டதாகவும் கூறுவர். திருமலை நாயக்கர் 1629 ல் முன் மண்டபம் கட்ட ஏற்பாடு செய்தார். நாயக்க மன்னர்கள் காலத்தில் முன் மண்டபங்களிலுள்ள சிற்பங்கள் தோன்றின.

ராமதேவமகாராயர் (1620-30) காலத்தைச் சேர்ந்த சிதைந்த கல்வெட்டு ஒன்று கருடாழ்வார் சந்நிதியில் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. இராமானுஜரும், வேறு ஒரு பக்தரும் அழகருக்கு நடத்திய திருமண வைபவம்பற்றிய கல்வெட்டு சுந்தர பாண்டிய மண்டபத்தில் உள்ளது. சுந்தரேஸ்வரர் என்பவர் இக் கோயிலில் அர்ச்சகர்களை நியமித்து அவர்களுக்கு நிலம் வழங்கியதாக ஆலயத்தின் உட்புறத்திலுள்ள மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. சுந்தரபாண்டிய மண்டபத்திலுள்ள ஒரு கல்வெட்டு "நாமும் நம் பெண்களும் ஒலக்கமாயிருக்கையில் நமக்கு வடக்கு வீடான திருமலை தாடிக்கொம்பு" என்று குறிப்பிடுகிறது.

ம்துரையிலிருப்பவர்கள் இவ்வூரை வடக்கு வீடாக்க் கருதிய செய்தியை இது குறிக்கிறது.

விசயநகர மன்னர் முதலாம் வெங்கடபதிராயர் உயிர் நீத்தவுடன் ஏற்பட்ட வாரிசுப் போரில் நான்காம் ராமராயர் என்பவர் வெற்றிபெற்று 1620 முதல் 1630 வரை அரசாட்சி புரிந்ததாக ஒரு கல்வெட்டு செப்புகிறது

பஞ்சராத்திர ஆகமத்திற்கு ஏற்ப இக்கோயிலில் காலையிலும், மாலையிலும் பூஜை நடைபெறுகிறது. ஆடி மாதத்தில் பத்து நாட்களுக்கு பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இதில் தேரோட்டம் ஒரு நாளைக்கு நிகழும். சித்திரா பௌர்ணமியின்போது வசந்த உற்சவமும் இங்கு நல்ல முறையில் கொண்டாடப்படும். இந்த விழாவின்போது பெருமாள் குதிரை வாகனத்தில் அமர்ந்து கும்பநதியில் நீராடி திண்டுக்கல் நகரில் மூன்று நாட்கள் தங்கி அபிஷேக ஆராதனைகளை ஏற்றுக் கொள்ளுவார். ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு அருகேயுள்ள காட்டழகர் கோயில், மதுரைக்கு அருகேயுள்ள கள்ள அழகர்கோயில், ஆகியோருக்கு இக்கோயிலுடன் தொடர்பு உள்ளதாக நம்பப்படுவதால் மதுரையில் கள்ளழகர் விழா நடைபெறும் போது இவ்வூரிலும் விழா நிகழும். இக்கோயிலில் குதிரை, யானை, அன்னம், கருடன், ஆதிசேடன் போன்ற வாகனங்கள் உபயோகத்தி லுள்ளன. விசேட நாட்களில் வழிபாடுகளுக்கான கட்டளைகள் சில உள்ளன. இங்குள்ள கலியான மண்டபத்தில் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. ஆலயத்திற்குச் சொந்தமாகச் சொற்ப நிலங்களும், ஆபரணங்களும் உள்ளன. தமிழகத்தில் அரசாண்ட மன்னர்கள் விட்டுச் சென்ற கலைக் கருவூலங்களில் ஒன்றாக இக்கோயிலும் கருதப்படவேண்டும்.

வெஞ்சமாக் கூடல்

விகிர்தேஸ்வரர் ஆலயம்

"தங்குமன

வஞ்சமாக் கூடல் வரையாதவர் சூழும்

வெஞ்சமாக் கூடல் விரிசுடரே"

(இராமலிங்க அடிகள்)

முற்காலத்தில் வெஞ்சமன் என்ற வேட்டுவ அரசன் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான். முக்கண் முதல்வனான சிவபெருமான் மீது அளவற்ற பற்றுடையவனாய் இடையறாது வழிபட்டு அரனாரின் அருளை அம்மன்னன் பெற்றிருந்தான். தனது எல்லையை விரிவுபடுத்தும் விருப்பமுடைய கருவூர்ச் சோழ மன்னன் வெஞ்சமன் மீது படையெடுத்தான். அகழியால் சூழப்பட்டு வலிமை மிக்க அரணால் பாதுகாக்கப்பட்ட வெஞ்சமனின் தலை நகரைச் சோழனால் கைப்பற்ற இயலவில்லை. அகழியின் வாய்க்கால், தண்ணீர் வடிகால் ஆகியவை பற்றிய இரகசியச் செய்திகளை ஒரு இடைச்சி வாயிலாகச் சோழன் கண்டறிந்தான். அவ்வழி மூலம் திடீரெனப் புகுந்து சோழன் தாக்கினான். சோழனுக்கு இணையாகப் போரிட இயலாத வெஞ்சமன் போரில் தோல்வியுற்று வீரமரணம் எய்தினான். வேட்டுவ மன்னனின் வீரவுணர்வை மெச்சித் தலைவணங்கிய கருவூர்ச் சோழன் அருகிலுள்ள ஆற்றின் ஓரமாக வடமேற்குப் பகுதியில் வெஞ்சமனின் திருவுருவப் படிமத்தை நிறுவினான். தனக்கு வழிகாட்டிய இடைச்சியின் சிலையையும் நன்றி மறவாத அம்மன்னன் அமைத்தான். வெஞ்சமன் ஆட்சி புரிந்த நகரம்

இன்று வெஞ்சமாக்கூடல் என்ற பெயருடன் காட்சியளிக்கிறது. கரூர் —அரவக்குறிச்சி —திண்டுக்கல், நெடுஞ்சாலையிலுள்ள சீத்தப்பட்டி அல்லது ஆறுசாலைப் பிரிவிலிருந்து 8 கி. மீ. தொலைவில் இப்பதி அமைந்துள்ளது. கரூர், திண்டுக்கல் ஆகிய ஊர்களிலிருந்து வெஞ்சமாக்கூடல் செல்லப் பேருந்து வசதி உள்ளது. இவ்வூர் கரூரிலிருந்து 18 கி. மீ. தொலைவில் உள்ளது.

கொங்கேழ் தலங்கள் என்று சிறப்பிக்கப்படும் கொங்கு நாட்டுப் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் வெஞ்சமாக் கூடல் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. சமயக் குரவர்களுள் சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்திற்கு வருகை தந்து ஒரு பதிகத்தை ஈசனுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் சரிதையை விவரிக்கும் பகுதியில் சுந்தரர் வெஞ்சமாக்கூடல் சென்று வழிபட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஆயிடைநீங்கி அருளினாற் செல்வார்
மேயவன் வண்டமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக்கூடனும் பணிந்து சேயிடை
சுழியல் போந்து வந்தடைந்தார் தென்றிசைக்
கற்குடி மலையில்''

சுந்தரமூர்த்தி நாயனார் பல தலங்களில் ஈசரிடம் தோழன் என்ற உரிமையோடு பொருள் கேட்டுப் பெற்றுள்ளார். அதுபோன்ற ஒரு சம்பவம் இங்கும் நடைபெற்றதாம். வெஞ்சமாக் கூடலில் கிராம தேவதையான பொன்பரப்பி அம்மனுக்குத் தனி ஆலயம் உள்ளது. பார்வதி தேவியே வயோதிகக் கோலத்தில் பொன்பரப்பி அம்மனாக எழுந்தருளி உள்ளதாகக் கூறுவர். முக்கண் முதல்வரான சிவபெருமான் தனது இரு புத்திரர்களான விநாயகரையும் சுப்பிரமணியரையும் பொன்பரப்பி அம்மனிடம் பணய

மாக வைத்துப் பொருள் பெற்றாராம். அப்பொருளை நற்றமிழில் கவிபாடும் சுந்தரரிடம் அளித்தாராம். இச்செய்தியை வாலசுந்தரக் கவிராயர் எழுதிய தொண்டைமண்டல சதகத்திலுள்ள பாட்டு தெரிவிக்கிறது.

''கிழவேதி வடிவாகி விருத்தையைக் கிட்டி என்றன்
அழகாகும் மக்கள் அடகுகொண்டு அப்பொன்
அருளுதி என்று
எழு காதலால் தமிழ் பாடியசுந்தரர்க்கு ஈந்த ஒரு
மழுவேந்திய விகிர்தேசுவரன் வாழ் கொங்கு
மண்டலமே''

ஆனால் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தில் இச்சம்பவம் இடம் பெறவில்லை.

வெஞ்சமாக் கூடல் விகிர்தேஸ்வரர் கோயில் சில ஆண்டுகள் முன்பு மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தது. இதன் பாழடைந்த நிலை பற்றி 20 ஆண்டுகளுக்குமுன் வெளியான ''கொங்கு நாட்டுக் கோயில்கள்'' என்ற நூலில் அதன் ஆசிரியர் சிவகளை மு. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

''திருக்கோயில் மிகவும் சீர்கெட்ட நிலையில் சிலமாகி இருக்கிறது. மதிற்சுவர்கள் இடிந்த நிலை; மண்டபங்களும் பாழடைந்த திசை; சுற்றுப்பிரகாரம் முழுவதும் முட்புதர்; ஊரே மண்மேடிட்டுப் போனதால் கோயில் பள்ளத்தில் உள்ளது. ஆறேழு படிகள் கீழிறங்கித்தான் கோயில் முகப்பை அடைய வேண்டும். உட்சுற்றுப் பிரகாரத்தில் சிதைந்த சிலைகளையும், மூர்த்திகளையும் வைத்துள்ளனர். கவனிப்பாரற்ற நிலை கண்டு கண்ணீர் வடிக்க வேண்டும்.''

அன்று வெஞ்சம அரசனின் தலைநகராய் ஆழ்ந்து அகன்ற அகழி சூழ்த்த பெரிய ஊராய் திகழ்ந்தது. இவ்வூர் இன்று தூர்ந்து போன அகழியுடன் மண்மேடாகிய சிற்றூராய்க் காட்சியளிக்கிறது. அன்று

பாடல் முழவுங்குழலும் இயம்ப-மடவார் நாடமாடும்-பணைத்தோளியர் பாடலோடுஆடல் செய்த இடம் இன்று பாழ்பட்ட இடமாய்க் காட்சியளிக்கிறது. அன்று வஞ்சி நுண்ணிடையார், மயிற் சாயலன்னார், வடிவேற்கண் நல்லார் பலர் வந்திறைஞ்சிய வெஞ்சமாக் கூடல் கோயில் இன்று வந்து வழிபடுவார்களின்றி வெறிச்சோடி, முள்ளும், புல்லும் முளைத்த புதர்ப் பிரகாரங்களையும், வௌவால் கூட்டம் வாசம் செய்யும் கூடங்களையும் உடையதாய்க் காட்சி அளிக்கிறது. அன்று ஊரையே இனாம் வழங்கி இறையிலியாய் எண்ணற்றவை கொடுத்துத் தினப்பூசை முட்டின்றி நடைபெறச் செய்த கோயிலில் இன்று நித்தியப் படித்தரத்திற்குக் கூடத் தட்டுப்பாடு. வெஞ்சமாக் கூடல் பற்றிய இதுபோன்ற வருணனைகளைப் பழைய நூல்களில் காணலாம். மேலும் 26-11-1977ல் குடகனாற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் இக் கோயில் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் பல பகுதிகள் உடைபட்டு ஆற்றில் 2 கி.மீ. வரை அடித்துச் செல்லப்பட்டன.

1984-85 ஆண்டுகளில் விகிர்தேஸ்வரர் நல்வழி காட்டத் தொடங்கினார். பாழடைந்திருந்த ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கோவை சிரவையாதீனம் தவத்திரு சுந்தர சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், ஈரோடு நகரைச் சார்ந்த தொழிலதிபர் அழகப்பன் ஆகியோர் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தார், அறுபத்து மூவர் விழாக்குழுவினர் ஆகியோரும் திருப்பணி புரிவதில் பெரும் பங்கேற்றனர். தருமபுரம், குன்றக்குடி துறைசை ஆகிய ஆதீனங்களும், இந்து சமய அறநிலைத்துறையும், பொருள் உதவி அளித்தன. சுமார் 14 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி நிறைவுற்று 26-2-1986 புதன்கிழமை காலை

ஆறுமணியளவில் மகா கும்பாபிஷேகம் சீரும், சிறப்புமாக நிறைவேறியது.

ஆலயத் திருப்பணிகளை நான்கு வகைகளாகப் பகுத்துள்ளனர்: 1. ஆநாவர்த்தம் 2. ஆவர்த்தம், 3. புநராவர்த்தம், 4. அந்தரீகம் என்பன அவை. ஆலயமோ இலிங்கமோ இல்லாத ஊரில் புதிய கோயிலை நிர்மாணித்து அதனுள் ஒரு லிங்கத் திருவுருவத்தை எழுந்தருளச் செய்வது ஆநாவர்த்தம் எனப்படும். கடல், நதி போன்றவற்றால் சேதப்படுத்தப் பட்டுள்ள ஆலயத்தில் இருந்த இலிங்கத்தை வேறு ஒரு இடத்திற்கு எடுத்துச் சென்று புதிதாகக் கட்டிய ஆலயத்தில் கடவுள் மங்களம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும். ஆலயத்தின் கோபுரம், விமானம், கருவறை போன்ற முக்கியப் பகுதிகள் பழுதடைந்து விட்டாலும், தெய்வத் திருமேனிகளில் அஷ்டபந்தனம் நீங்கியிருந்தாலும் புதிதாகப் புனருத்தாரணம் செய்வது புநராவர்த்தம் என்று குறிப்பிடப்படும். திருடர்கள், தகுதியற்ற அறிவிலிகள் போன்றோர் தெய்வத் திருவுருவங்களைத் தீண்டினால் நடத்தப்படும் தோஷசாந்தி அந்தரீகம் எனப்படும். வெஞ்சமாக் கூடலில் நடைபெற்ற திருப்பணி 'ஆவர்த்தம்' என்ற வகையைச் சார்ந்தது.

இன்று புதுப்பொலிவோடு இக்கோயில் காட்சியளிக்கிறது. கிழக்கு வாயிலில் வண்ணச் சுதையுருவங்களால் அலங்கரிக்கப்பட்ட ஐந்து நிலை கோபுரம் பக்தர்களை வரவேற்கிறது. சுவாமி, அம்பாள், விநாயகர், முருகப் பெருமான், நடராஜர் ஆகியோர் குடிகொண்டுள்ள சந்நிதிகள் முன்பிருந்த அமைப்புச் சற்றும் குறையாமல் கருங்கல்லால் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. பைரவர், கஜலஷ்மி, சந்திரன், சூரியன், நவகிரகங்கள், பஞ்ச லிங்கங்கள் ஆகிய திருமேனிகளும் கோயிலில் இடம் பெற்றுள்ளன. அறுபத்து மூவரின் திருவுருவங்களை உருவாக்கி, அவற்றை எழுந்தருளச் செய்ய ஒரு

மண்டபத்தைக் கட்டி, அங்கு பிரதிஷ்டை செய்துள்ளனர். 63 அடியார்களின் காலம், குலம், கோத்திரம், பிறந்த நட்சத்திரம் ஆகிய அனைத்து விவரங்களும் அவ்வுருவங்களுக்கு மேல் எழுதப் பட்டுள்ளன. அனைத்து உற்சவ விக்கிரகங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. ஆலயத்தின் பரப்பு சுமார் ஒரு ஏக்கர் இருக்கும்.

மூலவரின் திருநாமம் கலியாண விகிர்தேஸ்வரர். இவர் தானாகத் தோன்றிய சுயம்புலிங்கம் அல்ல; பிறரால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 5 அடி உயரமுள்ள வைப்புலிங்கம் ஆவார். சுந்தரரின் பதிகத் திலுள்ள இறுதிப்பாடலில் ''வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனையும் வேண்டுதியே'' என்றே இவரிடம் வேண்டிக் கொள்கிறார். விகிர்தன் என்ற சொல் வேறு பாடுடையவன் என்று பொருள் தரும். ''கலந்தார்க்கு அருள் செய்திடுங்கற்பகம்'', ''நல்லாய்'', ''புனிதா,'' ''தொழுவோர்க்கு எளியாய்'', என்று சுந்தரர் இவரைப் போற்றுகிறார். கல்வெட்டுக்களில் 'திருவெஞ்சமாக் கூடல் ஆளுடைய தேவர்' ஆளுடைய நாயனார், 'திருவெஞ்சமாக் கூடலுடைய நாயகனார்' என்று இறைவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

''வானுலவு நகர் பொடிப்ப மலைவிலனை பிடிப்ப
மழை வணீவம் பெற்றுக்
கானுலவு மீதழிகண்ணி தார்விடை கேதனமூர்தி
கவினக் கொண்டு
தேனுலவு மினிய பண்ணார் மொழிக் கிளிபுன்
முறுவல் கொடு சிறந்து மேவ
மீனுலவு சிற்றாற்று வெஞ்சை விகுர் தேசர்
பழவினை நீப்பாரால்''.
(தலபுராணம்)

இறைவியின் திருநாமம் விகிர் தேஸ்வரி. மதுரசு பாஷினி என்றும் இவரை அழைப்பர். சுந்தரரின்

பதிகத்திலும், கல்வெட்டுக்களிலும் 'பண்ணினேர் மொழியாள்' என்றே அம்மன் குறிப்பிடப்பட்டுள்ளார். பிரபாவளைவுடன் சேர்ந்து சுமார் மூன்றடியுடைய இத்திருவுருவத்திற்கு நான்கு கரங்கள் உள்ளன. அம்மன் சந்நிதி இறைவனுக்கு இடது புறத்தில் அமைந்துள்ளது.

கண்ணேர் மொழி காமரு தும்பை யொடும்
விண்ணேர் மொழி வெண்மதி வேணியனார்
உண்ணேர் மொழி யோதுமிடத்து வளர்
பண்ணேர் மொழியம்மை பதம்பணிவாம்.

(தலபுராணம்)

ஆறுமுகப்பெருமானின் மயில் காலை ஊன்றியுள்ள கோலம் பேரெழில் மிக்கது. ஒரே கல்லில் பீடம், மயில், ஆறுமுகன் ஆகிய திருவுருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் சூட்டியுள்ளார்.

வண்டு போற் சாரத்தருள்தேடி மந்திபோற்காலப்
பிணிசாடிச்
செண்டு போற் பாசத்துடனாடிச் சிந்தைமாய்த்
தேசித் தருள்வாயே
தொண்டாற்காணப்பேறுவோனே தூங்கவேற்கானத்
துறைவோனே
மிண்டராற் காணக்கிடையானே வெஞ்சமாக்
கூடற் பெருமானே

(அருணகிரிநாதரின் திருப்புகழ்)

சுவாமி, அம்பாள், ஆகிய கருவறைகளின் வெளிச் சுவர்களிலும், முன் மண்டபச் சுவர்கள் தூண்கள், திருமாளிகைப்பத்தி, தென்வட சுவர்கள் ஆகியவற்றிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அற்றில் ஜயகேசரி, இராஜகேசரி என்ற சொற்கள் தனித்தனியே பொறிக்கப் பட்டுள்ளன. கோனேரின்மை கொண்டான், ஜடாவர்மன் சுந்தரபாண்டிய தேவன், பாண்டியன் மாறவர்மன் குலசேகர வர்மன், வீரராஜேந்திரன், வீரபாண்டியன்

ஆகிய அரசர்கள் காலத்தில் அக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன; இக்கல்வெட்டுக்கள் மூலம் பயனுள்ள பல செய்திகள் கிடைத்துள்ளன; விகிர் தேஸ்வரர் ஆலயத்திற்கு இறையிலி தேவதானமாக நந்தனூர், நத்தம், திருவெஞ்சமாக் கூடல், இளமாடத்தூர் ஆகிய ஊர்கள் விடப்பட்டன. நாகம்பள்ளி, துறையூர் நத்தம், மங்கலம் என்ற பாண்டி தேவர்க்கு நல்லூர் ஆகிய ஊர்கள் கோயில் பூசை முதலியவற்றிற்காக மானியமாக வழங்கப்பட்டன. கோவிலில் கணக்கு வேலை பார்த்து வந்த ஒரு அலுவலகருக்கு வீட்டு மனை அளிக்கப்பட்டது. திருவெஞ்சமாக் கூடல் உட்கிடை நெடுங்குளி என்ற முனிவரதப் பெருமாள் நல்லூரை ஆலயத்தில் ஸ்ரீ காரியம் பார்க்கும் கோயில் காணியாளர் ஒருவருக்கு அளித்தனர். விகிர்தேசுவரர் கோயிலில் விளக்கு எரிப்பதற்குப் பொன் அளிக்கப்பட்டது. சுந்தரபாண்டியதேவன் என்ற கண்டியாத் தேவன், பண்ணேர் மொழியம்மை சந்நிதியைப் பழுது பார்த்தும் விரிவாகக் கட்டியும் பல திருப்பணிகள் புரிந்தான்; இத்திருப்பணிகள் பரகேசரிவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியனின் மூன்றாவது ஆட்சியாண்டில் நடைபெற்றன; வெங்கல நாட்டிலுள்ள வெஞ்சமாக் கூடல் விகிர்தர் என்று இறைவன் குறிப்பிடப்பட்டுள்ளார்.

[1905ம் ஆண்டுக்கான தென் இந்திய கல்வெட்டு அறிக்கைஎண்; (143-50)] வேள்விக்குடிச் செப்பேட்டில் குறிக்கப்பெறும் கூடல் எனும் ஊர் மதுரையைக் குறிப்பிடவில்லை, என்றும், வெஞ்சமாக் கூடலையே குறிப்பிடுவதாகவும் ஒரு கருத்து உள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் வெஞ்சமாக் கூடலுக்கு வருகை தந்து ஒரு பதிகத்தைச் சார்த்தியுள்ளார். சிற்றாற்றின் வளமும், அவ்வாற்றால் வளம்பெறும் வெஞ்சமாக் கூடலின் இயற்கை வனப்பும் இப்பாடல்களில் பெரிதும் போற்றப்படுகின்றன. மூங்கில்களிலிருந்து

உதிரும் ஒளி மிக்க முத்துக்களையும், ஏலம், இலவங்கம், தக்கோலம், இஞ்சி ஆகிவற்றையும் ஏந்தி வந்து கரைகளில் மோதும் சிற்றாற்றின் கீழ்க்கரைகளில் மாமரம், புன்னை மரம், குங்கும மரம், குருக்கத்திப் பந்தர் ஆகிய மரங்கள் வளர்ந்துள்ளன. அவற்றின் மீது குயில்கள் கூவும்; அருகே கலைமான்கள் ஆடும்; இது போன்ற வருணனைகள் அனைத்துப் பாடல்களிலும் உள்ளன.

துளைவெண்குழை யுஞ்சுருள் வெண்டோடுநீ
தூங்குங்கா திற்றுளங்கும் படியாய்
களையேகமழும் மலர்க் கொன்றையினாய்
கலந்தார்க்கருள் செய்திடுங் கற்பகமே
பிளை வெண்பிறை யாய்பிறங்குஞ்சடையாய்
பிறவாதவனே பெறு தற்கரியாய்
வெளைமால் விடையாய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே

'வளங்கொள் மதில் மாளிகை கோபுரமும், மணிமண்டபமும் இவை மஞ்சு தன்னுள் விளங்கும் மதிதோய் வெஞ்சமாக் கூடல்' என்று மற்றொரு பாடல் குறிக்கிறது. மாதர்கள் ஈசனை வழிபட்ட செய்தியை "வரை மனனையார் மயிற் சாயனல்லார், வடிவேற்கண் நல்லார் பலர் வந்திறைஞ்சும்" என்று குறிக்கிறார். சுந்தரர் ஈசனை, 'கலந்தார்க்கருள் செய்திடும் கற்பகமே' என்றும் 'தொழுவார்க்கெளியாய் துயர் தீர நின்றாய்' எனவும் போற்றுகின்றார்.

திருநாவுக்கரசரின் 'உஞ்சேனை' என்று தொடங்கும் க்ஷேத்திரக் கோவைப் பாடலிலும், அருணகிரிநாதரின் திருப்புகழிலும் இப்பதி குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்செங்கோடு வித்துவான் தி.அ. முத்துசாமிக் கோனார் எழுதியுள்ள வெஞ்சமாக் கூடல் தலவரலாறு 700 பாடல்களை உடையது. இந்நூலில் நாட்டுப் படலம், நகரப்படலம், புரந்தரப்படலம், சோமநந்திப்

படலம் ஆகிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அகலிகை யிடம் தகாத உறவு கொண்டு கௌதமரின் சாபத்திற் குள்ளான இந்திரன் இப்பதியில் வழிபட்டுக்கழுவாய் தேடிக்கொண்டான். இந்நூலிலுள்ள நகரப்படலம் என்ற பகுதியில் இவ்வூரிலுள்ள திருக்கோயில் வருணிக்கப் பட்டுள்ளது.

பத்தரை மாற்றுப் பொற்மேற் பரப்பி நன்மணி
பதித்த
பித்திகை பவளக்கான் மேற் பிங்கல மானமல்கு
முத்தவா ணகையின் பண்ணார் மொழியுமை
யொருபான்மேவச்
சித்துரு விகிருதலிங்கச் செஞ்சுடரெழுந்த கோயில்

புறம் 398 ம் பாடலில் சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார் என்ற புலவர் பாடிய பாடலை ஆதார மாகக் கொண்டு ஆராய்ந்த புலவர் பெ. இராமலிங்கன் என்பார் சேரமான் வஞ்சனால் இவ்வூர் தோற்றுவிக்கப் பட்டதால் 'வஞ்சன்மாக் கூடல்' என்று அழைக்கப்பட்ட தாகவும், காலப்போக்கில் வெஞ்சமாக் கூடல் என மருவியதாகவும் கருதுகிறார். ஆதிக் கருவூர் கருத்து வெஞ்சமாக் கூடல்' என்பது இப்பகுதியில் வழங்கி வரும் மொழி ஆகும்.

கொங்கு நாட்டிலுள்ள கூடல் துறைகளுள் வெஞ்ச மாக் கூடலும் ஒன்று. ஆலயத்திற்குப் பின்புறம் தெற்கி லிருந்து ஓடும் குடவனாறு (கிழகனாறு) சிறிது தொலைவில் ஆம்பிராவதி எனும் அமராவதியுடன் கலக்கிறது, கோயிலுக்கு அருகே ஓடும் சிற்றாறு எனும் காட்டாறு இதனுடன் கலக்கிறது. இந்த இரு ஆறுகளும் கூடுமிடத்தில் அமைந்துள்ள தலம் ஆகையால் கூடல் எனப்பட்டது போலும். இவ்வூர் ஒரு கோட்டையாக இருந்து அழிந்து போனதற்குரிய சுவடுகள் உள்ளன.

விகிர்தேஸ்வரர் ஆலயத்தில் காலையிலும், மாலை யிலும் முறைப்படி வழிபாடு நடைபெறுகிறது. காலை 6

முதல் 12 வரையிலும், மாலை 4 முதல் 8 வரையிலும் ஆலயம் திறந்திருக்கும். இக்கோயிலுக்கு இனாம்பூமி யாக 1988 ஏக்கர் நிலம் இருந்ததாகப் பழைய பதிவேடுகள் குறிப்பிடுகின்றன. மாசி மாதத்தில் பிரம்மோற்சவமும், மாசி மகத்தன்று தேரோட்டமும் முன்பு நடைபெற்று வந்தன. மாதாந்திர விழாக்கள் உபயதாரர்கள் உதவியுடன் நடைபெறுகின்றன.

இவ்வூரின் சுற்றுப்புறத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கற்சிலைகள், சிவலிங்க உருவங்கள், ஆவுடையார், நந்திதேவர் ஆகியன கிடைத்துள்ளன. இங்குள்ள பொன் பரப்பி அம்மன் கோயிலில் மாசி மாதத்தில் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இராசாப்பட்டி காமாட்சியம்மன், விநாயகர் ஆகியோருக் கான சிறு கோயில்கள் அருகே உள்ளன. பொன்பரப்பி யம்மன் கோயிலுக்கு அருகே குடகனாற்றின் கீழ்க் கரையில் வெஞ்சமனின் சிலை மார்பளவு மண்ணில் புதைந்தவாறு உள்ளது. இச்சிலை இன்றும் மக்களால் வணங்கப்படுகிறது.

திருவந்திபுரம்

பல்லோரு மேத்தும் பரம்பொருளைச் செம்முளரி
வெல்லுந்தடங்கண்கள் விட்டுணுவைச் சக்கரனைச்
செல்வனை யென்றுமிறைப் பொழுது மென்னெஞ்சிற்
செல்லாவெருவனைத் தென்னயிந்தை யூரானைத்
தொல்லை முதற்சுடரைத் தூமறைகளீரிரண்டுஞ்
சொல்லப்புகுந்துஞ் சொலமாட்டா வண்மையனைக்
கல்லையணங்காக்க வல்ல காற்பொடியெங் காவலனை
நல்லோருக்கருள் புரியுநல் தெய்வநாயகனை
சொல்லத் தொலையுந்துயர்.

உலகத்தில் நன்மையை நிலைநாட்டும் பொருட்டு மகாவிஷ்ணு ஐந்து நிலைகளில் தோன்றுகிறார். பரமபதம் என்ற வைகுண்டத்தில் வைகுண்டநாதனாக எழுந்தருளியுள்ள நிலையே மிக உயர்ந்தது. இதனையே பரத்துவ நிலை என்று குறிப்பிடுவர். பாற்கடலில் வாசுதேவனாகப் பள்ளி கொண்டுள்ளது இரண்டாவது நிலை. இது வியூகம் எனப்படும். இந்த இரு நிலைகளிலும் திருமாலைத் தரிசிக்க வானவர்களால் மட்டுமே முடியும். பூவுலகில் அவதாரங்களாகத் தோன்றும் நிலை விபவம் எனப்படும். அன்பர்களின் இதயத்தில் திருமால் குடி கொண்டுள்ள நிலை அந்தர்யாமி எனப்படும். பூவுலகிலுள்ள ஆலயங்களிலும், மடங்களிலும், அன்பர்களின் இல்லங்களிலும் விக்கிரக நிலையில் தோன்றுவது அர்ச்சாவதாரம் என்ற ஐந்தாம் நில்லயாகும். இந்த நிலையே மிகவும் உயர்ந்தது என ஆழ்வார்களும் ஆசாரியார்களும் கொண்டாடுகின்றனர்.

அர்ச்சாவதாரம் நான்கு விதமாகப் பிரிக்கப் பட்டுள்ளது. மகாவிஷ்ணு தாமாகவே எழுந்தருளி

யிருப்பது சைத்தம் எனப்படும். வானவர்களின் தவத்திற்கு இணங்கி பூவுலகில் தோன்றினால் அது தைவம் எனப்படும். முனிவர்களின் தவத்திற்குப் பரிசாக எழுந்தருளுவது ஆர்ஷம் எனப்படும். அரசர்கள், அதிகாரிகள், பக்தர்கள் போன்றோர்களால் பிரதிஷ்டை செய்யப்படுவது மானவம் என்ற வகைப்படும். திருமால் தானாகவே எழுந்தருளியுள்ள (சைத்தம்) தலங்களுள் திருவகீந்திரபுரமும் ஒன்று. இங்கு மகாவிஷ்ணு ஆதியில் திருவகீந்திர நாதனாக அவதரித்து வழிபடப்பட்ட தாகத் தல வரலாறு விளம்பும். இன்று திருவந்திபுரம் என்று வழங்கப்படும் இத்தலம் தென்ஆற்காடு மாவட்டத்தின் தலைமையிடமான கடலூரிலிருந்து 5 கி. மி. தொலைவில் அமைந்துள்ளது. கடலூரிலிருந்து இவ்வூருக்கு நகரப் பேருந்துகள் செல்கின்றன.

திருவயீந்திரபுரத்தின் பெருமை பிரம்மாண்ட புராணத்தில் ஐந்து அத்தியாயங்களிலும், காந்த புராணத்தில் நான்கு அத்தியாயங்களிலும், பிரகந் நாரதீய புராணத்தில் ஐந்து அத்தியாயங்களிலும் குறிப்படப்பட்டுள்ளது.

ஒருமுறை தேவரிஷிகள் பலர் மகாவிஷ்ணுவைத் தரிசிக்கும் பொருட்டுத் திருப்பாற்கடல் சென்றனர். திருமால் அங்கு இல்லாமையால் ஸ்ரீவைகுண்டம் நோக்கிச் சென்றனர். ஸ்ரீவைகுண்டத்திலும் எம்பெருமானைக் காண இயலவில்லை. பூவுலகில் காஞ்சி மாநகருக்குத் தெற்கிலும், குடந்தைக்கு ஆறு யோசனை வடக்கிலும், கடற்கரைக்கு அரையோசனை தொலைவிலும், திருவேங்கடத்தின் தென்கிழக்கிலும் அமைந்துள்ள திருவகீந்திரபுரம் எனும் திருத்தலத்தில் நம்மை நோக்கித் தவமியற்றிவரும் மார்க்கண்டேய முனிவர், பூமாதேவி ஆகியோருக்கு அருள்பாலிக்க ஸ்ரீமன்நாராயணன் சென்றுள்ளதாக வாயிற்காப்போர் மூலம் அறிந்தனர்.

தேவரிஷிகளும் திருவகீந்திரபுரத்தையடைந்து அங்கு மார்க்கண்டேயர், பூதேவி ஆகியோர் புரிந்து வந்த தவத்தில் பங்கேற்றனர்.

தம்மை உள்ளன்புடன் போற்றும் அன்பர்களின் முன்னர் மகாவிஷ்ணு காட்சியளித்தார். ''சங்கு, சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களை ஏந்திய கரங்கள்; வனமாலை, கிரீடம், கௌஸ்துபம் ஆகியவற்றுடன் ஒளிரும் திருமேனி; சரத்கால சந்திரன் போன்ற நகவரிசை; பூர்ணசந்திரன் போன்ற வதனம்; பவளம் போன்ற அதரங்கள்; கொருக்கத்தி மொட்டு போன்ற பல்வரிசை; மதிமயக்கும் கண்ணாடி போன்ற தாடை; செந்தாமரைப்பூ போன்ற கண்கள்; வலம்புரிச் சங்கம் போன்ற கழுத்து; யானைத் துதிக்கை போன்ற கரங்கள்; விசாலமான அகன்ற மார்பு; சிங்கம் போன்ற இடை'' இத்தகைய தோற்றமுடைய திருமால் தேவர்கள் புடைசூழ, இன்னிசைக் கருவிகள் முழங்க பக்தர்களுக்கு அருளினார். பக்தர்கள் விரும்பிய வண்ணம் இதே கோலத்தில், மகாலஷ்மி, கருடன், ஆதிசேஷன் ஆகியோருடன் தேவநாதனாக எழுந்தருளுவதாக வாக்களித்தார். திருமாலுக்கு அருகே நித்திய ஸாரிகளும், சனகாதியர்களும் உள்ளனர். இருபுறங்களிலும் மார்க்கண்டேயர், பூதேவி ஆகியோர் இடம் பெற்றனர். பிரமதீர்த்தம் என்ற தீர்த்தக்கரையில் இருந்தவாறே நான்முகன் இப்பெருமானை ஆராதித்து வந்தார். திரிபுரசம்ஹாரம் முடிந்தவுடன் சிவபெருமான் லிங்க வடிவில் திருப்பா திரிப்புலியூரில் எழுந்தருளினார். அங்கிருந்தவாறே மகாவிஷ்ணுவிற்குத் தனது வணக்கத்தைச் செலுத்தினார்.

திருமாலின் அருளை நாடிய மார்க்கண்டேயர் இங்கு வழிபட்டார். அவரது தவத்திற்குப் பரிசாகத் திருமகள் ஒரு தாமரை மலரின் நடுவில் குழந்தையாக உருவெடுத்தாள். கடலில் அலைகள் வீசுவதைக் கண்டு மகிழ்வுற்ற

அக்குழந்தைக்குத் 'தரங்கமுக நந்தினி' என்று பெயரிட்டார். உரிய பருவத்தில் மகாவிஷ்ணு தரங்கமுக நந்தினியான திருமகளை மணந்து, திருவந்திபுரத்தில் வாசம் செய்ய ஒப்புக் கொண்டார்.

இத்தலத்தில் தபோராகி என்ற முனிவர் வெகுகாலம் தங்கி நாராயணமூர்த்தியை ஆராதித்து வந்தார். தலமகிமைகளை அம்முனிவரிடம் கேட்டறிந்த பிருகு முனிவர் இங்கு தவம் புரிந்து வந்தார். அருகிலுள்ள தெளிநீர்ப் பொய்கையின் நடுவே, உள்ள அழகிய தாமரை மலரின் நடுவில் மகாலக்ஷ்மி, ஒளிவிடும் குழந்தை வடிவில் அவதரித்தாள். பிருகு முனிவர் அக்குழந்தையை வாஞ்சையுடன் வளர்த்து வந்தார். பார்கவி என்று அழைக்கப்பட்ட அம்மங்கை கல்வி, கேள்விகளில் சாலவும் சிறந்து விளங்கினாள். உரிய பருவம் அடைந்தவுடன் திருமாலை மணந்து கொள்ளும் நோக்கத்துடன் பார்கவி தவம் புரிந்தாள். திருமால் அவளது கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். கன்னிகாதானம் பின்னர் மகாலக்ஷ்மி தனது வாசஸ்தலமான திருமாலின் மார்பில் இடம் பெற்றாள். தனது மகளாக வளர்ந்த திருமகளைப் பார்த்தவாறே திருமாலின் இடது புறத்தில் அமரும் பாக்கியம் பிருகு முனிவருக்குக் கிடைத்தது.

விருத்திராசுரனை வெல்லவும், அவனைக் கொன்றதால் தன்னைப் பற்றிய பிரம்மஹத்தி தோஷம் அகலவும் தேவேந்திரன் திருவந்திபுரத்தில் கோலம் கொண்டுள்ள எம்பிரானை ஆராதித்தான். அவனது எண்ணங்கள் கை கூடின.

இப்பதியிலுள்ள இரு தீர்த்தங்கள் பல்வகைப்பட்ட பாவங்களையும் நீக்கவல்லன என்று தல மகான்மியம் போற்றுகிறது. முதலாவது கருட தீர்த்தமாகும். பாதாள லோகத்திலுள்ள ஸுக்ரீவன் என்பானுக்குச் சொந்தமான நந்தவனத்தில் தவமியற்றி வந்த ஒரு முனிவர் தனது தபோபலத்தால் விரஜை எனும் தீர்த்தத்தை உண்டுபண்ணியிருந்தார்.

வானுலகிலுள்ள கங்கை போலவே மேன்மையான அந்த ஆற்று நீரைக் கொண்டு வருமாறு கருடாழ்வார் அனுப்பப்பட்டார். முனிவரின் கமண்டலத்திலிருந்த அத்தீர்த்தத்தைக் கருடாழ்வார் ரிஷி தவத்தில் ஈடு பட்டிருந்த போது எடுத்து வந்தார். பாதிவழி சென்றதும் முனிவருக்கு விஷயம் தெரிந்து சினமுற்றார். நீர் கலங்கலாக மாறுமாறு சபித்தார். கருடாழ்வார் திரும்பிச் சென்று மகாவிஷ்ணுவின் கட்டளையைத் தெரிவித்தார். மகரிஷியும் சமாதானமடைந்து தீர்த்தத்தை ஸ்ரீமன் நாராயணனிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டினார்.

காலதாமதம் ஆகிவிட்டதால் ஆதிசேஷனிடம் தீர்த்தம் ஒன்றை உண்டாக்குமாறு திருமால் கட்டளை யிட்டார். சேடன் தனது வாலை நிலத்தில் அடித்து ஒரு பிளவையுண்டாக்கி சேஷ தீர்த்தத்தை உண்டு பண்ணினார். கமண்டலத்தில் விரஜா தீர்த்தத்துடன் வந்த கருடாழ்வார் ஏமாற்றம் அடைந்தார். திருமால் ரதோத்சவ நாளன்று கருடன் உண்டாக்கிய கருட தீர்த்தத்தின் கரையில் பூஜைகளை ஏற்றுக் கொள்வ தாகக் கூறி சமாதானப்படுத்தினார். இதுவே இன்று கெடில நதியாகத் தென்னாற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளில் பாய்கிறது. சேஷ தீர்த்தம் இன்று கிணறு வடிவில் கோயிலினுள் காட்சியளிக்கிறது. இதன் கைப்பிடிச் சுவரில் பாம்பின் திருவுருவத்தைச் சிற்பமாகச் செதுக்கியுள்ளனர். இக்கிணற்றில் அன்பர்கள் பால், மிளகு, வெல்லம், கற்பூரம் போன்ற பிரார்த்தனைப் பொருட்களைச் செலுத்துவதால் இதிலுள்ள நீரின் நிறமும், மணமும் இயற்கைக்கு மாறாக உள்ளன. திருக்கோயிலின் மடைப் பள்ளியில் உணவுப் பொருட் களைச் சமைப்பதற்கு இந்த நீரையே பயன்படுத்து கின்றனர். இதனால் தயாரிக்கப்படும் பொருட்கள் நீண்ட நேரம் கெடாமலிருப்பதாகக் கூறுவர். இங்கு சந்திர தீர்த்தம் என்ற தீர்த்தமும் உண்டு.

கெடில நதிக் கரையில் அமைந்துள்ள ஒரே வைணவப் பதி திருவந்திபுரம் ஆகும். கெடிலத்தின் வடகரையில் திருப்பாதிரிப்புலியூர், திருவதிகை, திருவாமூர், திருநாவலூர் போன்ற சிவத்தலங்களும், தென்கரையில் சேந்தமங்கலம், திருமாணிகுழி ஆகிய சிவப்பதிகளும் உள்ளன. இவ்விடங்களிலெல்லாம் மேற்கும், கிழக்குமாக ஓடும் கெடிலம் திருவயிந்திரபுரத்தினருகே தெற்கும், வடக்குமாக ஓடுகிறது. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இங்கு ஓடுவதால் இதனை ''உத்தரவாகினி'' என்று சான்றோர்கள் சிறப்பித்துள்ளனர். கோயிலையொட்டி ஆறு ஓடுவதால் அங்கு இயற்கைக் காட்சிகள் மிகுந்து விளங்குகின்றன. ஆற்றில் உற்று நோக்கினால் கோயிலின் கோபுரம், உட்பகுதிகள் போன்றவற்றின் பிரதிபிம்பத்தைக் காணலாம்.

கோயிலின் கிழக்கு வாயிலின் மீது கோபுரம் இல்லை. ஆயினும் மேற்கு வாயிலின் மீது அழகிய 5 நிலை கோபுரம் உள்ளது. இவ்வழியே திருவிழாவின்போது உலோகப் படிமங்கள் உலாச் செல்லும். கருவறையில் மூலவரான தெய்வநாயகன் கிழக்கே திருமுகமண்டலத்துடன் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார். எழில்மிகு திருமேனியுடன் அருகே காட்சியளிக்கும் உற்சவருக்கு மூவராகிய ஒருவன், அச்சுதன், திவிஷத்நாதன், தெய்வநாயகன், விபுதநாதன், தாஸஸத்தியன் வெவ்வினைதீர் மருந்து, அடியார்க்கு மெய்யன் போன்ற திருநாமங்கள் உள்ளன. தனிக்கோயிலில் செங்கமல வல்லித் தாயார் (வடமொழியில் ஹேமாம்புஜ வல்லித்தாயார்) (வைகுண்ட நாயகி) (அம்ருதஹவாஸிநி) எழில்மிகு கோலத்துடன் அருள்புரிகிறார். இவரே பிருகு முனிவரின் மகளாகவும், மார்க்கண்டேயரின் மகளாகவும் அவதரித்து மகாவிஷ்ணுவை மணந்தார். திருக்கோயிலில் அமைந்துள்ள விமானம் சந்திர விமானம் எனவும் சுத்தஸத்வ விமானம் என்றும் அழைக்கப்படுகிறது.

திருமலையிலுள்ள வேங்கடவனின் மூத்த சகோதர ராகத்தேவநாதன் விளங்குவதாகக் கர்ண பரம்பரைச் செய்தி உண்டு. திருப்பதிக்குச் செல்ல முடியாதவர்கள் திருவேங்கடவனுக்குரிய பிராத்தனைகளையும், காணிக்கைகளையும் இங்கு செலுத்துவதுண்டு. இதனால் இவ்வூரைத் தென்திருப்பதி என்றும் கூறுவர். ஆனால் திருவந்திபுரத்திற்குரிய பிராத்தனைகளைத் திருப்பதியில் செலுத்த முடியாது. இதுபோன்ற பெருமை குணசீலம், ஒப்பிலியப்பன் கோயில் ஆகிய தலங்களுக்கு உரியது.

இக்கோயிலின் உட்புறத்தில் பள்ளி கொண்ட பெருமாள், நம்மாழ்வார், ஆண்டாள், ஆழ்வார்கள், இராமானுஜர், உற்சவ நரசிம்மர் ஆகியோரையும் தரிசிக்கலாம். முன்பிரகாரத்தில் ஆதிகேசவனும், கருட ஆழ்வாரும் தோன்றுகின்றனர் கருடாழ்வார் அஞ்சலி உறஸ்தராகத் தோன்றாமல் கைகட்டி நின்ற நிலையில் காட்சியளிக்கிறார்.

இங்குள்ள இராமபிரானின் திருவுருவமும் பேரெழில் வாய்ந்தது. வடுவூர், தில்லை விளாகம் ஆகிய தலங்களிலுள்ள திருமேனிக்கு ஈடான அழகைத் திருவந்திபுரத்திலுள்ள இராமரும் பெற்றுள்ளார். பிற தலங்களில் இடது கரத்தில் வில் ஏந்தியுள்ள இராமர் இங்கு வலக்கரத்தில் கோதண்டம் ஏந்தியுள்ளது சிறப்பு. பிற இடங்களில் அஞ்சலி உறஸ்தராகத் தோன்றும் அனுமன் இத்தலத்தில் தனது கரத்தால் வாயைப் பொத்தியவாறு தோற்றமளிக்கிறார்.

நடுநாட்டிலுள்ள திவ்விய தேசங்கள் இரண்டு; அவை திருவகீந்திரபுரமும், திருக்கோவலூரும் ஆகும். திருமங்கை ஆழ்வார் இப்பதியின் மீது பத்து பாசுரங்களைப் பாடியுள்ளார். (எண் 1148-57) சிறிய குன்றின் அடிவாரத்தில் இன்று போலவே அன்றும் கோயில் அமைந்திருந்ததாக ஆழ்வாரின் பாடல் செப்புகிறது.

''வையம் ஏழும் உண்டு ஆல் இலை வைகிய
மாயவன் அடியவர்க்கு
மெய்யன் ஆகிய தெய்வநாயகன் இடம் மெய்தகு
வரைச் சாரல்''

மகாவிஷ்ணு புரிந்த திருச்செயல்களுள் ஏன உருவில் மருப்பில்உலகை எடுத்தது, வையமுண்டு ஆலிலைமேல் துயின்றது, அவுணன் மார்பகம் பிளந்தது. ஈரடியால் மூவுலகையும் அளந்தது, சீதையுடன் கானகம் ஏகியது, இலங்கை மன்னனை ஒறுத்தது, கோவர்த்தனகிரியைக் குடையாகக் கொண்டு ஆநிரைகளைக் காப்பாற்றியது, பார்த்தசாரதியாகப் பாண்டவருக்கு அருளியது. ஆகியவற்றைத் திருவகீந்திரபுர நாயகனின் செயல்களாகவே ஆழ்வார் காண்கிறார். வானுலாவிய மதிதவழ்மால் வரை மாமதிள்புடை சூழ தேனுலாவிய செழும் பொழில் தழுவிய திருவகீந்திரபுரமே'' எனவும் ''வரைவளந்திகழ் மதகரி மருப்போடு மலைவளர கிலுடுத்தி தினை கொணர்ந்தனை செழுநதிவயல் புகு திருவயிந்திரபுமே'' என்றும் இம்பதியின் இயற்கை வளங்களை ஆழ்வார் போற்றியுள்ளார்.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையின் போது திருவயிந்திரபுரத்தில் தீர்த்தமாடி வழிபட்டதாக வில்லிபாரதம் செப்பும்.

''மெய்யாகம வதிகைத் திரு வீரட்டமு நேமிக்
கையாளான் அகீந்திர புரமும் கண்டு கை தொழுதான்''

(ஆதி பருவம், தீர்த்தயாத்திரைச் சருக்கம், பாடல் 17)

திருவயிந்திரபுரத்து எம்பெருமானின் இனிய தொண்டர்களை வானுலகவாசிகள் மலர் தூவித் துதிப்பர்,' என 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில்', திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அருளுகின்றார்.

"அன்பு அணிந்த சிந்தையராய் ஆய்ந்த மலர் தூவி
என் பணிந்து நீர் எமக்கு மூர்த்தியரே என்பர்
எம்ஐயிந்திர புரத்தார்க்கு இன்தொண்டர் ஆனார்
தமை இந்திர புரத்தார் தாம்."

அயிந்திரன் (ஆதிசேடன்) வழிபட்டதால் இப்பதி திருவகீந்திரபுரம் என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். இக்கோயில் ஆதியில் சிவாலயமாக இருந்ததாகவும், பின்னர் வைணவக் கோயிலாக மாறியதாகவும் ஒரு கருத்து உள்ளள. இதுபற்றிய கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது. சிவபக்தனான சோழமன்னன் ஒருவன் வைணவக் கோயில்களைக் சேதப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான். திருவந்திபுரம் கோயிலிலுள்ள விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகிய உருவங்களைக் கண்டு அவன் குழம்பினான். அம்மன்னனின் அஞ்ஞானத்தை அகற்றும் பொருட்டு மும்மூர்த்திகளும் இணைந்த ஒரே வடிவில் தேவநாதன் காட்சியளித்தாராம். இதற்கேற்ப இன்றும் இங்குள்ள உற்சவர் நான்முகனுக்குரிய தாமரை மலரையும், திருமாலுக்குரிய சங்கு, சக்கரங்களையும். ருத்திரனுக்கு உரிய சடை, நெற்றிக்கண் ஆகியவற்றையும் பெற்று மும்மூர்த்திகளும் ஒருவரே என்று உணர்த்துகிறார். கருவறைக்கு மேலுள்ள சுத்தஸத்வ விமானத்தில் கிழக்குப் பக்கம் மகாவிஷ்ணுவும், தென்புறம் தட்சிணாமூர்த்தியும், மேற்குப்பக்கம் நரசிம்மரும், வடபுறத்தில் நான்முகனும் கோலம் கொண்டுள்ளனர். ஆலயத்தில் விநாயகர், தென்முகக் கடவுள் ஆகியோர்ரின் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளதை இதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டுகின்றனர். இக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

இக்கோயிலில், நாள்தோறும் நான்கு கால வழிபாடு முறைப்படி நடைபெறுகிறது. ஆலயத்திற்குச் சொந்தமாக சுமார் 230 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களும்

இரு இல்லங்களும், விலை மதிப்புமிக்க ஆபரணங்களும் உள்ளன. வெள்ளி முலாம் பூசிய சிம்ம, ஹம்ஸ வாகனங்களும், தங்க முலாம் பூசிய பல்லக்கும், தேரும், பல மர வாகனங்களும் உபயோகத்திலுள்ளன. சித்திரையில் பத்து நாட்களுக்கு நடைபெறும் பிரம்மோற்சவத்தின் போது ஏராளமான மக்கள் திரண்டு வருவர். ஒன்பதாம் நாள் நடைபெறும் தேரோட்டத்தைக் காண முந்தைய நாள் இரவு முதலே பலர் கூடுவர். கார்த்திகையில் தாலாட்டு விழாவும், மார்கழியில் 21 நாட்களுக்குப் பகல்பத்து, இராப்பத்து உற்சவமும், மாசிமக உற்சவமும் இனிதே நடைபெறுகின்றன. மாசிமக விழாவின் போது பெருமாள் கடலூர் கடற்கரை வரை சென்று, கடலில் நீராடி, மண்டபத்தில் தங்கிவிட்டுத் திரும்புவார். இவ்வூர் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாக இருப்பதால் முடிகாணிக்கை செலுத்தவும், திருமணம் புரிந்து கொள்ளவும் பக்தர்கள் இங்கு வருகை புரிகின்றனர்.

இக்கோயிலில் சோழர், பாண்டியர் ஆகிய மன்னர் காலத்தைச் சார்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் (எண். 85-109, 136-137, 243-57) படியெடுக்கப்பட்டுள்ளன. முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன், மூன்றாம் இராஜராஜன், முதலாம் சுந்தர பாண்டியன், விக்கிரம பாண்டியன், வீரபாண்டியன், மூன்றாம் ஜடாவர்மன், சுந்தர பாண்டியன், விஜயநகர வேந்தன் அச்சுதராயர், பல்லவச் சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர் காலத்தில் கோயிலில் விளக்கெரிய ஆடுகள், நிலம், பொன் போன்றவை வழங்கப்பட்ட செய்திகளை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மூன்றாம் இராஜராஜன் காலத்தில் உள்நாட்டுக் குழப்பம் நிலவியது. கோப்பெருஞ்சிங்கன் சோழ மன்னனைத் தெள்ளாற்றில் தோற்கடித்து அவனைச் சேந்தமங்கலத்தில் சிறையிலிட்டான். போசள மன்னன் இரண்டாம்

வீரநரசிம்மன் அவனைச் சிறைமீட்டு அரியணை ஏற்றினான். இதற்காக நடைபெற்ற போரில் இலங்கை வேந்தன் பராக்கிரமபாகு உயிர் நீந்தார்! இச்செய்தியை மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டு மூலம் அறியலாம். தொண்டையர் கோமான் அடையவளைந்தான் என்பவனின் படையிலிருந்த மறவர்களின் பெருமையைப் போற்றும் செய்யுள் வடிவிலுள்ள கல்வெட்டு ஒன்று மேலைக் கோபுரவாயிலின் இடப்புறச் சுவரிலுள்ளது.

இளவரசனான விஷ்ணுவர்த்தனரின் விருப்பத்தின் பேரில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் காலத்தில் நிலம் தானமாக அளிக்கப்பட்டது. மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி சுந்தரபாண்டியனின் காலத்தில் மற்ற ஆலயங்களில் உள்ள நடைமுறைகள் இக்கோயிலிலும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கோப்பெருஞ் சிங்கனின் நன்மைக்காக ஒரு கோபுரம் எழுப்பப்பட்டது. இராமானுஜரின் சந்நிதியில் வழிபாடுகள் முடிந்தவுடன் தீர்த்தம், பிரசாதம் ஆகியன பெறும் உரிமை பற்றிய விதிமுறைகள் அச்சுதராயர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன.

வடகலை வைணவ ஆசாரியரான வேதாந்த தேசிகருக்கு இப்பதி உகந்த தலமாகும். காஞ்சியிலுள்ள தூப்புல் என்ற பகுதியில் 1268ம் ஆண்டு புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திர நாளன்று அப்பெரியார் அவதரித்தார். அவரது பெற்றோர்களான அனந்தசூரி சோமயாஜியும், தோதாரம்மையும், அவருக்கு இட்ட இயற்பெயர் வெங்கடேசன். "இளமையிற் கல்" என்ற ஆன்றோரின் வாக்கின்படியே தமது 20வது வயதிற்குள் வேத சாத்திரங்கள், கீதா பாஷ்யம், பகவத் விஷயம் போன்றவற்றைக் கற்றார். ஸ்ரீ இராமானுஜருக்குப் பின் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைக் காப்பற்ற வல்லவர் தேசிகரே என்றுணர்ந்த ஆசான் இவருக்குக் கருட மந்திரத்தை உபதேசித்தார். தேசிகர் திருவகீந்திரபுரம்

வந்து அங்குள்ள ஔஷதகிரியில் கருடாழ்வார் மூலம் சகல வித்யாதேவதையான ஹயக்ரீவரின் மந்திரத்தை அறிந்தார். கருடாழ்வார் அளித்த ஹயக்ரீவரின் விக்கிரகத்தை இடைவிடாமல் பூசித்து வந்தார். ஒருநாள் ஹயக்ரீவர் தேசிகர் முன்பு பிரசன்னமாகி ஞானாமிர்தத்தையளித்தார். அன்றுமுதல் தேசிகருக்கு ஞானப் பிரவாகம் பெருக்கெடுத்தது. கணக்கற்ற நூல்களை இயற்றியும், தீர்த்தயாத்திரைகள் புரிந்தும் திருப்பணிகளில் பங்கேற்றும், அடியார்களின் இடர்களை நீக்கியும் அவர் சமயத் தொண்டு புரிந்தார். தனது 102வது வயது வரை சமயத் தொண்டிலேயே காலம் கழித்தார்.

அத்தகைய பிரசித்தி பெற்ற வைணவ அடியார் திருவகீந்திரபுரத்தின் மீது தீராக்காதல் கொண்டிருந்தார். தாம் மகிழ்ச்சியுடன் உறையும் பதி திருவகீந்திரபுரமே என்று குறிப்பிட்டுள்ளார் (அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய் மகிழ்ந்து வாழும் போதிவை நாம் பொன்னயிந்தை நகரில் முன்னாள்) இத்தலத்தின் மீது வடமொழியில் தேவநாயக பஞ்சாசத், அச்யுத சதகம், ஆகிய இரு நூல்களையும், தமிழில் மும்மணிக் கோவை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் நவமணிமாலை ஆகிய ஏழு சிற்றிலக்கிய நூல்களையும் இயற்றியுள்ளார். மும்மணிக் கோவையில், 'வெற்புடன் ஒன்றி அயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்று அற்புதமாக அமர்ந்தமை', என்று இப்பதி போற்றப்பட்டுள்ளது. இக்கோயிலிலுள்ள வேதாந்த தேசிகரின் சந்நிதி பிரசித்தி பெற்றது.

தேசிகரின் திருவுருவம் பற்றிய ஒரு சுவையான சம்பவம் உள்ளது. சுவாமி தேசிகரின் திவ்வியத் திருமேனியை அவரே அமைத்ததாகக் கூறுவர். சிற்பி ஒருவருடன் இது பற்றிய போட்டி ஒன்று எழுந்ததால்,

சிற்பி கூறியவண்ணம் ஸ்ரீகோச ஞான முத்திரைகளுடன் ஸ்ரீதேசிகரது உருவை உண்டாக்குமாறு ஹயக்ரீவரே ஆணை பிறப்பித்தாராம். வேதாந்த தேசிகர் தமது தபோபலத்தால் தன்னுடைய திருவுருவம் ஒன்றை உருவாக்கிச் சிற்பியைத் தலைகுனியச் செய்தார். இவ்வாறு வேதாந்த தேசிகர் உருவாக்கிய திருமேனி இக்கோயிலில் இறைவனுக்கு இணையாக மகத்துவம் பெற்றுள்ளது. இச்சந்நிதிக்கு முன்னர் துவஜஸ்தம்பம் அமைந்திருப்பதே இதன் பெருமைக்குச் சான்று அளிக்கும். அவர் நினைவாக ஸ்வாமி தேசிகன் தபோ மண்டபம் ஒன்றும் இத்தலத்தில் கட்டப்பட்டுள்ளது. புரட்டாசித் திருவோணத்தன்று தேசிகருக்குக் கருடாழ்வார் உபதேசித்த சம்பவம் நினைவு கோரப்படும். அப்போது மலை உற்சவமும், தீர்த்தவாரியும் நிகழும்.

தேவநாயகனின் ஆலயத்திற்கு அருகே ஔஷதகிரி எனும் சிறுகுன்று உள்ளன. ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைச் சுமந்து சென்றபோது விழுந்த ஒரு சிறு பகுதியே இக்குன்று என்று கூறுவர். விண் வழியே சென்ற திருமால் இங்கு இளைப்பாறியதாகவும் கூறுவர். இக்குன்றின் மீது கிழக்கு நோக்கியவாறு ஒரு சிறு கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் லக்ஷ்மீ சமேதராக ஹயக்ரீவர் காட்சியளிக்கிறார். ஹயக்ரீவருக்கு அருகே வேணுகோபாலன், கருடாழ்வார், ஆதிசேஷன் ஆகியோரும் உள்ளனர். பிற தலங்களில் நின்ற கோலத்தில் தோன்றும் கருடாழ்வார் இங்கு உபதேச நிலையிலிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். தமிழகத்தில் ஹயக்ரீவருக்காக ஏற்பட்டுள்ள தனிக் கோயில் இது ஒன்றேயாகும்.

நான்முகனிடமிருந்த வேதங்களைக் கவர்ந்து சென்ற மது, கைடபர் என்ற அசுரர்கள் குதிரை வடிவில் தோன்றி அவற்றை மறைத்துவிட்டனர். குதிரை முகமும், மனித உடலும் கொண்ட ஹயக்ரீவராகத் (ஹயவதனர்)

திருமால் அவதரித்து அசுரர்களிடமிருந்த வேதங்களை மீட்டார். இதுவே புராணங்கள் கூறும் ஹயக்ரீவரின் அவதார வரலாறு. அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை அளிக்கவல்ல வள்ளலாக ஹயக்ரீவர் ஆராதிக்கப்படு கிறார். வேதாந்த தேசிகருக்கு ஹயக்ரீவர் காட்சியளித்து அருளிய இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது மிகவும் பொருத்தமே. ஹயக்ரீவரின் பெருமையை வேதாந்த தேசிகர் பல இடங்களில் போற்றியுள்ளார்.

''சிறை கறங்கனிகள் விளரி பண்கெமுமு
துழனி பொங்கியெழு கழனி மிஞ்சி உளர்
திருவயிந்திரபுர மிக விளங்கவரு பெருமாளே

(குரவை இராமானுஜதாசர் இயற்றிய
நூற்றெட்டுத் திருப்பதி திருப்புகழ்)

உவரி

சுயம்புலிங்கஸ்வாமி திருக்கோயில்

''காரார் கண்டன் கண்ணுதலன் கங்கை கரந்த
செஞ்சடையன்
கனிவாய்ச் சுயம்புலிங்கமெனக் கால்
கொண்டோங்கும் உவரிமிசை

(தி.சு. ஆறுமுகம்)

சிவலிங்கம் என்ற சொல், தெரிவித்தல் என்ற பொருளை உணர்த்தும் 'லிக்' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் கூறுவர். அனைத்துப் பொருட்களும் அரனாரிடமிருந்து தோன்றி, அவரிடமே ஐக்கியமாவதை இலிங்கம் குறிக்கிறதாம். சிவலிங்கத்தின் அமைப்பு 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தைச் சுட்டுவதாகத் திருமூலர் கருதுகிறார். முற்காலத்தில் தமிழகத்தின் பெரும்பகுதியைக் கானகங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அப்பகுதியில் சிவபெருமான் சிவலிங்க வடிவில் தோன்றி மக்களுக்கு அருள்புரிந்தார். சிற்பிகளால் செய்யப்படாமல் தானாகவே எழுந்த இலிங்கங்கள் சுயம்பு லிங்கங்கள் எனப்படும். தெய்வத்திருவுருவங்களின் அமைப்பு பற்றிய விரிவான விதிகளைச் சிற்ப நூல்கள் வகுத்துள்ளன. அவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குச் சுயம்பு லிங்கங்கள் கட்டுப்படமாட்டா. தானாகவே தோன்றிய இத்தகைய சுயம்புலிங்கங்களில் இறைவனின் சாந்நித்தியம் என்றும் நிலைத்து நிற்கும். ஈசன் சுயம்புவாக எழுந்தருளியுள்ள தலங்கள் 'சுயம்புலிங்க க்ஷேத்திரங்கள்' எனப்படும். இங்ஙனம் சிவபெருமான்

எழுந்தருளியுள்ள தலங்களுள் உவரி என்று இன்று அழைக்கப்படும் உவரியூரும் ஒன்று. இங்கு ஈசருக்குச் சுயம்புலிங்க ஸ்வாமி என்றே பெயர். இத்தலம் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில், திருச்செந்தூர்—கன்னியாகுமரி சாலையில் அமைந்துள்ளது. திருச்செந்தூர், திருநெல்வேலி, நாகர்கோயில், கன்னியா குமரி ஆகிய ஊர்களிலிருந்து உவரி வழியாகப் பேருந்து கள் அடிக்கடி செல்கின்றன.

இன்னருளை ஈந்தொளிரும் இறையோனாம் எம்முவரித்
தோன்றியருள் மறையோனே
பொன்னருளின் மேனியணிப்புலித்தோலா பொங்கி
யெழுந் தீவினைக்குக் கலிகாலா
இன்னலற ஈனமற இனிதாக இவ்வுயிர்கள் நீ விரும்புங்
கனியாக
உன்னருமைச் சாற்றுமிந்த இசைப்பாவை உய்யவுல
கேற்றிடயிங் கருள்வாயே

சா. வேலப்பன்—உவரி சுயம்புலிங்க சுவாமி
இசைப்பாடல்

ஆதியில் உவரியில் சான்றோர் பெருமக்கள் அதிக அளவில் வாழ்ந்து வந்தனர். யாதவ குலத்தைச் சேர்ந்த குடும்பங்களும் அதில் அடங்கும். இவ்வூர் கீழவூர் மேலவூர் என்று இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விளங்கியது. இரு பகுதிகளுக்கும் இடையே ஒரு ஒற்றையடிப்பாதை இருந்தது. இத்தலத்தில் கடம்பைக் கொடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. பால், தயிர் ஆகியவற்றைச் சுமந்து சென்ற ஆய்ச்சியர் மகள் ஒருத்தி கடம்பக் கொடி இடறிக் கீழே விழுந்ததால் அவள் ஏந்தியிருந்த பானை நொறுங்கியது. இதுபோன்ற சம்பவங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலமுறை தொடர்ந்து நடைபெற்றன. இதனால் வெகுண்ட யாதவர்கள் அக்கடம்பக்கொடியை வெட்டினர். வெட்டிய இடத்திலிருந்து உதிரம் பொங்கியது. இக் காட்சியைக் கண்ட கிராமத்தினர் வியப்பும் அச்சமும்

அடைந்தனர்; ஒரு முதியவரின் யோசனையின் பேரில் வெட்டுண்ட கடம்பக்கொடியின் அடிப்பகுதியைத் தோண்டியெடுக்க முயற்சி நடைபெற்றது. அந்த முயற்சி பலனளிக்கவில்லை; அப்போது அங்கு கூடியிருந்தவர்களுள் ஒருவனுக்கு வெறியாட்டம் ஏற்பட்டது. ஈசனே சுயம்புவாக அவ்விடத்தில் தோன்றியுள்ளதால், உதிரம் பெருகிய பகுதியில் சந்தனத்தைப் பூசுமாறு அவன் கூறினான். அங்ஙனமே சந்தனம் பூசியவுடன் இரத்தப் பெருக்கு நின்றது. சுயம்புலிங்கத்தின்மேல் தென்னையோலையால் கூரை வேயப்பட்டது; நாள் தோறும் இறைவனுக்கு வழிபாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடியின் அடிப்பகுதியை அகழ்ந்து பார்க்குமாறு கூறிய முதியவரே பூசைகள் புரியும் பொறுப்பை ஏற்றார். அவரது பரம்பரையினர் ஆலயத்தில் நீண்டகாலம் அறங்காவலராகப் பணியாற்றினர்; இங்ஙனம் மக்கள் பக்தியுடன் வழிபட்ட காட்சியை உவரியூர்த் தலபுராணம் அழகாகப்படம் பிடித்துக் காட்டுகிறது.

அயனே மாலும் அடிமுடியை அறியவொண்ணா
அற்புதனே!
சுயமே வந்த சுடரமுதே! சுயம்பு லிங்கத் திருவுருவே!
நயமே செய்ய நாடிவந்து நடனம் புரியும் கூத்தரசே
சயமே யினிமேல் சன் மமிலைசத்தாயுனையே
கண்டோமே!

அத்தன் வந்தனன் அற்புத லிங்கமாய்
சத்தன் தாளினைச் சார்ந்திட வம்மினோ
நித்தன் ஈசனும் நீடருள் செய்வதில்
மித்தன் ஆகுவன் பத்தர் யார்மினோ
என்று பாடினர் ஏற்றினர் போற்றினர்
மன்று ளானையே மண்ணடி கண்டவர்
கன்று போலவே கத்தியே துள்ளினர்.
குன்று போற்புகழ் கொண்டவர் ஆடியே."

சுயம்புலிங்கஸ்வாமி ஒரு அற்புதம் நிகழ்த்தினார்; அலைகள் வானத்தைத் தொடுமளவு உயர்ந்தன;

ஊழிப்புயலும் கொடுமழையும் தோன்றின. வீடுகளும், மரங்களும் புயலால் அழிவுற்றன. சுயம்புலிங்க ஸ்வாமிக்கு ஊறு வராமல் காக்கும் எண்ணத்துடன் மக்கள் கோயில் நோக்கி விரைந்தனர். அங்கு அவர்கள் கண்டகாட்சி அவர்களைத் திகைக்கச் செய்தது. ஆடிய கூத்தனுக்காக ஓலையினால் செய்த அழகிய பந்தலும், ஈசருக்கு மக்கள் மகிழ்வுடன் அளித்த மலர்மாலையும், சந்தனமும் சற்றும் கலையாமல் கோடி சூரியர்கள் சேர்ந்தாற்போல் ஒளியுடன் கம்பீரமாகச் சுயம்புலிங்க ஸ்வாமி காட்சியளித்தார். கடும்புயலால் சிறிதும் பாதிக்கப்படாத அப்பெருமானை மக்கள் உள்ளன்புடன் வாழ்த்தித் தொழுதனர்.

''தேவனே போற்றியுன் திண்ணருள் போற்றி தீதற
வந்தவா போற்றி
மூவருங்காணா முதல்வனே போற்றி முப்புரம்
தீய்த்தவா போற்றி
பூவலமேனிப் புனிதனே போற்றி புண்ணிய உவரிநீ
வந்தெம்
கோவலர் மூலமே கோயிலைக் கொண்டவா கோடி
முறை சொனோம் போற்றி

நாஞ்சில் நாட்டைச் சார்ந்த ஒரு வயது முதிர்ந்த பெண்மணி கொடுநோயால் அல்லலுற்றாள். நாட்டு வைத்தியர்களால் அவரது நோய் குணமாகவில்லை. மருத்துவர்களுக்கெல்லாம் தலை மருத்துவனான ஈசனே கதி என்று இறைவனின் பாதார விந்தங்களைத் தஞ்சமடைந்தாள். பல திருத்தலங்களுக்குச் சென்று முறைப்படி விரதமிருந்து வழிபட்டாள். இறுதியில் உவரி திருத்தலம் வந்தடைந்தாள். காந்தம் இரும்பை ழுப்பது போலவே சுயம்புலிங்க சுவாமியின் பெருங்கருணை அவளைக் கவர்ந்ததால் இத்தலத்திலே பலநாள் தங்கினாள். நாள்தோறும் உடலைத் தூய்மைப் படுத்தியபின் ஈசனை உளமாரப் பூசித்து வந்தாள். வயது முதிர்ந்த காரணத்தால் கடலில் நீராட அஞ்சிய

அம்மாது, கடற்கரையில் நீர் தங்கியுள்ள சிறு, சிறு குண்டுகளில் நீராடினாள். பக்தர்கள் மனமுவந்து அளித்த பிரசாதத்தை மட்டுமே புசித்தார். இங்ஙனம் சளைக்காமல் பதினொன்று நாட்கள் விரதமிருந்து ஈசனைத் தொழுதாள். சுயம்புலிங்கஸ்வாமியின் அருளால் முதலில் கைவிரல்கள் வளர்ந்தன; அவ்வாறே கால்களும் வளர்ந்தன. தொல்லை தரும் புண்கள் படிப்படியாக அகன்றன. அப்பெண்மணியைப் பீடித்திருந்த தொழுநோய் நீங்கியது. நோய் நீங்கிப்பிரகாசத்துடன் விளங்கும் அம்மாதுவின் நிலையைக் கண்டு உலகினர் வியப்பெய்தினர்.

இறையருளால் நோய் அகன்ற அந்த மூதாட்டி பல காலம் உவரியில் தங்கிச் சுயம்புலிங்கஸ்வாமிக்குத் தொண்டாற்றி வந்தாள். பக்தியின் முதிர்ச்சியால் அம்மாது சில அபூர்வ சக்திகளைப் பெற்றார். அப்பெண்மணி அருளிய அருள்வாக்குகள் அப்படியே நிகழ்ந்தன. சித்துகள் புரியும் சித்தர்கள் போல அம்மாது திகழ்ந்தாள். இச்சம்பவங்கள் பற்றிய விவரங்கள் வியாபாரிகள் மூலம் நாஞ்சில் நாடு முழுவதும் பரவியது. பிற பகுதிகளில் மதவெறி மிகுத்த பிற மத வெறியர்களால் கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட எண்ணற்ற சான்றோர்கள் தமக்கு விடிவெள்ளியாகத் தோன்றியுள்ள சுயம்புலிங்கஸ்வாமியை நாடி வந்து வழிபட்டனர். அவர்களது தொல்லைகளும் அகன்று சுபிட்சம் ஏற்பட்டது.

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த சாத்தான் குளத்தில் வாழ்ந்து வந்த ஒரு பொற்கொல்லன் தீவினை வசத்தால் பெருங்கூன் அடைந்தான். தனக்கு முன்பு நிற்கும் மனிதரைக்கூட அடையாளம் கண்டு கொள்ள இயலாத நிலை அவனுக்கு ஏற்பட்டது. வைத்தியர்களிடம் பல சிகிச்சைகள் பெற்றும் அவனது கூன் நிமிரவில்லை. மனம் உடைந்து வாழ்வில் இருந்த பிடிப்பு அகன்ற நிலையில் அப்பொற்கொல்லன் சுயம்புலிங்க

சுவாமியின் கருணையை நாடினான். உவரியூரில் தங்கி 40 நாட்கள் கடும் விரதம் இருந்து பால்குடம் ஏந்துவ தாக வேண்டிக் கொண்டான். அவ்வாறே 40 நாட்கள் கடுமையான விரதத்தைக் கடைப்பிடித்தான். அவனது நிலையில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. மறுநாள் பால்குடம் சுமக்க வேண்டிய நாள். வாக்குப் படியே பால்குடத்தைச் சுமக்கும் சக்தியைத் தனக்கு அளிக்குமாறு இறைஞ்சியவாறே அன்று இரவு உறங் கினான். மறுநாள் அதிகாலையில் கடலில் நீராடியபின் பால்குடத்தை நோக்கிச் சென்ற பொற்கொல்லனின் கூன் திடீரென்று நீங்கியது. சுயம்புலிங்கசுவாமியின் கருணையை எண்ணிப் புளகாங்கிதமடைந்த குயவனும் பாற்குடம் எடுத்துத் தனது கடமையை நிறை வேற்றினான்.

டகர எழுத்தென மடங்கி நடந்தவன்
சிகர அழகென சுந்தரம் ஆயினன்
பகர எளியதோர் பக்தனின் புண்ணியம்
நகர அடியவர் நண்ணினர் காணவே.

ஆலயத்திற்கு வருகைபுரியும் அன்பர்கள் தங்குவதற் கான விடுதி ஒன்றைக் கட்டியதுடன், ஆலயத்தில் பல திருப்பணிகளையும் தனது நன்றிக் காணிக்கையாக அப்பொற்கொல்லன் செய்து முடித்தான்.

'உன்னங்குளம்' என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்த சுயம்பு என்பவரின் மனைவிக்கு ஒரு கடுமையான நோய் ஏற்பட்டது. கருவுற்ற எட்டாவது மாதத்தில் ஏற்படும் வலிப்பு நோயின் உக்கிரத்தால் அவளது குழந்தைகள் அனைத்தும் இறந்தே பிறந்தன. இவ்வாறு ஐந்து குழந்தைகள் பறிபோயின. இதற்காக அவர்கள் காணாத மருத்துவரில்லை; பார்க்காத வைத்திய மில்லை. ஆறாம் முறையாகக் கருவுற்றவுடன் சுயம்பு லிங்க சுவாமியைத் தஞ்சம் அடைந்தனர். சுயம்புவின் மனைவி நாள்தோறும் இறைவனை ஆறுகாலமும் வழி பட்டவாறு உவரியிலேயே தங்கி வந்தாள். அந்த

முறையும் எட்டாவது மாதத்தில் கடுமையான வலி ஏற்பட்டது. மன உறுதியுடன் ஆலயத்திற்குச் சென்று நெஞ்சமுருக அப்பெண்மணி பிரார்த்தித்தாள். அர்ச்சகர் அளித்த அபிஷேக நீரைப் பருகினாள். இறைவன் அருளால் அவளை வாட்டிய வலி நீங்கியது.

படங்கொண்ட பாம்பின் வாயில் பதறிடும்
தேரைபோல
மடங்கொண்ட மாதும் மோதி மறுகிடும் நிலையைக்
கண்டு
நடங்கொண்ட நற்சுயம்பின் நற்பணி குருக்கள் வந்தார்;
அடங்கொண்ட வலியால் வாடும் அணங்கிற்குத்
தீர்த்தம் தந்தார்;
ஆர்த்திட மணிகள் ஆங்கே அடியவர் வியந்து நிற்க
தீர்த்தத்தை அருந்த அந்த தீவினை வலியும் நின்று
சேர்ந்தவோர் அமைதியோடு சேயிழை எழுந்து
நின்றாள்
தீர்ந்தது நோய் என்று திண்ணமாய் நம்பினாரே.

இதுபோன்ற பல சம்பவங்கள் இத்தலத்தில் நடைபெற்று வருகின்றன. கைதேர்ந்த வைத்தியர்களால் கைவிடப்பட்ட பிணியாளர்களின் உபாதைகளை நீக்கும் நல்மருத்துவனாக உவரியூர் சுயம்பு லிங்கஸ்வாமி திகழ்கிறார்.

இத்தலத்தில் மூன்று புனிதத் தீர்த்தங்கள் உள்ளன. ஆலயத்திற்கு மிகு அருகாமையிலுள்ள கடல் முதலாவது தீர்த்தம். அதன் பெயர் சிவதீர்த்தமாகும். ஆலயத்திலுள்ள கிணறு இரண்டாவது தீர்த்தமாகும். சக்தி தீர்த்தமென இதனை அழைப்பர். இங்குள்ள தெப்பக்குளமே மூன்றாவது தீர்த்தம். மதுரை மன்னனின் இளவலான மாறன் என்பவன் காமவசப்பட்டு ஒரு பார்ப்பனப் பெண்ணின் கையை அவளது விருப்பத்திற்கு மாறாகத் தீண்டினான். அப்பெண் அளித்த சாபத்தால் அவனது கைகள் செயலிழந்தன. அரண்மனை மருத்துவர்களால் இப்பிணியைத் தீர்க்க முடியவில்லை. மதுரை

சொக்க நாதரிடம் இளவரசன் முறையிட்டுப் புலம்பி னான். மதுரையம்பதியில் வீற்றிருக்கும் சோம சுந்தரரின் ஆக்ஞையின் பேரில் மாறன் உவரித் தலத்தை யடைந்தான். சிவதீர்த்தத்தில் நீராடிச் சுயம்புலிங்க சுவாமியைத் தொழுதான். அவனது கைகள் மீண்டும் செயல்படத் துவங்கின.

இத்தகைய பெருமைகளையுடைய சுயம்புலிங்க ஸ்வாமி எழுந்தருளியுள்ள ஆலயமோ அளவில் சிறியது. பேருந்து நிறுத்தத்தில் இறங்கியவுடன் கோவிலுக்கு வழிகாட்டும் பெரிய பெயர்ப் பலகையைக் காணலாம். கடற்கரைக்கு மிக அருகில் ஆலயம் அமைந்துள்ளது. நீண்டுயர்ந்த கோபுரங்களோ அல்லது அழகிய விமானங் களோ இக்கோயிலில் இல்லை. கலாரசிகர்கள் கண்டு மகிழும் சிற்பங்களும் இங்கு இல்லை. கோயிலுக்கு வெளியே யாத்திரீகர்கள் இளைப்பாற ஒரு சில மண்டபங்கள் உள்ளன. நுழைவு வாயிலையடுத்து மகா மண்டபமும், அர்த்தமண்டபமும் உள்ளன. கருவறை யில் மூலவர் சுயம்புலிங்கஸ்வாமியைக் கண்டு கை கூப்பி வணங்கலாம். அருகில் சுப்பிரமணியர், விநாயகர் ஆகியோரின் உற்சவத் திருமேனிகள் உள்ளன. இவை தவிர இக்கோயிலில் வேறு சந்நிதிகளோ, தெய்வத் திருவுருவங்களோ இல்லை; இக்கோயிலில் அம்மன் சந்நிதியும் இல்லை. கருவறையைச் சுற்றி வலம் வருவ தற்குத் திருச்சுற்று உள்ளது. இவ்வாலயத்தின் பரப்பு 0.20 ஏக்கர்.

சுயம்புலிங்கஸ்வாமி கோயில் சுமார் நானூறு ஆண்டு களுக்கு முன்பு தோன்றியது. ஆலயத்திற்குச் சொந்த மாக சொற்ப அளவில் நிலங்களும், தென்னந்தோப்பு களும் உள்ளன. ஒரு பழைய புள்ளி விவரப்படி இங்கு 10000 ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்கள் உள்ளன. இரண்டு சப்பரங்களும், ஒரு பல்லக்கு, இந்திர விமானம், புஷ்பகவிமானம், ரிஷபம் போன்ற சில மரவாகனங்களும்

இங்கு உள்ளன. கோயிலில் தினமும் நான்கு கால வழிபாடு நிகழும். காலை 6 முதல் நண்பகல் 12 வரையி லும், மாலை 4 முதல் இரவு 8 வரையிலும் சந்நிதி தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். வைகாசி விசாகம், நவராத்திரி, கார்த்திகைதீபம், திருவாதிரை ஆகிய சில விழாக்கள் இங்கு கொண்டாடப்படுகின்றன. சிறந்த பிரார்த்தனைத் தலமாக இருப்பதால் இங்கு அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிந்து சுயம்புலிங்க சுவாமியின் அருளைப்பெறுகின்றனர்.

விளைநிலமிட்ட வித்து விரிந்துமே பெருகுமாப் போல்
விளையுமே பலமடங்காய் வியன் சுயம்பானார் தொண்டு
தளைகளைத் தவிர்க்கவேண்டில் தற்பரன் உவரியூரில்
திளைத்துமே தொண்டு செய்து திருவடிச் சாரப்போவீர்

(உவரியூர்த் தலபுராணம்: ஆசிரியர். கவிஞர் சா. வேலப்பன்)

பாகனேரி

புல்வாய் நாயகியம்மன் திருக்கோயில்

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய ஐந்து தொழில்களைப்புரியச் சகளரூபம் கொண்ட சிவபெருமான் தன் கண்களைத் திறக்கும் போது உலகம் தோன்றும்; விழித்திருக்கும்போது நிலைத்திருக்கும்; மூடும்போது அழிவுறும். இந்த உண்மையைப் பரிசோதிக்கும் பொருட்டு அன்னை பார்வதிதேவி ஈசனின் கண்களைத் தனது கைகளால் மூடினார். இதனால் உலகம் இருளில் மூழ்கியது. உலகத்தை இருளில் மூழ்கச் செய்த உமையைக் கரிய நிறம் கொண்ட காளியாக மாறுமாறு ஈசன் சபித்தார். உலகில் நல்லோர்களுக்குத் தொல்லைகள் பல அளித்து வந்த சண்டாசுரனை வதம் செய்தவுடன் சாப விமோசனம் கிடைக்கும் என்றும் ஈசன் அருளினார். ஆண்களால் அழிவில்லை என்ற வரம் பெற்றிருந்த சண்டாசுரன் தேவியுடன் போர்புரிந்த பல தலங்கள் தென்பாண்டி நாட்டில் உள்ளன. சண்டாசுரன் எருமைவடிவுடைய மகிஷாசுரனாகவும், வேறு பல வடிவங்களிலும் வெவ்வேறு இடங்களில் தோன்றினான். அம்மனும் அதற்கேற்ப மாற்று உருவெடுத்து அவனை அழித்தாள். புல் உருவில் அசுரன் படர்ந்து கிடந்தான். தேவி மான் வடிவம் எடுத்து அப்புல் முழுவதையும் உண்டு அசுரனை ஒடுக்கினாள். பின்னர் புல்வாய் நாயகி என்ற பெயருடன் கோயிலில் எழுந்தருளினாள். இவ்வாறு புல்வாய் நாயகியாக அம்மன் கோலம் கொண்டுள்ள தலமே பாகனேரி. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், சிவகங்கைக்குத் தென்மேற்கே 15 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

சிவகங்கை-திருப்பத்தூர் நெடுஞ்சாலையிலுள்ள மதகுப்பட்டி என்ற ஊரிலிருந்து கல்லல் என்ற ஊருக்குச் செல்லும் பாதையில் இப்பதி உள்ளது. மதுரை, காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, கல்லல் ஆகிய ஊர்களிலிருந்து பாகனேரி செல்லப் பேருந்துகள் உள்ளன.

ஊருக்குக் கீழ்ப்புறமாக, வயல்கள் இருமருங்கும் சூழ, புல்வாய்நாயகியம்மன் கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் முன்புறத்தில் தென்னை, வேம்பு, ஆல், வில்வம் போன்ற மரங்களால் சூழப்பெற்ற தெப்பக்குளம் உள்ளது. ஆரம்பத்தில் கண்டனூர் வெள்ளையன் செட்டியார் குடும்பத்தினரால் சிறு கோயிலாக இங்கு கட்டப்பட்டது. காலப்போக்கில் கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம், திருச்சுற்று மதில், அலங்கார மண்டபம் ஆகிய பகுதிகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டப்பட்டன. இன்று இதன் பரப்பு 0.16 ஏக்கராகும். ஆலயத்திற்கு வெளியே வலப்புறத்தில் அருள்மிகு காய்ந்தவ கால கணபதியின் திருவுருவம் உள்ளது. மழை பெய்யாது போது இத்திருவுருவத்தின் மூக்கு வரையில் தண்ணீரை நிரப்பிவிடுவர். இவ்வாறு நீரில் முழுக் காட்டினால் மழை நன்கு பொழியும் என்று நம்புகின்றனர். மழை பெய்த பின்னரே விநாயகரைச் சுற்றியுள்ள நீர் அகற்றப்படும். தை மாதத்தில் தைலக் காப்பு உற்சவம் நடத்துவதற்காக நா. நா. நாச்சியப்பன் செட்டியார் கட்டிய மண்டபம் விநாயகர் உருவத்திற்கு மறுபக்கத்தில் உள்ளது.

ஆலயமுகப்பிலுள்ள ஐந்து நிலை கோபுரம் பச்சை வண்ணம் அடிக்கப்பட்டுள்ளது. முன்மண்டபத்தில் கொடிமரம், பலிபீடம், வேதாள வாகனம் ஆகிய மூன்றும் உள்ளன. வேதாளத்திற்கு மேல் உள்ள மேற் கூரைப்பாவு கல்லில் காலத்தை (நேரம்) அறிவதற்காக ஒருதுளை போடப்பட்டது. சூரியன் உச்சிக்கு வந்து பலிபீடத்தில் நிழல்விழுந்தால் பகல் ஒரு மணி என்று

கணக்கிடுவர். கடிகாரம் இல்லாத காலத்தில் காலக் கணிப்புக்காக இதனை அமைத்தனர்.

பிரகாரத்தை வலம் வரும்போது முத்து விநாயகர் கிழக்கே அமர்ந்தவாறு அருள்பாலிப்பதைக் காணலாம். இதனை அடுத்து நெய்க்கொட்டை மரம், குங்குமக் காப்போடு கூடிய பீடம் ஆகியன உள்ளன. கண்டனூர், ஆத்தங்குடி, முத்துப்பட்டினம், காரைக்குடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்கள் இப்பீடத்தை அக்கினி நாச்சியார் என்று பெயரிட்டு உள்ளன்போடு வழிபடுகின்றனர். உள்ளூர் மக்கள் இவரை நாச்சியாத் தாள் என்றே அழைக்கின்றனர். அக்கினி ஆத்தாளான இத்தெய்வத்திற்கு ஆண்டுதோறும் அக்கினிச்சட்டிப் பிரார்த்தனை வழிபாடு நடைபெற்று வந்தது. கண்டனூரைச் சேர்ந்த மக்கள் முன்னின்று இவ்வழி பாட்டை நடத்தி வந்தனர்.

வடக்குப் பிரகாரத்தில் முனீஸ்வரரின் சந்நிதி உள்ளது. பலிபீடத்தின் வலப்புறத்தில் கருவறைகள் உள்ளன. முதல் அறையில் புல்வாய்நாயகி, விநாயகர், அஸ்திரதேவர், சீவிலிஅம்மன், அக்னி ஆகிய திருவிழாப் படிமங்கள் உள்ளன. புல்வாய் நாயகியின் உற்சவர் விக்கிரகம் ஐம்பொன்னால் ஆனது; நான்கு கரங்களை உடையது. இரண்டாம் அறையில் உள்ள சாமுண்டேஸ் வரியின் உருவம் திருவிழாவின் எட்டாம் நாளன்று உலா எடுத்துச் செல்லப்படும். மூன்றாவது அறையில் பைரவரின் உருவத்தைக் காணலாம். இவ்வறைகளுக்கு வெளியேயுள்ள தூண்களில் அகஸ்தியர், புலஸ்தியர், விநாயகர், ஆஞ்சநேயர் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன.

கருவறையில் புல்வாய்நாயகியம்மன் அஷ்டபுஜங் களுடன், அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். புல்வாய்நாயகி என்ற தமிழ்ச்சொல்லுக்கு மான் என்று பெயர். புல்லாகத்தோன்றிய மகிஷாசுரனை மான்

வடிவில் அழித்ததால் இப்பெயர் ஏற்பட்டது. இவருக்கு மழுவேந்தி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. முற்காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்டு வந்த அரசரிடமிருந்த ஒரு பதக்கம் களவு போய்விட்டது. அம்பிகையின் சந்நிதியில் பழுக்கக் காய்ச்சிய மழுவை நாவிலேந்திய சில வைராவிகள் இக்களவைப் புரிந்தவரைக் கண்டுபிடித்தனர். அம்மனும் இராமநாதபுர அரசர் கனவில் தோன்றி உண்மையான திருடனையும், அவன் திருடிய பொருள் ஒளித்து வைக்கப்பட்ட இடத்தையும் கூறினாராம். மன்னர் அப்பதக்கத்தைப்புல்வாய் நாயகிக்கே காணிக்கையாக அளித்துவிட்டாராம். அப்பதக்கம் அம்மனின் அலங்காரத்தில் இன்றும் பயன்படுத்தப்படுவதாகக் கூறுகிறார்கள்.

ஆலயத்திற்கு வெளியேயுள்ள அரசமரத்தடியில் நான்கு கற்கள் உள்ளன. இவை ஒரு அற்புதமான சம்பவத்தை நினைவூட்டுகின்றன. நாவில் மழுவைத் தீண்டியவாறு உண்மைக்குற்றவாளியைக் கண்டுபிடித்த வைராவிகள் ஒரு நிரபராதியை அனுப்பி அவரையே குற்றவாளி என்று தவறான செய்தியை அளித்தனராம். பாகனேரியைச் சார்ந்த நகரத்தார் இதனையடுந்து ஒரு விசாரணை நடத்தினர். மன்னருக்குத் தவறான தகவல் அளித்து நிரபராதியைக் குற்றவாளியாக்க முனைந்தவர்களுக்கு மரணதண்டனை அளித்தனர். அவர்கள் இறந்த இடத்தில் இக்கற்கள் நடப்பட்டனவாம். புல்வாய் நாயகியின் நீதி பரிபாலனத்தை நிலைநாட்டும் சின்னங்களாக இவை திகழ்கின்றன. நல்லவர்களுக்குக் கேடு விளைவிக்க முயலும் எத்தர்களுக்கு இவை எச்சரிக்கை விடுக்கின்றன,

இக்கோயில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முற்பட்டதாம். நகரத்தார் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்து 1944ம் ஆண்டில் குடமுழுக்கு நடத்தினர். திரு. கரு. வே. வேலாயுதம் செட்டியார் முன் மண்டபத்

தில் தளவரிசை போட வழி செய்தார், திரு. மு. முத்தையா, திரு. து. அள. அழகர்சாமி நாயக்கர் ஆகியோர் கோபுரத்தைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தனர். நகரத்தார் முயற்சியில் தெற்கு நோக்கிய குடவரை வாயில், சுற்றுப் பிரகாரத்திலுள்ள தளவரிசை ஆகியன நிறைவேறின. நா. கண. கண்ணம்மை, காசு, ப. ழ. தே. சீதை ஆகியோரின் முயற்சியால் ஆலயத்தில் மின் விளக்கும், அலங்கார மின் தொடர் விளக்குகளும் போடப்பட்டன. அரு. கரு. வே. தெய்வானை ஆச்சி கருவறையிலுள்ள நட்சத்திர விளக்கை அமைத்தார். திரு. மு. இராமநாதன் இராஜகோபுரத்தில் மெர்க்குரி விளக்கு பொருத்தினார். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு நடைபெற்றது.

இங்கு உவச்சர் குலத்தினரால் நாள்தோறும் 5 கால வழிபாடு நடைபெறுகிறது. சிவகங்கை சமஸ்தானத்தினரின் மேற்பார்வையில் இயங்கிவரும் இவ்வாலயத்தில் பாகனேரி நாட்டார், நகரத்தார் ஆகியோர் பெரும் பங்கு ஏற்று வருகின்றனர். இங்கு நவராத்திரி, கார்த்திகை, தைலக்காப்பு ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் வேதாளக்கொடி ஏற்றிக் காப்பு கட்டி அம்மனுக்குக் கேட்டை நட்சத்திரத்தில் 10 நாள் திருவிழா நடைபெறுகிறது. இதில் நடைபெறும் தேரோட்டம் சிறப்பான நிகழ்ச்சியாகும். முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட தேர் மிகவும் பழுதடைந்திருந்தது. 1970ம் ஆண்டில் சிவகங்கை மன்னர் கார்த்திகேய வெங்கடாஜலபதி ராஜாவின் ஆசியுடன் புதிய திருத்தேர் திருப்பணி துவங்கியது. தேர் உருவாவதில் திரு. அரு. கி. கிருஷ்ணன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். 8.2.1973 அன்று (பரிதாபி ஆண்டு தை 20ம் நாள்) தேர் வெள்ளோட்டம் கண்டது. சுமார் 2 இலட்சம் ரூபாய் செலவில் தயாரான இத்தேர் பேரழகு மிக்கது.

பல்லக்கு, பூதம், குதிரை போன்ற மர வாகனங்களும் இங்கு உள்ளன. ஆலயத்திற்குச் சொந்தமாக 11.63 ஏக்கர் நிலமும், சுமார் 60,000/- ரூபாய் பெறுமான முள்ள ஆபரணங்களும் உள்ளதாக ஒரு பழைய பதிவேடு கூறுகிறது.

முற்காலத்தில் இக்கோயில் ஒரு தனி நீதிமன்றமாக விளங்கியதாக இராமநாதபுரம் மாவட்ட கெஜட்டியர் செப்புகிறது. பல ஆண்டுகளாக அரசாங்க நீதிமன்றங் களுக்குச் செல்லாமல் இக்கோவிலிலேயே அனைத்து வழக்குகளையும் தீர விசாரித்து உரிய தண்டனைகளை இக்கிராமத்தார் வழங்கி வந்தனராம்.

இராமநாதபுர வட்டாரத்தில் திருவெற்றியூர் பாகம்பிரியாள் ஆலயம், கொல்லங்குடி பத்ரகாளி யம்மன் கோயில், நாட்டரசன் கோட்டை கண்ணாத்தாள் கோயில், பாகனேரி புல்வாய் நாயகி யம்மன் கோயில் ஆகியன பிரசித்தி பெற்ற அம்மன் கோயில்களாகும். ''விரும்பி வழிபடுபவர்கள் உள்ளக் கிடங்கைப் பூர்த்தி செய்யும் தேவி, நளினாக்ஷி; நாம சங்கீர்த்தன விதாயினி: முத்தேவரும் முத்தொழி லாற்றிட முன்னின்றருளும் முதல்வி; வேதாந்த நிவாசினி; காணக்கிடைக்காத கதியானவள்; கருதாக் கிடையாக் கலையானவள்; பூணக்கிடையாப் பொலிவானவள்; புனையக்கிடையாப் புதுமையானவள்; இத்தகைய குணமுடைய புல்வாய் நாயகி இவ்வட்டாரத்தில் மிக்க பக்தியுடன் ஆராதிக்கப்பட்டு வருகிறாள். நாடி வருவோரின் துயர்களை நீக்கும் வரப்பிரசாதியாகத் திகழ்கிறாள். இந்த அன்னையின் மீது தற்காலக் கவிஞர் பலர் பாடல்களைப் புனைந் துள்ளனர். மிதிலைப் பட்டிக் குழந்தைக் கவிராயர் (18-19 நூற்றாண்டு) என்பார் புல்வாய் நாயகிக்குப் புகழ் அஞ்சலி பாடுகிறார்.

நண்பாகத் தீராத வல்வழக்குத் தேறாக்களவு கன்னம்
பேரான எல்லைப்பிசகுமுதல் ஆராய்ந்து

சுத்தன் அசுத்தன் என்று சோதனையாய் நாக்குமழு
வைத்தோதக் கற்பித்த வல்லமைகள் - அத்தனையும்
தென்பாகை நாட்டில் சிறந்த புல்வாய் மாதென்றே
அன்பாகச் சொல்ல அவதரித்தாய்.

செட்டிநாட்டுக் கோயில்கள் மீது பதிகங்கள் பல பாடிய முத்தப்ப செட்டியார் (1810-83) என்பாரும் புல்வாய் நாயகியையும் அவர் எழுந்தருளியுள்ள திருத்தலத்தையும் போற்றிப்பாடியுள்ளார்.

பாகனேரியில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய சாமு அய்யர் புல்வாய் நாயகி மீது பாடிய பாடல் பாகனேரி வட்டாரத்தில் பிரபலமாகிப் புல்வாய்நாயகி அம்மன் ஆலயத்தில் தினமும் பாடப்படும் பேறு பெற்றது. இப்பாடல் பாகனேரி தலத்தையும், அதிலுள்ள அனைத்து தெய்வங்களையும் ஒரு சேரப் போற்றுகிறது.

பாகனேரி என்ற பெயர் குறித்துப்பல கருத்துக்கள் உள்ளன. முன்னொருநாள் இப்பகுதியில் மதம் பிடித்த யானை ஒன்று மக்களைத் துன்புறுத்தியதாகவும் அதனை ஒரு யானைப்பாகன் கடும் முயற்சிக்குப்பின் அடக்கியதாகவும் கூறுவர். இதனால் பாகனேரி என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஒரு கருத்து உள்ளது. உமா மகேஸ்வரராகக் காட்சியளிக்கும் சிவபெருமானை மங்கைபாகன் என்று அழைப்பது உண்டு. உமையொரு பாகனான சிவபெருமான் விரும்பி உறையும் நீர்வளமிக்க ஊரானதால் அது பாகனேரி என்று பெயர் பெற்றதாக ஒரு சாரார் கருதுகின்றனர். ஏரியைப்போலவே விரிந்து, பரந்த உள்ளத்தை உடையவர்கள் வாழ்கின்ற ஊராகையால் பாகனேரி என்று பெயர் பெற்றதாக மற்றொரு கருத்தும் உள்ளது. நாட்டாரும், நகரத்தாரும் பாகம் பிரித்துக் கொண்டதால் பாகனேரி என்று பெயர் நிலைத்ததாகப் பேராசிரியர் வெ. இராமநாதன் இயம்புகிறார்; இவ்வூர் பாகன் ஏரி எனப்பெயர் பெற்று,

அதுவே நாளடைவில் பாகனேரியாக மருவியதாகவும் ஒரு சாரார் கருத்துத் தெரிவித்துள்ளனர். தற்காலக் கவிஞர்களின் இலக்கியப் பாடல்களில் பாகை, தென் பாகை, தென்பாகை நாடு, பாகை நகர், பாகை நகரம் என்றெல்லாம் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

புல்வாய் நாயகி ஆலயத்திற்கு அருகேயுள்ள சிவாலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்கோயிலில் மூலவர் நீலகண்டேஸ்வரர் என்றும் அம்மன் கருணைக் கடாக்ஷி என்றும் பெயர் கொண்டுள்ளனர். இக்கோயிலின் பரப்பு 0.38 ஏக்கர். இங்கு நான்கு கால வழிபாடு நடைபெறுகிறது. கந்த சஷ்டி, நவராத்திரி, திருவாதிரை, கார்த்திகை, மாசிமகம் ஆகிய விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. இக்கோயிலில் வெள்ளி ரிஷபம், மயில், கேடயம், சூரன், பெருச்சாளி ஆகிய மர வாகனங்கள் உள்ளன.

திருமால் குடிகொண்டுள்ள விண்ணவண்ணப் பெருமாள் கோயிலும் இவ்வூரில் உள்ளது. நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வாலயம் சுமார் 0.22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்கு நாள்தோறும் 4 கால வழிபாடு நிகழ்கிறது. ஸ்ரீஜெயந்தி, நவராத்திரி போன்ற விழாக்களும் கொண்டாடப்படு கின்றன. இங்கு திருமால் விண்ணவண்ணப்பெருமாள் என்றும், அம்மன் தாயாரம்மாள் என்றும் பெயர் பெற்றுள்ளனர். இவை தவிர நாயனார் கோயிலும், விநாயகர் கோயில்களும் இவ்வூரில் உள்ளன.

திருப்புனவாயில்

விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்

பாண்டி நாட்டிலுள்ள பாடல்பெற்ற சிவத் தலங்களுள் திருப்புனவாயிலும் ஒன்று; இங்குள்ள விருத்த புரீஸ்வரர் கோயிலில் ஒன்பது அடி உயரமும், முப்பது அடி சுற்றளவும் உள்ள லிங்கம் (மூலவர்) உண்டு. தஞ்சைபெரிய கோயிலிலுள்ள பிரகதீஸ்வரரை அடுத்துத் தமிழகத்திலுள்ள மிகப்பெரிய லிங்கம் இதுவேயாகும். இந்த லிங்கத்தைச் சுற்றி அணிவதற்கு மூன்று முழம் துணியும், கீழுள்ள ஆவுடையாரைச் சுற்றி அணிய முப்பது முழம் துணியும் தேவைப்படும். இதனால் ''மூன்று முழமும் ஒரு சுற்று; முப்பது முழமும் ஒரு சுற்று'' என்ற பழமொழி எழுந்தது; இத்தகைய சிறப்புடைய திருத்தலமான திருப்புனவாயில் புதுக் கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. புதுக் கோட்டை, அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களிலிருந்து இவ்வூருக்குப்பேருந்துகள் உள்ளன. இராமநாதபுரம், காரைக்குடி, ஆகிய இடங்களிலிருந்து ஓரியூர் என்ற ஊர் வரை பேருந்துகளில் சென்று அங்கிருந்து ஒன்றரை கிலோமீட்டர் நடந்து சென்றும் இவ்வூரை அடையலாம்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் எழுப்பப்பட்ட பிரம்மாண்டமான ஆலயங்களில் விமானம் உயரமாகவும், இராஜகோபுரம் சிறியதாகவும் இருப்பதைக் காணலாம். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், திருபுவனம், தாராசுரம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் உயர்ந்த விமானங்களைப் பெற்றுள்ளன. பிற்காலப் பாண்டியர்களின் காலங்களில் மிகவும்

உயரமான கோபுரங்கள் கட்டப்பட்டன. திருப்புனவாயிலிலுள்ள ஆலயம் இதற்கு விதிவிலக்கு. இங்குள்ள விமானம் 60 அடி உயரம் உடையது; அதன் அடிப்பாகம் 47 அடி அகலமும், 53 அடி உயரமும் பெற்றுள்ளது. இத்தலத்தின் தனிச் சிறப்புகளில் இதுவும் குறிப்பிடத்தக்கது.

சிவபெருமான் கோயில் கொண்டுள்ள தலங்களைப் பசுவிற்கும், பாண்டி நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவப்பதிகள் பதினான்கையும் அதன் பாலுக்கும் ஒப்பிடுவர். அப்பாலிலுள்ள நெய் போலத் திருப்புனவாயில் விளங்குகிறதாம். இந்தப் பதினான்கு தலங்களிலும் இடம் பெற்றுள்ள லிங்கங்கள் அனைத்தும் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளதாகக் கூறுவர். திருஞானசம்பந்தரின் அருளால் கூன் நிமிரப் பெற்ற மாறவர்மன் சுந்தரபாண்டியன் அப்பெருமானின் விருப்பப்படியே மற்ற பதின்மூன்று தலங்களிலிருந்த லிங்கங்களை இங்கு பிரதிஷ்டை செய்தானாம். சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்திலுள்ள,

"திருப்புனவாயிற் பதியிலமர்ந்த சிவனார் மகிழும் விருப்
புடைய கோயில் பல பணிந்தருளான் மேவினார்"

(சேரமான் பெருமாள் நாயனார் புராணம்) என்ற பாடலே இவ்வுண்மைக்குச் சான்றாகும். அம்மன்னனின் பெயரால் தோன்றிய சுந்தர பாண்டிய பட்டினம் என்ற ஊர் திருப்புனவாயிலிலிருந்து ஒரு கல் தொலைவிலுள்ளது.

திருப்புனவாயிலிலுள்ள விருத்தபுரீஸ்வர ஸ்வாமி கோயில் 2.83 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அறுபத்து ஐந்து அடி உயரமுடைய ஐந்து நிலை இராஜகோபுரமும், ஓங்கி உயர்ந்துள்ள மதிற்சுவர்களும் இக்கோயிலுக்குப் பொலிவூட்டுகின்றன.

இங்கு ஒரு பிரகாரம் மட்டுமே உள்ளது. நந்தி, பலிபீடம் ஆகியவற்றைக் கடந்து மகாமண்டபத்தை அடையலாம். அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் விருத்தபுரீசர் அல்லது பழம்பதிநாதர் இலிங்க வடிவில் அருளாட்சி புரிகிறார். மூலவர் 9 அடி உயரமும், 8½ அடி சுற்றளவும் உடையவர். லிங்கத்திற்குக் கீழுள்ள ஆவுடையார் இரண்டு பெருங்கற்களால் இணைக்கப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு, ஆலயத்திருப்பணிகள் நடைபெறுகையில் இந்த லிங்கத்தின் அடிப்பாகத்தைத் தோண்டியபோது அதன் முடிவு தெரியவில்லையாம்.

பூமேவு திருமாலுந் திசைமுகனுமறியாப்
புண்ணியனை யகண்டபரி பூரணசிற்பரனை
மாமேவு மருவாகி யருவுருவா யுருவாய்
வரத்துதிக்கும் பவழடியார் மனத்துக்குஞ்சிவனை
நாமேவுஞ் சுருதிமுறை நடக்குமுயிர் பரமா
னந்தமுற வைந்தொழிலா னடனமிடுந் தேவைப்
பாமேவுந் தமிழ்மணக்க மணக்கு மலர்ச்சோலைப்
பழம்பதிநாதனை நினைந்து பணிந்து புகழ்ந்திடுவோம்

மூலவர் சந்நிதிக்கு வடபுறத்திலுள்ள தனிக்கோயிலில் பெரியநாயகி அம்மன் கோலம் கொண்டுள்ளார். இந்த அம்மனுக்கு பிரகந்நாயகி, கச்சணி முலையம்மை ஆகிய திருநாமங்களும் உள்ளன.

அச்சென விருந்தயோக வந்தென ரகத்து திக்குஞ்
சச்சிதானந்த ரூபதற்பரம் பொருளாலாதி
முச்செயல் புரிந்து பின்னாத் தகைந்துமேன் முத்திநல்குங்
கச்சணி களபக் கொங்கைக் கௌரியை வணக்கம்
செய்வாம்

இச்சந்நிதிக்கு நேர்ப்புறம் உள்ள மொட்டை கோபுரத்தின் அருகேயுள்ள ஒரு குடவறையில் காளியம்மன் இடம் பெற்றுள்ளார். சிறந்த வரப்

பிரசாதியான காளியம்மனின் சந்நிதிக்கு வெள்ளி, செவ்வாய் ஆகிய தினங்களில் ஏராளமான பக்தர்கள் வருவதுண்டு. இங்கு ஒரு திரிசூலம் மட்டும் உள்ளது. அச்சூலத்தின் மேல் கவசம் சாத்தி இவ்வுருவையே காளியம்மனாக மக்கள் வழிபடுகின்றனர். இந்த அம்மன் மீது மக்கள் பெருவிருப்பு கொண்டுள்ளதால் இந்த வட்டாரத்தில் காளியப்பன், காளியம்மாள் என்று குழந்தைகளுக்குப் பெயரிடுவது உண்டு.

இவ்வாலயத்திலுள்ள மகாமண்டபத்தில் ஆடவல்லான், சோமாஸ்கந்தர், சேக்கிழார், உற்சவர்கள் ஆகியோரின் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. கருவறைக்கு அருகே முருகப் பெருமானின் சந்நிதி உள்ளது. ஏனைய சிவாலயங்களில் கருவறையின் பின்புறச் சுவரிலுள்ள கோஷ்டத்தில் லிங்கோத்பவர் இடம் பெறுவது வழக்கம். லிங்கோத்பவரின் உருவம் இவ்வாலயத்தில் இடம் பெறவில்லை. பதிலாகச் சக்கரமேந்திய திருமால், ஆஞ்சநேயர் ஆகியோரின் உருவங்கள் உள்ளன; இதுவும் இக்கோயிலுக்குரிய தனிச் சிறப்பாகும். வடபுறத்திலுள்ள கோஷ்டத்தில் நான்முகன் தோன்றுகிறார்,

ஒன்பது கபிலபுத்திரர்களும், இரு ஆதி சைவ சிவனடியார்களும் இத்தலத்தில் தவமிருந்து பேறு பெற்றதால் அவர்களின் திருவுருவங்கள் ஆலயத்திலுள்ளன. மற்றும் வல்லபை கணபதி, சதுர்முகலிங்கம், தண்டபாணி, பைரவர், ஞாயிறு, திங்கள் போன்ற பரிவார தேவதைகளும் இடம் பெற்றுள்ளன, ஆலயத்தின் பல்வேறு பகுதிகளில் 5 விநாயகர்கள் இடம் பெற்றுள்ளனர். தென்புறக் கோஷ்டங்களில் தட்சிணாமூர்த்தி, நர்த்தன விநாயகர் ஆகியோரின் உருவங்கள் உள்ளன. இத்தலத்தில் மாதொருபாகன் அகத்தியருக்குக் காட்சியளித்தார். எனவே அகத்திய முனிவருக்குத் தனிக் கோயில் இங்குள்ளது. மேற்குப்

பகுதியிலுள்ள அகத்திய இலிங்கத்திற்குத் திங்கட்கிழமையன்று வழிபாடு உண்டு. இவரே 'பெரியநயினார்' எனவும் 'முனீஸ்வரர்' எனவும் அறியப் பெறுகிறார். இக்கோயிலிலுள்ள நடராஜரின் சந்நிதி 'சிவஞானசபை' எனப்படும்.

காஞ்சியில் அரசாண்ட விஜய அருணாஜலேந்திரன் எனும் மன்னனின் அன்புக் கட்டளையின் பேரில் திருவாரூர் தியாகராஜ கவிராஜ தேசிகர் என்பவர் திருப்புனவாயில் தல புராணத்தைச் செய்யுள் வடிவில் இயற்றினார். திருப்புனவாயிலின் சிறப்பைச் சூத முனிவர் நைமிசாரண்யத்திலுள்ள தவசிகளுக்கு எடுத்துக் கூறுவதாகத் தல புராணம் இயற்றப்பட்டுள்ளது. இவ்வூர், கிருதயுகத்தில் இந்திரபுரம் என்றும், திரேதா யுகத்தில் பிரமபுரம் எனவும், துவாபரயுகத்தில் பழம்பதி எனவும் அழைக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடலும் ''பக்தர் தாம் பலர் பாடி நின்றாடும் பழம்பதி'' என்று குறிப்பிடுகிறது. இப்பதிக்கு வேறு பத்து பெயர்களும் உள்ளன. அவ்வாறே நான்கு யுகங்களிலும் சதுரக்கள்ளி, குருந்தம், மகிழம், புன்னை ஆகிய நான்கும் இப்பதியில் தல விருட்சங்களாகத் திகழ்ந்தன. இன்று புன்னை மரம், மகிழமரம், குருந்தமரம் ஆகிய மூன்றும் கோயிலின் உட்பகுதிகளிலும், சதுரக்கள்ளி காளி சந்நிதிக்கு அருகிலும் அமைந்துள்ளன. இந்திர தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம் போன்ற பத்து தீர்த்தங்கள் இப்பதியிலுள்ளன.

கௌதம முனிவரின் சாபம் பெற்ற இந்திரன் திருப்புனவாயிலில் ஒரு குளம் அமைத்ததுடன் ஆண்டு தோறும் திருவிழா நடத்தவும் ஏற்பாடு செய்தான். தற்காலத்திலும் பிரம்மோற்சவத்தின் போது இந்திர விமானக் காட்சி நடைபெறுகிறது. இந்திரனால் பூசிக்கப்பட்ட விநாயகரும், ஆகண்டல விநாயகர் என்ற

பெயருடன் இக்கோயிலில் விளங்குகிறார்; (ஆகண்டலன்-இந்திரன்)

கார் கொண்ட னபங்குழற்கனை கொண்ட துணைவிழிக்
கமலை பணி விமலையம் பொன்
வார் கொண்ட கும்பமுலை மலைவல்லிபடர்பவள
வரை தந்த தந்தி வதனன்
சீர் கொண்ட தேவர் பணி மூவரும் பணிவிடைகள்
செய்யவரு டுய்ய புகழ்சேர்
பகர் கொண்ட தென்புனவை யாகண்டலப்பிள்ளை
பாதமுடி மீது புனைவாம்.

சிவத்துரோகம் புரிந்ததால் தனது படைப்புத் தொழிலையே மறந்த நான்முகனும் இப்பதியில் வழிபட்டுப் பேறுபெற்றார். வாயு, யமன், சூரியன், திரிபுர அரக்கர்கள், ஐராவதம், அங்காரகன், சந்திரன், வேதங்கள் ஆகியோரும் பழம்பதியிலுள்ள சிவபிரானைப் பூசித்துத் தங்களது குறைகள் நீங்கப் பெற்றனர். உமையன்னை வேடுவப் பெண்ணாகத் தோன்றித் தவமியற்றினாள். அவளே ''காளி'' என்றும் ''கௌரி'' என்றும் அழைக்கப் பெற்றாள். புலி வடிவில் இப்பகுதியில் திரிந்து கொண்டிருந்த அரக்கன் ஒருவன் காளியின் அருளால் ஞானம் பெற்றான்; சோமநந்தி என்ற பெயருடன் அவ்வரக்கனே காளியின் சந்நிதிக்குக் காவல் புரிகிறான். சிவபிரான் பதஞ்சலிக்குச் சிதம்பரத்தில் காட்சியளித்த நடராஜ கோலத்தை இங்கு அகத்தியர் காண விரும்பினார். ஈசன் நடராஜ கோலத்தில் இங்கு இருமுறை காட்சியளித்ததால் இக்கோயிலில் நடராஜரின் இரு உருவங்கள் உள்ளன. நதிவடிவில் ஆதிசேடன் சிவபிரானைப் பூசித்தான். அவ்வாறு உற்பத்தியான நதியே இன்று இவ்வூரின் எல்லையிலே ஓடும் பாம்பாறு ஆகும். 'எண்ணியவை எண்ணியாங்கு கைகூடும் பதி' எனச் சிறப்புடைய திருப்புனவாயிலில் வசிஷ்டாதிய முனிவர்களும் வழிபட்டனர்.

பழமையான இவ்வாலயத்தின் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதப்போதிய ஆதாரங்கள் இல்லை. 'முத்தூர்க்கூற்றம்' எனும் பிரிவில் இவ்வூர் அடங்கியிருந்ததாகக் கல்வெட்டுச் செய்தி ஒன்று கிடைத்துள்ளது. சங்க கால இலக்கிய நூலான புறநானூற்றிலுள்ள மாங்குடி மருதனாரின் பாடலொன்றில் நெல் வளம் நிறைந்த முத்தூர்க் கூற்றத்தை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ["குப்பை நெல்லின் முத்தூறு தந்த"] சங்க காலத்திலேயே இப்பகுதி சிறப்புடன் விளங்கியிருக்க வேண்டும். பல்லவர் காலத்தைச் சார்ந்த அப்பர், சம்பந்தர் ஆகியோர் திருப்புனவாயில் ஈசனை வழிபட்டுள்ளனர்.

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்த ஐந்து கல்வெட்டுக்கள் இக்கோயிலில் படியெடுக்கப்பட்டுள்ளன (612-616 — 1902) 1418ல் தோன்றிய திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியனின் கல்வெட்டின் மூலம் இக்கோயிலில் வழிபாடும், திருப்பணிகளும் நடைபெற அம்மன்னன் ஏற்பாடு செய்ததாக அறியலாம். சந்திரசூரியர் உள்ளவரை இவ்வாலயத்தில் வழிபாடு நடைபெறுவதற்கும், பஞ்சாரியத் தேவகன்மிகளுக்கும், ஸ்ரீமகேசுவரர்க்கும் கலியுகராமநல்லூர் எனும் கிராமம் தேவதானமாக அளிக்கப்பட்ட செய்தியைக் கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி வீர பாண்டியனின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது. கோச்சடையபன்மரான சுந்தரபாண்டியனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் ஏற்பட்ட கல்வெட்டின் மூலம் காலிங்கராயன் சந்நிதிக்குத் தானமாக அரையத்தூர் எனும் ஊரின் நான்கெல்லைக்குட்பட்ட நிலங்கள், நீர்நிலைகள் ஆகியன அளிக்கப்பட்டதாக அறியலாம். எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர

பாண்டியனின் கல்வெட்டு மூலம் ஐந்து மனைகளும், முப்பதுமா நிலமும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் தெரிகின்றன.

திருப்புனவாயில் ஆலயத்திற்குச் சொந்தமாக சுமார் 300 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களும், சில மனைகளும், வீடுகளும் உள்ளன, பல பக்தர்களால் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் நடைமுறையில் உள்ளன. தேவாரப் பாடசாலைக் கட்டளை, சர்க்கரைப் பொங்கல் கட்டளை, சந்தனாபிஷேகக் கட்டளை, திருப்பள்ளி எழுச்சிக் கட்டளை ஆகியன இதில் அடங்கும். இங்குள்ள ஆபரணங்களுள் சுவாமிக்காகச் செய்யப்பட்டவெள்ளி நாகாபரணமும், உற்சவர்களுக்கான வெள்ளிக் கவசங்களும் குறிப்பிடத் தக்கனவாகும். மேலும் இரு பெரிய வெள்ளி ரிஷப வாகனங்களும், சுவாமிக்குப் பெரிய வைரத்தேரும், அம்மனுக்குச் சிறிய தேரும் இவ்வாலயத்தில் உள்ளன. காமிக ஆகம முறைப்படி தினமும் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. ஆலயத்தின் உட்பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு 31-5-1903 (சோபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் பதினெட்டாம் நாள்) குடமுழுக்கு நடைபெற்றது. அண்மையில் திருப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

திருஞான சம்பந்தரும், சுந்தர மூர்த்தி நாயனாரும் திருப்புனவாயில் மீது பதிகங்கள் பாடியுள்ளனர். திருப்புனவாயிலின் இயற்கை வனப்பை.

"நரல்சுரி சங்கொடும் இப்பியுந் திந்நலம் மல்கிய
பொருகடல் வெண்டிரை வந்தெறியும்புன வாயிலே"

எனவும்

"கண்டலும் ஞாழலும் நின்றுபெருங்கடற் கானல்வாய்ப்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந்த புன வாயில்"

என்றும் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார். திருப்புனவாயில் ஈசரை உள்ளன்போடு வழிபட்டால் தீராத வினைகளும் தீரும் என்று சுந்தரர் அருளுகிறார்

''பொடியாடு மேனியன் பொன்புனஞ் சூழ்புன வாயிலை
அடியா ரடியன் னாவல வூரனுரைத்தன
மடியாது கற்றிவை யேத்தவல் லார்வினை மாய்ந்து போய்
குடியாகப் பாடிநின் றாடல் லார்க்கில்லை குற்றமே''

திருநாவுக்கரசர் திருப்புனவாயிலில் பாடிய பதிகம் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் அவரது 'அடைவுத் திருத்தாண்டகத்தில்' ''மறிகடல் சூழ் புனவாயில்'' என்று குறிப்பிடுகிறார். சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் திருப்புனவாயில் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

சிவன்மலை

சிவாஜலபதி திருக்கோயில்

சமய உலகில் ஏழு என்ற எண் புண்ணியம் நிறைந்ததாகக் கருதப்பட்டது. இந்து மக்களுக்கு உரிய புனிதத் தலங்களைச் சப்தபுரி என அழைப்பர். அவையாவன: அயோத்தி, மதுரா, கயா, காசி, காஞ்சி, அவந்தி, உஜ்ஜெயினி. இவற்றுள் கயா, உஜ்ஜெயினி ஆகியவற்றிற்குப் பதிலாக பூரி, துவாரகை ஆகியவற்றை இணைத்து இந்த ஏழுதலங்களையும், முக்தியளிக்கும் தலங்களாகக் கருதுவர். இது போலவே திருவாரூரைச் சுற்றியமைந்துள்ள சப்த விடங்க ஸ்தலங்களும், திருவையாற்றைச் சுற்றியமைந்துள்ள சப்த ஸ்தானத் தலங்களும் இதே வரிசையில் கணக்கிடத் தக்கன. கொங்கு நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களைக் 'கொங்கேழ் தலங்கள்' என அழைப்பர். இது போலவே கொங்கு நாட்டிலுள்ள மலைப் பதிகளைக் கர்ண பரம்பரையாகக் ''கொங்கேழ் மலைகள்'' என்று குறிப்பிடுவது உண்டு. சிவன்மலை, சென்னிமலை, அரளி மலை, பழநிமலை, வெள்ளிமலை, வட்டமலை, கதித்த மலை ஆகிய ஏழு மலைகளும் இத்தொகுதியில் அடங்கும். இவற்றுள் சிவன்மலை என்ற தலம் காங்கேயம்-திருப்பூர் சாலையில், காங்கேயத்திலிருந்து சுமார் 5 கி.மி. தொலைவில் அமைந்துள்ளது. நெடுஞ்சாலையிலிருந்து சிவன்மலை கிராமம் வரை நகரப் பேருந்துகள் செல்கின்றன. மலையடிவாரத்திலிருந்து மலை மீது செல்ல ஆலயத்திற்குச் சொந்தமான பேருந்து விசேட நாட்களில் விடப்படும்.

ஊருக்குள் நுழையும் போது வண்ணச் சுதையுருவங்களுடன் கூடிய வளைவு ஆலயத்திற்கு வருமாறு வரவேற்கிறது. சிவன்மலை மிகவும் சிறிய குன்றாகவே காட்சியளிக்கிறது. மலை மீது ஏறிச் செல்லப் பாங்கான படிக்கட்டுகளும், வழியில் இளைப்பாறச்சில மண்டபங்களும் உள்ளன. மலையில் சிறிது தொலைவு சென்றவுடன் பால விநாயகர் காட்சியளிக்கிறார். அவரைச் கடந்து சென்றவுடன் இடும்பனைக் கண்டு தொழுதவாறு மலைமீது ஏறிச் செல்லலாம். மலை உச்சியிலிருந்து இவ்வூரைச் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசிக்கலாம். சிங்கங்கள் காலடியில் நிற்க, மிகவும் கம்பீரமான தோற்றத்தையுடைய துவார பாலகர்கள் நுழைவாயிலில் அனுமதியளிக்கின்றனர். அவர்களைக் கடந்து மூல ஸ்தானத்தையடைந்து மூலவரான முருகப்பெருமானை வழிபடலாம். மூலவரின் திருநாமம் சிவாஜலபதி எனப்படும். இவர் சிவாசல வேந்தன், சிவன்மலைக் காங்கேயன், சிவாஜலத்திற் கந்தவேள். சிவாஜல விசாகர், சிவசயில முத்தையன், சிவ்மாமலைக் கந்தஸ்வாமி, சிவசைலக் குமரர், சிவன்மாமலை வேலன், சிவாத்திரிச் சண்முகர், சிவாத்திரி இறைவன், சிவமலை வேள், சிவமலைக்குகன், சிவசுப்பிரமணியர், துரைசாமி, மரகதமயூரன், வள்ளிமணாளன், காங்கேயன் என்ற பல்வேறு பெயர்களால் சிவன்மலையோடு இணைத்தும், தனியாகவும் அழைக்கப்படுவார். இவரது திருவுருவம் சுமார் மூன்றடி உயரமிருக்கும். சதுர் புஜங்களுடன் காட்சியளிக்கும் கந்தப் பெருமானின் வடிவம் எழிலுடன் கூடியது. அருகில் வள்ளியம்மையாரின் திருவுருவமும் இடம் பெற்றுள்ளது. கந்தவேளின் வாகனமான மயிலின் தலை இடப்பாகத்தை நோக்கியவாறு உள்ள கோயில்கள் அபூர்வம். அத்தகைய தலங்களுள் சிவன்மலையும் ஒன்று. இடதுபாகத்தேயுள்ள மற்றொரு சந்நிதியில் வள்ளி, தெய்வயானை ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சிவாசலப் பெருமான் இங்கு எழுந்தருளியுள்ள வரலாறு சுவைமிக்கது. சிவன்மலைக்கு அருகேயுள்ள பட்டாலியூர் என்ற சிற்றூர் வேட்டுவ அரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவ்வேட்டுவர்களின் கண்காணிப்பிலிருந்த வள்ளியை முருகப்பிரான் சிறையெடுத்து வள்ளியுடன் இம்மலையில் எழுந்தருளியுள்ளதாக ஐதிகம் உள்ளது. இதனால் கருவறையில் முருகப் பெருமானுடன் வள்ளியும் சேர்ந்து காட்சியளிக்கின்றார். இக்கோயிலில் இராஜகோபுரம் இல்லை. மூலவரின் கருவறை மீது சிறிய விமானம் மட்டும் உள்ளது. இறைவன், தேவர்கள் ஆகியோரின் திருவுருவங்கள் இந்த விமானத்தை அலங்கரிக்கின்றன. வெளிப் பிரகாரத்தை வலம்வரும் போது தல விருக்ஷமான தொட்டிமரத்தைக் காணலாம். பிரகாரத்திலுள்ள சந்நிதியில் நஞ்சுண்டேஸ்வரர் லிங்க வடிவில் இடம் பெற்றுள்ளார். அருகே பர்வதவர்த்தினி அம்மனையும் காணலாம். ஜுரகண்டேஸ்வரர், தேவசேனாதிபதியின் சேனையில் முக்கிய பங்கு வகித்த நவவீரர்கள் ஆகியோரையும் இவ்விடத்தில் காணலாம்.

அம்பலவாணக் கவிராயர் இயற்றிய தலபுராணத்தில் பட்டாலியூர் என்ற பெயர்க் காரணம் பற்றிய செய்தி உள்ளது. இறந்தவர்கள் உயிர் பெற்று வந்ததால் அவ்வூர் பட்டாலிபுரம் எனப்பெயர் பெற்றதாம். முருகப்பெருமான் பட்டாலியூர் வேட்டுவ மன்னரின் மகளான வள்ளியைக் கவர்ந்து வந்தபோது அவருடன் வேட்டுவர்கள் எதிர்த்துப் போரிட்டு இறந்தனர். வள்ளியின் வேண்டுகோளின் பேரில் இறந்த உயிர்களை முருகப் பெருமான் மீட்டுக் கொடுத்தாராம்.

பக்தர்களின் கனவில் சிவாஜலபதி தோன்றி எதிர்கால நிகழ்ச்சிகளைக் குறிப்பால் உணர்த்துவது இத்தலத்திற்கே உரிய சிறப்பு. எதிர்காலத்தைக் குறிப்பால் உணர்த்தும் இப்பெருமான், நடக்கப்போகும்

விபத்தை முன்கூட்டியே அறிவுக்கும் காரணகர்த்தாவும் ஆவார். மகாத்மா காந்தி கொல்லப்படுமுன்பு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஒருவர் கனவில் முருகன் தோன்றிக் காவடியில் எலும்பும், சாம்பலும் கட்டி யெடுத்து வருமாறு பணிந்தாராம். அவ்வாறே அன்பரும் காவடி யெடுத்து வந்தபோது காவடியைக் கொடிமரத் தருகே இட ஆலய நிர்வாகிகள் அனுமதிக்கவில்லையாம். பக்தரும் அங்கே சில காலம் தங்கி இருந்தாராம். அன்றிரவு பூசாரியின் கனவில் தோன்றி அருகிலுள்ள வில்வமரத்தருகே காவடியை விட அனுமதிக்குமாறு சிவாஜலபதி அருளினாராம். இராமநாதபுரத்தில் தடியடி நடைபெறு முன்னர் தடி ஒன்றைக் கோயிலில் வைக்குமாறு ஒரு பக்தரின் கனவில் முருகன் தோன்றிக் கட்டளையிட்டாராம். உணவு தானியங்கள் எதையாவது திருமுன்னர் வைக்குமாறு முருகன் கட்டளையிட்டால் அந்த ஆண்டு அப்பொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற நம்பிக்கை இந்த வட்டாரத்தில் உண்டு. தேருக்கான சக்கரம் செய்வதற்குப் போதிய வருவாய் இல்லாதபோதும், பெருவிழாவிற்கு நிதி தேவைப்பட்ட போதும் உண்டியலில் அதிக வருவாயை அளித்து அக்காரியங்களை வெற்றிகரமாக முருகப்பெருமான் நிறைவேற்றியதாகவும் கூறுவர். பக்தியுள்ளம் மிக்கவர் கனவில் முருகர் தோன்றிக் காணிக்கைகள் கேட்ப தாகவும் கூறுவர். இவ்வாறு செலுத்தப்பட்ட காணிக்கைகளுள் தங்கச் சங்கிலிகள், பொற்காசுகள், சைக்கிள், இளநீர் போன்ற பல பொருட்கள் அடங்கும். இவ்வாறு பல அற்புதச் செயல்களைப் புரியும் கண்கண்ட தெய்வமாகச் சிவாஜலபதி திகழ்கின்றார்.

கொங்கிலுள்ள நாடுகள் இருபத்து நான்கினுள் ஒன்றான காங்கேய நாட்டிலுள்ள 14 ஊர்களில் சிவன் மலையும் ஒன்று. முருகப்பெருமான் உவந்துறையும் குன்று தோறாடல் தலங்களுள் ஒன்றான சிவன் மலைக்குச் சிவமலை, சிவாசலம், சிவசைலம், சிவாத்திரி, சிவநாகம், சிவன்மாமலை, சிவகிரி போன்ற பல

பெயர்கள் உள்ளன. கலியாண சிவன்மலை, சக்தி சிவன்மலை. இருநிதிசூழ் சிவன்மலை, மகிமைசேர் சிவன்மலை, செல்வச் சிவன்மலை, தவசுபுரிச் சிவன் மலை, என்றெல்லாம் இம்மலை போற்றப்படுகிறது. சிவன்மலை முருகப் பெருமானைக் காங்கேய நாட்டுத் தலைவனாகவே கருதுகின்றனர். ''தேங்கிய புகழ் எலாம் ஓங்கியே சிறந்த காங்கய நாடன்'' என்று சிவன்மலை முருகன் போற்றப்படுகிறான்.

முற்காலத்தில் சிவன்மலை அடர்ந்த காடுகள் நிரம்பிய பகுதியாக இருந்ததால் அங்கு ஊர் எதுவும் இல்லை. சிவன்மலைக்கு அருகிலிருந்த பட்டாலியூரில் மட்டுமே மக்கள் குடியிருந்தனர். இலக்கியங்களில் சிவன்மலையைப் பட்டாலியூருடன் இணைத்தே குறிப் பிட்டனர். ''அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன் மலை'' ''பட்டாலிச் சிவாசலம்'', ''ஞாலம் புகழும் பட்டாலிச் சிவன்மலை'', நன்னகர் போன்ற தொடர் களைச் சான்றாக கொள்ளலாம். பட்டாலியில் கோயில் கொண்டுள்ள பால்வெண்ணீஸ்வரர், நல்லமங்கை யம்மன் ஆகியோரின் மகனாகவே சிவன்மலை முருகன் கருதப்படுகிறார், அண்மைக்கால இலக்கியங்களில்,

'செல்லப் பாட்டாலியில் பால்வண்ணர் பாலன்'
செல்லப்பட்டாலி யூரன்,
பத்தர்பணி பட்டாலிச் சித்தர்,
''கிட்டாது வானமும் கட்டோடு சோலையின்

மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாலியூரன்'' என்ற குறிப்புகளைக் காணலாம். கந்தர் மேவிய பட்டாலி என்ற சொற்றோடரும், சிவாசலரைப் பட்டாலியூரன் என்று அழைக்கும் பழக்கமும், பழங்காலத்தில் பட்டாலி, சிவன்மலை ஆகிய தலங்கள் ஒன்றாக இருந்தமைக்குச் சான்றாகும். இன்று பட்டாலி என்ற ஊர் இல்லை. அவ்வூர் அழிந்து விட்டதால் அதனருகே அரசம் பாளையம் என்ற ஊர் தோன்றியுள்ளது.

16-ம் நூற்றாண்டின் இறுதி அல்லது 17-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் எழுதப்பட்ட 24 நாட்டுப் பட்டயம் என்ற தொகுதியில் சிவன்மலை, பட்டாலி, ஆகிய ஊர்கள் தனித்தனியாகவே காணப்படுகின்றன. பதினேழாம் நூற்றாண்டிலிருந்து சிவன்மலையடிவாரத்தில் மக்கள் குடியேறத் துவங்கியிருக்க வேண்டும். அன்றுமுதல் மலையடிவாரத்திலுண்டான சிற்றூர் சிவன்மலை என்று வழங்கப்பட்டிருக்கக் கூடும். சிவன் மலையை அடுத்துள்ள கவுண்டம்பாளையம், வீரையூர் ஆகிய ஊர்களையும் இம்மலையுடன் இணைத்தே குறிப்பிடுவர்.

முருகப் பெருமான் குடிகொண்டுள்ள தலங்களுக்கு யாத்திரை புரிந்து பாடல்களால் கந்தவேளுக்கு மணியாரம் சூட்டிய அருணகிரிநாதர் கொங்கு நாட்டுக்கு மும்முறை வருகை புரிந்துள்ளார். சென்னி மலையில் படிக்காசு பெற்றுக் கொங்கு நாட்டில் பஞ்ச நிவாரணப் பணிகளைப் புரிந்தார். அருணகிரிநாதர் சிவன்மலை மீது நான்கு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியதாகக் கருதுவர்.

''குரம்பை மலசலம் வழுவளு நிணமொடு
செயங்கொடணை குக சிவமலை மருவிய பெருமாளே''
''கறுத்த குழலணி மலரணி பொங்கப்...
சிலைக்குளணை குகசிவமலை கந்தம் பெருமாளே''

ஆகிய பாடல்கள் பழனியில் பாடப்பெற்றதாகவும் ஒரு கருத்து உள்ளது. பட்டாலியூர் மீது அருணகிரிநாதர் பாடியுள்ள மூன்று திருப்புகழ்ப் பாடல்களும் சிவன்மலையையே குறிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு.

''இருகுழை யிடறிக் காது மோதுவ...
பயிரவியருள் பட்டாலியூர்வரு பெருமாளே''
''கத்தூரி யகரு ம்ருதமத வித்தார படிர இமசல...

பச்சோலை குலவு பனைவளர் மைச்சோலை மயில்கள் நடமிடு
பட்டாலி மருவு மமரர்கள் பெருமாளே''

''சங்கைக்கத் தோடு சிறுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
கொங்கிற் பட்டாலி நகருறை பெருமாளே''

சிவன்மலைக் குறவஞ்சி என்ற நூலில் சிவன்மலையில் நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும், அருணகிரிநாதரின் திருப்புகழும் படிக்கப்படுவதாகச் செய்தி உள்ளது. ''பொற்புடனை அருணகிரி திருப்புகழ் படிக்கும் வாசலிது'' என்ற பாடல் வரிகள் அருணகிரிநாதருக்கும், சிவன் மலைக்கும் உள்ள தொடர்பை உணர்த்தும்.

சிவன் மலையின் புகழைப்பாடும் பிற்கால இலக்கியங்கள் பல உள்ளன, சிவன்மலையில் வாழ்ந்த சிவகிரி பண்டிதர், ஆறுமுக குருக்கள் போன்ற புலவர்கள் சிவன்மலை மீதும், கொங்கிலுள்ள பிற பதிகள் மீதும் தனிப்பாடல்களைப் பாடி உள்ளனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வாழ்ந்த இலட்சுமண பாரதி சிவன்மலைக் குறவஞ்சி, மயில் விடு தூது ஆகிய சிற்றிலக்கிய நூல்களை யாத்துள்ளார். கொடுமணல் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவரிடமிருந்து பெறப்பட்டு, ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் பத்திரமாக உள்ள சில ஓலைச் சுவடிகளில் சிவன்மலை பற்றிய பல பாடல்களைக் காணலாம்.

செகமெலாம் தாங்கியே வாழ்வு பெறவே வைத்த
திருமாலின் மருகாகுகா
தெய்வயானை வள்ளிமணவாளன் என வந்தவா
சிவன்மலைக் குமரேசா (ஒரு தனிப்பாடல்)

சீர்காழி அம்பலவாணக் கவிராயர் இப்பதி மீது ஒரு தலபுராணம் பாடியுள்ளாராம். சிவன்மலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டு எதுவும் இல்லை.

ஆனால், கவுண்டம்பாளையம் விநாயகர் கோயிலுக்கு எதிராக உள்ள பலகையில் சிவன்மலை முருகன் பற்றிய கல்வெட்டு ஒன்று உள்ளது. கலியுகம் 4894 ல் சாலிவாகன சகம் 1717 ல் பிரமாதிக ஆண்டு சித்திரை மாதம் சிவன் மலை ஆண்டவருக்கு உச்சி காலப் பூஜைக்காக உத்தமக் காமிண்ட மன்றாடியார் என்பார், 15 வள்ளம் பூமி கொடையாக அளித்த செய்தியை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. (எண்: 291, 1920 ம் ஆண்டு அறிக்கை)

காங்கேய நாட்டு அரசர்கள் என்று போற்றப்படும் காடையூர் காங்கேய மன்றாடியார், பழைய கோட்டைச் சர்க்கரை மன்றாடியார், காங்கேயம் பல்லவராயர் ஆகிய மூன்று குலத்தோரும் திருப்பணி, விழா ஆகியன நடைபெறத் தானங்களை அளித்துள்ளனர்.

''பாரும் காரைமன் கரியான் சர்க்கரை பக்தி மிகப் பெருகி
பண்புள சிவன்மலை ஆண்டவர் தேர்வரு பாதை அதை நிரவி
நேரும் கலியுக நாலாயிரமொடு நானூற்றைம்பது நாள்
நிகழும் நந்தன ஆண்டுதை பத்தேழ் நிலைபெயர் தேதியினுள்
சீரும் கொண்டிட வேகிரி சுற்றிச் செப்பமிடத் தனது
செம்மறியாடுகள் நூறது விற்றுச் சேர்ந்த பணத்தினிலே
ஏரும் குதிரை இரண்டது வைத்திங் கொன்றங்கு ஒன்றதின்மேல்
எக்கியே வந்திரு வேளையுமே தினம் ஏழுள் முடித்தனரே''

என்ற தனிப்பாடல் மூலம் சர்க்கரை மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் சிவன்மலைக்குத் தேரோடும் பாதையை அமைத்த செய்தியை அறியலாம். இதே மரபினர் மலைப்பாதையை அமைத்த செய்தியைக் குறிக்கும் பாடலும் உள்ளது.

சர்க்கரை மன்றாடியார் ஒருவரின் புதல்வன் காலில் வெண்குஷ்ட நோயால் அவதியுற்றார். அவரது தாயாரான வள்ளியம்மாள் என்பவர் தீவிர பக்தியும், தமிழ்ப்புலமையும் நிறைந்தவர். அவர் இறைவனிடம் மனமார வேண்டிக் கொண்டார். அடுத்த அசுவதி நாளன்று முருகனருளால் வெண்குஷ்டம் நீங்கியதாம்.

காங்கேய நாட்டைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளனர். இந்த வட்டார மக்களின் மதிப்பிற்குரிய தெய்வமாகச் சிவன்மலை முருகன் விளங்குவதால் சிவன்மலை, சேமணன், சேமலை போன்ற பெயர்களைக் குழந்தைகளுக்கு இடுவது இன்றும் வழக்கமாக உள்ளது.

இக்கோயில் காலை 6 முதல் மாலை 6 வரை தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். ஆலயத்திற்குச் சொந்தமாக நிலங்களும், பிற சொத்துக்களும் உள்ளன. காணிக்கைகள், கட்டணங்கள், வாடகை ஆகியவற்றின் மூலம் கோயிலுக்கு நல்ல வருவாய் வருகிறது. ஆலயத்தில் இரதம், பல்லக்கு ஆகியன உபயோகத்தில் உள்ளன. தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்த சஷ்டி, போன்ற விழா நாட்களிலும் கந்தனுக்கு உகந்த திருநாட்களிலும் அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிகின்றனர்.

ஆஞ்சநேயர் சஞ்சீவி பர்வதத்தைச் சுமந்து சென்ற போது அதன் ஒரு சிறு துண்டு கீழே விழுந்து சிவன் மலையாக உருவாகியதாகக் கூறுவர். இதனால் இங்கு பல அபூர்வ மூலிகைகள் உள்ளன. மலையடிவாரத்தில் கிரிவலம் வருகையில் சிவபெருமானின் திருக்கோயிலைக் காணலாம். ஆஞ்சநேயர் அரனாரை இங்கு வழிபட்டதாக நம்பப்படுவதால் மாருதியின் திருவுருவம் இக்கோயிலில் உள்ளது. சித்தர்கள் பலரின் உறைவிடமாகக் கொங்கு நாடு திகழ்ந்தது. மருதமலையில் பாம்பாட்டிச் சித்தரும், சென்னிமலையில் பிண்ணாக்குச்

சித்தரும், பழனிமலையில் போக சித்தரும் வாழ்ந்ததாக நம்புகின்றனர். இது போலவே சிவவாக்கியர் சிவன் மலையில் வாழ்ந்ததாகவும், அவரே இங்கு கோயிலை உருவாக்கியதாகவும் கூறுவர். சிவவாக்கியர் தவமியற்றிய குகை இவ்வாலயத்தின் உட்பகுதியிலுள்ளதாம். அவர் எழுதிய சிவவாக்கியம் என்ற நூல் 500 பாடல்களைப் பெற்றிருந்ததாகத் தாயுமானவர் குறிப்பிடுகிறார். உருவ வழிபாடு, தல யாத்திரை, சமுதாய ஏற்ற தாழ்வு ஆகியவற்றை முற்றும் எதிர்த்த சிவவாக்கியர் மனசாட்சியே கோயில் என்று நம்பினார். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.

"நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்ற சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"

என்ற பாடல் அவரது கொள்கைகளை வலியுறுத்துகிறது.

மதுரை

கூடலழகர் திருக்கோயில்

வாழுவிப்பான் எண்ணமோ வல்வினையில் இன்னம் என்னை
ஆழ்விப்பான் எண்ணமோ அஃதறியேன் தாழ்விலாய்
பாடல் அழகு ஆர்புதுவை பட்டர்பிரான் கொண்டாடும்
கூடல் அழகரின் குறிப்பு

திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஸ்ரீ வல்லபதேவன் எனும் மன்னன் ஆட்சி செய்து வந்தான். ஒரு நாள் இரவு நகர்ச் சோதனையின் போது ஒரு வயோதிக யாத்திரீகரை அம்மன்னன் சந்தித்து, வாழ்க்கை என்ற பயணத்திற்கான மார்க்கத்தைக் குறிப்பிடுமாறு கேட்டான். ''மாரிக் காலத்திற்குத் தேவையான பொருட்களைப் பிற காலங் களில் சேமிப்பது போல, முதுமைக்கு வேண்டியவற்றை இளமையிலேயே சேகரிப்பது போல, மறுமைக்குத் தேவையானவற்றை இம்மையிலேயே தேடிப் பெற வேண்டும், என்ற கருத்தை அச்சான்றோான் ஒரு வடமொழிப் பாடல் மூலம் தெரிவித்தார். முக்தியான பரத்துவத்தை அளிக்கக் கூடிய பரம்பொருள் பற்றி அரசன் தன் புரோகிதரான செல்வநம்பியுடன் மறுநாள் ஆலோசனை நடத்தினான். தனது சந்தேகத்தைத் தீர்க்கவல்ல பெரியோருக்குப் பொற்கிழியளிப்பதாகப் பறையறிவித்தான். அக்காலத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூர் என்ற திருத்தலத்தில் வாழ்ந்து வந்த விஷ்ணுசித்தர் என்ற வைணவச் சான்றோர் அத்தலத்திலுள்ள

திருக்கோயிலைப் புதுப்பிக்க முயற்சி செய்து வந்தார். ஒருநாள் விஷ்ணுசித்தரின் கனவில் திருமால் தோன்றி மதுரையிலுள்ள பாண்டிய மன்னனின் சந்தேகத்தை நீக்கிப் பொற்கிழி பெற்று வருமாறு பணித்தார். மதுரையம்பதியில் பாண்டிய மன்னன் அவையிலுள்ள புலவர்களைத் தமது வாதத்தால் வென்ற விஷ்ணு சித்தர், நாராயணனே முக்திக்கு வழிகாட்டவல்ல பரம்பொருள் என்ற கருத்தை நிலைநாட்டினார். ஒரு கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்டிருந்த பொற்கிழி தானாக வளைந்து அவரது கரத்தில் வீழ்ந்தது. விஷ்ணுசித்தரைப் போற்றித் துதித்த மன்னன் அவரை யானையின் மீது அமரச் செய்து நகர்வலம் புரியச் செய்தான். பட்டர்பிரான் என்ற பெயரையும் அளித்துக் கௌரவித்தான். இக்காட்சியைக் கருடாழ்வார் மீது அமர்ந்தவாறு, நாச்சியார்கள் சமேதராக மகாவிஷ்ணு கண்டு விஷ்ணுசித்தருக்கு அருள்புரிந்தார். விஷ்ணுசித்தர் பேரானந்த வெள்ளத்தில் மிதந்தார். யானை மீதுள்ள மணிகளையே தாளமாகக் கொண்டு திருப்பல்லாண்டு பாடினார். எம்பெருமானின் பேரழகு என்றும் அழியாமல் நிலைக்கவேண்டும் என்ற கருத்தில் பாடப் பெற்றதே திருப்பல்லாண்டு எனும் பாடல் தொகுதி.

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு

எந்தா ளெம்பெரு மானுன்றனக் கடியோமென்
றெழுத்துப்பட்ட

அந்நாளே அடியோங்களடிக்குடில் வீடு
பெற்றுய்ந்தது காண்

செந்நாள் தோற்றித் திருமதுரையுட் சிலைகுனித்து
ஐந்தலைய

பைந்நா கத்தலைப் பாய்ந்தவனே! உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே''

இவ்வாறு எம்பெருமானையும், அவரது பக்தர்களையும், அவரது மார்பில் வாசம் செய்யும் மகாலஷ்மியையும், சங்கு, சக்கரம், ஆகிய படைகளையும் போற்றிப் பாடிய திருப்பல்லாண்டு பிறந்த தலமே, மதுரை மாநகரிலுள்ள கூடலழகர் கோயில். இக்கோயில் மதுரை மையப் பேருந்து நிலையத்திற்கு மிக அண்மையில் உள்ளது.

விஷ்ணுசித்தர் அன்று அருளிய திருப்பல்லாண்டு இன்று இப்பூவுலகம் முழுதும் ஒலிக்கிறது. அனைத்து வைஷ்ணவ சந்நிதிகளிலும் திருப்பல்லாண்டு பாடப் பெறுகிறது. இதனால் மதுரை கூடலழகர் சந்நிதியை "திருப்பல்லாண்டு விளைந்த திவ்விய தேசம்" என்று உடையவர் குறிப்பிட்டார். 'வேதத்திற்கு ஓம் என்ற பிரணவமந்திரம் இருப்பதுபோல் உள்ளத்திற்கு மங்களம் அளிக்கவல்ல திருப்பல்லாண்டை நித்ய திவ்யப் பிரப்ந்தானு ஸ்ந்தானத்தில் துவக்கத்திலும், இறுதியிலும் திருப்பாராயணம் செய்ய வேண்டும்', என நாதமுனிகள் கட்டளை பிறப்பித்தார். அன்று முதல் வைணவர்களுக்குத் திருப்பல்லாண்டே தாரக மந்திரமாயிற்று.

திருப்பல்லாண்டு பிறந்த வரலாற்றைப் பாண்டிய பட்டார் என்ற புலவர் (திருப்பல்லாண்டு — தனியன்) குறிப்பிடுகிறார்.

"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தாரென்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத—வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று"

திருப்பல்லாண்டு பாடிய பெரியாருக்குப் பெரியாழ்வார் என்ற பெயரும் நிலைத்தது. மகாவிஷ்ணுவின் மீது மற்ற ஆழ்வார்கள் கொண்ட பற்றை விட அதிக பரிவு கொண்டு பல்லாண்டு பாடியதால் விஷ்ணு

சித்தருக்கு இப்பெயர் கிடைத்ததாக மணவாள முனிகள் 'உபதேசரத்தினமாலையில்' கூறுகிறார்.

''மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றிப் - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்''

(மணவாள முனிகள்)

குரு பரம்பரையில் இவரது வரலாற்றிற்குப் 'பெரியாழ் வார் வைபவம்' என்ற பெயரும், திவ்வியப் பிரபந்தத்தில் இவர் பாடிய பாசுரங்களுக்குப் 'பெரியாழ்வார் திருமொழி' என்ற பெயரும் அமைந்து பெரியாழ் வாருக்குப் பெருமை சேர்க்கின்றன.

வடமொழியிலுள்ள பிரம்மாண்டபுராணத்தில் மதுரைத் தலமான்மியத்தையுரைக்கும் பகுதியில் உள்ள சம்பவங்களை இணைத்துக் கூடற்புராணம் என்ற ஒரு தலபுராண நூலைச் செய்யுள் வடிவில் ஒரு வைணவப் புலவர் யாத்துள்ளார். அப்புலவரின் பெயர் தெரிய வில்லை. நடையழகும், திட்ப நுட்பங்களும் மிகுந்த இந்நூலில் கூடல் நகரின் பெருமைகள் வெளிப்படு கின்றன. புராண வரலாறு, ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகிய பகுதிகளுடன், நான்கு யுகங்களில் நடைபெற்ற சம்பவங்களைக் குறிக்கும் நான்கு காண்டங்களும் இந்நூலில் அமைந்துள்ளன.

பிரளய காலத்தில் சீறிப்பாயும் கடும்மழையும், புயலும் மதுரை மாநகரைத் தாக்கின. ஊழி வெள்ளத் தில் சிக்கித் துன்பமுற்ற மக்கள் பரந்தாமனைத் தஞ்ச மடைந்தனர். கோவர்த்தன கிரியைக் குடையாக ஏந்தி ஆயர்பாடி மக்களைக் காத்த கோபாலன், நான்கு வலிமைமிக்க தடுப்பு மேகங்களை ஏவினார். நான்கு மேகங்களும் உயர்ந்து மாடங்கள் போல மழையைத்

தடுத்து மக்களைக் காத்ததால் இத்தலத்திற்குக் கூடல் நகர் என்றும், நான் மாடக்கூடல் என்றும் பெயர் உண்டாயிற்று. இவ்வூருக்கு வளமை தரும் வையை நதியும், இந்நாட்டையாண்ட பாண்டிய மன்னர்களின் சின்னமான மீனும் திருமாலின் அருளால் கிடைத்தன.

வையை நதி இரண்டாகப் பிரிந்து மதுரை நகருக்கு மாலை அணிவிப்பது போல் வளைந்தோடி வாழ்த்துவதாகப் புராணங்கள் கூறுகின்றன. வாமன அவதாரமெடுத்த மகாவிஷ்ணு வானுலகை அளந்த போது, ஒளிமிக்க அவரது திருவடி நான்முகன் வாழும் சத்திய லோகத்தை எட்டியது. மால்வண்ணனின் பாதத்தை நான்முகன் நீரால் அபிஷேகம் செய்து ஆராதித்தார். அந்த அபிஷேக நீர் தென்மதுரையில் விழுந்த வையையாகப் பெருகியது. அதன் மற்றொரு பகுதி கூடலழகருக்கு மாலையணிவிப்பது போல் சென்றதால் அதற்குக் கிருதமாலை என்ற பெயர் ஏற்பட்டது. இந்த நதியின் இரு கரைகளிலும் வாழை மரங்கள் செழித்து வளர்ந்ததால் அப்பகுதி கதலிவனம் என அழைக்கப்பட்டது. வையை யாறு வேகமாகச் சென்றதால் அதற்கு வேகவதி என்ற பெயரும் ஏற்பட்டது.

"வேகமாதலில் வேகவதி யென்று
மாகம் வாய்ந்ததனால் வையையென்றுந் தர
ராகலாற் கிருதமாலையா மென்று
நாகர் முப்பெயர் நாட்டு நதியதே

(கூடற்புராணம்—ஆற்றுப்படலம்)

கூடழலகர் மீது பெரும்பக்தி கொண்டிருந்த சத்திய விரதன் என்ற அரசன் கிருதமாலை நதிக்கரையில் தவமியற்றி வந்தான். ஒருமுறை அம்மன்னன் ஜலதர்ப்பணம் புரியும்போது அஞ்சலி நீரில் திருமால் மீன்வடிவில் தோன்றினார். இங்ஙனம் மச்சாவதாரமூர்த்தியாகத் தோன்றிய மகாவிஷ்ணு மன்னனுக்கு அருமறைகளை

அறிவித்து, அவனது வம்சத்தினருக்கும் நல்வழி காட்டினார். இச்சம்பவத்தின் நினைவாகவே பாண்டிய மன்னர்கள் தங்களது கொடியில் மீன் இலச்சினையைப் பொறித்தனர். இவ்வரலாறு பிரமத் பாகவதத்தி லுள்ள சுலோகத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூடற் புராணம் குறிப்பிடுகிறது.

நான்கு யுகங்களிலும் இத்தலத்தில் நடைபெற்ற அற்புதங்களைக் கூடற்புராணம் விவரிக்கிறது. கிருத யுகத்தில் ஞானத்தின் முழுவுருவான சனத்குமாரர் (நான்முகனின் மானச புத்திரர்) சர்வ வல்லமை மிக்க பரமாத்மாவிற்கு ஆலயம் எழுப்பி, அர்ச்சாவதார மூர்த்தியாக வழிபட விரும்பினார். அவரது விருப்பத்தை ஈடேற்ற முன்வந்த தேவ சிற்பியான விசுவகர்மா அஷ்டாங்க விமானத்துடன் கூடிய பிரம்மாண்டமான ஆலயம் ஒன்றை உருவாக்கினான். இக்கோயிலில் மகாவிஷ்ணு சகல பரிவாரங்களுடன் எழுந்தருளி உலகோருக்கு அருள் புரிந்தார். விமானத்தின் ஈசான்ய திசையில் சிவபெருமான், பார்வதி தேவியை அடையும் பொருட்டுத் தவம் புரிந்து வந்தார். கூடற்பெருமாளே சப்தரிஷிகளின் உதவியுடன் அத்திருமணத்தை முடித்து வைத்தார். இச்சம்பவத்திற்கு ஏற்ப அஷ்டாங்க விமானத் தில் சிவபெருமானும் கோலம் கொண்டார். இதே யுகத்தில் காசிபர் முதலிய முனிவர்கள் திருமாலைப் பூசித்துப் பேறு பெற்றனர்.

திரேதாயுகத்தில் தவவலிமை மிக்க பிருது சக்கர வர்த்தி தனது தெய்வீக விமானத்திலமர்ந்தவாறு வான் வழியே சென்று கொண்டிருந்தான். அவனது விமானத்தின் நிழல் கூடலழகர் கோயிலிலுள்ள எண் கோண விமானத்தில் பட்டவுடன் விமானம் அங்கேயே நின்றுவிட்டது. உடனே ஆலயத்தினுள் புகுந்து பரமனை வழிபட்ட மன்னன், இக்கோயிலின் மீது பெருவிருப்பு கொண்டான். அதன் விமானத்தையும், உட்பகுதி களையும் புதுப்பித்தான். அவன் புரிந்த சேவையின்

பலனாக அமரப் பெருவாழ்வு கிடைத்தது. இதே யுகத்தில் காலநேமி என்ற அசுரனைக் கூடற்பெருமாள் வதைத்து நன்மையை நிலைநாட்டினார். துவாபர யுகத்தில் சிறந்த பக்திமானான அம்பரீஷ சக்கரவர்த்தி பல தலங்களுக்குத் தீர்த்தயாத்திரை புரிந்து வந்தான். ஒருமுறை மதுரைக்கு வந்து கிருதமாலை நதியில் நீராடிக் கூடலழகரைத் துதித்தான். கலியுகத்தில் ஏராளமான அரசர்களும், முனிவர்களும், அன்பர்களும் கூடலழகரை ஆராதித்துப் பேறு பெற்றுள்ளனர். கலியுகத்தின் துவக்கத்தில் புரூரவசு என்ற மன்னனும், அவனது புத்திரனான இந்திரத்துய்மனனும் கூடல் பெருமாளைத் தொழுது நற்கதி அடைந்தனர். சாபத்தால் மண்டுகமாகப் பிறந்த பிருகு முனிவரும், சாபத்தால் பீடிக்கப்பட்ட ஊர்வசியும் இங்கு வழிபாடியற்றிச் சாபவிமோசனம் பெற்றனர்.

நெடிதுயர்ந்த மதில்களுடன், சுமார் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கோயிலின் முகப்பில் சுமார் 125 அடி உயரமுள்ள ஐந்து நிலை கோபுரம், பல வண்ணங்களையுடைய சுதையுருவங் களுடன் எழில்மிகு தோற்றம் கொண்டுள்ளது. மூலவரின் சந்நிதிக்கு வடபுறத்தில் லக்ஷ்மி நரசிம்மர், இராமர், கிருஷ்ணர் ஆகியோர் தெற்கு நோக்கியவாறு காட்சி தருகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான ஆண்டாள், நரசிம்மர், மணவாள முனிகள் ஆகியோரைக் கண்டு தொழலாம். இராமரின் சந்நிதிக்குத் தென்புறத்தில் கருடாழ்வாரும், ஆஞ்ச நேயரும் பணிவுடன் தோன்றுகின்றனர். தாயார் சந்நிதிக்கு முன்புறத்தில் இராமானுஜர், வேதாந்த தேசிகர், நாதமுனிகள், ஆழ்வார்கள், ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அம்மன் சந்நிதிக்கு முன்புள்ள சொக்கட் டான் மண்டபத்தின் அடித்தளம் அற்புத வேலைப்பாடு களையுடையது. மண்டபங்களிலுள்ள தூண்களில் திருமாலின் அருட்செயல்களை விளக்கும் சிறிய

சிற்பங்கள் உள்ளன. பிரகாரத்தை வலம் வரும்போது 108 திவ்விய தேசங்களிலுள்ள திருமாலின் திருக்கோலங்களை ஓவிய வடிவில் தரிசிக்கலாம்.

விமானத்துடன் கூடிய மூலப்பகுதி தேர் போல அமைந்துள்ளதால் சில படிகளில் ஏறிய பின்னரே மகாமண்டபத்தையும், கருவறையையும் அடையலாம். கருவறையில் மூலவரான கூடலழகர் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். சுமார் ஆறடி உயரமுள்ள இத்திருவுருவம் பெயருக்கு ஏற்றவாறு காண்போரை வசீகரம் செய்கிறது. பாண்டி நாட்டில் அழகர் என்ற பெயருடன் கோயில் கொண்டுள்ள மூன்று தலங்களுள் இதுவும் ஒன்று. (ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகே காட்டழகர் என்ற பெயருடனும், திருமாலிருஞ்சோலையில் கள்ளழகர் என்ற பெயருடனும் திருமால் குடிகொண்டுள்ளார்) கூடலழகருக்கு வைகுந்தநாதர், ஆஹூயவரதர் ஆகிய திருநாமங்களும் உள்ளன. இடது கையால் அழைத்து, வலது கரத்தால் வரமளித்தருள்வதால் ஆஹூயவரதர் என்ற பெயர் ஏற்பட்டது. மூலவருக்கு முன்பு வியூக சுந்தரராஜன் எனப்படும் உற்சவர் சுமார் நான்கடி உயரமுள்ள பஞ்சலோகத் திருமேனியுடன் காட்சி கொடுக்கிறார். கௌதுகர், வியூக சுந்தரராஜர், ஸ்நானபேரர், பலிபேரர் மூலவர் ஆகிய பஞ்சமூர்த்திகளைத் தரிசித்த பின்னர் தென்புறத்தில் தனிக்கோயிலில் சேவை சாதிக்கும், தாயாரைத் தரிசிக்கலாம். வகுளவல்லி மதுரவல்லி, மரகதவல்லி, வரகுணவல்லி போன்ற பல பெயர்கள் இவருக்கு உரியன. வெள்ளிக்கிழமைகளில் சிறந்த வரப்பிரசாதியான தாயாரின் சந்நிதியில் மாதர் கூட்டம் அலைமோதும். அன்று தாயாரின் உற்சவத் திருமேனி உலாச் செல்வதுண்டு. சுவாமி சந்நிதிக்கு வடபுறத்திலுள்ள ஆண்டாள் சந்நிதியில் திருப்பாவைக் கல்வெட்டுக்களும், வண்ண ஓவியங்களும் உள்ளன.

இத்தலத்திற்குரிய அபூர்வமான அமைப்புக்களுள் நவ கிரகங்களின் சந்நிதியும் ஒன்று. சிவாலயங்களில் இடம் பெற்றுள்ள ஒன்பாண் கோள்கள் இங்கு அமைந்திருப்பது இக்கோயிலில் சைவ, வைணவ ஒற்றுமை நிலவியதற்கு அறிகுறியாகும். ஆண்டாள் சந்நிதியை விட்டு வெளியேறும் போது இவற்றைக் கண்டு விளக்கேற்றி வழிபடலாம்.

இக்கோயிலுக்குப் பெருமை அளிப்பது அஷ்டாங்க விமானமாகும். மகாவிஷ்ணு அர்ச்சாவதாரமாகப் பூவுலகில் எழுந்தருளியுள்ள கோயில்களின் கருவறைக்கு மேல் அமைந்துள்ள விமானங்கள் 96 வகைப்படும். அவற்றுள் அஷ்டாங்க விமானம் சிறப்புமிக்கது. 'ஓம் நமோ நாராயண' எனும் பரமாத்மாவின் அஷ்டாக்ஷர மந்திரத்தைப் பிரதிபலிக்கும் எட்டு அங்கங்களையும், மூன்று தளங்களையும் இவ்விமானம் பெற்றுள்ளது. அதிஷ்டானம், பாதம், பாதம், பாதம், பரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய எட்டு பகுதிகளை இது பெற்றுள்ளது. தென்னிந்தியாவில் அமைந்துள்ள பிற ஆலயங்களிலுள்ளவற்றை விஞ்சுமாறு அழகுடன் இதன் கூரை அமைந்துள்ளதாகப் பெர்குஸன் எனும் மேனாட்டு ஆராய்ச்சியாளர் கருதுகிறார்.

கருவறைக்கு வெளியேயுள்ள படிக்கட்டுகளின் வழியாக விமான தரிசனம் பெறச் செல்லலாம். இரண்டாம் தளமான முதல் மாடத்தில் சூரிய நாராயணர் தேவியருடன் நின்ற கோலத்தில் சேவையளிக்கிறார். இவரைச் சுற்றி அஷ்டதிக்பாலகர்களை (அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இந்திரன்) ஓவிய வடிவில் கண்டுகளிக்கலாம். மூன்றாவது தளத்தில் பள்ளி கொண்ட பெருமாளின் கிடந்த திருக்கோலத்தைக் காணலாம். இங்கு திருமாலின் தசாவதாரக் கோலங்களைச்சுதை வடிவில் தரிசிக்கலாம். அஷ்டாங்க விமானத்தின் மீதுள்ள ஸ்தூபி பொன் நிறத்துடன் ஜொலிக்கிறது. சுற்றிலும் நான்கு சிறு ஸ்தூபிகளும்,

பீடத்தில் நான்கு முனிவர்களும், கீழ்த்தட்டில் பதினாறு முனிவர்களும் உள்ளனர். கீழ்த்திசையில் பூவராகரும், தென்திசையில் லக்ஷ்மி நரசிம்மரும், மேல் திசையில் லக்ஷ்மி நாராயணரும், வடதிசையில் நாராயணமூர்த்தியும் உறைகின்றனர். நான்கு மூலைகளிலும் வேலைப்பாடு மிக்க கருட பிம்பங்கள், சிங்கங்களுடன் தோற்றமளிக்கின்றன. புறப்பகுதியைச் சுற்றிலும் சிறு விமானங்களும், எட்டு விமான தேவதைகளும் உள்ளன. முதல் அடுக்கில் இராமாயணக் காட்சிகளும், இரண்டாவது அடுக்கில் பாகவத சம்பவங்களும் சுதை வடிவில் அமைந்துள்ளன. சிவபெருமானின் பல்வேறு வடிவங்களும், திருமாலின் அவதாரங்களும், துர்க்கையின் பல்வேறு நிலைகளும் விமானத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த அஷ்டாங்க விமானம் தேவ சிற்பி விஸ்வகர்மா நிர்மாணித்ததாகக் கூறுவர். எனவே அனைத்து வானவர்களின் உருவங்களையும் இதில் காணலாம். இந்த விமானத்தின் நிழல் பூமியின் படியாமல் இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. மகாவிஷ்ணுவின் ஸ்தூல சரீரமாகக் கருதப்படும் அஷ்டாக்ஷர மந்திரத்தை இந்த விமானம் பிரதிபலிப்பதால் இதனைச் சுற்றி வலம் வந்தால் நாராயண மந்திரத்தை ஓதுவதால் பெறும் பயனை அடையலாம். இதனை நாள்தோறும் பதினோரு தடவை வீதம் 45 நாள் இடைவிடாமல் வலம் வந்தால் காரிய சித்திகள் கை கூடுவது திண்ணம். அஷ்டாங்க விமானத்தை உத்தரமேரூர் சுந்தரவதனர் கோயில், திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில், சேரன்மாதேவி இராமசாமி கோயில் ஆகியவற்றில் மட்டுமே காணலாம்,

இங்குள்ள கல்வெட்டுக்களில் பரமனுக்குக் கூடல் அழகிய பெருமாள் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது, இராமானுஜரின் வழித் தோன்றலான கண்டாடை அண்ணன் என்பவரின் நன்மைக்காக கண்டாடை கோணம்மன் என்பவர் அர்த்தமண்டபம், கருவறை

ஆகியன கட்டுவதற்கான கற்களை அளித்ததாகவும் இத் திருப்பணிகளை எல்லப்ப நாயக்கர் முடித்து வைத்த தாகவும் ஒரு கல்வெட்டு இயம்புகிறது. ஆலயத்திற் காகப் பொருளையும் இல்லத்தையும் வாசவன நாயக்கர் திம்மப்பர் அளித்தார். விஜயநகர மன்னனான ராமராஜ வல்லாளதேவரின் நன்மையை உத்தேசித்து அந்த அரசின் தென்னாட்டுப் பிரதிநிதியான 'திம்மப்ப நாயக்கர்' என்பவர் ஆலயத்தில் பூசைகளும் திருவிழாவும் நடைபெற மூன்று கிராமங்களை வழங்கினார்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த இக்கோயி லில் மதுரை நாயக்க மன்னர்கள் காலத்தில் துவஜஸ்தம்ப முன்மண்டபமும், ஹேம புஷ்கர்ணி மண்டபமும் கட்டப்பட்டன. 1923 ஆண்டில் தேவ கோட்டை அரு. முத்து சரு. அழகப்ப செட்டியாரின் திருப்பணியுடன் குடமுழுக்கு நடைபெற்றது. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் ஓபுளா குடும்பத்தினர் சில திருப்பணிகளைப் புரிந்து குடமுழுக்கு செய்வித்தனர், டி.வி.எஸ். நிறுவனத்தினர், திருப்பதி பெரிய ஜீயர், ஸ்ரீமத் நாராயண ஜீயர், சி.ஆர். கிருஷ்ணமாச்சாரி ஆகியோரும் சில திருப்பணிகளைப் புரிந்தனர். பிரபல சிமெண்ட் தொழிலதிபரான வி.ஏ.சி.ஆர். ராம சுப்ரமணிய ராஜா அவர்களின் தலைமையில் திருப்பணி செய்யப்பெற்று 4.4.1978 அன்று குடமுழுக்கு நிகழ்ந்தது.

இக்கோயிலில் தென்கலை வைணவ ஸம்பிரதாயப்படி வைகானஸ ஆகமத்திற்கு ஏற்ப ஆறுகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆலயத்திற்குச் சொந்தமாக 23 ஏக்கர் விளைநிலமும், சில கட்டிடங்களும் உள்ளன. தாயாருக்கு உரிய நீலக்கல் பதக்கம், விலைமிக்க கற்கள் பொறிக்கப்பட்ட திருமாங்கல்யம், மற்றும் பல ஆபரணங்களும் (சுமார் ஒன்றரை லட்சம் மதிப்பு),

பன்னிரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள வாகனங்களும், 50,000 ரூபாய் பெறுமானமுள்ள முதலீடுகளும் இக்கோயிலுக்கு உரியன. இங்கு கொண்டாடப்படும் விழாக்களுள் வைகாசிப் பெருவிழா, ஆனி சுவாதி விழா, ஆண்டாள் உற்சவம், புரட்டாசி சனி, கருடசேவை, நவராத்திரி, மார்கழி பகல் பத்து, இராப்பத்து உற்சவம், வைகுண்ட ஏகாதசி, தை கனு, பரிவேட்டை, மாசி தெப்போற்சவம், பங்குனி திருக்கல்யாணம் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்தன. பெரியாழ்வார் அருள்பெற்ற மேங்காட்டுப் பொட்டல் என்ற இடத்தில் மார்கழி பகல் பத்து உற்சவத்தின் போது கூடலழகர் எழுந்தருளி யானை வாகனத்தில் தோன்றும் பெரியாழ் வாருக்கு அருளும் நிகழ்ச்சி கொண்டாடப்படும்.

இலக்கியவுலகில் இப்பதி மேன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. சங்க கால இலக்கியங்களில் இத்தலம் பற்றிய குறிப்புகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சியில் 'மாயோன் மேயே ஓணநன்னாள்' என்று இப்பதியில் நடைபெற்ற ஓண விழா பற்றிய குறிப்பு உள்ளது. 'துவரைக் கோமான்' என்ற பெயருடன் கூடலழகரே சங்கப் புலவராக அவையேறிய தாகவும் கூறுவர். பரிபாடலில் உள்ள 'இருந்தையூர் அமர்ந்த செல்வ', என்ற தொடர் மதுரை கூடலழகரையே சுட்டுவதாகக் கருதுவர். ''தார் முற்றியது போலத் தகைபூத்த வையை'' என்ற கலித்தொகை வரிகள் (முல்லைக்கலி-2) வையையின் கிளையான கிருத மாலையைக் குறிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. சிலப்பதிகாரத்தில் 'வையை நெடுமால்' (துன்பமாலை வரி-3) என்ற குறிப்பு உள்ளது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் இத்தொடருக்கு 'இருந்தவளமுடையார்' என்று பொருள் கூறியுள்ளார். இருந்தவளமுடையார் என்ற பெயர் கூடலழகரையே குறிப்பதாக மு. இராகவையங்கார் என்ற சரித்திர

ஆசிரியர் கருதுகிறார் (ஆராய்ச்சித் தொகுதி). சிலப்பதிகாரத்தின் மற்றொரு உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் 'வையை நெடுமால்' என்ற சொல்லுக்கு 'அந்தரவானத்து எம்பெருமான்' என்று பொருள் அளித்துள்ளார். இப்பெயர் அஷ்டாங்க விமானத்தின் மேல்தளத்திலுள்ள பள்ளி கொண்ட பெருமாளைச் சுட்டுவதாகவும் ஒரு கருத்து உண்டு.

பெரியாழ்வார் மட்டுமின்றித் திருமங்கையாழ்வாரும், திருமழிசையாழ்வாரும், கூடற்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர், 'கோழியும் (உறையூர்) கூடலும் (மதுரை) கோயில் கொண்ட கோவலரே' என்பது திருமங்கையாழ்வாரது கூற்று. (பெரிய திருமொழி 9 — நான்காம் பாடல்) 'இழைப்பன் திருக்கூடல் கூட' (நான்முகன் திருவந்தாதி பாடல் 39) என்பது திருமழிசையாழ்வார் பாடல். திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் 108 திருப்பதி அந்தாதியிலும் இப்பதியின் பெருமை போற்றப் பட்டுள்ளது.

வில்லாண்டவ வரையான் மணம்புணர வட்டாங்
கலி மானமென்று
மில்லாண்டம் புயன்சனகர் காசிபினார் பிருது
வம்பரீடன் கூட
றொல்லாண்ட புருரவ சுமலய கேதனன் முதலோர்
தொழுப்புத் தூரான்
பல்லாண்டு பாடவந்த மல்லாண்ட தோளனடி
பணிதல் செய்வாம்

(கூடற்புராணம்).

படவேடு

இரேணுகாம்பாள் திருக்கோயில்

எண்ணிலாப் பொருளும் நீ சுடிலா அருளும் நீ எங்கும்
நிறைந்த கதிர் நீ
கண்ணில் கருமணி நீ கனலாய் அமர்ந்தவள் நீ
காணாத சக்தியுமை நீ
மண்ணில் பயிர்கள் நீ மாளாத அன்பு நீ மனம் குளிரும்
தேனிலவும் நீ
விண்டுரைக்க முடியாத வேதாந்தப் பொருளும் நீ
விண்ணவரை சமைத்தவளும் நீ
உண்மையாயறம் செய்வார்க்குலகாள செய்திடும்
உளம் மகிழும் மகமாரி நீ
தன்னளவில் உவமையிலா தரணி சூழ் கடலும் நீ
தங்கநிகர் அம்பிகையும் நீ
முன்னை நான் செய்த தவம் கண்குளிர காணவும்
முழுகருணை தந்தவளும் நீ
அன்னையாய யமர்ந்துமே அடியவரின் குறைதீர்க்கும்
அழகு படை வீட்டம்மையே

சித்த வைத்தியர் எம். உத்திரவேல் அருளிய
ஸ்ரீ படைவீடமர்ந்தாள் பாமாலை

தொண்டை நாட்டின் கீழ்க்கடலுக்கு மேற்கே ஏழு யோசனை தூரத்தில் கமண்டல நதிககரையில் படவேடு எனும் தலம் உள்ளது. குண்டலிபுரம், ஸேனாஹதம் போன்ற சிறப்புப் பெயர்களையுடைய இத்தலம் பல நூல்களில் புகழப்படுகின்றது. மண்மாரி பெய்ததால் முன்பு பெரிய பட்டினமாக இருந்த இப்பகுதி அழிந்து வனமாக மாறியது. இங்குள்ள கோயிலில் இரேணு காம்பாள், சாமுண்டேஸ்வரி ஆகியோர் எழுந்தருளி

யுள்ளனர். வேலூரிலிருந்து 22 கல் தொலைவிலும், போளூரிலிருந்து 16 கல் தொலைவிலும் இப்பதி அமைந்துள்ளது. வேலூர், செய்யாறு, ஆரணி, போளூர் ஆகிய இடங்களிலிருந்து பேருந்துகள் மூலம் இத்தலத்தை அடையலாம்.

விதர்ப்ப மன்னன் இரைவதனின் மகளாக அவதரித்த உமாதேவிக்கு இரேணுகை என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். உரிய பருவம் வந்ததும் தனக்கேற்ற கணவனைத் தேடியவாறு படைகளுடன் திக் விஜயம் செய்த இரேணுகையிடம் குண்டலிபுரத்திலுள்ள ஜமதக்னி முனிவரே கணவனாக வருவார் என அசரீரி கூறியது. இரேணுகையும், அவளது தோழி சாமுண்டியும் சேனைகளுடன் முனிவரின் ஆசிரமத்தை நெருங்கிய போது ஜமதக்னியின் சீடனான அகிர்தவிருணன் என்பவர் அவர்களுடன் போர் புரிந்தான். முனிவரின் படைகள் மீது சாமுண்டி நெருப்பைச் சொரிந்தாள். அதனை முனிவரின் கமண்டல நீர் அழித்தது. மூன்று உலகங்களிலும் உள்ள புண்ணிய தீர்த்தங்களின் கலவையான அந்த நீர் ஆறாக ஓடிக் கமண்டல நதியானது. முனிவரின் அருளால் அகிர்தவிருணன் சாமுண்டியைச் செங்குவளை மலர்மாலையால் கட்டி நதிக்கரையில் ஸ்தாபித்தார். இவ்விடம் தற்போது புஷ்பகிரியெனவழங்கப்படும். இங்கு சாமுண்டிதேவி தரிசனமளிக்கிறார்.

முனிவரின் ஆணையை மீறி ஆசிரமத்தில் புகுந்து தவசிகளுக்கு இடையூறு விளைவித்த இரேணுகா தேவியைச் சண்டாளியாகுமாறு முனிவர் சபித்தார். பின்னர் அவளுடைய பணிவிடைகளால் திருப்தியடைந்த ஜமதக்னி இரேணுகாவையே மனைவியாக ஏற்றுக் கொண்டார். இரேணுகா இரு வடிவங்களை மேற் கொண்டாள். சாபம் பெற்ற உருவம், மாயாதேவி என்ற பெயருடன் உலகிலுள்ள நகரங்களுக்கு முதல் தேவதையானது; மற்றொரு வடிவம் முனிவருடன்

இல்லற வாழ்வில் ஈடுபட்டு விஷ்ணுவின் அவதாரமான பரசுராமரை ஈன்றது.

ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்திற்கு அருகேயுள்ள தாமரைக்குளம் மூவுலகங்களிலும் புகழ்பெற்றது. தாமரைக் குளத்தில் இரேணுகாதேவி நீராடிக் கொண்டிருந்தபோது வான வழியே சென்ற ஒரு கந்தர்வனின் உருவத்தை நீரில் கண்டாள். விதிவசத்தால் கந்தர்வனின் அழகைக் கண்டு ஒரு கணம் தடுமாறினாள். இதனால் அவள் ஏந்தியிருந்த குடம் உடைந்து உடலெங்கும் நீர் பெருகியது. நடந்த சம்பவத்தை ஞான திருஷ்டியால் அறிந்த ஜமதக்னி முனிவர் வெகுண்டார். பரசுராமனை உடனே அழைத்து இராணுகாதேவியின் தலையைச் சேதிக்குமாறு ஆணையிட்டார். தந்தையின் ஆணையைத் தலைமேல் ஏற்றுத்தனது தாயின் தலையைப் பரசுராமர் வெட்டினார். பின்னர் தாயை உயிர்ப்பிக்குமாறு தனது தந்தையிடம் வேண்டினார். வெட்டுண்ட உடலையும், தலையையும் ஒன்று சேர்த்துக் கமண்டல நீரைத் தெளிக்குமாறு ஜமதக்னி கூறினார்.

யமதர்மனின் புதல்வியான துர்முகி என்பவள் கொலை, நரமாமிசம் புசித்தல் போன்றவற்றைப் புரிந்து வந்தாள். அவளைச் சண்டாளியாகுமாறு அகத்தியர் சபித்தார். அச்சண்டாளியும் பின்னர் வெட்டுப்பட்டுக் கிடந்தாள். அவசரத்தில் பரசுராமர் தன் தாயின் தலையை அச்சண்டாளியின் உடலில் பொருத்தி விட்டார். அவசரத்தில் நடந்து விட்ட இத்தவறால் சண்டாளி உருவுடன் உயிர் பெற்ற ரேணுகாதேவி முனிவருக்குப் பணிவிடை செய்து வந்தாள்.

ஆயிரம் கரங்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் தனது படைகளுடன் ஜமதக்னியின் ஆசிரமத்திற்கு வந்த போது காமதேனுவின் உதவியுடன் அவர்களுக்கு முனிவர் விருந்தளித்தார். காமதேனுவைத் தனக்கு அளிக்குமாறு

அரசன் வேண்டினான். முனிவர் மறுத்தார். கார்த்த வீரியனோ முனிவரைக் கொன்றுவிட்டுக் காமதேனுவைக் கவர்ந்து சென்றான். முனிவருடன் இரேணுகாவும் உடன் கட்டை ஏறினாள். அப்பொழுது கடுமையான மழை பெய்து நெருப்பு அழிந்தது. ஆடைகள் எரிந்த நிலையில் வேப்பிலைத் தழைகளை ஆடையாக ஏற்று, உடற் காயங்களுடன் இரேணுகாதேவி அவதியுற்றாள். அவளை உலகோர் நிந்தித்தனர். அவளது நிலைக்கு இரங்கிய ஒரு பதிவிரதை பச்சரிசி மாவும், வெல்லமும் அளித்துப் புகலிடமும் கொடுத்தாள். பின்னர் ஒரு வண்ணான் வீட்டில் இரேணுகை தங்கினாள். இந்நிலையில் பரசுராமர் இரேணுகாவைச் சந்தித்து உண்மையை அறிந்து வெகுண்டார். கார்த்தவீரியனின் குடும்பத்தை அழித்து க்ஷத்திரியர்கள் குலத்தையே வேரறுப்பதுடன், தன் தாய் உடன்கட்டை ஏறவிடாமல் மழை பொழிந்த வானவர்களையும் அழிக்கப் போவ தாகப் பரசுராமர் இயம்பினார். சிவபெருமான் பிற வானவர்களுடன் வெளிப்பட்டு இரேணுகை எதிர்காலத் தில் பெறப்போகும் பெருமையைப் பரசுராமருக்குத் தெரிவித்து அவரைச் சாந்தப்படுத்தினார்.

அக்கினியில் வெந்ததனால் உண்டான கொப்புளங் கள் இரேணுகாவின் உடலில் முத்தாரமென்னும் முத்துக் களாக ஜொலித்தன. சகல இடங்களிலும் வியாபித்து அம்மை, அல்லது வைசூரி என்ற பெயரோடு மாயா தேவியாக விளங்கினாள். வேப்பிலையே அவளுக்குப் பூசைக்கு ஏற்றதாயிற்று, பெண்கள் அளித்த பச்சரிசி மாவு, வெல்லம், பானகம் ஆகியவையே நிவேதன மாயின. இத்தகைய பேறுகளைப் பெற்ற இரேணுகாவின் சண்டாள பாகம் மாறிப் புதிய பொலிவு ஏற்பட்டது. சிவபெருமானின் அருளால் ஜமதக்னியும் உயிர் பெற்றார். ஜமதக்னி, இராணுகாதேவி, பரசுராமர் ஆகிய மூவரும் ஈசனை வணங்கினர். இரேணுகாவின் சிரசு மட்டும் உலகில் பிரதானமாக

நிலைபெற்று மேன்மையுற்றது. அவளது உடல் ஜமதக்னி முனிவருடன் வானுலகு செல்லும் நற்கதியைப் பெற்றது. பூர்வத்திலிருந்தது போலவே இரேணுகை சிலாரூபமாக நின்றாள். இரேணுகையுடன் சம்பந்தப் பட்ட துர்மாரி எனும் சண்டாள் கன்னிகை கலியுகத் தில் தர்மம் பொய்த்துத் தீய குணங்கள் அதிகரிக்கும் போது சஞ்சரிப்பாள், எனச் சிவபெருமான் அருளினார். இவ்வாறு சிவபெருமானிடம் சிறந்த வரங்களைப் பெற்ற இரேணுகாதேவி பூவுலகிலுள்ள மக்களும் வானவரும் துதிக்க கோயிலில் எழுந்தருளி னார். இக்கோயிலுக்கருகேயுள்ள இராமதீர்த்த நீரால் பரசுராமர் இரேணுகா தேவிக்கு அபிஷேகம் செய்தார். பின்னர் கார்த்தவீரியனை அழித்துப் பூமியில் க்ஷத்திரியர் களின் பல தலைமுறைகளைப் பரசுராமர் அழித்தார். தனது சபதம் நிறைவேறியவுடன் பூவுலகைக் காசிப முனிவருக்கு தானமாக அளித்தார்.

அசுரர்களால் பீடிக்கப்பட்ட வீவஸ்வான் எனும் மன்னன் கமண்டல நதியில் மூழ்கி வேப்பிலையை உடுத்தி இரேணுகா தேவியை ஒரு மாதம் பூசித்தான். அம்மனின் அருளால் கிடைத்த யானை மீது ஏறிச் சென்ற அம்மன்னன் அசுரர்களை வென்றான். பின்னர் இருபத்தைந்து மலைகளால் சூழப்பெற்ற குண்டலி புரத்தில் ஒரு அற்புதமான பட்டினத்தை உருவாக்கி னான். இரேணுகாதேவிக்கும் சாமுண்டிதேவிக்கும் முதலில் ஆலயம் எழுப்பிய பெருமை வீவஸ்வானுக்கே உண்டு. மேலும் பல சிவாலயங்களையும், விஷ்ணு கோயில்களையும் இம்மன்னன் எழுப்பினான். வீவஸ் வானுக்குப் பின் அரசாண்ட ஹரிஹரனும், இரணிய வருணனும் இவ்வாலயத் திருப்பணிகளைச் சிறப்புடன் மேற்கொண்டனர்.

இராமகாதையுடன் இத்தலத்திற்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. இராவண சம்ஹாரம் முடிந்த பின் பாற்கடலிலுள்ள ஹேமசிருங்க பட்டினத்தில் ஆட்சி

புரியும் சதமுக இராவணனை அழிக்குமாறு இராமரிடம் ஒரு அசரீரி கூறியது. இராமரும் வானர சேனைகளுடன் கடற்கரையை அடைந்தார். ஆஞ்சநேயர் பிரம்மாண்டமான உடலுடனும், பஞ்சமுகங்களுடனும் தோன்றிக் கடலுக்குக்குறுக்கே அணைபோலப் படுத்துக் கொண்டார். இராமரது படைகளுக்கும், சதமுக இராவணனின் சேனைகளுக்கும் கடுமையான போர் ஏற்பட்டது. சிறந்த இரேணுகா பக்தனான சதமுக இராவணனின் உயிர்நிலை குண்டலிபுரத்திலிருந்த தாமரைத் தடாகத்திலுள்ள ஒரு மலரில் சூக்குமமான நூலைப் பொருந்தி, வண்டுகளால் சூழப்பட்டு இருந்தது. அதனை அழிப்பதற்காக ஆஞ்சநேயன் குண்டலிபுரம் சென்று இரேணுகாதேவியுடன் போர் புரிந்தார். நூறு முகங்களுடன் தோன்றி, குண்டலி நகரைப் பர்வதங்களுடன் எடுத்துச் செல்ல முயன்ற ஆஞ்சநேயனை நூறு கற்களாக மாறுமாறு இரேணுகாதேவி சபித்தாள். குண்டலிநகர் மண்மாரி பெய்து அழியும் என்று ஆஞ்சநேயரும் பதிலுக்குச் சபித்தார். இராமபிரான் அவ்விடத்தில் தோன்றி இரேணுகாவைச் சாந்தப்படுத்தினார். இரேணுகாவின் அனுமதியுடன் சதமுக இராவண சம்ஹாரம் நடந்தது. சாபத்தை மாற்றி ஆஞ்சநேயர் நூறு சிலாரூபங்களாக விளங்குமாறு இரேணுகா வரமளித்தாள். இராமபிரானும் அப்பதியில் உள்ள கோயிலில் எழுந்தளினார்.

இரேணுகா, சாமுண்டி ஆகியோரின் படைகளும், ஜமதக்னியின் படைகளும் போரிட்ட போது எண்ணற்ற வீரர்களின் உடல்கள் வெட்டுப்பட்டதால் இவ்விடம் படைவெட்டு எனப்பட்டதாக ஒரு கருத்து உண்டு. படைகள் கூடாரமடித்துத் தங்கிய இடமாகையால் படைவீடு எனப்பட்டது போலும். கோயிலின் முன் மண்டபத்திலுள்ள கல்வெட்டுக்கள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன.

இரேணுகாம்பாள் ஆலயம் 0.29 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. மேற்கு வாயிலில் அழகிய சிறுகோபுரம் அணி செய்கிறது. இரேணுகாதேவி பரசுராமருக்கு உபதேசித்த காட்சி சிற்பவடிவில் இடம் பெற்றுள்ளது. கருவறையில் இரேணுகாம்பாள் நின்ற

கோலத்தில் அருளாட்சி புரிகிறார். இங்கு இரு கால பூஜை நடைபெறுகிறது. உண்டியல் மூலம் வரும் காணிக்கைகள், ஆபிஷேக ஆராதனைக் கட்டணங்கள் மூலம் கோயிலுக்கு நல்ல வருமானம் உண்டு. ஆலயத்திற்குச் சொந்தமாக நிலங்களும், சிம்மம், அன்னம், சர்ப்பம், குதிரை, காமதேனு போன்ற வாகனங்களும், சில நகைகளும் உள்ளன. விநாயக சதுர்த்தி, சங்கராந்தி, நவராத்திரி போன்ற பண்டிகைகள் இங்கு கொண்டாடப்படுகின்றன.

ஆடி வெள்ளிக் கிழமைகளில் இங்கு வழிபடுவது சிறப்பு. கமண்டல நதியில் நீராடித் திருநீறு அணிந்து, வேப்பிலைகளால் கட்டப்பட்ட கலத்தில் மஞ்சள் நீரும், வாழை இலையில் பச்சரிசியும், பூஜைக்கு வேண்டிய மலர், பழம், முதலியவற்றுடன் ஆடி மாதம் சுக்கிரவாரம், தை மாதம் சுக்கிரவாரம், பௌர்ணமி ஆகிய நாட்களில் அம்மனை வழிபடுவோரின் குறைகள் நீங்கும். மகப்பேறு அற்றவர்கள் பரசுராமரின் சந்நிதியைச் சுற்றி வலம் வந்தால் பிள்ளைப் பேறு பெறுவர். கண்பார்வை அற்றவர்கள் கண்மலர்களுடன் வழிபட்டால் கண்பார்வை கிடைக்கும். அம்மனின் அருளால் தீராத நோய்களெல்லாம் தீரும் என நம்பப்படுகிறது.

இரேணுகாம்பாள் ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவில் இராமச் சந்திர மூர்த்தியின் ஆலயம் அமைந்துள்ளது. இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கோயிலில் ஆஞ்சநேயர், கணபதி, கருடாழ்வார், வேணுகோபாலர், இராமச்சந்திரர், சீதாப் பிராட்டி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இரேணுகா தேவியின் வாக்கிற்கேற்ப இங்கு ஆஞ்சநேயரின் பல திருவுருவங்கள் உள்ளன. இராமபிரான் அனுமனுக்கு அருள்புரியும் காட்சி அழகாக அமைந்துள்ளது. சொற்ப நிலங்களைப் பெற்றுள்ள இக்கோயிலில் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு 1 கிலோமீட்டர்

தொலைவில் ஜமதக்னி முனிவரின் ஆசிரமம் இருந்த இடத்தில் உற்பத்தியாகும், திருநீற்றை ஆனித் திருமஞ்சனத்தன்று பிரசாதமாக அளிக்கின்றனர். மேலும் இதற்கு அருகே ஒன்பது அடி உயரமுள்ள கோட்டத் தலையாரியின் சிலை, 9 அடி உயரமுள்ள வீர ஆஞ்சநேயர் சிலை, கோட்ட வரதராஜர் சிலை, பஞ்சமுக ஆஞ்சநேயரின் உருவம் ஆகியனவும் அமைந்துள்ளன.

தனது தோட்டத்தில் விழுந்துகிடந்த மாங்கனியைப் புசித்த குற்றத்திற்காக ஒரு பெண்ணைக் கொலை புரிந்த நன்னன் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங் கள் செப்புகின்றன. அம்மன்னனின் கொடுங் கோலாட்சிக்கு உட்பட்டுத் தவித்த மக்களுக்குப் படவேடு அம்மன் அருள்புரிந்து நன்னனின் ஆட்சியை அழித்ததாகவும் கூறப்படுகிறது.

''கொடையோங்கு விதர்ப்பபுரி ரைவதவேந்தன்
மகளாய்க்குலவி நின்று
படையோங்கு சேனையுடன் புவிமுழுதுஞ்
சஞ்சரித்துப் பார்த்தாராய்ந்து
சடையோங்கு முனி சமதக் கினியை
மணந்தனைவர்களுஞ் சாற்றப்பெற்ற
நடையோங்கு படைவேட்டி ரேணுகையி னடிமலரை
நாடி வாழ்வாம்''

(தலபுராணம்)

மூஞ்சூர்பட்டு சுந்தர சாஸ்திரி எழுதி வைத்திருந்த வடமொழித் தல புராணத்தைக் காமக்கூர் மு. சுந்தர முதலியார் தமிழில் மொழி பெயர்த்து வெளி யிட்டுள்ளார்.

இவ்வூருக்கும் குறும்பர்களுக்கும் தொடர்பு இருந்த தாகவும் பல்லவர்கள் இங்கு கோட்டை கட்டியதாகவும் கூறுகின்றனர். நந்தராஜா என்ற குறுநில மன்னன் பிற்காலத்தில் இங்கு ஒரு கோட்டை கட்டியதாகவும் கூறுவர். பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை இங்கு ஆட்சிபுரிந்த சம்புவராயர்கள் படைவீடுகளைக் கட்டிய தாகவும் ஒரு கருத்து உள்ளது.

திருவேட்டக் குடி

சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

வற்கடத்தும் வாட்டக்குடி சற்றும் வாய்ப்பதே
யில்லை யெனும்
வேட்டக்குடி மேவு மேலவனே

(வள்ளலாரின் திருவருட்பா)

பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனான விஜயன் பாசுபதக்கணை பெற்ற வரலாறு சுவையானது. கானகத்திலிருந்த பாண்டவர்களை வியாச முனிவர் சந்தித்தார். சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து பாசுபத அஸ்திரத்தைப் பெற்றால் கௌரவர்களை எளிதில் வெல்லலாம் என அவர் அறிவுறுத்தினார். தருமரின் ஆலோசனையின் பேரில் அருச்சுனன் கானகம் சென்று கடுந்தவம் புரிந்தான். நாரதர் மூலம் இச்செய்தியை அறிந்த துரியோதனன் அருச்சுனனை அழிக்குமாறு மாயையில் வல்ல முகாசூரன் என்பவனை அனுப்பினான். முகாசூரன் பன்றி வடிவெடுத்து விஜயன்மீது பாய்ந்தான். இதனைக் கண்ட தனஞ்சயனும் பன்றிமீது ஒரு அம்பை ஏவினான்.

இதே நேரத்தில் அருச்சுனனைக்காத்து அருளும் நோக்கத்துடன் சிவபெருமான் கானக வேடுவனாகத் தோன்றினார். உமையன்னை வேட்டுவமங்கையாகவும், முருகப்பெருமான் வேட்டுவக் குமரனாகவும் உடன் வந்தனர். நந்திதேவர் மான் உருவிலும், நான்மறைகள் நான்கும் நாய்களாகவும் அவரைப் பின் தொடர்ந்தன. பிநாகம் எனும் வில்லை வளைத்த

முக்கண் முதல்வனும், காண்டீபத்தை வளைத்த அருச்சுனனும் ஒரே சமயத்தில் பன்றிமீது அம்பெய்து பன்றியைக் கொன்றனர். இருவரில் எவருடைய அம்பு பன்றியை அழித்தது என்பது குறித்து சர்ச்சைமூண்டது. வாக்குவாதம் வளர்ந்து சண்டையில் முடிந்தது. அருச்சுனனுடைய வில்லாற்றல் வேடனிடம் பயன்பட வில்லை. இறுதியில் மற்போர் புரிந்தனர். வேடர் அருச்சுனனை வென்று செயலிழக்கச் செய்தார். விஜயன் மார்பில் அமைந்திருந்த மச்சரேகையை உமா தேவியாருக்குக்காட்டியபின் தனது உண்மைக் கோலத்தில் மகேசன் தோன்றினார். உண்மையுருவை அறியாமல் ஈசனுடனே போரிட்ட தன்னுடைய அறிவீனத்தை எண்ணி அருச்சுனன் வருந்தினான். பிழை பொறுக்குமாறு அரனாரிடம் இறைஞ்சினான். பார்த்திபனின் பேராற்றலால் மகிழ்வுற்ற முக்கண் முதல்வரும் பாசுபத அஸ்திரத்தை வழங்கியருளினார். இவ்வாறு சிவ பெருமான் வேட்டுவர் கோலத்தில் எழுந்த திருத்தலம் திருவேட்டக்குடி என்று அழைக்கப்படும். புதுச்சேரி மாநிலத்தில் காரைக்கால் நகருக்கு வடமேற்கே 9½ கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. காரைக்கால்-பொறையார் சாலையிலுள்ள வரிச்சுக்குடி என்ற ஊரிலிருந்து செல்லும் கிளைப்பாதையில் கோயில் உள்ளது. காரைக்கால், பொறையார் ஆகிய ஊர்களிலிருந்து திருவேட்டக்குடி வழியே செல்லும் பேருந்துகள் உள்ளன.

இச்சிறிய கிராமத்தின் கிழக்குப்பகுதியில் திருக்கோயில் அமைந்துள்ளது. முகப்பில் அழகிய கோபுரம் 5 நிலைகளுடன் பொலிவாக அமைந்துள்ளது. இலிங்க உருவில் அருள் பாலிக்கும் மூலவரின் திருநாமம் திருமேனியழகர்; வடமொழியில் இவரைச் சுந்தரேஸ்வரர் என அழைப்பர். விசயனுக்கு அருள்புரிந்த அழகிய வேட்டுவக் கோலம் கொண்டவர் ஆயிற்றே; எனவே இப்பெயர்; மகாமண்டபத்தில் கோலம்

கொண்டுள்ள அம்மனின் திருநாமம் சாந்தநாயகி யாகும்; சௌந்தரவல்லி என்ற மற்றொரு பெயரும் உண்டு.

உருமேனி பலவகையென்றுரைத் திடினு மறிவுறலால்
கருமேனியுடைய ரென்றுங் கனகம்பால் செம்பவளத்
தருமேனியுடைய ரென்றுஞ்சாற் றருள்கூருருவருவாந்
திருமேனியழகர் தாள் சிந்தனை செய்தேத்துவாம்

(தலபுராணம்)

சங்குவளைக் கரத்தாளைச் சராசரமெலாமீன்ற
தாயை நீரில்
தங்குவளைச் செவியாளைச் சைவல மாங்குழ
லாளைத் தாழ்வில்லாளைப்
பொங்குவளைப் புயத்தாளைப் பொருப்பரையன்
அளித்தருளும் புதல்வி தன்னை
அங்குவளை விழியாளை அரனிடத்தில்
அமர்வாளை அன்பிற்றாழ்வாம்

(தலபுராணம்)

விநாயகர், முருகர் ஆகியோருக்கும் சந்நிதிகள் உள்ளன. மகாலெட்சுமி, சனீஸ்வரர், புன்னைவன நாதர், சைவ சமயக்குரவர்கள், ஞாயிறு, திங்கள், பைரவர், தென்முகக் கடவுள், துர்க்கை ஆகியோரையும் ஆலயத்தின் உட்பகுதிகளில் தரிசிக்கலாம்.

ஸ்நபன மண்டபத்தில் உற்சவமூர்த்திகள் அமர்த்தப் பட்டுள்ளனர். இவற்றுள் வேட்டுவராக எழுந்த ஈசர், வேட்டுவச்சியாகச் சென்ற அம்மன், அருச்சுனன் ஆகியோர்களின் எழிலுருவங்களைக் காணலாம். வில்லிபாரதம் இத்தோற்றங்களை அற்புதமாக வருணிக்கிறது.

''சிவபிரானின் சடைமுடி பின்னுதல் செய்த கூந்தலாக மாறியது. நெருங்கிய மயிலிறகாலான மாலை அவரது நெற்றியைச் சுற்றி அலங்கரித்தது. நீலமணி போன்ற நிறமுடைய கழுத்தில் பல வண்ண ஆபரணங்

களை அணிந்ததால் திங்கள் போன்ற ஒளி உண்டா யிற்று. கண்ணைக் கவரும் இரத்தினங்கள் பதிக்கப் பட்ட குண்டலங்களை விட அதிக அழகு வாய்ந்த மலர் களால் தொடுக்கப்பட்ட குண்டலங்கள் அவரது காது களில் தோன்றின. பொலிந்த இடுப்பில் புலித்தோல் ஆடையாகக் காட்சியளித்தது. வலிவான காலணி களை யணிந்தவாறு, கரிய வண்ணமுடைய வேட்டுவக் கோலத்தில் ஈசர் தோன்றினார்.

''நீலமணித் திருக்கண்ட நிலவெழவே பலகறைப்
பூணிறையக் கட்டி
கோலமணிக் குழைகளினுங்குழையாகப் பிணையன்
மலர் கொண்டு சாத்தி
சேலையெனப் புலியதளுந்திருமருங்கிலுறச் சேர்த்திச்
செய்ய பைம்பொன்
காலிணையிற் செருப்பணிந்து, செய்யதிரு வடிவுமிகக்
கரியனானான்''

இடது கரத்தில் வில், வலது கரத்தில் அம்பு, முதுகில் புலித்தோலால் செய்யப்பட்ட அம்புறாத்துணி ஆகியவற்றுடன் கண்டவர்கள் அஞ்சி நடுங்குமாறு அரனார் கொண்ட அழகிய கோலத்தை வருணிக்க ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் இயலாது.

''இடக்கைமலர் வரிசிலையும் வலக்கை மலர்ப்
பாணமும் வெந்நிடையே பாணம்
அடக்கிய வெங் கொடுவரித்தோ லாவநாழி கையுமிக
வழகு கூரக்
கடக்களிறன் றுறித்த பிரான் கண்டவர்கள்
வெருவரமுன் கொண்ட கோலம்
தொடக்கியுரை செயநினைக்கி லாயிரநா வுடை
யோற்குஞ்சொல்ல லாமோ''

குன்றிமணிகளைக் கொண்டு தொடுத்துச் செய்த மாலை; புலியின் பற்களை இணைத்துச் செய்த ஒளி மிக்க மங்கல நாண்; மரத்தழைகளைக் கோர்த்துச்

செய்த ஆடை, ஆகியவற்றை அணிந்து அழகிய வேட்டுவப் பெண்கள் கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து வர மலைமகளான பார்வதிதேவி கொண்ட வேட்டுவக் கோலத்திற்கு ஒப்புமையாக எதையும் கூற இயலாது.

''வரையரசன் திருமடந்தை வனமுலைமேன் மணிக்
குன்றி வடமுஞ் செங்கை
நிரைவளையும் புலிப்பல்லா னிறந்திகழ்மங்
கலப்பூணு நீலமேனி
விரைய கிலி னறுஞ்சாந்தும் விரித்த தழைப்
பூந்துகிலும் வேடமாதர்
நிரை நிரையே தனைச் சூழ நின்றவடி வழகினுக்கு
நிகர் வேறுண்டோ''

ஆலயத்திலுள்ள இச்சிற்பங்களைக் காணும்போது இப்பாடல்களில் வருணிக்கப்படும் தோற்றங்கள் மனக் கண்முன்னே தோன்றுகின்றன. இராஜகோபுரத்தில் இச்சம்பவத்தை விளக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளன. உற்சவமூர்த்தியான முருகப்பிரானும் வேட்டுவக் கோலத்தில் காட்சியளிக்கிறார். புன்னைமரமே இங்கு தலவிருட்சமாகும். ஆலயத்திற்கு எதிரேயுள்ள தேவ தீர்த்தமும், சந்திர புஷ்கர்ணியும் இங்கு புண்ணிய தீர்த்தங்களாகும்.

இத்தலத்தில் வேறு புராண நிகழ்ச்சிகளும் நடை பெற்றுள்ளன. 'முக்கண்ணனார் சில கணங்கள் மூச்சை அடக்கினால் ஏற்படும் விளைவுகளை உமையன்னை காண விரும்பினாள். அவ்வாறே ஈசரும் மூச்சையடக் கினார். இதன் விளைவுகள் விபரீதமாயின; உலகமே செயலற்றுப் போயிற்று. இந்த விளையாட்டுப் பரீட்சை யில் ஈடுபட்ட உமையன்னையும் தண்டனை பெற்றார். பூவுலகில் வலைஞர் குலத்தில் பெண்ணாக அவதரித்து வளர்ந்து வந்தார். நான்கு வேதங்களையும் சோமுகா சுரன் கடலில் பதுக்கியபோது திருமால் நெடிதுயர்ந்த மச்சாவதார மூர்த்தியாகத் தோன்றி வேதங்களை

மீட்டார். அரக்கர்களைக் கொன்ற பின்னும் கொலை வெறி அவரை விட்டு அகலவில்லை. மச்ச உருவில் கடலையே கலக்கிச் செம்படவர்களை அச்சுறுத்தினார். சிவபெருமான் வலைஞர் குல வாலிபன் உருவை ஏற்று மச்சத்தை அடக்கிச் சாந்தப்படுத்தினார். நன்றிக் காணிக்கையாக வலைஞர்கள் தங்கள் குலத்து மணி விளக்காக வளர்ந்து வந்த பெண்ணை அவருக்குத் திருமணம் புரிந்து வைத்தனர். திருவிளையாடல் புராணத்தில் இடம்பெற்றுள்ள 'வலைவீசிய படலம்' போலவே இங்கும் சிவபெருமான் வலைஞர் குலத்தில் பிறந்த உமையம்மையை மணந்தார். புன்னைமரங்கள் சூழ்ந்திருந்த இவ்விடம் புன்னைவனம் என்றும், அங்கு எழுந்த இறைவன் புன்னைவனநாதர் எனவும் பெயர் ஏற்பட்டது.

திருவேட்டக்குடியில் எழுந்தருளியுள்ள திருமேனியழகரையும், சாந்த நாயகியையும் நாடி வானவர் வந்தனர். அந்தகாசுரனால் ஏற்பட்ட அச்சத்தை நீக்கியருளுமாறு இறைஞ்சினர். சிவபிரானால் அனுப்பப் பட்ட வயிரவர் அசுரனை வெற்றி கொண்டார். தேவர்கள் வழிபட்ட இத்தலம் 'தேவகோடி புரம்' எனப்பட்டது. தேவர்கள் உண்டாக்கிய தீர்த்தமே 'தேவதீர்த்த'மாகும். இது ஆலயத்திற்கு முன்பு உள்ளது.

விசுவாமித்திரருக்கும், வசிட்டமுனிவருக்கும் பகை உண்டானபோது விசுவாமித்திரர் கன்மாடபாதன் எனும் அரக்கனைத் தூண்டினார். அசுரனோ வசிட்டரின் புத்திரர்களைக் கொன்றான். புத்திரர்களை இழந்து தவித்த வசிஷ்டர் திருவேட்டக் குடியில் அரனாரைப் பூசித்தார். இறையருளால் அவரது மக்கள் உயிர் பெற்றனர். பல்லவ மன்னனும், சிறந்த சிவனடியாருமான ஐயடிகள் காடவர்கோன் இங்கு சிவபெருமானை வழிபட்டார்.

திருஞானசம்பந்தர் பஞ்சமம் எனும் பண்ணிலமைந்த பதிக்கத்தால் திருவேட்டக்குடி ஈசரைப் போற்றியுள்ளார்.

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டுக்கைதம் சூழ்கழிக்கானல்
போயிரவிற்பே யோடும் புறங்காட்டிற் புரிந்தழகார்
தீயெரிகை மகிழ்ந்தாருந் திருவேட்டக் குடியாரே''

எல்லா திசைகளிலும் திரிந்து, மீன்களை வாரிவரும் வலைஞர்கள் மிக்க இவ்வூரின் கடற்கரையில் தாழைகள் நிறைந்துள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள ஈசர் கரத்தில் நெருப்பை ஏந்திக் கானகத்தில் சென்று நடமாடும் அழகராவார். 'தீயெரிகை மகிழ்ந்தாரும் திருவேட்டக் குடியாரே' எனும் வரிகளுக்கு ஏற்ப இரவில் அர்த்த ஜாம பூஜையின்போது ஆலயத்திற்கு அருகே உள்ள கடலில் ஒளிப்பிழம்பு எழுவதாக நம்பப்படுகின்றது.

இக்கோயிலில் நான்கு கால பூஜைகள் நடைபெறு கின்றன. மாசி மகத்தில் நடைபெறும் திருவிழாவில் ஈசன் அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய நிகழ்ச்சி சிறப்பிக்கப்படுகிறது. அப்போது திருமேனியழகர் வேடுவராகத் தோன்றிக் கடலில் நீராடுவார். கடலோர மாக அமைந்துள்ள அக்கம்பேட்டை, மண்டபத்தூர், காளிக்குப்பம் போன்ற சிற்றூர்களைச் சேர்ந்த மீனவர் களின் உதவியுடன் இந்த விழா ''கடலாடு விழா' என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடப்படும். மாசி மகத்தில் இக்கோயிலிலுள்ள தீர்த்தத்தில் நீராடுவது சிறப்பாகும்.

நாட்டுக் கோட்டை செட்டியார்களின் திருப்பணி களைப் பெற்று இக்கோயில் பொலிவாகத் தோற்றம் அளிக்கிறது, 1962ம் ஆண்டில் இங்கு கடைசியாகக் குடமுழுக்கு நடந்தேறியது.

— ஃ —

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
8	14	சந்திரஹராம்	சந்திரஹாரம்
9	3	பணத்தை	பயணத்தை
10	21	பள்னி	பள்ளி
20	14	பலம்	பிலம்
21	28	அமைத்து	அனைத்து
26	29	திறப்பை	சிறப்பை
32	15	விநாயார்	விநாயகர்
33	6	பூக்கேட்டன்	பூக்கேட்டல்
33	10	கலங்களில்	கரங்களில்
36	15	தெரிந்ததாய்	தெரிந்ததாம்
37	13	பாரசக்தி	பராசக்தி
38	14	துவக்கித்தில்	துவக்கத்தில்
38	24	பண்டபங்களில்	மண்டபங்களில்
39	15	சிவாயலத்தை	சிவாலயத்தை
39	20	கங்கை கெண்ட	கங்கை கொண்ட
40	14	சுரங்களுடன்	கரங்களுடன்
45	10	ஆஷுடையார்	ஆவுடையார்
45	27	சூறுநில	குறுநில
50	2	ஜயனார், ஜவரும்	ஐயனார், ஐவரும்
50	13	கவசங்களை	கலசங்களை
57	24	மணிபர்வதித்திம்	மணிபர்வதத்தில்
65	8	விக்கிரகப்	விக்கிரகம்
65	11	ஏற்றபட்ட	ஏற்றப்பட்ட
65	20	மணியிலிந்து	மணியிலிருந்து
65	25	தெரிவித்தார்	தெரிவித்தால்
65	30	ஆசிய, அப்பாற் பாடு	ஆகிய, அப்பாற் பட்டு
66	23	பொது	ஸாது
66	26	பன்னியாசிகளே	சன்னியாசிகளே
78	22	மெருப்பற்றப் புலியூர்	பெரும்பற்றப் புலியூர்

79	28	துர்வாசார்	துர்வாசர்
80	15	அருமாகடலமுதல்	அருமாகடலமுதன்
81	4	தாயாரின்	தாயாரின் திருநாமம்
82	6	தனசனம்	தல்சயனம்
82	22	இக்கேகாயிலில்	இக்கோயிலில்
82	26	எட்டு	எட்டுமணிக்குஇரவு
83	14	சிறுபுயூரிலுள்ள	சிறுபுலியூரிலுள்ள
84	19	இறநிலையத்	அறநிலையத்துறை
84	25	மனவாள முனிகளின்	மணவாள முனிகளின்
85	17	மாயிலாடுதுறை	மயிலாடுதுறை
86	2	அமைந்துள்ள	அமைந்துள்ளது
88	1, 3.	ஜலகண்டடே சுவரின்	ஜலகண்டேஸ் வரரின்
95	25	இக்கானத்	இக்கானகத்
96	26	கவசவணிந்த வராய்	கவசமணிந்தவராய்
103	24	கலியான	கலியாண
107	1	நாடமாடும்	நடமாடும்
123	9	உள்ளள	உள்ளன
125	8	கவரிலுள்ளது	சுவரிலுள்ளது
125	31	காப்பற்ற	காப்பாற்ற
128	8	தெசிகர்	தேசிகர்
167	22	பட்டார்	பட்டர்
192	2	பதிக்கத்தால்	பதிகத்தால்



